இறைவன் கொடுத்த வரம்

ரமணிசந்திரன்

இறைவன் கொடுத்த வரம்

மணிசந்திரன்

அருணோதயம்
5/3, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை சென்னை - 600 014.

இறைவன் கொடுத்த வரம்

1

அன்றைக்கு, அவன் மிகவும் மகிழ்ச்சியுற்றிருந்தான்!

மகிழ்ச்சியுறக் காரணம் இருந்தது!

அலுவலகத்தில் எம்.டி. அவனைக் கூப்பிட்டு அனுப்பி, பதவி உயர்வு பற்றி, அவனிடம் நேரிலேயே தெரிவித்தார்!

வெறும் பதவி உயர்வு மட்டுமல்ல. ஊதியமும் வெகுவாக உயர்ந்திருந்தது!

அவனது அயராத, அதே சமயம் புத்திசாலித்தனமான வேலைக்கு மட்டுமின்றி, அதற்கு மேலும் சிரமப்பட்டுப் படித்துத் தேர்வில் வெற்றி பெற்றதற்கும் உரிய சன்மானம்! மாதம் இருபத்தைந்து ஆயிரங்கள்! கால் லட்சம்! ஆறு மாதங்களில், அதற்கு மேலும் கணிசமாக உயரும்!

முதலில் தந்தைக்குக் கடிதம் எழுதினான்! தாயுமானவராக இருந்து, அவனை வளர்த்தவர் ஆயிற்றே! அவன் வாழ்க்கையில் பெரிய ஆளாய் வர வேண்டும் என்று அதே எண்ணத்தை ஊட்டி ஊட்டி வளர்த்தவர். அதே நினைவாய் இருப்பவரும்கூட! வளர்ச்சிப் படியில், நாலு படிகள் மொத்தமாக ஏறிவிட்டான் மகன் என்று ஆனந்தப்படுவாரே!

அவருக்கு எழுதிவிட்டு, சுபியைக் கூப்பிட்டான். அவனது வளர்ச்சியில் மகிழ்ச்சி அடைகிற அடுத்த நபர்! வழக்கமான இடத்தில் மாலை ஆறு மணிக்குச் சந்தித்தால், ஒரு முக்கியமான சேதி தெரிவிப்பதாகச் சொன்னான்.

விஷயம் என்ன என்று அப்போதே சொல்லியிருக்கலாம்! ஆனால், அவளது அழகிய முகம் வியப்பும் மகிழ்ச்சியுமாகப் பூவாய் மலர்வதை, நேரில் பார்க்க, அவனுக்கு ஆசை!

முதலில், சுபிக்கு அவ்வளவாக ஆர்வம் இல்லை! அன்றைக்கு வீட்டிலும், வேலை நிறையவாம்! அவள் பணிபுரியும் துணிக் கடையிலும் உட்கார நேரமே கிடைக்கவில்லையாம்! ஜொள்ளு பார்ட்டிகள் வேறு, சும்மா துணிகளை எடுத்துப் போடச் சொல்லி, அவளை நன்றாக வேலை வாங்கி விட்டார்களாம்! அவனது நல்ல சேதியை, அவள் இன்னொரு நாள் கேட்டுக் கொண்டால், என்ன?

அதெல்லாம் முடியாது! அன்றே கேட்டுத்தான் ஆக வேண்டும்! அதையும், சைனீஸ் உணவை முடித்துக்கொண்டு, கார்னெட்டோ ஐஸ்கிரீமைச் சுவைத்தபடி கேட்க வேண்டும் என்றதும், ஒத்துக்கொண்டு விட்டாள்! பாவம்! நல்ல உணவென்றால் ஆசைப்படுவாள்! சம்பாதிக்கும் பணத்தைச் சித்திக்காரி, அப்படியே வாங்கிக் கொள்வாளாம்! ஒரு சுரிதார்

செட் வாங்க வேண்டும் என்றாலும், அவளிடம் பிச்சைக்காரி மாதிரிக் கையேந்த வேண்டுமாம்! இதில் சைனீஸ் உணவைப் பற்றி, அந்த அம்மாளிடம் வாய் திறக்க முடியுமா? அதனால், நேரமும் வாய்ப்பும் கிடைக்கிறபோது, இவன்தான் கூட்டிப் போவது!

இன்று, நேரமும், வாய்ப்பும் அவள் ஆதிக்கத்தில் நின்றன!

ருசித்துப் புசித்தபோதும், அலுத்துப் போயிருந்த நேரத்தில், அவன் வரச் சொன்னது, சுபிக்குச் சற்று எரிச்சல்தான்! புலம்பிக் கொண்டேதான் சாப்பிட்டாள். பஸ்சுக்கே, அவளுக்கு அதிகப்படியாக ஆறு ரூபாய் ஆகி விடுமாம்!

அவள் புலம்பப் புலம்ப, அவனுக்குச் சிரிப்பாகத்தான் இருந்தது! அவ்வளவுக்கும் சேர்த்து, இரு மடங்கு சந்தோஷப்படப் போகிறாளே! போட்டி போட்டுக்கொண்டு தோன்றி வர்ண ஜாலம் காட்டின!

முதலில் அவளுக்கு, அவன் சொன்னதை நம்பக்கூட முடியவில்லை! 'நிஜம்தானா? நிஜம்தானா?' என்று பலமுறை கேட்டுத் தெளிந்த பின், அவளது பிரதிபலிப்பு, அவனது எதிர்பார்ப்பை வெகுவாக மிஞ்சிவிட்டது! பாதி தின்றிருந்த ஐஸ்கிரீமைத் தூர வீசிவிட்டு, அவனை இறுக அணைத்து முத்தமிடலானாள்!

"பொது இடத்தில், இத்தனை பேர் பார்க்க, என்ன சுபி, இது?" என்று, அவன்தான் அவளை விலக்கி விடும்படி ஆயிற்று!

சிரித்து விட்டுத் திருமணத்தை எப்போது வைத்துக் கொள்ளலாம் என்று கேட்டாள் அவள்!

ஆச்சரியமுற்று, "இப்போது முடியாது என்று உன் வீட்டில் ஒரே தகராறு என்றாய்! ஒரு வழியாய் ஒப்பி விட்டார்களா?"

என்று அவன் மகிழ்ச்சியோடு வினவ, அவள் அலட்சியமாகத் தோளைக் குலுக்கினாள்.

''எவ்வளவு நாட்கள்தான், அவர்களுக்காகப் பார்த்துக் கொண்டு, நம் வாழ்வைப் பாழடிப்பது? பேசாமல், ஒரு கோயிலில் தாலியைக் கட்டிக்கொண்டு, மாலையும் கழுத்துமாய் அவர்கள் முன்னால் போய் நிற்க வேண்டியதுதான்!''

''என்னது?!'' என்று அவன் புருவத்தை உயர்த்த, ''பின் என்ன டார்லிங்? நம் உணர்ச்சிகளைக் கொஞ்சமும் புரிந்து கொள்ளமாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தால், அப்படித்தான்! அவர்களைப் பற்றி, நாம் ஏன் யோசிக்க வேண்டும்? நம்மைப் பற்றி மட்டும் நினைத்தால் போதும்! சொல்லுங்கள், நம் திருமணத்தை எப்போது வைத்துக் கொள்ளலாம்?'' என்று, கொஞ்சலும் பிடிவாதமுமான குரலில், அவனை நெருங்கி அமர்ந்து கேட்டாள் சுபா!

''செய்வோம், செய்வோம்!'' என்று மென்மையாக அவளை நோக்கி முறுவலித்தான் அவன். ''உன் வீட்டில் ஒரு மாதிரி என்றாலும், என் அப்பா அப்படி இல்லையே! எனக்காகவே வாழ்கிறவர்! உன் வீட்டில் நாளாகும். அதுவரை வெளியே தெரியவே கூடாது என்று நீ சொன்னதால், நம்மைப்பற்றி, நான் இன்னமும் அவரிடம் சொல்லவே இல்லை!''

''அப்படியானால்? அவர் மறுத்துவிட்டால்? அப்போது என்னைக் கைவிட்டு விடுவீர்களா?'' என்று, குரல் கீச்சிடப் படபடத்தாள் அவள்.

''கை விடுவதா? சேச்சே! என்ன வார்த்தை பேசுகிறாய், சுபி! அப்பா பெரியவர். அவரிடம் சொல்லிவிட்டுச் செய்வோம்

என்றால், அதற்குள் என்னவெல்லாம் கற்பனை செய்கிறாய்? ஏனிப்படி நிலையிழந்து உணர்ச்சி வசப்படுகிறாய்? ஓ! வேலை அதிகம் என்றாயில்லையா? அலுத்திருக்கிறாய் போல! கவனி சுபி! என் ஆசையை ஒரு போதும் அப்பா மறுக்கமாட்டார்! வாழ்வில் ஒரு நிலைக்கு வந்தபின், உனக்குப் பிடித்த யாரை வேண்டுமானாலும் திருமணம் செய்து கொள் என்று, அவரே என்னிடம் சொல்லியிருக்கிறார்! அப்படி, அவருக்கு வேண்டிய யார் மகளையேனும் எனக்குக் கட்டி வைப்பதாக வாக்குக் கொடுத்திருக்கலாமோ என்று யோசிக்கக்கூட வழியில்லாமல், என் துரதிருஷ்டம், உறவிலோ, நட்பிலோ, என் வயதுக்குப் பொருத்தமாகப் பெண்ணே இல்லை!'' என்று முகத்தைச் சோகமாக வைத்துக் காட்டினான் அவன்.

''அது துரதிருஷ்டமா? இருங்கள், இருங்கள்! நமக்குக் கல்யாணம் ஆனபிறகு, இதற்கெல்லாம் வட்டியுடன் சேர்த்துத் தண்டனை கொடுக்கிறேன்!'' என்று மிரட்டினாள் சுபி.

''ஆகா! அந்த மாதிரித் தண்டனைகளை எதிர்பார்த்துத்தானே, நான் நாட்களைக் கடத்துவதே! என்று வருமோ, அந்த நல்ல நாள்!''

''இன்றேகூட, அந்த நல்ல நாளாக இருக்கலாம்! நம்மை யார் தடுப்பது?'' என்று, மையல் பார்வை பார்த்தாள் அவள்!

''அம்மாடியோவ்!' என்று அவன் எழுந்து விட்டான். ''இன்றைக்கு, மேடம் என்னவோ மூடில் இருப்பதாகத் தெரிகிறது! இதற்கு மேல் இங்கே இருப்பது ஆபத்து! கிளம்பு! உன்னைப் பஸ் ஏற்றி விட்டுவிட்டு, நானும் என் அறைக்குப் போகிறேன்! கிளம்பு, கிளம்பு!'' என்று அவசரப்படுத்தினான்.

சுபியைப் பஸ் ஏற்றி அனுப்பிவிட்டு, பார்க்கிங் கட்டணத்தைக் கொடுத்து பைக்கை எடுத்தபோது, அவன் வாய், தானாகச் சீட்டி அடித்துக் கொண்டிருந்தது!

சுபி, அவளாகவே திருமணப் பேச்சை எடுத்து விட்டாளே! எப்போதும், 'இன்னும் கொஞ்ச நாள் போகட்டும், போகட்டும்!' என்று கீறல் விழுந்த இசைத்தட்டு மாதிரி, அதே வசனம் சொல்கிறவள்! ஆச்சரியம்தான்! அத்தோடு, ஆனந்தமும்! என்னமாய் அணைத்தாள்!

எப்படியோ, அவளே பச்சைக் கொடி காட்டி விட்டாள்! இனிமேல் தைரியமாகத் தந்தையிடம் சொல்லித் திருமண ஏற்பாடுகளைத் தொடங்கி விடலாம்!

அவள் சொன்ன தண்டனைகள்...

தன்னை யறியாமல் சிரித்தவன், அருகில் சென்று கொண் டிருந்தவர் திரும்பிப் பார்க்கவும், முகத்தை நேராக வைத்துக் கொண்டு பைக்கை ஓட்டலானான்!

நேரே அறைக்குச் சென்று முடங்க மனமில்லாமல், இங்கும் அங்குமாய்ச் சற்று நேரம் சுற்றி விட்டு, அவன் இடத்தை அடைந்தபோது, அதே கட்டடத்தில் இன்னோர் அறையில் தங்கியிருந்தவன் அவனுக்காக வெளி வாயிலிலேயே காத்திருந்தான்!

''உங்கள் அப்பாவுக்கு, உடம்பு ரொம்ப மோசமாக இருக்கிறதாம்! உடனே கிளம்பும்படி, இதற்குள் மூன்று 'கால்' வந்துவிட்டது!...'' என்று அவன் சொல்லிக் கொண்டு இருந்தபோதே, அடுத்த டெலிஃபோன் அழைப்பும் வந்து விட்டது!

தந்தையைக் கடைசித்தரமாகப் பார்க்க உடனே வருமாறு, வீட்டருகே இருந்த மருத்துவமனையில் இருந்து, அவனைக் கூப்பிட்டார்கள்!

ஒரு டாக்சியில் விரைந்து சென்றவனின் கையைப் பிடித்துக் கொண்டு, ரகுபதி கண்ணீர் விட்டார்!

''உங்களுக்கு ஒன்றும் இல்லை, அப்பா! எல்லாம் குணமாகிப் போகும்!'' என்று ஆறுதல் கூற முயன்றவனைத் தலையசைத்துத் தடுத்தார் அவர்.

''சாவதற்கு எனக்குப் பயம் இல்லை, கண்ணா! ஆனால், ஜெயிக்காமலே போகப் போகிறேனே! தோற்றவனாகச் சாகப் போவதுதான் வேதனையாக இருக்கிறது!'' என்றார் அவர் சிரமப்பட்டு!

2

தந்தை தன் செலவுகளையெல்லாம் சுருக்கிக்கொண்டு பணம் சேர்த்தது, அவனுக்குத் தெரியும்! பல லட்சங்கள் சேர்த்தும் வைத்திருந்தார். எதற்காக என்று மகன் கேட்டபோது, 'இந்தக் கஷ்டம் எல்லாம் உனக்கு எதற்கடா? நீ உன் வேலையைப் பார்! நன்றாகப் படி. பெரிய நிலைக்குத் தயாராகு! அதற்குள், உன்னை உட்கார வைக்கத் தகுந்த இடத்தை, நான் ஏற்பாடு செய்து வைக்கிறேன்!' என்பார்.

ஏதோ ஒரு தொழிலைத் தொடங்கி, அதன் தலைமைப் பதவியில் தன்னை உட்கார வைக்கத் தந்தை உத்தேசித் திருக்கிறார் என்பது, மகனின் ஊகம்! பெற்றவருக்கு ஏமாற்றம் நேர விட்டுவிடக்கூடாது என்பதற்காகவே, தேவை என்று எண்ணியதை எல்லாம் படித்தான். கடுமையாக உழைத்து, சீக்கிரமே ஒரு நல்ல பதவிக்கும் வந்தான்!

இந்த நேரத்தில், அவர் தோற்று விட்டதாகத் தவிக்கிறாரே!

தன் தோல்வியைப் பற்றி, ரகுபதி தெரிவித்தார்!

அவர் பணம் போட்டு வைத்திருந்த ஃபைனான்ஸ் கம்பெனி முழுகிப் போய்விட்டது! நிதி நிறுவனத் தலைவர், ரகுபதியுடைய நண்பர்தான். எனவே தன்னை ஏமாற்ற மாட்டார். பிரச்சினை வந்தாலும், தன் பணம் கைக்கு வந்துவிடும் என்று எண்ணியிருந்தார்! ஆனால், 'ஆடிக் காற்றில் அம்மியே பறக்கிற நிலை' நண்பருக்கு! தன் மகள் பணத்தையே கொடுக்க முடியாமல், தற்கொலை செய்துகொண்டாராம்! இனி, அந்தப் பணம், யாரிடமிருந்து, எப்படி வரும்?

கிட்டத்தட்ட முப்பது லட்ச ரூபாய்!

ஆனால், அந்த முப்பது லட்சத்தை நாசமாக்கிய நண்பரைக்கூட, ரகுபதி மன்னித்து விட்ட மாதிரிதான் தோன்றியது!

"அந்தப் பணம் இருந்தால்கூட, முழுசாகப் போதாதும்மா! கோடிக் கணக்கில் வேண்டும்! ஆனால், இதைக் காட்டி, பாங்க்கில் கடன் வாங்கிக் கொள்ளலாம் என்று நினைத்தேன்! இப்போது, அந்த நாயை ஜெயிக்க விட்டுவிட்டுப் போகப் போகிறேன்!"

"யாரை அப்பா?"

பதினைந்து ஆண்டுகளுக்கு முந்திய கதை அது!

இப்போதும் வெற்றிகரமாகவே நடந்து வரும், 'வெற்றி' சைக்கிள் நிறுவனத்தைத் தொடங்கிய மூவருள், ரகுபதியும் ஒருவர்! நிறுவனம் ஓரளவு நல்லபடியாக வளர்ச்சி அடையவும், அதை விரிவு படுத்தலாம் என்று, பங்குதாரர்கள் முடிவு செய்தார்கள்!

ஆனால், விரிவு படுத்துவதற்குப் பணம் வேண்டும்! பாங்க்கில் கடன் வாங்கினாலும் வட்டி கட்ட வேண்டும்! அதனால் 'செபி' அனுமதி பெற்று, பொது மக்களுக்குப் பங்குகளை விற்க ஏற்பாடு செய்தார்கள்!

அப்போதுதான், குமாரசாமி குள்ளநரித்தனம் செய்தது!

பங்குகளுக்குச் சரியான வரவேற்பு இல்லை என்றும், அதனால், நிறுவனத்தில் தன் பங்குகளை வந்த விலைக்கு விற்றுவிடப் போவதாகவும், ரகுபதியிடம் வந்து சொன்னார்!

"மும்பையிலிருந்து, பெரிய ஆள் ஒருவன் வந்திருக்கிறான், ரகுபதி! இங்கே, தொழில் நடத்த ஆசையாம்! நஷ்டப்பட்ட தொழில் என்றாலும் சொந்தப் பணத்தையே, கோடிக்கணக்கில் கொட்டி வளர்த்து, நடத்தத் தயாராம்! ஆனால், தொழில், அவனது முழுக் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்கிறான்! நம் இரண்டு பேர் பங்குகளையும் சேர்த்துத் தருவதானால் வாங்கிக் கொள்கிறானாம்! பிரச்சினை நம் கையைக் கடிக்காமல் மீள்வதற்கு, இது ஒன்றுதான் நல்ல வழியாகத் தெரிகிறது! நம் மூவரில், சுந்தரத்துக்குப் பரவாயில்லை! மில், அது இதென்று இருக்கிறது! இதில் நஷ்டப்பட்டாலும், சமாளித்துக் கொள்வான்! அதனால், அவனிடம் நான் ஒன்றுமே சொல்லவில்லை! மும்பைக்காரனிடம், அவன் முந்திக் கொண்டால், நாம் அல்லவா மாட்டிக் கொள்வோம்!" என்று, அவருக்காகப் பேசுவது போலக் கூறினார்.

ரகுபதியும் நம்பி விட்டார்.

மும்பை முகவரி கொடுத்துத் தன் பங்குகளை, ஓரளவு குறைந்த விலைக்கு வாங்கியது குமாரசாமியே என்று அவருக்குத் தெரிய வந்தபோது, எல்லாம் சட்டப் பூர்வமாக முடிந்து விட்டது!

நேரில் போய்க் குமாரசாமியிடம் கேட்டபோது, அவர் ஏளனமாகச் சிரித்தார்! ''ஏமாறுகிறவன் ஏமாந்தால், ஏமாற்றுகிறவன் ஏமாற்றத்தான் செய்வான்!'' என்று வசனம் வேறு பேசினார். ''இப்போது, உனக்கும் இந்த நிறுவனத்துக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை! அதனால், இடத்தைக் காலி பண்ணு!'' என்று விரட்டியடித்தார்!

சம்பந்தம் இருக்க வேண்டும்! ஏமாந்து இழந்த பங்குகளை, மீண்டும் பெற வேண்டும் என்றுதான் இந்தப் பதினைந்து ஆண்டுகளாக ரகுபதி பாடுபட்டது! ஆனால்,

''எடுத்த காரியம் முடிக்காமலே, சாகப் போகிறேன், தம்பி! அந்த நிறுவனத்தில், தலைமை இடத்தில் அமர்ந்து, அன்று என்னை ஏமாற்றியவன் சொல்லைப் பொய்யாக்கிக் காட்ட வேண்டும் என்று நினைத்தது, வெறும் சொப்பனமாகி விட்டது! கண்ணா, இந்தத் தோல்வியோடு சாகிறேனே! ஐயோ!'' என்று வேதனையோடு அரற்றினார்!

தன் உயிரைக் கொடுத்தேனும், தந்தையின் லட்சியத்தை நிறைவேற்றுவதற்கு அவருடைய மைந்தன் தயார்தான்! ஆனால், அவனது உயிருக்கு, இதில் ஒரு மதிப்பும் இல்லையே!

அந்தக் குமாரசாமி மட்டும் அவன் கையில் கிடைத்தால்!

சோர்வுடன் உச்சுக் கொட்டினார் தந்தை! ''கிடைக்க மாட்டாரடா! போய்ச் சேர்ந்து விட்டார்! நான் போகும்போது, அங்கே இருந்தும், என்னைப் பார்த்துச் சிரிக்கப் போகிறார்! அந்தப் பங்குகள் மட்டும் கிடைத்திருக்குமானால்... அவரைப் பார்த்து நான் சிரிப்பேனே!''

தந்தையைக் கலக்கத்துடன் நோக்கினான் அவன்.

"என்னடா, அப்பா உளறுகிறான் என்று இருக்கிறதா? அந்தப் பங்குகள் இன்னும், அவன் குடும்பச் சொத்தாகத்தான் இருக்கின்றன. அது மட்டும் கிடைத்து விட்டால், போதுமே! நிறுவனமே கைக்கு வந்து விடும். ஆனால்... நிராசையுடன் சோர்ந்தார் அவர்.

தந்தையின் கையைப் பற்றி, "அப்பா, நான் எப்படியாவது அந்தப் பங்குகளை வாங்கி விடுகிறேன், அப்பா!..." என்று சொல்லிக் கொண்டிருந்தவனிடம், கண்கள் பளபளக்க, "முடியுமாடா...?" என்று திக்கினார் ரகுபதி.

அந்த வினாடியில், தந்தைக்குக் கொடுக்கக் கூடாதது என்று, அவனிடம் எதுவும் இல்லை! "நிச்சயம் அப்பா!" என்று பற்றியிருந்த கை மீது அடுத்த கையைச் சத்தியம் செய்யும் பாவனையில் வைத்து அழுத்தி, "சர்வ நிச்சயம், அப்பா! பணம் போய்விட்டதே, முடியாதோ என்று ஐயப்படாதீர்கள்! வழிதான் அந்தக் குமாரசாமியே காட்டி வைத்திருக்கிறாரே! ஏமாற்று வேலை! நயவஞ்சகம்! முள்ளை முள்ளால் எடுக்கிறேன்! அவரும் இல்லை என்கிறீர்கள்! அடுத்த தலைமுறைக்கு அவரைப் போன்ற குயுக்தி இருப்பது கடினம்! என் வேலை எளிதாக நடக்கும்! அந்த நிறுவனம் என் கைக்கு வருவது நிச்சயம்!"

பச்சைக் குழந்தையின் குதூகலத்துடன் சிரித்தவரின் கண்களின் ஒளி திடுமென மறைய, அவரது பார்வை, மகனின் முகத்திலேயே நிலை குத்திவிட்டது!

தந்தையின் மறைவு பற்றி, சுபாவுக்குத் தெரிவித்ததோடு சரி! அங்கே, ஊரில் எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டுச் சென்னைக்குத் திரும்பியவனுக்கு, எதிலும் ஆர்வம் தோன்ற

வில்லை! தந்தையின் ஆசையை எப்படி நிறைவேற்றுவது என்பது தவிர, வேறு எதிலும் புத்தி செல்ல மறுத்தது!

இமயத்தின் உச்சியை அடைவது போலப் பிரமிப்பான காரியம்தான்! ஆனால், அந்த மலையுச்சிக்கு மேலாகவே, விமானத்தில் பறப்பதில்லையா?

ஆனால் எங்கே தொடங்குவது?

சந்திக்க வேண்டும் என்று சுபாவே கேட்டபோது, தவிர்த்தான்.

ஆனால், தனித்திருக்க அஞ்சியவன் போல, வேலை நேரம் போக, ஊரெங்கும் சுற்றி அலைந்தான்!

அன்று ஒரு வக்கீலின் வீட்டருகே உள்ள பஸ் நிறுத்தத்தில் நின்று பராக்குப் பார்த்துக் கொண்டிருந்த வேளையில், ஓர் ஊர்வலம் சென்றது!

பெண்ணுரிமைக் கோஷங்கள் உரக்க முழங்கப்பட்டன!

ஊர்வலம் தாண்டிச் செல்லவும், பஸ்சுக்காக நின்று கொண்டிருந்த ஓர் இளைஞன் சிரித்தான்! "பெரிய பெண்ணுரிமை! இவர்கள் இப்படிக் காது கிழியக் கத்துகிறார்களே! இது யார் காதில் விழுகிறது? யார் மனதில் ஏறுகிறது? அந்தப் பெண் படித்தவள்தான்! ஆனால், தன் சொத்தாகட்டும், தொழிலாகட்டும், எல்லாமே, அந்தப் பேத்தியுடைய, குழந்தையுடைய தந்தைக்குத்தான் சொந்தமாகும் என்று எழுதி வைத்திருக்கிறார், கிழவர்! அவளுடைய குழந்தைக்கு என்றாலும், ரத்த வழி என்று, ஏதோ அர்த்தம் இருக்கிறது! இது.. சே! பயங்கரக் கிறுக்குத்தனம்!" என்றான் அவன்.

"கிறுக்குத்தனமா? கிராதகம்! விஷயம் தெரிந்த யாராவது, ஏன், உன்னையே எடுத்துக் கொள்ளேன், அந்தப் பெண்ணைப் பலவந்தமாகக் கெடுத்து, ஒரு பிள்ளையைக் கொடுத்து விட்டால், எல்லாம் உன்னைச் சேர்ந்து விடுமே! அந்தப் பெண்ணுக்கு, எவ்வளவு ஆபத்தான நிலைமை!"

"நான் நல்லபடியாகக் குடும்பம் நடத்துவது, உனக்குப் பிடிக்கவில்லைபோல! ஆனால், நீ சொல்லுகிற ஆபத்துக் கெல்லாம் வாய்ப்பே கிடையாது! அந்த மனிதர் குள்ள நரிப்பா! முதலாவதாக, இந்த விஷயம் யாருக்கும் தெரியாது! அந்தப் பெண்ணுக்குக் கூட! ஒழுங்கான திருமணம், அதிலும் பல கிடுக்கிப் பிடிகள்! கஷ்டப்பட்டுச் சேர்த்த பணம்! அவ்வளவு லேசில் விட்டு விடுவாரா?"

"அச்சோ! அப்படியானால், உனக்குக் கொஞ்சமும் வாய்ப்பே இல்லையாக்கும்! பாவம்பா நீ!"

"உனக்கு இன்று உதை கேட்கிறது என்று தோன்றுகிறது!" என்று முதல்வன் கூற, இருவரும் சிரித்துக் கொண்டே போனார்கள்.

அறைக்குத் திரும்பிச் சென்ற அவன், சற்று யோசித்துவிட்டு, வெளியே போய், சுபாவுக்கு டெலிஃபோன் செய்தான்.

புன்னகையோடு திரும்பி வந்தான்!

3

சினேகிதியோடு நன்றாக அரட்டை அடித்துவிட்டுத் திரும்பிய மாதவிக்கு மனது உற்சாகமாக இருந்தது.

எப்போதுமே, மனோகரியோடு பேசிக்கொண்டிருந்தால், அப்படித்தான்! மனம் கசந்து, சோர்ந்து, எங்காவது விழுந்து கிடக்கலாம் போல இருக்கிற நேரத்தில்கூட, அவளோடு சற்று நேரம் பேசினால், மனம் அமைதியடைந்து விடும்!

அவள் செய்யும் பணி தந்த திறமையோ, என்னவோ!

நோயின் உபாதைகளால் முகம் சுழிப்போர், எரிந்து விழுவோர் அனைவரிடமும் இன்முகம் காட்டி, உற்சாகப் படுத்துகிறவள் அல்லவா? அதே சுபாவம், எல்லோரிடமும் வருகிறது!

ஆனால், அப்படியும் சொல்ல முடியாது! சின்ன வயதில் இருந்தே அவள் அப்படித்தான்!

விபத்தில் ஒன்றாக இறந்துவிட்ட பெற்றோரின் நினைவில், முகம் வாடி நின்றவளைத் தானாக வந்து பேசித் தேற்றியவள்!

அவளும், தாய் தந்தை அற்றவள், பெற்றோரின் முகத்தை அவள் பார்த்ததுகூடக் கிடையாது என்று அறிந்தபோது, இருவருக்கும் இடையே நட்பு இறுகிப் போயிற்று!

கூடவே, மாதவிக்குத் தன்னை நினைத்துக் கூச்சமே உண்டாகிவிட்டது! அவளாவது, பெற்றோரின் பாசத்தைப் பத்தாண்டுகளுக்கு மேலாக அனுபவித்திருக்கிறாள்!

ஆனால் மனோகரி அந்த அன்பை அறிந்ததே இல்லையே! ஆனாலும், அவசியப்பட்ட அனைவருக்கும் அள்ளியள்ளிக் கொடுக்க, அவளிடம் அதே பாசம் நிறைய இருந்தது!

நல்லவர்களுக்கு நல்லதே நடக்கும் என்பதற்கிணங்க, அவளது படிப்புச் செலவை, ஒரு பெரிய மனிதர் ஏற்றுக் கொண்டிருந்தார்!

அவள் விரும்புவதைப் படிக்க வைக்க, அந்தப் பெரிய மனிதர் தயார்தான்!

ஆனால், தொண்டு உணர்ச்சி தலை தூக்கி இருந்த காரணத்தால், 'நர்சிங்'கை, மனோகரி தேர்ந்தெடுத்தாள். நோயாளிகள், மருத்துவர்கள் எல்லோரிடமும் நல்ல பெயர் வாங்கினாள்.

அவளைப் பார்த்து, மாதவியும் வாரத்தில் ஒரு நாள், குழந்தைகள் வார்டில் இலவசமாகப் பணிபுரிவது உண்டு! அரை நாள் வேலையிலேயே, அயர்ந்து போவாள்! மனோ எப்படித்தான் செய்கிறாளோ என்று ஆச்சரியப்படுவாள்!

அதைப் பற்றிப் பேசினால், 'என்னப்பா, ஐஸ்க்ரீம் வாங்கித் தராமல் டபாய்ப்பதற்காகத் தலையில் ஐஸ் வைக்கிறாயா?' என்று சிரிப்பாள்!

மனோவைத் தொல்லை பண்ணுகிறோமோ என்று இருந்தாலும், மாதவி, அடிக்கடி தோழியைப் போய்ப் பார்த்துச் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு வருவாள்.

முன்பாவது, தகுதிக்குக் குறைந்தவர்களுடன் ஏன் பழகுகிறாய் என்று, தாத்தா முகத்தைச் சுழிப்பார்! அசையாமல் நின்று, அவர் பேசுவதைப் பொறுமையாகக் கேட்டு முடித்து விட்டு, மீண்டும் அனுமதி கேட்டுக் கொண்டு போகவேண்டும்! அதற்குள்ளாகப் பாதி ஆர்வம் மறைந்துவிடும்!

ஆனால், இப்போது அப்படியில்லை! தாத்தாவைப் பற்றி அவளால் மறக்க முடிந்தால், அவளுக்குக் கண்டிப்பு என்று, எதுவும் கிடையாதுதான்! ஆனால், எங்கோ அருவமாய் இருந்து, அவர் தன்னைக் கண்காணிப்பது போலவே,

அவளுக்குத் தோன்றும்! கண்காணிப்பது மட்டும் அல்ல. எப்போதும்போலத் தப்புக் கண்டுபிடிப்பது போலவும்!

அவளுடைய தாயாருக்கு மகளாகப் பிறந்த காரணத்தினாலேயே, எப்போதுமே அப்படித்தான்!

தாத்தாவைப் பொறுத்த வரையில், மஞ்சுளா அழகான பெண்ணாகப் பிறந்தது குற்றம்! ஆடல் பாடல்களைப் பயின்று மேடையேறியது குற்றம். அவளைப் பார்த்து அவருடைய அருமை மகன் ஆசைப்பட்டது குற்றம். தந்தைக்குப் பிடிக்கவில்லை என்று தெரிந்தும், மகேந்திரன் பிடிவாதம் பிடித்து, அவளை மணந்தது குற்றம். சரி, அதுதான் போகிறது என்றாலும், அவருடைய மனைவி, தொழிலைக் கவனிக்க வாரிசாக மகேந்திரனைப் பெற்றுத் தந்தது போல அல்லாமல், 'ஞெஞ்ஞெ' என்று மூக்கால் அழுவதற்கும், 'தைதை' என்று குதிப்பதற்குமாக, ஒரு பெண்ணைப் பெற்றது, மஞ்சுளா செய்த மாபெரும் குற்றமாக, அவளுடைய மாமனாருக்குத் தோன்றியது!

சரி, பெண்ணைத்தான் பெற்றுத் தொலைத்து விட்டாள்! அவளையாவது, நல்லபடியாகத் தொழில், நிர்வாகம், வருமானம் என்று சொல்லிக் கொடுத்து வளர்க்கக் கூடாதா? இந்தக் காலத்தில்தான், பெண்களும் எல்லா வேலைக்கும், 'நான் நான்' என்று வந்து விடுகிறார்களே! அவளுக்கும் பாட்டு, நடனம் சொல்லிக் கொடுக்கிறாள்! அந்த மடையனும் தலையாட்டி ரசிக்கிறான் என்று, மகன், மருமகள் இரண்டு பேர் மேலுமே, அவருக்குக் கோபம்தான்!

தானாகச் செய்யா விட்டாலும், தொழிலில், அவர் சொன்னதைச் செய்து முடிக்கும் மகனுக்குத் தொழிலின் நெளிவு

சுழிவுகளை அவர் தீவிரமாகக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்த காலத்தில்தான், விபத்து ஏற்பட்டு, அந்த வழியும் அடைபட்டுப் போயிற்று!

மகனின் இழப்பிலிருந்து பெரியவர் மீள, வெகு காலம் ஆயிற்று! ஆண்டுக் கணக்கில்!

அந்த ஐந்தாறு ஆண்டுக் காலத்தில், அவர் கண்ணில் படாமல் ஒதுங்கியிருக்கவே, மாதவி எப்போதும் முயன்றாள்.

'நாயே, பேயே!' என்று அவளைத் திட்டாவிட்டாலும், அவரிடமிருந்து வெறுப்பு அனல்போல அடிப்பதை, அவளால் உணர முடிந்தது! அவளைப் பார்க்கும் போதெல்லாம், மருமகளைப் பற்றி ஏதாவது முணுமுணுப்பார்.

மாதவியின் பெயரைக்கூட, அவர் விட்டு வைக்கவில்லை! உத்தமியான கண்ணகி பெயரையாவது வைத்திருக்கலாமாம்! ஆடிப் பாடி மயக்கிய கணிகையின் பெயரை வைத்து விட்டாளாம். அவளும் ஆடிப் பாடி, மகனை மயக்கியவள்தானே!

'அப்பாவும் சேர்ந்துதானே, இந்தப் பெயரை எனக்கு வைத்தது? அம்மாவை மட்டும் ஏன் திட்டுகிறீர்கள்?' என்று கேட்க வேண்டும் போல, மாதவியின் மனம் துடிக்கும்! ஆனால், பெரியவரிடம் எதிர்த்துப் பேசக்கூடாது என்பது, சின்னஞ்சிறு வயதில் இருந்தே, தாயின் போதனை!

"அவருக்கு நிறைய ஏமாற்றங்கள், கண்ணு! அதை, இப்படி ஏதாவது சொல்லித் தீர்த்துக் கொள்கிறார்! ச்ச, சொல்லிவிட்டுப் போகட்டுமே! நம் தாத்தாதானே?" என்பாள்.

அப்போது புரியாவிட்டாலும், தாத்தாவின் ஏமாற்றங்கள் என்னென்ன என்று விரைவிலேயே புரிந்து விட்டதால்,

மாதவியும் தாத்தாவை எதிர்த்து வாயே திறப்பதில்லை! ஆனால், அதற்காக மனது வருத்தப்படாமல் இருக்குமா, என்ன?

ப்ளஸ் டூவில் நல்ல மதிப்பெண்கள் எடுத்தபோது, முதல் முதலாக, அவளிடம் பெரியவர் நல்ல விதமாகப் பழகத் தொடங்கினார். கைச்செலவுக்குப் பணம் தந்தார்! அணிந்து கொள்ள, நகைகள் கொஞ்சம் எடுத்துக் கொடுத்தார்!

ஆனால், இதெல்லாம் வந்தது போலவே, திடுமென மறைந்தும் போயின.

தாத்தாவின் பிரியம் கிடைத்துவிட்ட ஆனந்தத்தில், ஏதோ ஒரு திரைப்படப் பாடலை, அவர் காது கேட்க முணுமுணுத்து விட்டாள்!

அவ்வளவுதான். வேதாளம் மறுபடியும் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டு விட்டது!

அப்புறம் அதுவும் பழகிப் போயிற்று!

பாட்டனார் மெள்ள இறங்கி வருவதும், ஏதாவது ஒரு சிறு காரணத்தால், மீண்டும் முகம் திருப்புவதும், அப்புறம் தழைவதும்...

கோபத்துக்கும் தாபத்துக்கும் அவருக்கும்தான் வேறு யார் இருக்கிறார்கள்? அவளுக்கும் அப்படித்தான்! தாத்தா தவிர யாரும் இல்லை! வேறு போக்கிடமே கிடையாது எனும்போது, இருக்கும் ஓர் உறவையும் வெறுப்பேற்றுவானேன் என்று, மாதவி முடிந்தவரை ஒதுங்கிப் போனாள்.

பிரச்சினைகள் எழவில்லை. அவ்வளவே! பாட்டனாரின் அன்பு கிடைக்காதபோதும், அவரிடம் சென்று, ஏதாவது

கேட்கும் தென்பு கொஞ்சம் வந்தது! பெரும்பாலும் மனோகரியைப் பார்த்துப் பேசிவிட்டு வருவதற்குத்தான் கேட்பாள்!

சற்று எரிச்சல் காட்டிய போதும், அவள் துணிந்து கேட்டுவிட்டால், அவரும் சம்மதித்து அனுப்பி வைப்பார்!

தாத்தா இறந்த பிறகு, அவரிடம் இன்னும் சற்று நெருங்கிப் பழக முயன்றிருக்கலாமோ என்று, அவ்வப்போது மாதவி நினைப்பது உண்டு! ஆனால், எந்நேரம், என்ன தப்புக் கண்டு பிடிப்பாரோ என்ற அச்சத்திலேயே இருக்கும்போது, எப்படிப் பக்கத்தில் போய்ப் பேசுவது?

அத்தோடு, மனோகரி சொல்வது போல, அது முடிந்து விட்ட கதை! இனி அதைப் பற்றி யோசிப்பதால், எந்தப் பயனும் ஏற்படப் போவது இல்லை! பிறகு என்ன அதைப் பற்றி அலசி ஆராய்வதும், மனம் சோர்வதும்?

அதைவிட, ''பார் மது, உன் கையில் இந்த மாத 'அலவன்ஸ்' பணம் இருக்கிறதல்லவா? போய் உனக்குப் பிடித்ததாக எதையாவது வாங்கு! அலசி ஆராய்ந்து வாங்கும்போதும், வாங்கியவற்றை அணியும்போதும், கட்டாயம் மனதிற்கு உற்சாகம் ஏற்படும்! செய்!'' என்று மனோ சொன்னதுபோல, ஏதாவது 'ஷாப்பிங்' பண்ணலாம்!

துணிக்கடை முன் காரை நிறுத்திவிட்டு, உள்ளே சென்று, சுரிதார் செட்டுகளை எடுத்துப் போடச் சொன்னாள் மாதவி.

என்னவோ, ஒன்றும் பிரமாதமாகப் பிடித்ததாக அமைய வில்லை! ஆனால், வந்ததற்கு ஒன்றிரண்டையாவது வாங்கிப் போகலாம் என்று ஓரளவு பிடித்ததாய்த் தேர்ந்தெடுத்து வைத்தவற்றை அவள் ஆராய்ந்தபோது, ''மன்னிக்க வேண்டும்!'' என்று ஒரு குரல் அவளை அழைத்தது.

திடுக்கிட்டுத் திரும்பி ஏறிட்டுப் பார்த்தால், சற்றும் அறிமுகம் இல்லாத ஓர் இளைஞன் அங்கே நின்று கொண்டிருந்தான்.

வரிசைப் பற்கள் வெண்ணிறமாய்ப் பளிச்சிட லேசாக முறுவலித்து, ''சம்மன் இல்லாமல் ஆஜராவது என்பார்கள்! அதுபோல, உங்கள் அனுமதியின்றி, உங்கள் விஷயத்தில் குறுக்கிடுகிறேன். ஓவியமோ, சிற்பமோ, ஒரு நல்ல கலைப்பொருள், கண் முன்னே வீணாவதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியுமா? அது போல வைத்துக் கொள்ளுங்கள். தவறாகக் கருத வேண்டாம்!'' என்று தொடங்கினான், அவன்.

4

சில கணங்கள், மாதவிக்கு என்ன பேசுவது என்றே தெரியவில்லை. விஷயம் என்னவென்று விளங்கினால் அல்லவா, அது பற்றி, மேலே பேச முடியும்? அவன் எந்தப் பொருளை, எப்போது வீணாக்கினாள்? அதுவும் கலைப் பொருள்!

'என்ன உளறல் இது' என்று கடுமையாகப் பேச மனமின்றி, ''நான் எப்போது.. எந்தக் கலைப் பொருளை வீணாக்கினேன்?'' என்று மெல்ல மெல்ல வினவினாள் அவள்.

அவனது பல் வரிசை மீண்டும் கீற்றாய் ஒளிர்ந்து மறைந்தது. லேசாகத் தலையசைத்து, ''நீங்கள் வீணாக்கியதாகச் சொல்லவில்லையே, மேடம்! வீணாக்கி விடக் கூடாதே என்ற ஆதங்கம்! அவ்வளவே!'' என்றான் அவன்.

அவளைக் குழப்புகிறானா?

சுதாரித்துக் கொண்டு நிமிர்ந்தாள் மாதவி. ''வீணாக்க மாட்டேன். கவலைப் படாதீர்கள்!'' என்று சுருக்கமாகச் சொல்லிவிட்டு, மீண்டும் சுரிதார் செட்டுகளின் பக்கம் திரும்பினாள்.

''இந்த மூன்றையும்... என்று, அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, அந்த இளைஞன் மீண்டும் குறுக்கிட்டான்,'' செய்யமாட்டேன் என்று சொல்லிக்கொண்டே செய்கிறீர்களே!'' என்ற குறையோடு. என்ன திரும்பத் திரும்ப என்று, சிறு கோபம் துளிர்விட, ''என்ன சொல்லுகிறீர்கள்?'' என்று, புருவம் சுழித்தாள் மாதவி.

''பாருங்கள், என்னென்ன வண்ணங்களைத் தெரிவு செய்திருக்கிறீர்கள்? நீங்களோ, லேசான சிவப்பு கலந்த வெளுப்பு! நீங்கள் எடுத்து வைத்திருக்கும் எல்லாமே மிகவும் வெளுத்த நிறங்கள்! அணிந்தால்... தப்பாக எடுத்துக்கொள்ள வேண்டாம்! சற்று சோகை பிடித்த மாதிரி இராதா? அதைவிட, ஆழ்ந்த நீலம், கரும் பச்சை, அடர் பிங்க், சிவப்பு, இவைகளின் கலவை என்று அணிந்தால், பொருத்தமாகவும், பளிச்சென்றும் இராதா? ஸாரி... உங்களுக்கு என்ன நிறங்கள் பிடிக்குமோ? ஆனால், பொருத்தமற்ற நிறத்தில் உடை அணிவதால், ஓர் அழகான பெண், வெகு சாதாரணமாகத் தோற்றமளிப்பதைக் கற்பனையில்கூட, என்னால் சகிக்க முடியவில்லை! சொல்வதைச் சொல்லி விட்டேன். இதற்கு மேல், உங்கள் விருப்பம்! பை!'' என்றவன், அதற்கு மேல் நில்லாமல், அங்கிருந்து சென்று விட்டான்!

அவன் மேலும் நின்றிருந்து பேச்சுக் கொடுத்திருந்தால், எச்சரிக்கை உணர்வும் அவன் மீது அலட்சியமும் தோன்றியிருக்குமோ, என்னவோ?

'உனக்காகத்தான் சொன்னேன். இதற்கு மேல், உன்பாடு!' என்பதுபோல, அந்த இளைஞன் சென்றுவிட்டது, அவன் பேச்சு சரிதானா என்று, அவளை யோசிக்க வைத்தது.

உதட்டைக் கடித்தவாறு மாதவி யோசிக்கவும், அவள் எதையும் வாங்காமல் போய்விடுவாளோ என்று பயந்து, "அந்த சார் சொன்னது மாதிரிக் கலர்களில் எடுத்துப் போடுகிறேன், பாருங்கள்!" என்று வேகமாக அடர்ந்த நிறங்களில் பல சுரிதார் செட்டுகளைக் கடை பரப்பினாள், விற்பனையைக் கவனித்த பெண்.

அவன் சொன்னது போல, அடர்ந்த வண்ணங்களில், நாலைந்தை வாங்கிக் கொண்டு வெளியே வந்த மாதவியின் கண்கள், ஒரு தரம் சுற்றுப் புறத்தை அலசித் திரும்பின.

அந்த இளைஞன் அங்கே இராதது, ஒரு வகையில் நிம்மதியாகவும், மற்றொரு விதத்தில் ஏமாற்றமாகவும் இருந்தது, அவளுக்கு!

நிம்மதி நியாயம்தான்! அறிமுகம் அற்ற எவனோ ஒருவன், தொணதொணவென்று பின்னோடு அலையத் தொடங்கினால், அவளுக்கும் தொல்லைதானே! ஆனால், ஏமாற்றம் ஏன் என்றுதான் அவளுக்கே புரியவில்லை!

ஒரு வேளை அவனுக்கு நன்றி சொல்ல, அவளது உள் மனது விரும்பியிருக்குமோ?

எப்படியோ? அவன் அங்கே இல்லை! அத்தோடு விஷயம் முடிந்தது!

ஆனால், எந்த விஷயமும், அப்படித் துணி கொண்டு துடைத்தது போல, அடியோடு முடிவது இல்லை அல்லவா?

அன்று வாங்கிய சுரிதார் செட்டுகளை அணியும்போது, அவன் சொன்னதால் வாங்கியது என்று, மாதவிக்கு நினைவு வந்தது! அணிந்து கொண்டு கண்ணாடியில் பார்க்கும்போது மெய்யாகவே நன்றாக இருக்க, மீண்டும் அந்த இளைஞனின் நினைவு வந்தது!

அவன் சொன்னதால் அல்லவா, இன்று, இதை அணிந்து கொண்டு, இவ்வளவு அழகாக நிற்கிறாள்! இத்தனைக்கும், அவனுக்கு நன்றிகூடத் தெரிவிக்கவில்லை!

லேசாக முகம் சுழித்தது நினைவு வர, அவள் முகம் கன்றியது!

ஆனால், அதற்கெல்லாம் துணிந்துதானே, அவன் அவளுக்கு ஆலோசனை வழங்கியிருக்க வேண்டும்? பரவாயில்லை! பெரிய ரசிகன்தான் போலும்! 'அழகான பெண் சாதாரணமாகத் தோற்றம் அளிப்பதைச் சகிக்க முடியாது!' என்றானா?

அவள் அழகி என்று எண்ணியிருக்கிறானே!

நிஜமாகவே அப்படி நினைத்தானா? அல்லது, சும்மா சொன்னானா?

தன்னை ஓர் அழகியாக, மாதவி ஒரு போதும் கருதியது கிடையாது! அவ்வப்போது, பார்ப்பதற்குக் கொஞ்சம் நன்றாக இருந்தாலும், அடர்ந்த கூந்தலைத் தவிரக் காண்போரைக் கவரும் விதமாகத் தன்னிடம் எதுவும் இருப்பதாக, அவள் எண்ணியதில்லை!

மனோகரி மட்டும் அடிக்கடி சொல்வதுண்டு. "இப்படிக் குச்சி மனுசியாக இராதே, மது! இன்னும் கொஞ்சம் சாப்பிடு!

உன் முகம், உடல் அமைப்புக்கு, லேசாகச் சதை போட்டால்கூடப் பிரமாதமாக இருப்பாய்!'' என்பாள். 'நர்சிங்' பயிற்சி தொடங்கிய பிறகு, ஏதோ டானிக் கூடக் கொடுத்தாள்.

ஆனால், அவள் பேச்சில் மாதவிக்கு நம்பிக்கை இருந்தது இல்லை! மனோவுக்கு அவளைப் பிடிக்கும். அதனால், அவளை உற்சாகப் படுத்துவதற்காகச் சொல்லுகிறாள் என்றே எண்ணுவாள்.

ஆனால், பிறகு 'டீன் ஏஜ்' முடிந்து, எட்டுக்கால் பூச்சி மாதிரிக் குச்சி குச்சியாகக் கையும் காலும் இருந்தது மாதிரி, ரசனைப் பார்வைகளைச் சந்திக்க நேர்ந்த போதும்கூட, 'பன்றியின் குட்டியும் பருவத்துக்கு அழகு' என்பதுபோல, இந்த வயதினால் வந்த பொலிவாக எண்ணினாளே தவிர, அதை அழகென்று பெரிதாக எண்ணிப் பெருமைப்பட்டதில்லை!

எனவே, அந்த 'அவன்' அவளை அழகென்று சொன்னது, ஆச்சரியத்தையும், கூடவே அவள் மனதில் ஏதோ ஒரு கிளர்ச்சியையும் ஏற்படுத்தியது!

தான் அழகுதானா, இல்லையா என்று, அவ்வப்போது, கண்ணாடி முன் நின்று பார்த்தாள்.

தன்னைப் பற்றிய பிரமாதமான அபிப்பிராயம் ஏதும் இல்லாத காரணத்தால், தான் ஒன்றும் அழகில்லை என்று பலமுறை சோர்வதும், அழகாக இல்லாவிட்டால், அவன் அப்படிச் சொல்வானா? நன்றாகத்தான் இருக்கிறேன் என்று, ஒரு பிடிவாதத்துடன் சொல்லிக் கொண்டு உற்சாகம் அடைவதுமாகச் சில தினங்களைக் கழித்தாள்.

பொழுது போவதற்காகச் சேர்ந்த கம்ப்யூட்டர் வகுப்பு, மாதவிக்குப் போரடித்தது!

இந்த வெய்யிலில், என்னைப் போல ஒரு முட்டாள்தான், என் வாழ்க்கைக்குச் சற்றும் தேவையற்ற இந்த வகுப்பைக் கட்டிக் கொண்டு, அப்படி அலைவாள் என்று எண்ணியவாறு, வழக்கமாகச் செல்லும் ஜூஸ் கடைக்குச் சென்று, ஓரமாகக் காரை நிறுத்தினாள்.

''என்னம்மா, வழக்கமான சாத்துக்குடியா, அல்லது, நல்லதாய் மாம்பழம் வந்திருக்கிறது, மாம்பழ ஜூஸ் போடட்டுமா?''

''இரண்டும் இருக்கட்டும்! உங்கள் கடை, 'காக்டெய்ல்' அதுதான் கலவை ஜூஸ், மேடத்துக்குக் கொடுத்தது இல்லையா?'' என்ற குரலைக் கேட்டதும், மாதவி அவசரமாகத் திரும்பிப் பார்த்தாள்.

அவனேதான்!

நன்றி சொல்ல வாய்ப்புக் கிடைத்ததே!

மகிழ்ச்சியோடு புன்னகை புரிந்தவள் பேசத் தொடங்குமுன், ''மூன்று பழங்களின் சாறுகளைக் கலந்து, அருமையான ஜூஸ் ஒன்று தருவார், இவர்! குடித்துப் பார்த்தீர்கள் என்றால், அப்புறம், வேறு பழச்சாறு குடிக்க மாட்டீர்கள்! அவ்வளவு அருமையாக இருக்கும்! இரண்டு தயாரியுங்கள், சார்!'' என்றவன், அவளை ஆர்வமாக நோக்கி, ''ரொம்ப நன்றி, மேடம்!'' என்றுரைத்து, அவளைத் திகைக்க வைத்தான்!

''நன்றியா? எதற்கு? நியாயமாகப் பார்த்தால், நான் அல்லவா, உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும்?'' என்று, சிறு தடுமாற்றத்தைச் சமாளித்துக் கொண்டு, வியப்புடன் வினவினாள் அவள்.

''நீங்கள் ஏன் நன்றி சொல்வது? இந்த வண்ணத்தில் உடையணிந்து, கண்ணுக்கு அழகாகக் காட்சி தருவதற்கு, நான்தான் மேடம், உங்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்!'' என்று விளக்கம் கூறினான் அவன்.

''இப்படி ஓர் அழகிய உடையை நான் வாங்கியதே, உங்களால்தான். நான்தான் உங்களுக்கு நன்றி கூறவேண்டும்.''

''கிடையவே கிடையாது! இதை வாங்கியதில், உங்களுக்கு என்ன லாபம்? எந்நேரமும் கண்ணாடி முன் நின்று அழகு பார்த்துக்கொண்டா இருக்க முடியும்? சும்மா இப்படிப் பார்த்து ரசிக்கிற எங்களுக்குத்தானே முழுப் பயனும்! சொல்லுங்கள், இன்று, உங்களைப் பார்த்து, ஒரு பத்துப் பேராவது, ஜொள்ளு விடவில்லை?'' என்று புன்னகையோடு கேட்டான் அவன்.

லேசாகப் புருவம் நெரித்து யோசித்துவிட்டு, ''தெரிய வில்லை! நான் கவனிக்கவில்லை!'' என்றாள் அவள்.

ஒரு கணம் திகைத்து நோக்கியவன், உடனேயே, ''இனிக் கவனியுங்கள்! அத்தனை ஆண்களும் உங்களைத்தான் பார்ப்பார்கள். என்ன, ஜூஸ் தயாரா? கொடுங்கள்! இதோ மேடம்.. குடியுங்கள்!'' என்று கடைக்காரரிடம் ஜூஸ் தம்ளரை வாங்கி, அவளிடம் கொடுத்தான், அவன்!

குடித்துப் பார்த்தபோது, அவன் சொன்னது போலவே, அந்தக் கலவை ஜூஸ் சுவை மிகவும் நன்றாகத்தான் இருந்தது!

''ம்ம்ம்... ரொம்ப ருசி!'' என்று மிடறு மிடறாக ரசித்து அவள் குடிப்பதைச் சிறு வியப்புடன் பார்த்துச் சிரித்தான் அவன். ''போன பிறவியில், 'ஜென்' சாமியாராக இருந்திருப்பீர்கள் போல! அவர்கள்தானே, இப்படித் தண்ணீரைக்கூட, மெல்ல ரசித்துக் குடிப்பார்களாம்!'' என்றபடி, பாண்ட் பின்புறப்

பையிலிருந்து எடுத்த பர்சைத் திறந்து, நூறு ரூபாய்த் தாளை எடுத்தான். "இரண்டுக்கும் எடுத்துக் கொள்ளுங்கள்!" என்று கடைக்காரரிடம் நீட்டினான்.

மீதியை ஒரு மடக்கில் விழுங்கி விட்டு, "ஐயோ, வேண்டாம். இதற்குக் காசு நான் கொடுக்கிறேன்! கடைக்காரர், அவரிடம் வாங்காதீர்கள்!" என்றபடி, தன் பர்சைத் திறந்தாள், மாதவி.

அதற்குள், கைவேலையை நிறுத்திவிட்டு, கடைக்காரர் பணத்தை வங்க வரவும், அவன் கையைப் பற்றி இழுத்து, "ப்ளீஸ், என்னைக் கடன்காரி ஆக்காதீர்கள்! நானே கொடுக்கிறேன்!" என்றவள், அவன் கையைப் பற்றியிருப்பதை அப்போதுதான் உணர்ந்து, சட்டெனக் கையை விட்டுவிட்டு, முகம் சிவந்து நின்றாள்.

ஒரு 'பளீர்' முறுவலுடன், "ஊகும்! நியாயப்படி, இந்தப் பணத்தை நான்தான் கொடுக்க வேண்டும்! ஊட்டி, கொடைக்கானல் போகிற செலவை, எனக்கு மிச்சப்படுத்தி இருக்கிறீர்களே!" என்றுரைத்து, மீண்டும் அவளைத் திகைக்க வைத்தான் அவன்!

5

யாரோ ஒருவன்! இரண்டாவது தடவையாக, இப்போது பார்க்கிறாள்!

இந்த இளைஞன் ஊட்டிக்கும் கொடைக்கானலுக்கும் போகிற செலவை, மாதவி மிச்சப்படுத்தி இருக்கிறாளா?!

நம்ப முடியாத விஷயமாக இருந்தது, அவளுக்கு.

ஒருவேளை, அவனோடு பேசிக்கொண்டு இருந்ததில், ரயிலையோ, விமானத்தையோ, கோட்டை விட்டதாகச் சொல்லப் போகிறானா? ஆனால், அடுத்த ரயில், விமானத்தில் போகலாம்தானே? ஊகூம்! இவ்வளவு சாதாரணக் காரணத்தை, அவன் சொல்ல மாட்டான்!

'க்யூரியாசிட்டி கில்ஸ் த கேட்' என்ற ஆங்கிலப் பழமொழி, அந்த நேரத்தில் மாதவிக்கு ஏனோ நினைவு வந்தது.

ஆயினும் அதை ஒதுக்கி, அவன் தன் வார்த்தைகளை எப்படி உண்மையாக்கப் போகிறான் என்று அறியும் ஆவலில், "அதெப்படி நான் மிச்சப்படுத்தினேன்?" என்று வினவினாள் அவள்.

தன் கவர்ச்சிப் புன்னகையை மீண்டும் உதிர்த்துவிட்டு, "ஊட்டி, கொடைக்கானலுக்கு எதற்குப் போவார்கள்? பச்சுப் பச்சென்று, இயற்கை எழிலைக் கண்டு ரசிக்கத்தானே! இந்த உடையில் உங்களைப் பார்க்கிறபோது, அருமையான இயற்கைக் காட்சியைப் பார்க்கிற மாதிரி இருக்கிறது! அதற்கு மேல், அங்கு வேறு போவானேன்?" என்று நிஜம்போலச் சொன்னான் அவன்.

ஆகா! என்ன கதை!

அவனை மடக்க எண்ணி, "ஊட்டி, கொடைக்கானலில் குளிர்ச்சியாகவும் இருக்குமே! இங்கே வெய்யில் உச்சி மண்டையைப் பிளக்கிறதே!" என்றாள் மாதவி!

அவள் சொல்லி முடிக்கு முன்பாக, "என்னங்க, ஏசி அறையில் உட்கார்ந்தால், குளிர்ச்சி வராதா? அதற்காக, ஊட்டி

யரை போக வேண்டுமா? இந்த உடையில் உங்களை நினைத்தபடி, ஏசியைப் போட்டுக் கொண்டால், காஷ்மீரே அங்கே வந்துவிடாதா?'' என்று அவன் சிரித்தவாறு கேட்க, அவளுக்கும் சிரிப்பு வந்தது!

முடிந்தவரை அதை அடக்கிக் கொண்டு, ''பள்ளி, கல்லூரியில் எப்போதுமே, பேச்சுப் போட்டியில், முதல் பரிசு உங்களுக்குத்தான் போல!'' என்றாள் அவள், சாதுவாக.

''இல்லை, மேடம்! எங்கள் கல்விக் கூடங்களில் பெண்களும் படித்தார்களா? எப்போதுமே, முதல் பரிசு அவர்களுக்குத் தான்!'' என்று, அவனும் அப்பாவியாகக் கூற, இப்போது, அவளால் சிரிப்பை அடக்க முடியவில்லை!

சிரித்தாலும், ''இது ஒன்று! அந்தக் காலத்தில் இருந்து, பெரிய 'விட்' மாதிரி, பெண்களை வாயாடிகள் என்று விடுவது! அந்தப் பாட்டை, இன்றைக்கும் யாருமே விடுவதில்லை!'' என்று குறைப்பட்டாள் மாதவி.

'''ஓல்ட் இஸ் கோல்ட்' மேடம்!'' என்று, அவன் எடுத்துச் சொல்ல, மீண்டும் இருவரும் நகைத்தனர்!

பழக் கடைக்காரர் வியந்தாற் போலப் பார்க்கவும், மாதவிக்குக் கூச்சமாகி விட்டது!

யாரோ ஒருவனுடன் பொது இடத்தில் நின்றுகொண்டு, என்ன சிரிப்பு! தாத்தா உயிருடன் இருந்தால், கிழிகிழியென்று, கிழித்துவிடுவார்! டிரைவரிடம் காரை எடுக்கச் சொன்னதற்கே ஆத்திரப்பட்டு, பெண்களே கற்றுக் கொடுக்கும் 'டிரைவிங்' பள்ளியில் சேர்த்து, கார் ஓட்டக் கற்றுக் கொடுத்து, தானே ஓட்டிக் கொள்ளச் சொல்லி, ஒரு காரையும் அவள் கையில் கொடுத்தவர் ஆயிற்றே!

ஆனால், அவள் எந்த இடத்தில் இருக்கிறாள் என்று, அரைமணி நேரத்துக்கு ஒரு தரம், அவருக்குத் தெரிவித்தாக வேண்டும்! அதில் தகிடுதத்தம் செய்ய முடியாது! அவள் செய்ய நினைத்ததும் இல்லை. ஆனால், அங்கங்கே ஆள் வைத்து, அவள் சொல்வதைச் சரி பார்ப்பார், பெரியவர்!

வீட்டுப் பெண்ணை நம்பாமல், வேலையாட்களைக் கொண்டு வேவு பார்ப்பதா, என்ன கேவலம் என்று, உள்ளூரக் குமுறுவாள், அவள்!

ஆனால், தாத்தா இறந்த பிறகு, தனிமையில் அமர்ந்து யோசித்தபோது, அவர் மேல் உள்ள கோபம், மாதவிக்கு ரொம்பவே குறைந்து போயிற்று!

தாத்தாவின் போன்ற கண்டிப்புகள், அவளது நன்மைக்காகக் கடைப்பிடிக்கப்பட்டவைதானோ என்று தோன்றலாயிற்று. என்ன, கொஞ்சம் அன்பையும் கலந்து சொல்லியிருந்தால், அப்போது அவ்வளவு ஆத்திரம் ஏற்பட்டிராது! கோபம், குமுறல்! கொஞ்சமேனும், அவளிடம் நம்பிக்கையும் வைத்திருக்கலாம்!

மனோகரியும், அவளைப் போலவே அபிப்பிராயப்படவும், தாத்தாவின் விதிமுறைகளையே, மாதவி பெரும்பாலும் பின்பற்றலானாள்.

இப்படி ஓர் இளைஞனுடன் தனியே நின்று பேசிக் கொண்டிருப்பது, அந்த விதிகளுக்கு ஒவ்வாதது!

"நான் போக வேண்டும். நேரமாகிறது, வந்து... என் ஜூசுக்கு உரிய பணத்தை வாங்கிக் கொண்டீர்கள் என்றால், எனக்கு நிம்மதியாக இருக்கும்!" என்று, மீண்டும் ஒரு தரம் கேட்டுப் பார்த்தாள் மாதவி.

கண்ணில் சிரிப்புடன் தலையசைத்து, அவளது கோரிக்கையை மறுத்துவிட்டு, "தாமதமாக வீடு திரும்பினால், தாயார் திட்டுவார்களாக்கும்!" என்று கேலியாக விசாரித்தான் அவன்.

தாயார் திட்டுவதா? அப்படித் திட்டு வாங்கக் கூடக் கொடுத்து வைத்திருக்க வேண்டாமா?

பெற்றோரின் இழப்பை முழுமையாக உணர்ந்து, "எனக்குப் பெற்றோர் இல்லை!" என்றாள், வருத்தத்தை உள்ளடக்கிய குரலில், சுருக்கமாக!

"ஐயோ, ஸாரிம்மா!" என்று உடனே உருகிப் போனான், அவன். "பெற்றோரை இழப்பது என்றால் எப்படி இருக்கும் என்று எனக்கும் தெரியும்! கொஞ்சம் கொஞ்சம் மறந்து வருவதை மடத்தனமாக நினைவு மூட்டிவிட்டேன் போலத் தெரிகிறது. தயவு செய்து மன்னித்துக்கொள்! இல்லை, மன்னித்துக் கொள்ளுங்கள்! சே! சரியான மடையன், நான்! வீட்டில் பெரியவர்கள் இருக்கிறார்களா என்று தெரிந்து கொள்ளாமல், வேடிக்கை என்று எண்ணி, உளறி விட்டேன்!" என்று நெற்றியில் அறைந்து வருந்தினான்.

உதட்டைக் கடித்துக் கொண்டு, சில கணங்கள் பேசாது நின்றாள் மாதவி. பிறகு, "நான்தான் உங்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்! என் பெற்றோர் இறந்து... இருவருமே ஒரு விபத்தில் ஒன்றாக இறந்து போனார்கள். அவர்கள் மறைந்து பத்து ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது! பெரும்பாலும் நான் அவர்களை நினைப்பதுகூட இல்லை! என்னவோ, இன்று... போகட்டும். விடுங்கள்! அவ்வப்போது, இப்படி நேர்வதுதான்! கொஞ்ச நேரத்தில் மனது சரியாகிவிடும்! வரட்டுமா?" என்று காரை நோக்கித் திரும்பினாள் மாதவி.

"கொஞ்சம் பொறுங்கள்!" என்றான் அவன். "இப்படி வாடிய முகத்துடன் போனீர்கள் என்றால், எனக்கு நிம்மதி இராது! இங்கே, கொஞ்ச தூரத்தில், ஒரு முதியோர் இல்லம் இருக்கிறது! அங்கே போய், இலவச உதவி ஏதாவது செய்துவிட்டு வரலாம். சும்மா புத்தகம் படிப்பது, செஸ், சீட்டு விளையாடுவது, இப்படித்தான். அந்த முதியவர்களுக்குப் பொழுது போவதற்காக, வெறுமனே பேசிக் கொண்டிருந்தால் கூட, அவர்கள் மிகவும் சந்தோஷப்படுவார்கள்! வருகிறாயா? சாரி, இப்படி முகம் வாடி நிற்கும்போது, ரொம்பவும் சின்னப் பெண்ணாகத் தோன்றுகிறீர்களா, சட்டென்று ஒருமையில் பேச வந்து விடுகிறது! இப்போது போகலாம், வருகிறீர்களா?" என்று அழைத்தான் அவன்.

தலையாட்டிவிட்டு, "எப்படியும் உங்களை விடச் சின்னவளாகத்தான் இருப்பேன். அதனால், இந்த 'ஒருமை, பன்மை' பற்றிப் பெரிதாகக் கவலைப்பட வேண்டாம்... என்றவள் சற்றுத் திகைத்தாள்.

இவன் பெயர்கூடத் தெரியாது. இவனோடு ஓர் இடத்துக்கு அது முதியோர் இல்லமாயினும் - எப்படிப் போவது என்று, ஒரு கணம் குழம்பினாள். ஆனால், பெயரைக் கேட்பதும், அறிமுகத்தை அதிகப் பழக்கமாக ஆக்கிக் கொள்வது போலத் தோன்றவே, எதுவும் கேளாமலே அவனைப் பின் தொடர்ந்தாள்.

கார் அவளது! அவனது பைக்கைப் பின் தொடர்ந்து சென்றாலும், காரை ஓட்டப் போவது அவள்தானே?

முதியோர் இல்லத்திற்கு. அவன் பழக்கமானவனாக இருந்தான். அங்கேதான், அவன் பெயரை மாதவி அறிந்து கொண்டாள்!

'கிருபா... கிருபாகரா... என்று பல அழைப்புகள்! ''நீ வந்ததும் படிக்கச் சொல்ல, ராமகிருஷ்ண விஜயம் நாளைக்குக் கேட்டிருந்தேன்! இன்றே வந்துவிட்டாயே! வழக்கமாக வியாழக்கிழமைதானே வருவாய், கிருபாகர்?''

''அப்பா இறந்த தினம் என்று, வியாழன் தோறும் வருவது வழக்கம்!'' என்றபடி திரும்பியவன், அவள் சத்தமின்றித் தன் பெயரைச் சொல்லிப் பார்ப்பதைக் கவனித்துவிட்டு, ''இப்படி நீங்கள் எங்காவது செல்வதுண்டா?'' என்று வினவினான்.

அவள் மகிழ்ச்சியோடு, குழந்தைகள் வார்டு பற்றிக் கூறியதும், ''போச்சுடா!'' என்றான் அவன். தொடர்ந்து, ''அங்கே எல்லா வார்டுகளும், உங்களை அக்கா என்றல்லவா அழைப்பார்கள்! அப்புறம், உங்கள் பெயரை நான் எப்படி அறிந்து கொள்வது?'' என்று அவன் கவலைப்படவும், திகைப்பு மாறி, முகம் சிவந்தாள்.

உடனே சமாளித்து, ''உன் பெயர் என்ன என்று, கேட்டுக் கூடத் தெரிந்து கொள்ளலாமே!'' என்று வழி சொல்லிக் கொடுத்து விட்டு, அவன் கேட்கு முன்பாகவே, தன் பெயரையும் தெரிவித்தாள்.

''மாதவியா?! இந்தப் பெயரைப் படித்திருக்கிறேனே!'' என்றான் கிருபாகரன்.

தாத்தாவின் பேச்சு நினைவில் முகம் இருள, ''சிலப்பதி காரம்!'' என்றாள் அவள்.

''ஊகூம். அதல்ல! வேறே எங்கோ... ம், நினைவு வந்துவிட்டது! அகராதியில்! உங்கள் பெயருக்குக் குருக்கத்திக் கொடி, பனை வெல்லம், சுபத்திரை என்றெல்லாம் அர்த்தம் எழுதி இருக்கிறது! மற்ற இரண்டும், ஒருவாறு ஒத்துப் போகும்!

ஆனால், அந்தப் பனை வெல்லம்! ஒரு வேளை, அப்படி இனிப்பான குணமோ?'' என்று கேட்டான் அவன்.

மாதவியின் முகம் மீண்டும் மலர்ந்தது!

இப்படித் தற்செயலாக ஓரிரு முறை சந்தித்தபின், சொல்லி வைத்தே சந்தித்தனர்.

அவரவர் கதையைப் பற்றிப் பேசினர்.

சிறு வயதிலேயே இறந்துவிட்ட தாயார், சில மாதங்களுக்கு முன் மறைந்த தந்தை பற்றி அவன் கூறியபோது, மாதவியின் மனம் பாகாய் உருகியது! அவளைப் போலவே அல்லவா, அவனும் தன்னந் தனியனாக இருக்கிறான்!

தோழியைப் பற்றிச் சொல்லி, மனோகரியிடம் அழைத்துச் சென்றாள்.

அவளோடு சற்று நேரம் கலகலப்பாகப் பேசிக்கொண்டு இருந்துவிட்டுக் கிருபாகரன் கிளம்பினான்.

கையசைத்து வழியனுப்பி, கண் மறையும்வரை பார்த்து விட்டுத் திரும்பிய மாதவி, தோழியின் பார்வையில் சிவந்தாள்!

''என்னப்பா, ஏதாவது விஷயமா? மனிதர் உன்னை விழுங்குகிற மாதிரிப் பார்க்கிறாரே! நீ வேறு, முதல் தடவையாக, ஓர் இளைஞரை அழைத்து வந்திருக்கிறாய். என்ன, இரண்டும் இரண்டும் நாலுதானா?'' என்று சிரித்தாள் மனோகரி.

''வெளிப்படையாக ஒன்றும் சொல்லிக் கொள்ளவில்லை! ஆனால்... அவரைப் பற்றி, உனக்கு என்ன தோன்றுகிறது, மனோ?'' என்று பூரிப்புடன் வினவினாள் மாதவி.

தோழி என்ன பதில் சொல்லக் கூடும் என்று உணர்ந்திருந்ததால் வந்த பூரிப்பு!

அவள் எதிர்பார்த்தது போலவே, "தோற்றத்தில், இருவரும் ரொம்பப் பொருத்தமாகவே இருக்கிறீர்கள்!" என்றுரைத்து, அவளை மகிழ்வித்த மனோகரி, அத்துடன் முடிக்காமல், "ஆனால்..." என்று இழுத்தாள்.

சிவந்த முகம் வெளிற, மாதவி பதறித் தவித்தாள்.

6

மனோகரியின் அந்த 'ஆனால்' என்ற வார்த்தை, மாதவியை உலுக்கி எடுத்து விட்டது எனலாம்!

அவளது மனம், கிருபாகரன் வசம் சென்று விட்டது மட்டுமின்றி, அவனும் அவளை விரும்புகிறான் என்பதைப் பல்வேறு விதமாகத் தெளிவாகவே வெளிப்படுத்தவே, இனிய எதிர்காலம் பற்றிய கற்பனைகளில், மாதவி மிகுந்த நம்பிக்கையுடனேயே ஈடுபட்டிருந்தாள்!

மனோகரியுடனும், தன் வழக்கமான கலகலப்புடனேயே அவன் பேசிப் பழகினான். மனோகரியும் இயல்பாகக் கலந்துகொள்ள, அவளிடம் இருந்து எதிர்மறையான எதையும் சிறு அளவில்கூட, மாதவி எதிர்பார்க்கவில்லை!

அதுவும், அவளுடைய ஹீரோவைப் பற்றி!

எனவே, மனோகரியின் 'ஆனா'லில் பதறி, "என்ன என்ன, 'ஆனால்?' என்ன மனோ? கிருபாகரிடம் என்ன குறை? என்ன குறை இருக்கிறது? அவரிடம் எப்படிக் குறை இருக்க முடியும்?" என்று பதட்டமாக வினவினாள்.

''ஏய் மது, என்னப்பா? ஏன் இவ்வளவு கலக்கம்? கிருபாகரனைப் பற்றி, நான் தப்பாக எதுவும் சொல்ல வில்லையே!'' என்றாள் மற்றவள், சிறு முறுவலுடன்.

''இல்லை! பின்னே ஏன் 'ஆனால்' என்று இழுத்தாய்? மனோ, அவரிடம் தப்பாக எதுவுமே கிடையாது என்பது, என் அபிப்பிராயம்! ஆனால், அது... அதாவது, என் மனம் அவரிடம் மயங்கி விட்டதால், அவரிடம் உள்ள குறைகள் என் கண்ணுக்குப் புலப்படாமல் போய்விட்டதாக நினைக்காதே! கொஞ்ச நாட்களாக, அதாவது அவரைப் பார்த்ததில் இருந்தே, நான் அவரைப் பற்றித்தான் நினைத்துக் கொண்டே இருக்கிறேன்! அப்படி நினைக்கும்போது, நல்லது மட்டுமே நினைவு வருகிறதே என்று, கெடுதலையும் தேடித் தேடிப் பார்த்தேன்! ஆனால், அப்படி எதையும் நான் கண்டு பிடிக்கவே இல்லை! ஆனால், நீ... ஏதோ... என்ன தப்புக் கண்டாய், மனோ?'' என்று கேட்டபோது, மாதவியின் குரல் பதைத்தது.

தோழியின் கையைப் பற்றி, ''அமைதி! அமைதி! சற்று அமைதியாக இரு, மது! கிருபாகரிடம் குறை எதையும் நானும் காணவில்லை. ஒரு சின்னக் குறையைக் கூடக் காணவில்லையே என்பதுதான் எனக்கு ஆச்சரியம்! பொதுவாக, மனிதர் என்றால், நாலு நல்லதோடு, ஓரிரு கெட்டதும் கலந்து இருப்பதுதானே இயல்பு? ஆனால், இவரிடம் தப்பே இல்லையே! என்னவோ, இம்மி பிசகாமல், சிறப்பாகச் செய்யப்பட்ட ரோபோ மாதிரி, பார்வை, உடை சிரிப்பு.. எல்லாவற்றிலும், ரொம்ப சரியாக இருக்கிறாரே என்று... அதுதான் எனக்குக் கொஞ்சம் குழப்பம்!'' என்றாள் மனோகரி.

மகிழ்ச்சியோடு, துள்ளிக் குதித்தாள், மாதவி!

''அப்பா! இதற்குப் போய், என்னைப் பயமுறுத்தி விட்டாயே! நூற்றுக்குத் தொண்ணூற்று ஒன்பது பேர், நீ சொன்னதுபோலக் குற்றம் குறைகளுடன் இருக்கக் கூடும்! ஆனால், மிச்சமுள்ள ஒரு சதவிகித மனிதர்கள், உத்தமராக இருக்கக் கூடாது என்பது இல்லையே! கிருபாகர் அந்த ஒரு சதவிகிதத்தைச் சேர்ந்த உத்தமர், மனோ! அவருக்கும் எனக்கும் திருமணம் நடக்க வேண்டும் என்று, எனக்காகக் கடவுளிடம் வேண்டிக்கொள், மனோ! அவர் இல்லாமல், இனி நான் உயிர் வாழ்வதிலேயே அர்த்தம் இல்லை!'' என்றாள் உணர்ச்சியுடன்.

''ஷ்! சினிமா வசனம் மாதிரியே, என்ன பேச்சு இது, மது? யாரும், யாருக்காகவும், வாழ்வதோ, சாவதோ இல்லை! இப்போது என்ன? நீ அவரை மணந்து கொள்ள வேண்டும். அதுதானே? ஆனால், அவர் இன்னமும், உன்னிடம் வெளிப்படையாக ஒன்றும் சொல்லவில்லை என்றாயே! நான் வேண்டுமானால், 'உன் உத்தேசம் என்னய்யா?' என்று, அவரது சிண்டைப் பிடித்து உலுக்கிக் கேட்கட்டுமா?'' என்று, பாவனையோடு மனோகரி வினவிய விதத்தில், மாதவி கலகலவென்று நகைத்தாள்.

கனிந்து நோக்கி, ''வெள்ளிச் சலங்கை குலுங்குவது போல இருக்கிறது! கொடுத்து வைத்த ராஸ்கல், அந்தக் கிருபாகரன்! சொல்லு, அவரிடம் பேசட்டுமா?'' என்று மீண்டும் கேட்டாள் மனோகரி.

''வேண்டாம். விரைவில், அவரே இந்தப் பேச்சை எடுப்பார்! முன்பே தொடங்கியிருப்பார்! ஆனால், நீ, அவரைப் பார்க்க வேண்டும் என்று, நான்தான் குறிப்பாய்க் கூறித் தள்ளிப் போட்டேன். இப்போதுகூட, நீ என்ன சொல்லுகிறாயோ என்றுதான் கிருபா கவலையோடு பரபரத்துக் கொண்டிருப் பார்!'' என்றாள் மாதவி.

''கவலையோடா? இந்த நகத்தைக் கடித்துத் துப்பி, தலையைப் பிறாண்டி... அப்படியெல்லாமா? ஊகூம்! மிஸ்டர் கிருபாகரனைப் பார்த்தால், அப்படிப் பார்க்கிறவராகத் தோன்றவில்லை! தன்னைப் பற்றிய திடத்தோடு, நடக்கப் போவது பற்றிய நிச்சயமும் இருப்பதாகவே தோன்றுகிறது! ஆனால், உன் 'டிரஸ்டி'களின் அனுமதி பெற வேண்டும் அல்லவா? அப்படித்தானே உன் தாத்தா ஏற்பாடு செய்திருக்கிறார்?''

''ம். ஆனால், அது பற்றிப் பயம் இல்லை, மனோ! அவர்கள் இரண்டு பேருக்கும், இது அவ்வளவாகப் பிடித்தமற்ற, வேண்டாத பொறுப்பு! தாத்தாவிடம் ஒத்துக் கொண்டபடி, கடமையைச் செய்வார்கள். அவ்வளவே! அதற்கு மேல், அனாவசியமாகக் குறுக்கிட மாட்டார்கள். கணவன் ஒருவனைச் சீக்கிரமே கண்டு பிடித்து வருமாறு, நாலு நாள் முன்பு கூட, வக்கீல் அங்கிள் என்னிடம் சொன்னார்! ஆடிட்டர் சாரும் அப்படியேதான்! அவர்கள் இருவருமே, ஓர் அளவுக்குமேல், கிருபாவைப் பற்றி, அதிகம் துருவி ஆராய மாட்டார்கள். ஒரு வேளை, அவர்கள் ஆராய்வதானாலும், கிருபாகரிடம் குற்றம் எதுவும் இல்லை! எனவே, எங்கள் திருமணம் நடப்பதில், பிரச்சினையும் எதுவும் இராது!'' என்றாள் மாதவி.

அவள் சொன்னது சரியாகவே இருந்தது!

மாதவியுடைய தாத்தா நியமித்திருந்த டிரஸ்டிகள் இருவரும், பெரிதாக அலட்டிக் கொள்ளாமலே, கிருபாகரன் அவனைப் பற்றிச் சொன்ன விவரங்களைச் சரி பார்த்தார்கள்!

படித்திருந்தான், வேலை பார்த்தான், சில மாதங்களுக்கு முன்பாக, அவனுடைய தந்தை மாண்டிருந்தார்! தாயார் மறைந்து பல ஆண்டுகள் ஆகியிருந்தன.

கிருபாகரன் எந்தத் தப்பான தகவலையும் தரவில்லை என்பதை, ஒரு துப்பறியும் நிறுவனத்தின் மூலம், நன்கு ஆராய்ந்த பிறகு, கிருபாகரன், மாதவியின் திருமணத்துக்கு ஏற்பாடு செய்தார்கள்.

அதுவும், அவளுடைய தாத்தாவின் விருப்பப்படிதான்.

திருமணத்தைப் பதிவு செய்ய வேண்டும் என்றும் எழுதியிருந்தாராம்! அப்படியானால், பதிவுத் திருமணமே போதும் என்றான், கிருபாகரன்.

''ஒரே திருமணத்தை எதற்கு இரண்டு தடவை செய்வது? தேவையில்லைதானே, மாதவி?'' என்று அவளிடமும் அபிப்பிராயம் கேட்டுக் கொண்டான்.

அவனுக்கு விருப்பம் இல்லை என்று உணர்ந்த பிறகு, மாதவிக்கும் அது பிடிக்காமல் போய்விட, அவளும் கிருபாகரன் சொன்னதை ஆமோதித்தாள்!

''அனாவசிய ஆடம்பரங்கள் உனக்கும் பிடிக்காதுதான். ஆனாலும், கெட்டி மேளம் முழங்க, நம் முறைப்படி திருமணம் செய்வதைப் போற்றுதலாகப் பேசுவாயே! ஒவ்வொரு சடங்குக்கும், ஒவ்வோர் அர்த்தம் இருக்கிறது. அதனால் ஒன்று விடாமல் செய்ய வேண்டும் என்பாய். இப்போதென்னப்பா?'' என்று, விவரம் அறிந்ததும் மனோகரி வினவியபோது, ''அவருக்குப் பிடிக்கவில்லை, மனோ! இரண்டு தாரம் கொள்கிற மாதிரித் தோன்றுகிறதாம். யோசித்துப் பார்த்த பிறகு, எனக்கும் பிடிக்காமல் போய்விட்டது!'' என்றாள் மற்றவள்.

'''ஈருடல், ஒருயிர்' என்பார்களே, அதுபோல, உங்கள் இருவருக்கும், இனி ஒரே மனமா?'' என்று மனோகரி கேலி செய்ய, மாதவி மகிழ்ச்சியுடன் சிரித்தாள்.

தோழியின் பூரிப்பைச் சற்று நேரம் பார்த்துவிட்டு, "கணவனோடு, மனம் ஒத்து வாழ வேண்டியதுதான், மாதவி. ஆனால், 'உன்'னை, ஒரேயடியாக மறந்து விடாதே!" என்று எச்சரித்தாள் மனோகரி.

கரு விழிகளில் கனவு மிதந்தோட, ஏதோ நினைவுகளில் ஆழ்ந்தாள் மாதவி!

பெரியவரின் விருப்பப்படியும், அடுத்து கிருபாகரனின் ஆசைப்படியும், திருமணப் பதிவு அலுவலகத்திலேயே, மாதவி, கிருபாகரனின் திருமணம் நல்லபடியாக நடைபெற்றது!

அங்கேயே, இருவரும் மாலை மாற்றிக் கொண்டார்கள். மாதவியின் கழுத்தில், கிருபாகரன் தாலி அணிவித்ததோடு, திருமணம் நிறைவு பெற்றது!

தேனிலவுக்காகப் பதினைந்து நாட்கள், ஊட்டிக்குப் போய் வந்தார்கள்.

தொட்டபெட்டா, ஏன் - பொட்டானிக்கல் கார்டன் கூடப் பாராமல் திரும்பி வந்தார்கள்!

அவன், இவ்வளவு ஆசை காட்டுவான் என்று, மாதவியே எதிர்பார்க்கவில்லை!

சில சமயங்களில், "நீ அருகில் இருக்கும்போது, மற்ற எல்லாமே எனக்கு மறந்து போகிறதே! இது என்ன மாயம்?" என்று, கிருபாகரன் வியந்த பார்வையுடன் தலையசைத்துக் கூறும்போது, அவளுக்கு வெட்கமாகவும், வெட்கத்தை மீறிய பெருமிதமாகவும் இருக்கும்!

கூடவே, அவனைப் போல வாய்விட்டுச் சொல்ல முடியாமல் கூச்சம் தடுத்தாலும், அவளும் அதே போலவே

மணர்ந்ததால், அவன் சொல்வதை, அவளால் நன்றாகப் புரிந்து கொள்ளவும் முடிந்தது!

எனவே, கண் மூடிச் சிரித்தவாறே, கணவன் கையணைப்பில் சுருண்டு கொள்வாள்!

அவர்கள் இருவர் மட்டுமே உலகம் என்று இருந்தபோது, ஒரு நாள் திடுமென, "இந்த அழகு வயிற்றுக்குள், ஒரு பாப்பா இருந்தால், எவ்வளவு நன்றாக இருக்கும்!" என்று கிருபாகரன் ஒரு தீவிரக் குரலில் கூறவும், மாதவி வெகுவாக ஆச்சரியப் பட்டுப் போனாள்!

அவனது மோகத்தின் அளவுக்கு, நமக்கிடையே இடைஞ் சலாகக் குழந்தையே வேண்டாம் என்று சொல்லிவிடுவானோ என்றுகூட மாதவி ஓரிரு தரம் எண்ணிப் பயந்திருக்கிறாள். ஆனால், அவனானால், குழந்தைக்கும், அதே அளவு ஆசைப் படுகிறானே!

சற்று யோசித்ததுமே, அவளுக்கு விஷயம் புரிந்து போயிற்று!

உறவு என்று யாரும் இல்லாதவன்! தன்னவளாக மனைவி மட்டுமின்றித் தன்னதாகக் குழந்தையும் வேண்டும் என் கிறான்!

தனக்கும் அப்படித்தான் என்று நினைக்கத் தோன்றவில்லை அவளுக்கு! மாறாகப் 'பாவம்' என்று கணவனிடம் உருகிப் போனாள்!

மாதவி தன் உருக்கத்தைக் காட்டிய விதத்தில், சுற்றியுள்ள உலகத்தை இருவருமே மறந்து போனார்கள்!

7

திருமணமாகி, இந்த அறுபது நாட்களில், கிருபாகரன் ஒரு தரம்கூட, மாதவியின் சொத்து பத்துக்களைப் பற்றியோ, அவளுக்கு வரக்கூடிய வருமானம் பற்றியோ கேட்டதில்லை! அவளுக்குமே, கைச்செலவுக்கு என்று அளிக்கப்படும் பணம் தவிர, அதிகம் தெரியாது!

பொது நிர்வாகியோடு சேர்ந்து, தொழிற்சாலையை நிர்வகிக்கும் வக்கீலும், ஆடிட்டரும் சுரண்டுகிறவர்கள் அல்ல என்கிறவரை நிச்சயம்! அவளுடைய தாத்தாவால், அந்த நிர்வாகப் பொறுப்பு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. ஏதோ ஒரு குறிப்பிட்ட தருணம் வரை, அவர்களது மேற்பார்வை இருக்கும். அதன் பிறகு, எல்லாப் பொறுப்பும், அவளுடைய குடும்பத்திடம் ஒப்படைக்கப்படும் என்கிறவரைதான், அவள் அறிவாள்.

தெரிந்ததை, அவளாக ஒரு முறை அது பற்றிச் சொல்ல முயன்றபோதுகூட, "அது உன் பணம், மது! முன்போலவே, அதை நீ முழுவதும், உன் விருப்பம் போலவே செலவு செய்துகொள்! மற்றச் செலவுக்கு, என் சம்பளம் இருக்கிறது! அது போதும்!" என்று கூறிவிட்டான்!

விழுந்தடித்துப் போய், மனோகரியிடம் இதைச் சொன்னபோது, அவளுக்கும் மிகுந்த மகிழ்ச்சி! "உள்ளூர ஒரு கவலை உறுத்திக்கொண்டே இருந்தது, மது! எப்போது, பண விஷயத்தில், ஆள் மாறப் போகிறாரோ என்ற எண்ணம் மறையவே மாட்டேன் என்றது! ஆனால், எப்போது அதை

அறிவதில்கூட, அவர் அக்கறை காட்டவில்லையோ, மனிதர், உனக்கேற்ற மாணிக்கமேதான்!'' என்று மனோகரி கூறியபோது, மாதவி இன்னமும் அதிகமாகப் பெருமைப்பட்டாள்!

''அப்படிச் சொல்லாதே, மனோ! அவர் மாணிக்கம்தான்! ஆனால், நான்தான் அவருக்குத் தகுதியில்லையோ என்று சில சமயம்...''

''சீச்சீ, என்ன உளறல்!'' என்றாள் மனோகரி. ''உன்னைப் போல ஒரு நல்ல பெண்ணை மணப்பதற்கு, அவரும்தான் கொடுத்து வைத்திருக்க வேண்டும்!'' என்றாள் அழுத்தம் திருத்தமாக.

அப்போதைக்கு வாயை மூடிக்கொண்டாலும், கிருபாகரன், தன்னைவிட உயர்ந்தவன் என்கிற எண்ணம், மாதவிக்குத் தோன்றிக் கொண்டேதான் இருந்தது!

ஆணழகன் போல, அவனது நேர்த்தியான உடல்கட்டும், அமரிக்கையும் கம்பீரமுமான அங்க அசைவுகளும், அமர்ந்த குரலில் விஷய ஞானத்தோடு பேசுவதும், எல்லாமே, அவளுக்குப் பிரமிப்பூட்டுவனவே! இப்படிப்பட்ட ஒருவன், அவளை நேசிப்பது, கட்டாயமாக, உலக அதிசயமே!

மாதவிக்கும், கிருபாகரனுக்கும் திருமணமாகி இரண்டு மாதங்கள் முடிகிற சமயம் அது. இரண்டாம் மாதத் திருமண நாளுக்காகக் கணவனுக்குப் பரிசு வாங்கிக்கொண்டு, மாதவி கடையிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்தாள்.

இதைப் பார்த்ததும், அவன் எப்படிச் சந்தோஷப்படுவான்?

''என்னம்மா மாதவி, எப்படியிருக்கிறாய்? உடம்புக்கு ஒன்றும் இல்லையே?'' என்ற குரல் கேட்டு, பகல் கனவிலிருந்து மீண்டு, மாதவி திரும்பிப் பார்த்தாள்.

டாக்டர் சதாசிவம்! பாலி கிளினிக் வைத்து நடத்திக் கொண்டிருந்தார்! குமாரசாமி உயிரோடு இருந்த காலத்தில், அவரது உடல் நிலைக்கான பரிசோதனைகளை, இவரது சோதனை நிலையத்தில்தான் செய்வது! பார்க்கும் போதெல் லாம், பிரியமாகப் பேசுவார்!

நின்று, முறுவலித்து, "எந்தவிதச் சுகக்கேடும் இல்லாமல், நாங்கள் நன்றாக இருக்கிறோம், டாக்டர்! நீங்கள் எப்படி? ஆன்ட்டி, எல்லோரும் சுகமா?" என்று குசலம் விசாரித்தாள் பெண்!

"எல்லோரும் நல்ல சுகம்தான்! ஆனால், உண்மையைச் சொல்லு. உனக்கு ஒரு பிரச்சினையும், மெய்யாகவே இல்லையே?" என்று மீண்டும் கேட்டார் அவர்.

அவர் கேட்ட விதத்தில் ஏதோ உணர்ந்து, "எனக்குத் தெரிந்த அளவில், பிரச்சினை என்று எதுவும் இல்லை! ஆனால், நீங்கள் பேசுவதைப் பார்த்தால்... என்ன விஷயம் அங்கிள்?" என்று விசாரித்தாள் அவள்.

"அது... இன்று உன் கணவர் கிளினிக்குக்கு வந்திருந்தார்... என்ற அவர் மேலே சொல்லுமுன் மாதவி கலங்கி, "ஐயோ, அவருக்கு என்ன அங்கிள்? இவ்வளவு சந்தோஷத்தைத் தந்த கடவுள்... கடவுளே, அவருக்கு ஒன்றும் இல்லையே, டாக்டர்?" என்று பதறலானாள்.

"அவருக்கு உடம்புக்கு ஒரு குறையும் இல்லை!" என்றார் சதாசிவம் சற்று உரத்த குரலில்!

அவளது பேச்சு நின்று, திகைத்து நோக்கவும், "'கண்டேன் சீதையை' என்கிற மாதிரி, கிருபாகர் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கிறார் என்பதை, நான் முதலில் சொல்லியிருக்க

வேண்டும் போல! என்ன படித்தாலும், நாகரீகமாகத் தோன்றினாலும், கணவர் என்றதும், கோழைகளாகி விடுகிறீர்களே, அம்மா!'' என்று குரலில் சிறு கண்டனத்துடன் அவர் கூற, மாதவி தலை குனிந்தாள்!

ஆனால் உடனேயே நிமிர்ந்து, ''பின்னே எதற்காக அங்கிள், அவர் உங்கள் இடத்துக்கு வந்தார்?'' என்று வினவினாள் மாதவி.

ஏதோ விவரம் புரியாதபோதும் வேடிக்கையாகத் தோன்றும் ஒரு சிரிப்புடன், ''திருமணமாகி இரண்டு மாதங்கள் அதாவது அறுபத்தோரு நாட்கள் ஆகி விட்டனவாமே! இவ்வளவு காலம் ஆன பிறகும், குழந்தை வரக் காணோமே. தன்னிடத்தில் ஏதாவது குறையோ என்று அவருக்குப் பயம் வந்து விட்டதாம். அதனால், அதைச் சோதித்துக் கொள்ள வந்தார்! ஆனால், உனக்குத் தெரியாமலா வந்தார்?'' என்று, டாக்டர் வினவினார்.

''ம்.. என்னிடம் ஒன்றும் சொல்லவில்லை, அங்கிள்! அவருக்குக் குழந்தை ஆசை உண்டு என்று தெரியும்! ஆனால், இந்த அளவுக்கு என்று நான் நினைக்கவில்லை! ஆனால்... என்றவளின் கன்னங்கள் லேசாகச் செம்மை பூசிக் கொண்டன. ''முதலிலேயே, பாப்பா வேண்டும் என்பார், அங்கிள்!'' என்றாள், வெட்கப் புன்னகையுடன்.

சதாசிவம் சிரித்தார். ''பரவாயில்லை! உல்லாசத்துக்குக் கேடு வந்துவிடும் என்பதால், பிள்ளை வேண்டாம் என்று சொல்லுகிற இந்தக் காலத்தில், கிருபாகரன் அதிசயப் பிறவிதான்! ஆமாம், உனக்கு எப்படி?''

முகம் மேலும் சிவக்க, ''அவர் விருப்பம்தான், எனக்கு எல்லாம், அங்கிள்!'' என்றாள் மாதவி கூச்சத்துடன்.

வாய்விட்டுச் சிரித்தார் சதாசிவம். ''கொடுத்து வைத்த மனிதர்! அப்படியானால், விரைவிலேயே நல்ல சேதியை எதிர்பார்க்கலாம் என்று சொல்லு! வெரிகுட்!'' என்றார் அவர்.

அடுத்த மாதத் திருமண நாளின் போதே, அந்த நல்ல சேதியைச் சொல்ல முடிந்தால், எவ்வளவு நன்றாக இருக்கும் என்று எண்ணினாள் மாதவி.

திருமண நாளுக்காகக் கிருபாகரனும், ஒரு மோதிரம் வாங்கி வைத்திருந்தான்.

''மாதத் திருமண நாளுக்கே, மோதிரம் வாங்கி யிருக்கிறீர்களே! திருமண ஆண்டு விழாவுக்கு என்ன வாங்குவதாக உத்தேசமோ?'' என்று மாதவி கேட்க, ''அதை இப்போதே சொன்னால், 'த்ரில்' போய்விடாதா?'' என்றான் அவன்.

அவள் கொடுத்த டி ஷர்ட்டை அணிந்து, ''எப்படி யிருக்கிறது?'' என்று, காலரைத் தூக்கிவிட்டுப் பெருமை காட்டினான்.

''சூப்பர்!'' என்று அவள் மயங்கி விழுவது போல நடிக்க, சட்டென அவளைப் பற்றி முத்தமிட்டான் கிருபாகர்.

அவன் கொடுத்த மோதிரத்தைப் பார்த்துவிட்டு, ''இதைவிட உயர்ந்த பரிசாக... நீங்கள் வாங்கிய மோதிரம் போல, நானும் ஏதாவது வாங்கியிருக்கலாமே என்றிருக்கிறது, கிருபா!'' என்றாள் அவள்.

அவளைத் தோளோடு ஒருதரம் அணைத்துவிட்டு, ''பரிசு வாங்க வேண்டும் என்ற எண்ணம்தான் பெரிதும்மா! அதைப் பணக் கணக்கில் மதிப்பிட முடியாது!'' என்றான் அவன்.

"ஆனாலும், இதையும் அதையும் ஒப்பிட்டுப் பார்த்தால்... என்று அவள் சிறு வருத்தத்துடன் இழுத்தபோது, லேசாக முறுவலித்து, "உயர்ந்த பரிசு ஒன்று, ஒன்றே ஒன்று தான் இருக்கிறது, மது! ஆனால், அதற்கு விலை மதிப்பே கிடையாதாக்கும்!" என்று அவன் கண் சிமிட்ட, தன் சிவந்த முகத்தை, அவன் மார்பில் மறைத்துக் கொண்டாள், மனைவி.

சதாசிவத்தின் பரிசோதனை நிலையத்துக்குச் சென்று வந்த விவரம் குறித்து, அவனாகச் சொல்லுவானோ என்று காத்திருந்து பார்த்தாள், மாதவி. ஆனால், அவன் அது பற்றி, வாயே திறக்கவில்லை!

அவனுக்குக் குறைவில்லை என்றால், தனக்குத்தான் ஏதாவதோ என்று அவள் மனம் நோகுமோ என்று பேசாதிருக்கிறான் என்று ஊகித்தவளுக்கு, உள்ளம் உருகியது!

ஆமாம்! விலை மதிப்பே இல்லாததாக அவன் கருதும் அந்தப் பரிசை, அவனுக்கு அவள் விரைவிலேயே கொடுத்தே ஆக வேண்டும்!

இந்த முடிவெடுத்தவள், மறுநாளே மனோகரியைப் போய்ப் பார்த்தாள்!

தோழி வந்த காரணத்தை அறிந்ததும், மனோகரி முதலில் சிரித்தாள்!

"திருமணமாகி இரண்டே மாதங்களுக்குள் இப்படி ஆசையா? கொஞ்ச காலம், எந்தப் பொறுப்பும் இல்லாமல் இருவரும் ஒருவருக்கொருவராக உல்லாசமாய் இருப்பதை விட்டுவிட்டு, என்னப்பா, இது?"

ஆனால், தோழியின் முகத்தில் தீவிரத்தைக் காணவும், அவள் விரும்பிய வண்ணமே, அவளைப் பரிசோதனை செய்ய ஏற்பாடு செய்தாள்.

சோதனையின் முடிவில், "இனி நிம்மதியாக இரு, தாயே! உன் உடம்பிலும் ஒரு குறையும் இல்லை! வெகு, வெகு சீக்கிரமே, நீ அம்மா ஆகிவிடலாம்!" என்றுரைத்து மீண்டும் நகைத்தாள்.

சில குறிப்புகளையும் சொல்லிக் கொடுத்துவிட்டுத் தோழியின் சிவப்பேறிய கன்னக் கதுப்பில் லேசாகத் தட்டி அனுப்பி வைத்தாள்!

மனோகரியின் குறிப்புகள் பலன் தந்ததாகத் தோன்றவும், மீண்டும் அவளிடமே ஓடி வந்தாள், மாதவி.

அன்றைக்கு, மனோகரிக்கு அறுவைச் சிகிச்சைப் பிரிவில் பணி. தானாகவே சோதித்து அறியும் கருவி ஒன்றைத் தோழியிடம் கொடுத்துவிட்டுப் பணிக்கு விரைந்தாள் அவள்.

வீட்டிற்கு வந்து, சோதனை செய்து பார்த்தபோது கிடைத்த விடை, மாதவியைப் பூரிக்க வைத்தது! உச்சி முதல் உள்ளங்கால் வரை, இன்பச் சிலிர்ப்பு!

அவளும், அவளுடைய ஆசைக் கணவனும் சேர்ந்து, ஓர் உயிரை உருவாக்கி விட்டார்களே!

பொங்கும் மகிழ்ச்சியுடன் கணவனிடம் விஷயத்தைத் தெரிவித்தாள்.

அன்றுவரை அறிந்திராத விதமாகப் பளபளத்த கிருபாகரனின் கண்கள், அவளை அன்னியமாக்கிப் பின்னடையச் செய்தன!

8

தன் இனிய செய்தியைச் சொன்னதும், கிருபாகரன் தன்னை அள்ளித் தூக்கிக் கொண்டு சந்தோஷக் கூத்தாடப் போகிறான் என்று, மாதவி எதிர்பார்த்தாள். ஏனெனில், அது முதலில் இருந்தே அவன் ஆவலாக எதிர்பார்த்த செய்தி!

அவனது மகிழ்ச்சியை, அவன் எப்படியெப்படிக் காட்டக் கூடும் என்று, பல விதமாக மாதவி கற்பனை செய்து வைத்திருந்தாள்.

ஆனால், அவை அனைத்துக்கும் மாறாகக் கிருபாகரனின் கண்களில் தோன்றிய ஒளி, அவளை மிரட்ட, தன்னையறி யாமல் பின்னடைந்தாள்!

ஆனால், கண்டதே பொய்யோ எனும் வண்ணம், அந்த விபரீத ஒளி, உடனேயே அடங்கிப் போனது!

சட்டென முன் வந்து, அதற்குள் பின்னோக்கி இரண்டு மூன்று எட்டுகள் எடுத்து வைத்திருந்த மனைவியின் கையைப் பற்றித் தன்னருகே இழுத்தான். "சொல்லு. உனக்கு எப்படித் தெரியும்? டாக்டரிடம் போனாயா? டாக்டர் நன்கு சோதித்தார்களா? சோதித்து, அதன்பின் இது நிச்சயமாகக் குழந்தைதான் என்று சொன்னார்களா? ஏமாற்றத்துக்கு வழியில்லையே?" என்று, சரமாரியாகக் கேள்விகளை அடுக்கினான்!

இந்த ஆவல், ஒரு வகையில் அவள் எதிர்பார்த்தது எனலாம்! இத்தகைய, இத்தனை கேள்விகளை அல்ல

என்றாலும், அந்தக் கேள்விகளில், தன் வாரிசான அவனது ஏக்கம் புரிபட்டதாக உணர்ந்து, மாதவி சிரித்தாள்.

''நான் டாக்டரிடமே போகவில்லையே!'' என்றாள் விளையாட்டாக. ''ஆனால்...''

பொறுமை யிழந்து, அவள் பேச்சில் குறுக்கிட்டான் கிருபாகரன். ''என்ன இது, பைத்தியக்காரத்தனமான பேச்சு?'' என்றான் எரிச்சலோடு!

முதல் தடவையாகக் கணவனின் சுழித்த முகத்தைக் கண்டு, அவள் அதிர்ந்து நோக்குகையிலேயே, ''நாள் கணக்கு, அது இதென்று சொல்லாதே, மாதவி! அதையெல்லாம் முழுமையாக நம்ப முடியாது!'' என்றான் அவன் சலிப்புடன்.

''அதில்லை... மனோகரி ஒரு 'கிட்' கொடுத்தாள்... அதை வைத்துப் பார்த்ததில்...

அவனது கோபத்தில், மாதவிக்கு அழுகை வரப் பார்த்தது! ஆனால், பிள்ளை ஆசையில்தானே சொல்லுகிறான் என்று, தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டு, கணவனுக்கு விளக்க முயன்றாள்!

ஆனால் எதையும் ஒத்துக் கொள்ளாமல், ''அதையும்தான் சொல்லுகிறேன். ஆனால் அதையும் நூறு சதவிகிதம் நம்ப முடியாது! நீயே சரியாகப் பார்த்தாயோ, என்னவோ? கிளம்பு. முதலில் ஒரு டாக்டரிடம் போவோம். டாக்டர் பார்த்துக் குழந்தைதான் என்று சொல்லட்டும்! அப்புறம்... என்றவன், சட்டெனத் திரும்பி, ஜன்னல் அருகே சென்று, வெளியே பார்த்துக் கொண்டு நின்றான்.

அவனது உடம்பு, இரும்பு நாணாய் விரைத்திருந்தது, அணிந்திருந்த உடையினுள்ளும் தெளிவாகத் தெரிய, மாதவி திகைத்தாள்!

ஏன் இப்படி என்று ஒன்றும் புரியவில்லை.

அவளுக்கும் குழந்தை ஆசைதான்! அருமைக் கணவனுடைய சிசுவைத் தாங்க, அதிகமான விருப்பம்தான்! இப்போது, கருவென்று எண்ணியது, அப்படி அல்ல என்று முடிவானால் அவளுக்கும் வருத்தமாகத்தான் இருக்கும்!

ஆனால், இவ்வளவு, இந்த மாதிரிப் பாதிப்பு இருக்காது!

அடுத்துப் பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணி, எளிதாக ஆறுதல் அடைவாள்.

விதி வசத்தால், இன்னும் ஒன்றிரண்டு ஆண்டுகள் ஆனாலும் கூட, இது போன்ற தவிப்பு அவளுக்கு நிச்சயம் ஏற்படாது! அவளுக்குத்தான், அவளுடைய கணவன் அருகே இருப்பானே!

மற்ற எது இருந்தாலும், இல்லாவிட்டாலும், அவளுக்குப் பெரிய பாதிப்பு ஏற்பட்டு விடாது!

ஆனால், கிருபாகரனுக்கு அப்படியில்லை போலிருக்கிறதே! இது குழந்தையாக இல்லாமல் போய் விடுமோ என்ற ஐயத்திலேயே, இப்படி இறுகிப் போனானே! மூச்சுக்கூட விட முடியாத இறுக்கம்!

பொதுவாகப் பெண்களுக்குத்தான், பிள்ளை ஆசை அதிகம் இருக்கும் என்பார்கள்! இங்கே, நேர் மாறாக இருக்கிறதே!

கணவனைச் சமாதானப் படுத்த எண்ணி, அவனை நோக்கி ஓர் எட்டு எடுத்து வைத்தவளுக்கு, அதற்கு மேல் அவனை நெருங்கிச் செல்ல முடியவில்லை!

என்னவோ, அவளுக்கும், அவனது தவிப்புக்கும் சம்பந்தம் இல்லை போல, அவன் முகம் திருப்பி நின்றதும், அன்று வரை அவள் அறியாததுதான்!

தயக்கத்துடன் மாதவி நிற்கையில், கிருபாகரனே பேசினான், ''இப்போதே டாக்டரிடம் போய், இதைத் தெளிவுபடுத்திக் கொள்ளலாம். கிளம்பு!''

''இன்று ஒரு வரவேற்புக்குப் போக வேண்டுமே...

''அவசியம் இல்லை! முதலில் டாக்டரிடம் போவோம்!'' என்றான் அவன் பிடிவாதமாக.

''அப்படியில்லை, கிருபா! இது உங்கள் 'பாஸ்' வீட்டுத் திருமண வரவேற்பு! கட்டாயம் போக வேண்டும் என்று சொல்லியிருந்தீர்கள்!'' என்று மனைவியாய் நினைவு படுத்தினாள் மாதவி.

உதட்டைக் கடித்துக் கொண்டு ஒரு கணம் நின்றவன், தலையசைத்து, ''பரவாயில்லை! முதலில் டாக்டரிடமே போவோம். அதன் பிறகு, தேவைப்... முடிந்தால் வரவேற்புக்குப் போய்க் கொள்ளலாம்!'' என்று முடித்தான்.

டாக்டரிடம் செல்ல அணியும் உடையில், வரவேற்புக்கு எப்படிப் போக முடியும் என்ற ஆவளது ஆட்சேபனையை, அவன் காதில் வாங்கிக் கொள்வதாகவே இல்லை!

மீண்டும் அவள் தயங்கவும், ''முதலில் மருத்துவரிடம் போய்விட்டு, அதன் பின் தேவைப்பட்டால்... நேரமும் இருந்தால், வீட்டுக்கு வந்து, உடை மாற்றிக் கொண்டு போகலாம்,'' என்றான் அவன்.

'''பாஸ்' வீடு எனும்போது, தேவைப்படாமல் எப்படிப் போகும்?'' என்ற கேள்விக்கு, அவன் பதிலே சொல்லவில்லை!

''கிளம்பு, கிளம்பு... என்று அவளை அவசரப் படுத்துவதிலேயே குறியாக இருந்தான்.

ஆனால், அவனது அவசரத்துக்கு, டாக்டரிடம் காரியம் நடக்கவில்லை!

முதலில், அவசர 'சிசேரியன்' ஒன்றில் ஈடுபட்டிருப்பதால், அன்று, சாதாரண கேஸ் எதையும் டாக்டரம்மா பார்க்க மாட்டார்கள் என்று சொல்லிவிட்டார்கள்!

மாதவி வீட்டுக்குப் பழக்கமான பெண் மருத்துவர் இப்படி!

''சரி, நாளை வந்து பார்ப்போம்! இப்போது வீட்டுக்குப் போய், வரவேற்புக்குக் கிளம்பலாம்,'' என்றாள் மாதவி.

ஆனால், அதை ஏற்காமல், வழியில் கண்ட 'தாய் சேய் நல' மருத்துவமனை ஒன்றினுள் நுழைந்து கேட்டால், ''இன்றையக் கணக்கு, 'டோக்கன்' கொடுத்தாயிற்று. நாளை வாருங்கள்!'' என்றாள், வரவேற்பில் உட்கார்ந்திருந்த பெண்!

விடாக் கண்டனாக, இன்னுமொரு மருத்துவமனைக்கும், மனைவியை அழைத்துச் சென்றான், கிருபாகரன்.

மறுநாள் காலையில் சோதனைக் கூடத்தில் சாம்பிள் கொடுத்து, அவர்கள் கொடுக்கும் ரிப்போர்ட்டுடன் அதற்கு மறுநாள் வந்து பார்க்குமாறு கூறினார், அந்த மருத்துவர்!

புருவம் சுழித்து நின்றவனின் கையோடு, தன் கையைக் கோத்து, ''இவ்வளவு பதட்டப் படுகிறீர்களே, கிருபா! அமைதி யாக இருங்கள்! இன்னும் இரண்டே நாட்கள்! நாளைக் கழித்து, நான் சொன்னது சரிதான் என்று, தெளிவாகத் தெரிந்துவிடப் போகிறது! இறுக்கம் தளர்ந்து, நிம்மதியாக, சாதாரணமாக இருங்கள்!'' என்று, அவன் கையை, ஆறுதலாக அழுத்தி விட்டாள்.

பற்றிய கையை விடாமலே, காருக்கு வந்தார்கள்.

வீட்டுக்குள் சென்றதும், சற்று நேரம் அவளை அணைத்த வாறு, கிருபாகரன் அசையாது நின்றான்.

மறுநாள் பரிசோதனை. அதற்கு மறுநாள் பரிசோதனை ரிப்போர்ட்டுடன் டாக்டரைச் சென்று பார்த்தார்கள்!

மாதவி கருவுற்றிருக்கிறாள். இது குழந்தைதான் என்று, லேடி டாக்டர் உறுதியாகச் சொன்னார்.

மருத்துவருக்கு உரிய தொகையைக் கொடுத்துவிட்டு, வெளியே வரும் வரை, கிருபாகரன் சாதாரணமாகவே தோன்றினான்.

வீட்டுக்குப் போனதும், "உன்னிடம் பேசவேண்டும்!" என்று அழைத்து, முன்னே நடந்தபோதும், மாறுபாடாக மாதவி எதையும் கண்டாளில்லை!

"உட்கார்!" என்ற ஒற்றை வார்த்தையில், சோஃபாவைக் காட்டியபோதுதான், அவன் கண்களில், அந்தப் பழைய ஒளி தோன்றி அவளை மருட்டியது!

"கிருபா..." என்று தொடங்கியவளைக் கையுயர்த்தி அடக்கி விட்டு, அவன் சொன்னான்!

"பார், நான் இப்போது சொல்லப்போவதைக் குறுக்கிடாமல் கேட்பது நல்லது!" என்று தொடங்கி, அவனுடைய தந்தை ரகுபதியும், அவளுடைய தாத்தா குமாரசாமியும் இன்னொரு வருமாகச் சேர்ந்து தொழில் தொடங்கியதைச் சொன்னான்!

"ஓ! அப்போது, பெரியவர்கள் தொழிலில் கூட்டு சேர்ந்தார்கள்! இப்போது, நாம் வாழ்க்கையில்..." என்று மாதவி

ஆதுகலத்துடன் கூறத் தொடங்க, "குறுக்கிட வேண்டாம் என்று சொன்னேன்!" என்றான் அவன், கடுமையான குரலில்.

அவள் வாயடைத்து நோக்கவும், அவன் தொடர்ந்தான்.

குமாரசாமி, எந்த மாதிரித் தன் தந்தையை ஏமாற்றி, தொழிலில் பங்குகளைச் சுருட்டினார் என்பதையும், தந்தை எப்படி ஏங்கி இறந்தார் என்பதையும், இறக்கும் தறுவாயில் தான் வாக்குறுதி அளித்ததையும் கூறினான்.

அடுத்து அவளுடைய தாத்தாவின் உயில் பற்றி அறிய நேர்ந்ததைச் சொன்னான்.

"உன் தாயார் மீது இருந்த வெறுப்பில், உன் மீதும் அவருக்கு நம்பிக்கை இல்லாது போயிற்று! அதனால், உன் குழந்தையுடைய தந்தையைத்தான் எல்லாம் சேரும் என்று எழுதியிருக்கிறார்! அது பற்றித் தெளிவாகத் தெரிந்து கொண்டேன். அந்தப் பங்குகளுக்காகத்தான், என் இரண்டு வருஷக் காதலைக்கூட, ஒதுக்கி வைத்துவிட்டு, உன்னைத் துரத்தி வந்து மணந்தேன்! இப்போது, குழந்தை உருவாகி விட்டதால், அந்தப் பங்குகள் எனக்குக் கிடைத்துவிடும்! என் நோக்கமும் நிறைவேறிவிடும்!

"எனவே, இனி நமக்கிடையே, எந்த உறவும் கிடையாது! நான் என் காதலி சுபியை மணக்கப் போகிறேன்! இது உனக்கு வருத்தத்தைத் தரும்தான்! ஆனால், உன் வருத்தத்தைவிட, என் தந்தைக்குக் கொடுத்த வாக்கு, எனக்குப் பெரிது!

"அத்தோடு, சற்று யோசித்துப் பார்! நாம் என்றென்றைக்கும் இணை பிரியாது வாழ்வோம் என்று, நான் உன்னிடம் சொன்னதே இல்லைதானே? ஆனால், உன்னையும் ஒன்றும் இல்லாமல் விட்டுவிட மாட்டேன்! நீயும், உன் குழந்தையும்,

நிலை இறங்காமல் வாழ வகை செய்து வைப்பேன்! நீ என்னை விவாக ரத்து செய்வதானாலும் நல்லதே! மறுமணம் வேண்டு மானாலும் செய்துகொள்! ஆனால், நமக்குள் இனி உறவு இருக்க வாய்ப்பில்லை!

''நீயாக எனக்கு விடுதலை தந்தால், சந்தோஷம்! நாம் நல்ல நண்பர்களாகக்கூட இருக்கலாம்! மறுத்தாலும், கோயிலில் தாலி கட்டி, என் மனைவியாக வாழ, என் காதலிக்குச் சம்மதமே!'' என்று முடித்தான்.

அத்தோடு, அவள் விஷயம் முடிந்தது என்பதுபோல, செல்ஃபோனை எடுத்து வேகமாக எண்களைத் தட்டி, ''சுபி, நாம் இத்தனை மாதங்களாக, மிகவும் ஆவலாக எதிர்பார்த்தது நேர்ந்துவிட்டது!... என்னது? 'கேக் பாஸ்கட்'டோடு, சோழாவில் கொண்டாட வேண்டுமா? ஓ, இதோ வருகிறேன்!'' என்றவன், இடிந்து நொறுங்கிப் போயிருந்தவளைத் திரும்பியும் பாராமல், வேகமாக வெளியே சென்றான்.

9

திக்பிரமை என்பார்கள்! ஒன்றுமே புரியாத நிலை!

கிருபாகரன் வெளியே சென்ற பிறகு, வெகு நேரம் மாதவி அந்த நிலையில்தான் இருந்தாள். மெதுவே, உடம்பில் சுரணை வரத் தொடங்கிய பிறகும், அவளால் எதையும் புரிந்துகொள்ள முடியவில்லை!

காதல், கல்யாணம், குழந்தை!

வெகு இயல்பாக எல்லாமே, இயற்கை வழி நடந்தது! ஆனால், அப்புறம் என்ன?

சொத்து., பங்கு., பழி வாங்குதல். இரண்டாண்டு முன்னாள் காதலி. இதெல்லாம் எங்கிருந்து வந்தன?

எல்லாவற்றுக்கும் மேலாக, இனி அவர்கள் இருவருக்கும் இடையே, உறவிருக்க வழியில்லையாமே!

அவளது உயிர் மூச்சே அவனாக இருக்கையில், இது எப்படிச் சாத்தியம்?

அவன் இல்லாமல், அவள் செத்துவிட மாட்டாளா?

அவனுக்கும் அவள் அப்படித்தான் என்று நினைத்தாளே! அப்படி நினைக்கும்படியாகத்தானே, இத்தனை நாள் நடந்து கொண்டான்!

திடீரென்று, அப்படி இல்லை என்றால், எப்படி நம்புவது?

எவ்வளவு ஆசை! எத்தனை பரிசுகள்!

இரண்டாம் மாதத் திருமண நாளுக்காக அவன் அணிவித்த மோதிரம், இன்னும் விரலில் கிடக்கிறதே!

மோதிரத்தைப் பார்க்கும்போதே, ஆண்டு விழா பற்றி, அன்று நடந்த பேச்சு நினைவு வந்தது!

மெய்யாகவே, 'த்ரில்' போய்விடும் என்று எண்ணினானா என்று, இப்போது சந்தேகம் வந்தது! ஆண்டு விழாவுக்கு வாங்கப் போவது இல்லை என்ற நிச்சயத்தில், பதில் சொல்லாமல் தட்டிக் கழித்தானோ?

அப்படித்தான் போலத் தெரிகிறதே என்று எண்ணும்போதே, அவளுக்கு நெஞ்சை அடைத்துக் கொண்டு வந்தது!

கடவுளே, அவளால் எப்படித் தாங்க முடியும்?

ஆனால், அவன் வாயால் சொன்னானே! தந்தைக்காக, சைக்கிள் நிறுவனப் பங்குகளுக்காக அவளைத் துரத்தி... மணந்து... இப்போது, விவாக ரத்தா?

இன்னொன்றுகூடச் சொன்னான்.

இரண்டு வருடக் காதல்... என்று... யாரோ சுபியிடம் பேசினானே!

சோழாவில், கேக் பாஸ்கெட்டோடு கொண்டாட்டமா?

அவள் கருவுற்றிருப்பதை, இன்னொரு பெண்ணோடு கொண்டாடுகிறான், அவளுக்குத் தாலிகட்டித் தொட்டு, குழந்தையைத் தந்த கணவன்!

விசித்திரமாக இல்லை?

கிருபாகரன், இன்னொருத்தியோடு சேர்ந்து, இந்த கேக், அந்த கேக் என்று, ஒருவருக்கொருவர் ஊட்டிக்கொண்டு கேக்கை முழுங்குவதுபோலக் கற்பனைகூட உண்டாயிற்று! வேடிக்கைதான்!

உரக்கச் சிரிக்க வேண்டும்போல்வும் தோன்றவும், சிரிக்கத் தொடங்குவதுபோல, உதடுகள் பிரிவதை உணர்ந்ததும் மாதவி பயந்து விட்டாள்!

அதிர்ச்சியில் அவளுக்குப் பைத்தியம் ஏதும் பிடிக்கப் போகிறதா?

இல்லை! இதை அவளால் தனியாகச் சமாளிக்க முடியாது. உருப்படியாக ஒன்றும் யோசிக்கக்கூட முடியாமல், எண்ணங்கள் கட்டுத் தெறித்து ஓட, கண்ட கற்பனைகள் தோன்ற... தனியாக இருந்தால், அவளுக்குப் பைத்தியம் பிடிப்பது நிச்சயமே!

ஆனால், இந்த நேரம் அவளுக்குத் துணை வரவும், அவளுக்கு யார் இருக்கிறார்கள்? பிரியாத் துணை என்று எண்ணியிருந்தவன் கைவிட்டு விட்ட பிறகு, மற்ற எந்த உறவும் இல்லாத அவள் தனிதானே!

கடவுளே! யாரும் இல்லையோ என்று சில கணங்கள் மிரண்ட பிறகுதான், மாதவிக்குத் தன் தோழி மனோகரியின் நினைவே வந்தது!

அவள் இருக்கிறாளே! அன்பும் கருணையுமே உருவாய், அவளுடைய அன்புத் தோழி! அவள் ஒரு நாளும், மாதவியைக் கைவிட மாட்டாள்!

ஏதோ பலம் வந்த மாதிரித் தோன்றவும், மாதவி நிமிர்ந்து அமர்ந்தாள்.

மனோகரியிடம் சொன்னால், விஷயம் என்னவென்று கண்டு கொள்வாளே!

முதலில் அவளிடம் போய் எல்லாவற்றையும் ஒப்பிக்க வேண்டும்!

அப்புறம்தான், அவளுக்குக் கொஞ்சமாவது, தெளிவு பிறக்கும்!

சீக்கிரமாக, சீக்கிரமாக அவளிடம் ஓட வேண்டும்! எவ்வளவு முடியுமோ, அவ்வளவு சீக்கிரமாக, மனோகரியிடம் போக வேண்டும்!

அவசரமாக எழுந்தவளுக்குக் கால்கள் தள்ளாடின. இவ்வளவு பாதிப்பா? இந்தக் கால்களைக் கொண்டு, காரை ஓட்ட முடியுமா?

பெரிய பெரிய மூச்சுகளை எடுத்துத் தன்னை ஓரளவு திடப்படுத்திக் கொண்டு, வெளியே சென்று காரை எடுத்தாள் மாதவி. யாரிடமாவது சொல்லிக்கொண்டு போகவேண்டுமோ என்று யோசனை தோன்றி மறைந்தது.

அப்படிச் சொல்வதற்கு யார் இருக்கிறார்கள்? தாத்தா நடந்து கொண்ட விதத்தால், வேலையாட்களில்கூடப் பிரியமான வர்கள் என்று யாரும் கிடையாது!

அவன் பேசிய வார்த்தைகளுக்கு, அய்யாவிடம் சொல்லு என்றுகூட யாரிடமும் சொல்லத் தேவையில்லை!

ஆனால்... எப்படி? எப்படி? இது எப்படி நிஜமாகும்?

கார் செல்லச் செல்ல, கீறல் விழுந்த ரிக்கார்டு என்பார்களே, அதுபோல, இதே கேள்விதான், அவளை வண்டாய்க் குடைந்து கொண்டே இருந்தது!

மனம் குழம்பியிருந்ததாலோ என்னவோ, அடிக்கடி வழி தவறியது! இரண்டு முறை சென்ற வழியே திரும்பி வர நேர்ந்த பின், அவ்வப்போது காரை நிறுத்தி, சுற்றிலும் எட்டிப் பார்த்துக் கொண்டே அவள் சென்றபோதுதான், அந்த ஜூஸ் கடையைப் பார்த்தாள்!

கிருபாகரனோடு கலவை ஜூஸ் குடித்த இடம்!

அவளை அவன் துரத்தி வந்து மனம் கவர்ந்த இடங்களில், இதுவும் ஒன்று போலும்!

அணுப் பிசகாமல், அன்றைய உரையாடல் நினைவு வர, சட்டென மாதவியின் முகம் பிரகாசமுற்றது!

அது, மிதப்புக் கட்டையா, துரும்பா என்று அவளுக்குத் தெரியாது! ஆனால், துரும்பையும் பற்றுகிற நிலையில் அல்லவோ, அவள் இருந்தாள்.

அன்றைக்கு, அவன் எப்படிப் பேசி, அவளுக்கு அசடு வழிய வைத்தான்! இப்போது, அவளோடு, மனோவையும் சேர்த்து முட்டாளடிக்கப் பார்க்கிறான்! அவ்வளவே!

எல்லாம் விளையாட்டாக இருக்குமோ என்று எண்ணும் போதே, அவளது கைகள் தானாகக் காரை வீட்டுக்குத் திருப்பின!

இது விளையாட்டாக இருப்பின், அப்படி ஒன்றும், நான் ஏமாந்து விடவில்லை என்று காட்டிச் சிரிக்க வேண்டும்! அன்றி, ஒரு வேளை... அது மெய்யென்றாலும், ஐயம் திரிபறத் தெரிந்து கொள்ள வேண்டும்!

அதன் பிறகு... ஆனால், கடவுளே, அப்படி இருக்க வேண்டாம்?

கிருபாகரன் வீடு திரும்புவதற்கு, அன்று வெகு நேரம் ஆயிற்று!

பதினோரு மணியளவில் வீட்டுக்கு வந்தவன், ஹாலில் அவள் ஒருத்தி இருக்கிறாள் என்பதே நினைவில்லாமல், மாடிப் பக்கம் செல்லவும், இழுத்துப் பிடித்து வைத்திருந்த நம்பிக்கை சிதற, ''உங்களிடம் ஒன்று பேச வேண்டும்!'' என்றாள், குரல் பதற.

''பேசுவதற்கு என்ன இருக்கிறது?''

''சற்று முன் சில விஷயம் சொன்னீர்கள்!''

''சற்று முன்னரா?'' என்று கையைத் திருப்பிக் கடிகாரத்தைப் பார்த்துவிட்டு, ''ஐந்து மணி நேரம் ஆகிறது! அது சற்று நேரமா?'' என்று, சற்று ஏளனமான குரலில் வினவினான், கிருபாகரன்.

ஐந்து மணி நேரம் அந்தப் பெண்ணுடன் குலாவி விட்டு வந்திருக்கிறானா?

தலையை உலுக்கி, அந்த நினைவை அகற்ற முயன்றபடி, "அப்போது, நீங்கள் சொன்.. சொன்னது எல்லாம் நி...நிஜ..." என்று தடுமாறியவளின் பேச்சில் குறுக்கிட்டு, "நிஜம்தான்!" என்றான் அவன். "சத்தியப் பிரமாணம் செய்தால்தான் நம்புவாய் என்றால், அதையும் செய்கிறேன். நான் சொன்னது, சத்திய வாக்கு! உண்மை! உண்மையைத் தவிர வேறல்ல!" என்றான் தெளிவாக.

அதற்கு மேல் தாங்க முடியாமல், "எப்படி உங்களால் என்னை இப்படி ஏமாற்ற முடிந்தது?" என்று, தவிப்பைக் காட்டினாள் மாதவி.

"ஏன்? உன் தாத்தாவால், என் தந்தையை எப்படி ஏமாற்ற முடிந்தது? அதைப் போலத்தான்!" என்றான், அவன் சலனமே இல்லாமல்!

"தாத்தா செய்ததற்கு, நான் எப்படிப் பொறுப்பாவேன்? நான் ஒரு நாளும் உங்களை..... என்று குரல் நடுங்க எடுத்துச் சொல்ல முனைந்தவளைக் கை உயர்த்தி அடக்கினான் கிருபாகரன்.

"ப்ளீஸ்! வாதம், விவாதம், கண்ணீர் எதுவும் தயவு செய்து வேண்டாம்! அவைகளால் ஒரு பயனும் இல்லை! இது முழுக்க முழுக்க முடிந்துவிட்ட விஷயம்! உன் தாயார் மீதுள்ள வெறுப்பாலோ, அல்லது, உன்னையே நம்பத் தகுந்தவளாக எண்ணாததாலோ, இப்படி ஓர் உயில் எழுதியதோடு, அதைப் பற்றி உனக்குத் தெரிவியாமலும் இருந்து, உன் தாத்தா எனக்கு உதவினார். அவர் செய்த தப்புக்கு, அவரே மாற்று ஏற்பாடும்

செய்து விட்டார்! ஒரு வகையான பிராயச்சித்தம் என்றுகூட வைத்துக் கொள்ளலாம்! என் தந்தை உழைத்துச் சம்பாதித்த பணம், அவரை அப்படிச் செய்ய வைத்து, எனக்கு உதவி செய்தது! அத்தோடு விஷயம் முடிந்தது! விடு!'' என்றான் தீர்மானமாக!

கண் முன்னே முழு மனிதனாக நின்று, அவன் அழுத்தம் திருத்தமாகச் சொன்ன போதும், அதை ஒப்ப மாட்டாமல், ''அப்புறம் நான்? என் கதி என்ன?'' என்று கேட்டாள் மாதவி.

''ஏன், உனக்கென்ன? நீ பணக்காரிதானே! நானும் ஒன்றும், வயிற்றுப் பாட்டுக்கே வழியில்லாமல், உன்னை நடுத் தெருவில் நிறுத்தப் போவது இல்லையே! நீயும், உன் குழந்தையும், நிலை இறங்காமல் வாழத் தேவையான பணம் உனக்கு இருக்கும்! இந்த வயதுக்கு உரிய துணை வேண்டுமானால், மறுமணம் செய்து கொள். ஆனால், நமக்குள் இனி எந்த உறவும் இருக்காது! அது நிச்சயம். தயவு பண்ணி, இனி என்னைத் தொந்தரவு செய்ய வேண்டாம்! இன்று நான் நிம்மதியாகத் தூங்கப் போகிறேன்!'' என்றவன் அதற்கு மேல், அங்கே நிற்கவில்லை!

நீயும், உன் குழந்தையும்! உன் குழந்தை!

குனிந்து வயிற்றைப் பார்த்துக் கொண்டாள்.

வெளிப் பார்வைக்கு வேறுபாடே தெரியவில்லை! ஆனால், உள்ளிருக்கும் சிசுவுடைய தாய் அவள். இந்தக் குழந்தையை அவள் தனியாகவா உருவாக்கினாள்?

அதன் தந்தை அவன் எனும்போது, அவர்களுக்குள் எப்படி உறவு இல்லாமல் போகும்?

மாதவிக்கு இன்னமும் புரியவில்லை!

ஆனால், அன்று நிம்மதியாக உறங்கப் போய்விட்ட கிருபாகரனிடம் இது பற்றிப் பேசிப் பயன் இல்லை என்பது மட்டும் நன்றாகத் தெரிந்தது.

10

விடியும்வரை, விழித்து எழுந்து நிறுத்த முடியாத, ஒரு பயங்கரமான நீண்ட கனவில்தான் மாதவி ஆழ்ந்திருந்தாள் எனலாம். அந்த நேரத்தில், மனோகரி தங்கியிருந்த விடுதிக்குப் போனாலும், அவளைப் பார்க்க விட மாட்டார்கள்! அல்லது, நள்ளிரவு என்றும் பாராமல், மாதவி தன் தோழியிடம் சென்றிருப்பாள்.

இருள் பிரிகிற நேரத்தில், ஜாகிங் போவது, கிருபாகரனுக்கு வழக்கம்.

''இன்று நன்றாகத் தூங்கப் போவதாக, அவன் சொன்னது, இன்னோர் அர்த்தத்தில் நெஞ்சைத் தாக்கியது! காதல் கணவனாக நடித்ததில், அவனால் நன்கு தூங்கக் கூட முடிய வில்லையாமா?

சோஃபாவில் சுருண்டு கிடந்த அவளை ஏறெடுத்தும் பாராமல் அவன் வெளியே செல்வதை வெறித்துப் பார்த்து விட்டு, மாதவி மெல்ல எழுந்தாள்.

''அம்மா, காஃபி கொண்டு வரவா?'' என்ற வேலையாளின் குரல், மனோகரிக்குக் காலையில் ஒரு பானம் அருந்தவாவது அவகாசம் கொடுக்க வேண்டும் என்பதை நினைவுறுத்தியது!

வேலையாளிடம் மறுப்பாய்த் தலையசைத்துவிட்டு, அவளது அறைக்குப் போய்க் குளித்துவிட்டு வந்தாள்.

இன்னும் சற்று நேரத்தில், கிருபாகரன் திரும்பிவிடுவான்.

அவனைப் பாராதிருப்பது இப்போதைக்கு நல்லது!

பார்த்தால், தன் வசமிழந்து, வெட்கமின்றி, அவனிடம் கெஞ்சக்கூடத் தோன்றி விடலாம்! அந்த அளவுக்கு நிலை யிறங்கக் கூடாது!

'வயிற்றுப் பாட்டுக்கு வழியில்லாமல் விட்டுவிடப் போவது இல்லையாம்! இவன் யார் அவளை அப்படி விடுவதற்கு? இவன் தரும் அந்தப் பணத்தைக் கொண்டு வாழ்வதைவிடப் பிச்சை எடுத்து உண்ணலாம்!

ஆனால்... மேலே நினைக்கப் பயந்தவளாக, அவசரமாகக் காரை எடுத்துக் கொண்டு, மனோகரியிடம் சென்றாள்.

காரைப் பார்த்ததும், மனோகரி ஓடி வந்தாள்!

தோழியின் முகத்தைப் பார்த்ததுமே, "உனக்கு மிகவும் சின்ன வயதுதான், மது! மணமாகியும் அதிக நாட்கள் ஆகவில்லை! நினைவிருக்கட்டும்!" என்றாள் மனோகரி, கனிந்த சிறு புன்னகையோடு!

ஒரு கணம் திகைத்து நோக்கிய மாதவிக்கு உடனே விஷயம் புரிந்தது!

சோதனையில், குழந்தை இல்லை என்று வந்ததாக எண்ணுகிறாள்!

கடவுளே, அது குழந்தையாகவே இருந்து விட்டதால் வந்ததல்லவா, இந்தத் துயரம்! மற்றப்படி, அவளுக்கு, ஓர் அன்புக் கணவன் இப்போது இருந்திருப்பானே!

இல்லை! அப்படியொரு கணவன் அவளுக்கு என்றுமே இருந்ததில்லையே! அதுதானே உண்மை? அந்த உண்மை இப்போது வெளிவந்திருக்கிறது...

''ஏய், மாதவி, நான் சொல்கிறேனில்லையா? இங்கே பார், இது ஒன்றும் உலகத்தின் முடிவல்ல!''

முடிவுதான். முடிவுதான்! ஆனால், மனோகரி நினைப்பது போல் அல்ல!

பெரு முயற்சி செய்து தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு, ''அது...'' என்று தொடங்கியவள், சுற்று முற்றும் பார்த்தாள். ''மனோ, உன்னிடம் நான் தனியாகப் பேச வேண்டுமே! கட்டாயமாய். உ...உடனே!'' என்றவள், பற்களால் அழுந்திக் கீழுதட்டின் நடுக்கத்தை நிறுத்த முயன்றாள்.

பொதுவாகவே, மனோகரியிடம் அனாவசிய விளக்கங்கள் கொடுக்கத் தேவையிராது!

அன்றும் ஒன்றுமே கேளாமல், ஒருத்தியைக் கூப்பிட்டு ஏதோ சொல்லி அனுப்பி விட்டுக் காரில் ஏறி அமர்ந்தாள்.

காரை ஆளவரம் அற்ற ஓர் இடத்தில் நிறுத்திவிட்டு, மாதவி சாலையை வெறித்தாள்.

''என்ன மது?''

''அது குழந்தைதான், மனோ! ஆனால், என் வாழ்வில் எல்லாம் முடிந்து விட்டது!''

''மது! என்ன உளறல்? என்... என்னடி? இங்கே என்னைப் பார்த்துப் பேசு, மது! என்ன விஷயம்?''

வேதனையில் விழியகல, ஒரு மரத்த குரலில், நடந்ததை மாதவி கூறவும், அவளாலும் சற்று நேரம் ஒன்றும் பேச முடியவில்லை!

"முழு மூட்டாளாய், அவரை நம்பி விட்டேன், மனோ!"

"நீயாவது வீட்டுப் புறா. உன் தாத்தா வளர்த்த விதத்தில், ஒன்றும் தெரியாது போயிற்று! ஆனால், நான் தினமும் எத்தனை பேரைப் பார்க்கிறேன்! கிருபாகரன் நடிப்பில், நானே ஏமாந்து போனேனே!" என்றாள் மனோகரி வருத்தத்துடன்.

அவளுக்குக் குற்ற மனப்பான்மை! தினமும் நூற்றுக் கணக்கானவர்களோடு பழகும் அவள், அனுபவசாலியாய்க் கிருபாகரனை இனம் கண்டிருக்க வேண்டும்! இனம் கண்டு எச்சரித்திருக்க வேண்டும்! அவளது அபிப்பிராயத்துக்கு, மாதவியிடம் மதிப்பு உண்டு! கடமை தவறிவிட்ட தவிப்பு அவளுக்கு.

ஆனால், மாதவி வேறு சொன்னாள். "இல்லையே, நீதான் சொன்னாயே! ரோபோ மாதிரி என்றாயே! ரோபோ!" ஆனால் சட்டென அவள் முகம் கசங்கியது. "படுக்கையில் கூட ரோ.. ரோபோ மாதிரி என்றால்... எவ்வளவு கேவலம்... சே! எனக்கு ரொம்ப அவமானமாகவும், அருவருப்பாகவும் இருக்கிறதே!"

கண்களில் தளும்பிய நீரை அடக்கி, தொண்டையில் அடைத்ததை விழுங்கி, பெரிதாக மூச்செடுக்க மாதவி பாடுபடுவதைக் காண, மற்றவளுக்குப் பொறுக்க முடிய வில்லை!

தோழியின் கையைப் பற்றித் தட்டிக் கொடுத்து, "ஷ், மது, தைரியமாயிரு. நீ கோழையல்ல! எல்லாம் சரியாகிவிடும்!" என்று ஆறுதல் படுத்த முயன்றாள்.

மாதவியின் தவிப்பு, கொஞ்சம் அடங்கியதும், "நான் போய்க் கிருபாகரனிடம் பேசுகிறேன், மதும்மா," என்றாள்.

தலையசைத்து, ''என்னவென்று?'' என்று கைத்த குரலில் கேட்டாள் மாதவி, ''என் சினேகிதிக்கு வாழ்வு கொடு... என்று, அந்த மாதிரி வசனமா? வேண்டாம், மனோ!'' என்றாள் சட்டென்று மூண்ட கோபத்துடன்.

''பின்னே? மது, நீ கிருபாவிடம் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறாய் என்று எனக்குத் தெரியும்! அவரைப் பிரிந்து...''

''பிரிந்துதான் ஆகவேண்டும்!'' என்றாள் மாதவி, எங்கோ பார்த்தபடி. ''சற்றும் சலனமே இல்லாமல், இளமைத் துணைக்கு மறுமணம் செய்துகொள்ளச் சொல்லுகிற கணவர்! அவரிடம் போய்... இல்லை... வேண்டாம்! அவரிடம் போய், எதைக் கேட்பதும் மகாக் கேவலம்! ஒன்றுமே கேட்கக் கூடாது!... மனோ, நான் எங்காவது போக வேண்டும்! கிருபா முகத்திலேயே விழிக்கத் தேவையிராத எங்காவது! இங்கே இருந்தால், நான் மூச்சு முட்டிச் செத்துப் போவேன்! அப்படிச் செத்துவிட்டால், நன்றாக இருக்கும்போலத்தான் தோன்றுகிறது.''

''மதூ..!'' என்று மனோகரி அதிரும்போதே, மாதவி தொடர்ந்தாள். ''ஆனால், யாரோ செய்த அநியாயத்துக்காக, நான் ஏன் சாக வேண்டும்? அத்தோடு, இந்தக் குழந்தை? இதை, 'உன் குழந்தை' அதாவது என் குழந்தை என்று கிருபா சொன்னார், மனோ! யாரோ செய்த பாவத்துக்காக, என் பிள்ளை ஏன் சாக வேண்டும்? என்... என் கணக்கில், கொஞ்சம் பணம் இருக்கும். அதை எடுத்துக்கொண்டு, எங்காவது... மனோ, நான் எங்கே போகட்டும்? எனக்கு, ஒன்றும் புரியவில்லையே!'' என்றாள் தீனமான குரலில்.

பற்றியிருந்த கையை அழுத்தி, ஏதோ யோசித்துவிட்டு, ''நீ அனாவசியமாகக் கவலைப்படாதே, மதும்மா! அதை, அந்தப்

பயண ஏற்பாட்டை, நான் பார்த்துக் கொள்கிறேன். தேவையான பொருட்களை எடுத்துக் கொள்வதை மட்டும், நீ பார். பயண ஏற்பாடு முழுக்க என் பொறுப்பு!'' என்றான் மனோகரி.

பயணம்! மெய்யாகவே, எல்லாம் முடிந்துவிட்டது! இங்கே, சென்னையில் அவளுக்கு ஒன்றுமே இல்லை!

விழி நீரை உள்ளிழுக்க முயன்றபடி, ''இன்றைக்கே போக முடியுமா, மனோ? அந்த வீட்டில் இருக்கவே, எனக்குப் பிடிக்கவில்லை!'' என்றாள் மாதவி சின்னக் குரலில்.

''இன்று ஒரு நாள் பொறுத்துக் கொள். இது வார நாள் தான். விடுமுறைக் காலமும் இல்லை! அதனால், டிக்கெட் இலகு வாகக் கிடைக்கும் என்றாலும், இன்றைக்கே கிடைப்பது கடினம். நீயும் துணிமணி எடுத்து வைக்க வேண்டும் அல்லவா? பாங்க் வேலை வேறு! நீ அதையெல்லாம் பார்! பயணம் என் பொறுப்பு! எந்த ரயில் என்று, நான் பிறகு சொல்லுகிறேன்.''

மாற்றுடைகள், பணத்துக்குப் பாங்க் பாஸ் புக், மற்ற சில தேவையான பொருட்களுக்காகவே, மாதவி மறுபடியும் வீட்டுக்குச் சென்றாள்.

கிருபாகரன் வீட்டில் இல்லை! இரவு திரும்பி வரத் தாமதம் ஆகும். தனக்காக எதுவும் செய்ய வேண்டாம் என்று சொல்லிச் சென்றிருந்தானாம்!

அதாவது, அவனைச் சந்திக்கத் தேவையில்லை! நல்லது தான்!

அங்கே கிடக்கும் சோஃபாவும், அவளும் ஒன்று என்பது போல, அவனால் இருக்க முடிந்தாலும், அவளுக்கு வலித்ததே!

ஒரு வேளை, அவன் கையைக் காலைப் பிடித்து டிராமாப் போடுவாளோ என்று பயந்துதான் வீட்டுக்கு வரவில்லையோ என்று தோன்றவும், அதுவும் வலித்தது!

உட்கார்ந்து, இப்படிக் குமைந்துகொண்டு இருப்பதற்கு, மனோ சொன்ன மாதிரி, வேண்டிய பொருட்களை எடுத்து வைக்கலாம்!

யோசித்து யோசித்து, ஒவ்வொன்றாக எடுத்து வைக்கையில், உறுத்தியது மேஜையில் கிடந்த மெடிக்கல் ஃபைல்! அவள் கருவுற்றது பற்றிய ரிப்போர்ட், அவளது உடல்நிலை பற்றி, டாக்டர் எழுதிக் கொடுத்த குறிப்புகள் அடங்கியது!

ஏதோ தோன்றவும், வக்கீலுக்கு ஃபோன் செய்தாள். அவர் ஊரில் இல்லையென்று தெரிந்தது! அந்த ஃபைல் அங்கேயே இருந்ததன் காரணமும்!

வக்கீல் ஊரில் இருந்திருந்தால், இந்த ஃபைல், இப்போது அவரிடம் சென்றிருக்கும்! கிருபாகரன் தன் உரிமையை நிலை நாட்டியிருப்பான்! அல்லது, அவசரம் காட்டித் தன் ஏமாற்று வேலையை வெளிப்படுத்திக் கொள்ளக் கூடாது என்று இருக்கிறானோ?

எல்லாவற்றையும் அவள் அழித்து விடுவாளோ என்கிற அச்சம்கூட இல்லையே! அந்த அளவுக்கு, அவளைப் புழுவாக எண்ணி விட்டானா?

சினம் உலுக்க, அந்த ஃபைலைக் கையில் எடுத்தவள், அதை மீண்டும் மேஜையில் வீசி எறிந்துவிட்டுத் தன் வேலையைத் தொடர்ந்தாள்.

இரவு அவன் வருமுன் கதவைச் சாத்திக்கொண்டு படுத்தவள், மறுநாள் அவன் வெளியே சென்ற பிறகே, வெளியே வந்தாள்.

மனோகரி ஃபோன் செய்து, ரயில் நிலையத்துக்கு வர வேண்டிய நேரம் பற்றிச் சொன்னாள்.

மெடிகல் ஃபைலை ஒரு தரம் பார்த்துவிட்டு, மடமடவென்று, மாதவி கணவனுக்கு ஒரு கடிதம் எழுதினாள்.

''இந்த டாக்டர் எனக்குத் தெரிந்தவர்கள். விவரம் சொன்னால், எனக்காக, எதுவும் செய்யக் கூடியவர்கள். இந்த ஃபைலையும், கூடவே கருவையும் அழித்து விட்டால், அப்புறம், எதை, எப்படி நிரூபித்து, உங்கள் தந்தை யுடையதாக நீங்கள் சொல்லும் பங்குகளைக் கைப்பற்று வீர்கள்? உங்களால் ஒன்றும் முடியாதபடி செய்துவிட வேண்டும் என்றுதான் எண்ணினேன்! ஆனால், செய்யப் பிடிக்கவில்லை! எதையும் அழிப்பது எனக்குப் பழக்கம் இல்லை!

''அத்தோடு, எந்தப் பங்குகளைப் பெறுவதற்காக, அரும் பெரும் தியாகங்களைச் செய்தீர்களோ... வேண்டாத ஒருத்தியைத் தொட்டுப் பழகிச் சகித்த தியாகத்தைச் சொல்லுகிறேன். அந்த மாதிரி உன்னதத் தியாகங்கள் வீணாகிப் போகக்கூடாது அல்லவா? அதனால், நான் தாயாவதற்கான சான்றுகளை விட்டுப் போகிறேன்!

''ஒவ்வொரு வினாடியும், ஏமாறுவதற்கு ஒருவனும், அவனை ஏமாற்றுவதற்கு இருவரும் பிறப்பார்கள் என்று தாத்தா சொல்லுவார்! அனுபவசாலி! உண்மையைத் தான் சொல்லியிருக்கிறார்! உங்களிடம் எல்லாமே சற்று

அதிகப்படியாகச் சரியாக இருப்பதாக, என் தோழி சொன்னாள். ஆனால், எனக்குச் சந்தேகப்படக் கூடத் தெரியவில்லையே! உங்களால் நல்ல பாடம் கற்றுக் கொண்டேன். உலகில் யாரையுமே நம்பக் கூடாது என்கிற பாடம்! முக்கியமாக, உங்களை! பாடம் கற்றுக் கொடுத்தவர், குரு தட்சிணை வாங்குவதில் ஆசாரியர் துரோணரையும் மிஞ்சி விட்டீர்கள்! அவர், ஏகலைவனிடம் வெறும் கட்டை விரலைத்தானே கேட்டு வாங்கினாராம்! நான் பலி கொடுத்தது, என் எதிர்காலம் முழுவதையும்!

''இப்போதைக்குத் தற்கொலை செய்துகொள்ளும் எண்ணம் இல்லை! ஆனால், என்றேனும் என்னைத் தேடுவதாகத் தெரிந்தால், அப்புறம் என்னை உயிரோடு பார்க்க முடியாது!... மறுபடியும் முட்டாள் என்று நிரூபிக்கிறேன்! உங்களுக்கு வேண்டியது கிடைத்த பின், என்னைத் தேடுவானேன்? தொல்லை விட்டது என்றுதானே இருப்பீர்கள்.

''போகட்டும்! குறைந்த பட்சமாய், உங்களுக்கேனும் தொல்லை தீர்ந்ததாகவே இருக்கட்டும்! இத்துடன், நம் மண விலக்குக்குச் சம்மதித்துக் கையெழுத்திட்டு வைத்திருக்கிறேன்! பயன் படுத்திக் கொள்ளுங்கள். எனக்கு, எப்போதுமே, முழுமையாகக் கொடுத்துத்தான் பழக்கம்!

''இப்படிக்கு, உங்கள் காதல் மனைவி என்று எண்ணிக் கொண் டிருந்த அடி முட்டாள்!'' என்று எழுதி முடித்து, அந்தக் கடி தத்தையும், ஃபைல் மேல் சேர்த்து வைத்து 'பின்' பண்ணிவிட்டு, வீட்டை விட்டு, கால் டாக்சியில் கிளம்பிச் சென்றாள்.

செல்லும்போதே, அவ்வளவு நேரம் திடம் கொடுத்த சினம் மறைய, உள்ளம், உடல் இரண்டுமே சோர்ந்தன!

இனி என்ன ஆகும்?

எதிர்காலம் மருட்ட, ரயில் நிலையத்தை அடைந்தபோது, சில பெட்டிகளும் பையுமாக, மனோகரி அவளை எதிர் கொண்டாள்.

என்ன பெட்டி? என்ன பை?

திகைத்து நோக்கியவளிடம், ''என்னை என்னவென்று நினைத்தாய், மது? இந்த மாதிரி நிலையில், உன் மனமும், உடலும் இருக்கும்போது, உன்னைத் தனியாகப் போக விடு வேனா, என்ன? ம்?'' என்று புன்னகையோடு கேட்டாள் அவள்.

ஜன சந்தடி மிகுந்த பொது இடம் என்பதையும் மறந்து, தோழியின் தோளில் சாய்ந்து விசித்தாள் மாதவி!

11

எத்தனை எத்தனை பிறவிகளாகவோ, தொடர்ந்து செய்து வந்த பாவத்துக்கு நடுவில், ஏதோ கொஞ்சம் புண்ணியமும் பண்ணியதாலேயே, மனோகரியின் நட்பு தனக்குக் கிடைத் திருக்கிறது என்று மாதவி தொடர்ந்து பல முறை நினைக்க நேர்ந்தது!

மற்றப்படி, ஒரு சிறந்த பணி, ஒரு பெரிய மருத்துவ மனையில், உறுதி செய்யப்பட்ட நல்ல வேலை., கை நிறைந்த வருமானம். நிமமதியான எதிர்காலம் அத்தனையையும் துறந்து, இங்கே அசட்டுத்தனமாய் ஏமாந்து, வாழ்க்கையைக் கோட்டை விட்டுவிட்டுத் தன்னந் தனியாக நிற்கும் ஒரு முட்டாளுக்குத் துணையாக, ஒருத்தி வருவாளா?

வந்தது மட்டுமா? என்ன மாதிரி உதவிகள்!

கிருபாகரன் இருக்கும் சென்னையிலிருந்து எவ்வளவு முடியுமோ, அவ்வளவு தூரம் விலகிப் போவதுதான் மாதவியின் குறிக்கோளாக இருந்ததே தவிர, எங்கே போவது, என்ன செய்வது என்பதையெல்லாம் அப்போது அவள் யோசிக்கவே இல்லை! இப்படி ஏமாற்றி விட்டானே! இப்படி ஏமாந்து விட்டேனே... இதே பதைப்பு!

மனோகரி கோவைக்கு டிக்கெட் எடுத்திருப்பதாகச் சொன்ன போதும், அங்கே போய் என்ன செய்யப் போகிறோம் என்று, பெரிதாக ஒன்றும் யோசித்தாளில்லை! கிருபாகரன் முகத்தில் இனி விழிக்க நேராது என்பதுதான், முதலும் முக்கியமுமாக, அவள் மனதில் தோன்றிய எண்ணம்!

எதிர்காலம்... என்று எண்ணம் லேசாக வந்த போதும், கையில் இருக்கும் பணம் சமாளிக்கும். அதற்கு மேல் தேவைப்பட்டால், ஏதாவது வேலை பார்த்துக் கொள்ளலாம் என்று, தெளிவற்ற ஒரு அரை குறை முடிவுக்கு மேல், அது பற்றியும் தீவிரமாகச் சிந்திக்க, மாதவிக்குத் தோன்றவில்லை.

நெஞ்சைப் புழுவாய் அரிக்கும் வேதனையை ஒதுக்கி, வேறு எதையும் எண்ணிப் பார்க்க, அப்போது அவளால் முடியவும் இல்லை!

ஆனால், அவள் இப்படி வலிக்க வலிக்கக் காயத்தை நக்கிக் கொண்டிருக்க, மனோகரி விடவில்லை!

ரயிலில் ஏறியதுமே, மாதவியிடம் ஒரு மாத்திரையைக் கொடுத்து, விழுங்கச் செய்தாள். ''விட்டால், கண்டதையும் நினைத்து, மனதையும் உடம்பையும் அலட்டிக் கொண்டே

இருப்பாய்! கொஞ்ச நேரமாவது, நீ நன்றாகத் தூங்க வேண்டும்! அதற்குத்தான் இந்த மாத்திரை!..''

''ஐயோ, மனோ! தூக்க மாத்திரை பாப்பாவுக்கு என்னமும் செய்யுமோ? விழுங்கி விட்டேனே! இப்போது பயமாக இருக்கிறதே!'' என்று, தாய்மை உணர்ச்சி மேலோங்கப் பதறினாள் மாதவி.

''அடடா! இந்த மாதவி டாக்டரம்மாவிடம் ஆலோசனை கேளாமலேயே, இப்படிப் படு வீரியம் உள்ள பயங்கர மாத் திரையை உனக்குக் கொடுத்து விட்டேனே! இப்போது என்ன செய்வது?'' என்று கவலைப்படுவது போல, மனோகரி செய்த பாவனையில், மாதவி தன்னையறியாமல் முறுவலித்தாள்!

''போ, மனோ!''

''பின்னே, என்னவாம்? உன் உடல் நிலை இப்படி என்பது எனக்கு மறக்குமா? அத்தோடு, விடிகாலையில் கோவையில் உன்னை எழுப்பி இறங்க வைக்க முடியாவிட்டால், நாம் இருவருமாக மேட்டுப் பாளையத்தில் விழித்துக்கொண்டு நிற்க நேருமே! அதனால், மிக மிகப் பலம் குறைந்த மாத்திரைதான் உனக்குத் தந்தது! அதுவும், பெரிய டாக்டர் ஆலோசனை கேட்டு வாங்கி வந்தது! அதனால், வீண் கவலையை விட்டு, நிம்மதியாகத் தூங்கு!'' என்றாள் சற்று அழுத்தமான குரலில்.

''சாரி, மனோ! உன்னிடம் நான் கேட்டிருக்கவே கூடாது!'' என்று அசடு வழிய ஒத்துக் கொண்டு விட்டு, மாதவி படுத்தாள். சற்று நேரத்தில் தூங்கவும் தொடங்கினாள்!

ஒரு வேளை உறங்கிவிட்டால், கோவையில் எழுப்பி விடுமாறு டிக் கெட் பரிசோதகரிடம் கேட்டுக் கொண்டுவிட்டுத் தானும் படுத்தாள் மனோகரி.

வேண்டிய நேரம் தூங்கி, விழித்து, அவளுக்குப் பழக்கம்! எனவே, கோயமுத்தூர் வருமுன்பே மனோகரி விழித்துக் கொண்டதில், வியப்பு ஏதும் இல்லை! ஆனால், அவளுக்கு முன்பே விழித்து, காலியாகக் கிடந்த பக்கவாட்டு இருக்கையில் அமர்ந்து, மாதவி இருளை வெறித்துக் கொண்டிருந்தது, அவள் எதிர்பாராதது!

தூக்க மாத்திரையின் சக்தியை, மாதவியின் மன உளைச்சல் வென்றிருக்கிறது!

ஒரு பெருமூச்சுடன் எழுந்தாள் அவள்!

கோயம்புத்தூரில், ஒரு தனியார் மருத்துவமனையில் மனோகரிக்கு வேலை கிடைத்தது! அந்த மருத்துவமனை வைத்திருந்த குடும்பத்துடைய தலைவர், சென்னையில், அவள் வேலை பார்த்த மருத்துவமனையில், ஓர் அவசர சிகிச்சை பெற்றிருந்தார். அப்போது, மனோகரி அங்கே பணிபுரிந்த முறை பிடித்துப்போய், அவளைத் தங்கள் மருத்துவமனைக்கு வேலைக்கு வருமாறு அழைத்தார்! ஆனால், இதமான புன்னகையோடு மனோகரி நன்றி தெரிவித்தாளே தவிர, வேலையை ஏற்கவில்லை! தங்கள் மருத்துவமனைக் கதவு, அவளுக்காக எப்போதும் திறந்தே இருக்கும் என்றுவிட்டுப் போனார், பெரியவர்.

பெரியவர் லட்சுமிபதியிடம் பேசி முடிவு செய்வதற் காகத்தான், மாதவியிடம் அவள் ஒரு நாள் அதிகம் அவகாசம் வேண்டும் என்றதே!

எண்ணியது நடந்துவிட, புது இடத்தில் சாமான்களைச் சீர் செய்து, பழகிக் கொள்வதற்காக அளிக்கப்பட்ட சில தினங்களையும், பெரிதும் சினேகிதிக்காகவே செலவு செய்தாள்.

மாதவி தனித்திருந்து பழங்கதையை எண்ணி மருக விடாமல், 'இதைச் செய். அதைப் பார்!' என்று அவளை விரட்டியடித்தாள்!

''சோர்வாக இருக்கிறதே!'' என்றாலும் விடுவதில்லை!

''முதல் மாதங்களில் அப்படித்தான் இருக்கும்! சுருண்டு படுத்துக் கொண்டால், உனக்கும் நல்லதல்ல., குழந்தைக்கும் நல்லதல்ல! எழுந்திரு! எழுந்து, பக்கத்துக் கடைக்குப் போய், இந்தச் சாமான்களை வாங்கி வா!'' என்று வற்புறுத்தி அனுப்பி வைத்தாள்.

சோர்ந்த நடையுடன் மாதவி செல்வதைப் பார்க்கையில், அவளுக்கும் வருத்தம்தான்! ஆனால், இப்போது இளக்கம் காட்டுவது, மாதவிக்கே கெடுதல்தானே?

மனோகரி வேலைக்குச் செல்லும் நேரத்திலும், மாதவி தனியே சோகத்தில் மூழ்கி விடாதிருக்கவும், அதே சமயம் அவளது எதிர்காலத்துக்கு உதவுமாறும் ஓர் ஏற்பாடு செய்தாள்.

''பார் மது., எவ்வளவு பெரிய செல்வம் என்றாலும், வேறு வருமானம் இல்லாமல் அதையே செலவு செய்தால், சீக்கிரமே கரைந்து போகும்! 'தின்று தீர்த்தால், குன்றும் மாளும்!' என்று பழமொழியே இருக்கிறது! உன் சில லட்சங்கள் நிலையாது! அதனால், நீ, உன் வருமானத்துக்குத் தேவையான பயிற்சி ஏதாவது எடுத்துக் கொள்ள வேண்டும்!''

''பிறகு பார்ப்போமே, மனோ... என்று மாதவி கெஞ்சிப் பார்த்தாள்.

''பின்னே என்பதும், நாளை என்பதும், இல்லை என்பதன் குறி!' என்பார்கள்! ஒரு நாள் சும்மா உட்கார்ந்தால், திரும்ப

எழவே முடியாது! அதனால், இப்போதே தொடங்கலாம்! திருமணத்துக்கு முன்னரே, நீ கம்ப்யூட்டர் வகுப்புகளுக்குப் போனாய்தானே? அதையே, மேலே தொடர்ந்து படி! கூடவே, 'டாலி' படி... எப்போதும் உதவும்! கிராஃபிக்ஸ், அலுவலக நிர்வாகம்... உன்னால், எதெது முடிகிறதோ, எதில் ஈடுபாடு இருக்கிறதோ, அதையெல்லாம் கற்றுக்கொள்! பிற்காலத்தில், நீ தலை நிமிர்ந்து வாழ, அது உதவியாக இருக்கும்! உயர்ந்த நிலையில் வாழலாம்., உன் குழந்தையைச் சிறந்த முறையில் வளர்க்கலாம்! வா, கிளம்பு! வரும் வழியில் பார்த்தோமே, அந்தக் கம்ப்யூட்டர் சென்டருக்குப் போய் விசாரிப்போம்!'' என்று, அவளை உட்கார விடாமல் இழுத்துச் சென்றாள்!

கம்ப்யூட்டர் வகுப்பில் சேரவும் வைத்தாள்!

வீட்டு வேலைகளிலும் பயிற்சி கொடுத்தாள்!

''குனிந்து நிமிர்ந்து பெருக்கினால் பேறுகாலம் எளிதாக இருக்கும்! என்னோடு, மருத்துவமனைக்கு வா! சில உடல் பயிற்சிகள் இருக்கின்றன. அவைகளையும் கற்றுக்கொள்! கற்றுக்கொண்டு, ஒழுங்காகச் செய்!''

தோழி, தன்மீது அன்பு கொண்டவள், அவள் சொல்வது தன் நன்மைக்கே என்பதில் மாதவிக்கு அசையாத நம்பிக்கை உண்டு.

அல்லது, வாய்த்தது வாய்ப்பு என்று, மனோகரி தன்னைக் கொடுமைப்படுத்துகிறாள் என்றே, மாதவிக்குத் தோன்றி யிருக்கும்!

ஆனால், மனோகரியிடம் நம்பிக்கை இருந்ததால், அவள் சொன்னதையெல்லாம் மாதவியும் முயன்று செய்ததால், சும்மா

உட்கார்ந்து பழங்கணக்குப் பார்க்க, அவளுக்கு அதிகம் அவகாசம் கிடைத்ததில்லை!

ஆனால், என்ன செய்தாலும் மறக்க மாட்டாத சிலதும் உண்டு அல்லவா?

மனோவுக்குப் பயந்து என்றுகூடச் சொல்லலாம்! கிருபாகரனை நினைக்கவே கூடாது என்று பிடிவாதமாக இருந்தும், சற்றும் எதிர்பாராத விதமாகத் திடும் திடும் எனக் கணவன் நினைவு மாதவிக்கு வந்துவிடும்!

தந்தைக்குக் கொடுத்த வாக்கு, அவனுக்குப் பெரிதாக இருக்கலாம்! அதற்காக, அவன் எவ்வளவு பெரிய தியாகம் வேண்டுமானாலும் செய்யட்டும்! ஒரு பொழுது பட்டினி கிடக்கட்டும். தன் உடலை வருத்திக் கொள்ளட்டும். இன்னும் பெரிய அளவில், கை, கால்களை வேண்டுமானாலும் கீறிக் கொள்ளட்டும்! ஆனால், அடுத்தவர் வாழ்வில் தலையிட்டு நாசமாக்க, அவன் யார்?

சும்மா புழு பூச்சியை, ஒரு கொசுவை நசுக்குவது போல, சிறு உறுத்தல்கூட இல்லாமல், அவளது வாழ்வையே அழித்து விட்டானே!

அவளை அவ்வளவு அலட்சியமாக நினைப்பதா என்று, மாதவிக்கு ஆத்திரம் வரும்! பொங்கும்!

ஒரு பிழை புரிந்தறியாத அவளது நிகழ்காலம், எதிர்காலம் இரண்டையும் நாசமாக்கியவனைச் சும்மா விடுவதா என்று ஆங்காரம் உண்டாகும்!

இத்தோடு நில்லாமல், கிருபாகரனின் பேச்சு, வருடல், அணைப்பு எல்லாம் நினைவு வரும்!

எல்லாமே எப்படிப் பொய்யாக முடியும் என்று மனம் தவிக்கும்!

ஆனால், பொய்யேதான் என்று அவனே தெளிவாகச் சொல்லிவிட்டானே!

சொல்லிவிட்டு, இன்னொருத்தியோடு... மனதில் தீ எரியத் தொடங்கிவிடும்!

இந்தத் துன்பத்திடையே, அவளுக்கு இன்னொரு பயம் வந்தது!

இந்தக் கோபம், வருத்தம் இவைகளால் குழந்தைக்கு ஏதேனும் ஆகிவிடுமோ?

அவளது வாழ்வின் ஆதாரமே, இனி இந்தக் குழந்தைதானே! அதுவும் குறைப்பட்டுப் போனால், அவள் எப்படித் தாங்குவாள்?

அடிக்கடி மாதவிக்கு இந்தப் பயம் ஏற்படும்! ஆனால், மனோகரியிடம் இதைப் பற்றிச் சொல்வதானால், கிருபாகரனை நினைத்ததையும் சொல்ல நேருமே! 'மற, மற!' என்பவளிடம், அதை எப்படிச் சொல்வது?

இதற்காகவே தயங்கிக் கொண்டிருந்தவள் கண்களில், அன்று சில பல காட்சிகள் தென்படவே கலங்கிப் போய்த் தன் அச்சத்தைத் தோழியிடம் வெளியிட்டாள்.

மாதவி எதிர்பார்த்தது போலவே, ''அந்த ஆளைப் பற்றி நினைக்காதே என்றால், கேட்டால்தானே?'' என்று கடித்துவிட்டு, அவளது பயத்துக்கும் மனோகரி பதில் சொன்னாள்.

12

அன்று மனோகரி பணிபுரியும் மருத்துவமனைக்கு மாதவி சென்றது வழக்கமான 'செக்கப்'புக்காகவே!

தாய் சேய் நலப் பிரிவில், பல கருவுற்ற பெண்களையும், இளங் குழந்தைகளையும் காண நேர்ந்தது!

அந்தக் குழந்தைகளில் சில குறைபாடுள்ள குழந்தைகளைக் காணவும், அவளது மனம் துடித்துப் போயிற்று! இந்தக் குறைபாடுகள் எல்லாம் ஏன் வந்தன? அந்தப் பிள்ளை களுடைய தாய்மாரும், அவளைப் போலவே, துன்பத்தில் துடித்துக் கொண்டிருந்தவர்களோ?

உள்ளூரத் தோன்றிக் கலக்கிக் கொண்டிருந்த அச்சத்தை, மெல்ல மனோகரியிடம் தெரிவித்தாள்.

இன்னமும் தெரிவியாமல் விட்டால், அது பெரிய தப்பாகி விடக்கூடாதே!

தகுதியற்ற ஒருவனை, இன்னமும் மாதவி நினைப்பதா என்பது மட்டும்தான், மனோகரிக்கு எரிச்சலூட்டியது. அதற்காகச் சின்னதாய் ஒரு குட்டு வைத்துவிட்டுத் தோழியின் கேள்விக்குப் பதில் சொன்னாள்.

''குழந்தைக்கு எந்தப் பாதிப்பும் இராது, மது! வயிற்றுக் குள்ளிருக்கும் குழந்தை எவ்வளவு சுயநலவாதி, தெரியுமா? தாய் சிரிக்கிறாளா, அழுகிறாளா, சாப்பிடுகிறாளா, இல்லை பட்டினியா என்கிற கவலையே இல்லாமல், அது பாட்டுக்குத் தன் உணவைத் தாயிடம் இருந்து, உறிஞ்சிக்கொண்டே

இருக்கும்! சரியான ஒட்டுண்ணி!'' என்று இலகுவாகச் சொல்லிச் சிரித்தாள் அவள்.

ஆனால், ''சே! குழந்தையைப் போய், அப்படிச் சொல்லா தேப்பா!'' என்று மாதவி பரியவும், ''ஏன் சொல்லக்கூடாது? அதிலும், உன் பாப்பா, அப்படியே அப்பன் வாரிசு!'' என்று திருப்பினாள் மற்றவள். ''நீ, இப்படி மெலிவாக இருக்கையில், அது என்ன திடமாக இருக்கிறது, தெரியுமா? பார், டாக்டர் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள்! 'ஸ்கேன்' பண்ணியதிலும், எந்தக் குறையும் இல்லையாம்!'' என்று படபடத்தவள், தோழியின் முகம் வாடவும் நிதானித்து, ''மது, கிருபாகரன் மேல் உள்ள கோபம், சட்டென்று அப்படி வாயில் வந்துவிட்டது! மற்றப்படி, கள்ளமோ, கபடமோ வயிற்றுச் சிசுவுக்கு என்னப்பா தெரியும்? அப்படிச் சொன்னதே பாவம்ப்பா! ஏதோ எரிச்சலில் நான் சொன்னதைப் பெரிதாக எண்ணாதே! சாரி!'' என்று தழைந்தாள்.

''சாரி எல்லாம் சொல்லாதே!'' என்றாள் மாதவியும்.

மனோகரியின் கோபமும், தாபமும், தோழியின் மேல் உள்ள பாசத்தினால்தானே! ஆனால், பிள்ளை விஷயமாகச் சந்தேகம்தான் இன்னமும் முழுமையாகத் தீர மறுத்தது. அன்புத்தோழி, தன் ஆறுதலுக்காகக் கூறுகிறாளோ என்ற ஐயம்! எனவே, மீண்டும் வினவினாள்.

''பின்னே, கருவுற்ற பெண்கள் மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும் என்கிறார்களே, அது எதற்காக, மனோ?''

''அப்படியாவது, அதாவது தங்கள் வாரிசு நல்லபடியாக இருக்க வேண்டும் என்பதற்காகவேனும், புகுந்த வீட்டினர் அவளை நல்லபடியாக வைத்துக்கொள்ள மாட்டார்களா என்கிற

நப்பாசைதான்! வேறென்ன?'' என்றாள் மனோகரி கிண்டலாக. ''பல வீடுகளில் மருமகள் என்றாலே, வீட்டில் வேலை செய்ய வந்தவள்தான். புகுந்த வீட்டில் உழைப்பதற்காகவே, பிறந்து வளர்ந்தவள் என்கிற எண்ணம்தான்! அவர்களிடம் இருந்து, சிறு விடுதலையேனும் கிடைத்தால் நல்லதுதானே!... ஆனால்...

''ஆனால் என்ன மனோ?'' என்று கவலையுடன் கேட்டாள் மாதவி.

''அதற்குள் நடுங்க வேண்டாம்! ஆனால், ஒரு வகையில் நீ கேட்டதிலும் ஓர் உண்மை இருக்கிறது, மது! கடைசி மாதங்களில் தாய் மகிழ்ச்சியோடு இருப்பதால், அவளது வயிற்றுத் தசைகள் இறுக்கம் தளர்ந்து, பிரசவம் இலகுவாக இருக்கும் என்று ஆராய்ச்சியில் கண்டு பிடித்திருக்கிறார்கள்! எனவே, நீ கூட மனதைக் கட்டுப்படுத்தப் பழகிக் கொள்ள வேண்டும், மது! பழைய வாழ்வை நினைக்கவே கூடாது! கிருபாகரன் உனக்கு இதுவரை செய்திருக்கும் கொடுமைகளே போதும்! இன்னமும் அந்த ஆளால், பிள்ளைப் பிறப்பின்போது வேறு நீ அதிக வேதனைப் படுமாறு ஆகக் கூடாது!''

சிறு கண்டிப்புடன் கூடிய குரலில் கூறிவிட்டு, கையிலிருந்த ஃபைலை, மீண்டும் ஒரு தரம் பார்த்தாள், மனோகரி.

கட்டுப்படுத்துவது என்றால், கிருபாகரனை மறப்பதா? முடியுமா?

காதல், ஆசை, அவன் மனம் திருந்தி வந்து அவளோடு சேர்ந்து வாழ்வது என்பது போன்ற ஆசைகள் எதுவும் அவளுக்கு இல்லைதான்! அப்படியே, அவன் வாழ்வு தருகிறேன் என்று சொல்லிக்கொண்டு வந்தாலும், அவள் அவனைத் திரும்பிக்கூடப் பார்க்கப் போவது இல்லை என்பது உறுதி!

எப்போது, அந்தரங்கத்தில்கூட நடித்ததாகச் சொன்னானோ, அப்புறம் அவனோடு நெருங்கி வாழ்வது நடக்க முடியாத ஒன்று!

ஆனால், ஆத்திரமும் கொதிப்பும் அவனை நினைவுக்குக் கொண்டு வருவதை எப்படித் தவிர்ப்பது?

தவிர்த்துத்தான் ஆக வேண்டும்! அவளுடைய பிள்ளை நல்லபடியாகப் பிறப்பதற்காகவேனும், அவள் அவனை அடியோடு மறந்துதான் ஆக வேண்டும்!

இப்போதுகூட, கிருபாகரனை மறக்க முயற்சி செய்யலாம்! இந்த 'வெயிட்டிங் ஹாலி'ல் போடப்பட்டிருக்கும் மின் விசிறிகளை எண்ணலாம்!

அறை செவ்வக வடிவமாக இருப்பதால், இரண்டிரண்டாக ஆறு விசிறிகள்! அளவில், சற்றுப் பெரியவை. அதனாலேயே, காற்று நன்றாக வருகிறது!

சென்னையில் கிருபாகரன் அறையில் உள்ள மின் விசிறி சிறியது! ஏசி இருப்பதால், சற்றே காற்றை அலைத்து விட, சின்னதாய், அழகாய் இந்த விசிறி போதும் என்று விட்டான்... அந்த 'சுபி'யும், தன்னைப் போல நெடுநெடு என்று இல்லாமல், அப்படித்தான் சித்து உருவமாக அழகாக இருப்பாளோ? அதனால்தான் அவளைக் காதலிக்கிறானோ?

அப்படியிருக்க, அவளை மணந்து... என்ன அநியாயம்?

மாதவி சட்டென எழுந்து விட்டாள்.

"என்ன மாதவி?"

ஃபைலில் எதையோ குறித்துக் கொண்டிருந்த மனோகரி, நிமிர்ந்து பார்த்துக் கேட்கவும், என்ன சொல்வது என்று புரியாமல், மாதவி ஒரு கணம் திகைத்தாள்.

அவசரமாக யோசித்து, "மம.. மருந்து, மனோ! டா...டாக்டர் ஏதாவது டானிக் எழுதியிருந்தால், குறித்துக் கொடுக்கிறாயா? அதை வாங்கிக் கொண்டு வீட்டுக்குப் போய் விடுகிறேன்!" என்று ஒருவாறு சமாளித்தாள்.

"அதைத்தான் நான் வாங்கி வரலாம் என்று குறித்துக் கொண்டிருந்தேன்! இப்போது, நீ கம்ப்யூட்டர் வகுப்புக்குப் போகவில்லை?"

"இ...ல்லை, மனோ, இப்போதே, நேரமாகிவிட்டது! அதனால்..

"அதனால், வீட்டுக்குப் போய்ப் படுத்து 'வாடல் நினைவுகள்' நிகழ்ச்சி நடத்திக் கண்ணீர் வடிக்கப் போகிறாயாக்கும்? ஒன்றும் வேண்டாம்! ம்ம்ம்... ஒன்று செய்! நீ போய் மருந்துகளை வாங்கு! அப்படியே, சற்று நேரம் இங்கேயே சுற்றிக் கொண்டிரு! பின் பக்கம், ஒரு தோட்டம் கூட இருக்கிறது! அங்கேகூடப் போய் உட்கார்ந்திருக்கலாம்! ஒரு மணி நேரம் விடுப்பு எடுத்துக் கொண்டு, நானும் விரைவிலேயே... என்று, மனோகரி சொல்லிக் கொண்டிருக் கும்போதே, எங்கிருந்தோ, ஒரு மெல்லிய விசில் சத்தம் கேட்டது!

அந்த இடத்துக்குக் கொஞ்சமும் பொருந்தாத அந்தச் சத்தம், மாதவியின் காதில் விழுந்து, அவளது கருத்தைக் கவர்ந்தது!

அது, சிறு பிள்ளைகள் ஊதும் விசிலில் ஓட்டை விழுந்து, ஒலி குறைந்து விட்டது போலவும் கேட்கவில்லை. சரியாக வாயால் விசிலடிக்கத் தெரியாமல் முயன்றது போலவும் இல்லை!

ஏதோ சங்கேதம்! மற்றவர்களுக்குத் தெரியாமல், யாருக்கோ... யாரையோ...

சத்தம் எங்கிருந்து வந்தது என்று, திரும்பிப் பார்க்க முனைந்தபோது, ''மது, உன்னை மருந்து வாங்கப் போகச் சொன்னேனே! அங்கே கூட்டம் சேர்ந்து விட்டால், வரிசையில் காத்து நின்று கஷ்டப்பட வேண்டியிருக்கும்! அப்புறம், தோட்டம்கூட வேண்டாம், மது! அங்கே போக அனுமதி... யாராவது உள்ளே விடமாட்டேன் என்றால், சங்கடமாகிப் போகும்! மருந்தை வாங்கிக் கொண்டு, நீ வரவேற்பு ஹாலிலேயே இரு. நான் அங்கேயே வந்து விடுகிறேன்! என்ன? இந்தா மருந்துச் சீட்டு! சீக்கிரம்... என்று வேகமாகப் பேசி, மருந்துச் சீட்டை நீட்டினாள் மனோகரி.

அவள் பேசிய பாவனையில், ஏதோ வேறுபாட்டை உணர்ந்து, மாதவி திகைத்தாள்.

அழுத்தமும், அமைதியுமான மனோகரி வழக்கத்துக்கு மாறாகப் பரபரப்பது போலத் தோன்றியது! வியப்புடன் கவனித்தபோது, தோழியின் கன்னங்கள் லேசாகச் சிவந் திருப்பது போலவும் இருந்தது!

ஏன்? சற்று முன் கேட்ட விசில் சத்தத்துக்கும், இதற்கும் தொடர்பிருக்குமோ?

கரெக்ட்! அந்த விசில்கூட, அழைப்பு போலத்தான் இருந்தது!

மனோகரிக்குத்தான் அழைப்பா?

அறைத் தடுப்பின் வாயில் வரை சென்று விட்டவள் திரும்பிப் பார்த்தபோது, மனோகரி, அவசரமாகத் தோற்றத்தைச் சீர்ப்படுத்திய வண்ணம் ஜன்னல்புறம் விரைந்து சென்று கொண்டிருந்தாள்.

மாதவி ஒரு குறுகுறுப்புடன் நின்று கவனித்தாள்.

''இங்கெல்லாம் வராதீர்கள் என்று சொன்னேனில்லையா?''

கோபம் காட்ட முயன்றும், மனோகரியின் குரல் குழைய, ''ஒழுங்காய் மரியாதையாய் நீ, அங்கே வந்து தரிசனம் தந்தால், நான் ஏன் இங்கே வரப் போகிறேன்?'' என்று பதிலிறுத்தது, ஓர் உற்சாகக் குரல்!

ஓஹோ...! மனோவுக்கும் காதலா?!

குதூகலத்துடன் எண்ணும்போதே, மாதவிக்குக் கவலையும் உண்டாயிற்று!

மனோகரிக்காவது, நல்லவனாக வாய்க்க வேண்டுமே! அவனும் ஒரு கிருபாகரன் ஆகிவிடக் கூடாதே!

கவலையும் மகிழ்ச்சியுமாகத் தோழிக்காகக் கடவுளை வேண்டிக் கொண்டபடி, மருந்து வாங்கச் சென்ற மாதவிக்கு, நாளுக்கு நாள், கவலையே மேலோங்கியது!

ஏற்கெனவே இந்த நிலைகளையெல்லாம் அனுபவித்தவள் என்பதால், மனோகரி காதல் வயப்பட்டிருப்பதை, மாதவியால் எளிதில் கண்டு கொள்ள முடிந்தது.

ஆனால், மனோகரியுடைய மனதைக் கவர்ந்தவன் எப்படிப்பட்டவனோ என்று, மாதவியின் மனம் தவித்தது! அவளது தேர்வு தப்பாகப் போனதால், நிலை குலைந்து வீழ்ந்தபோது, ஒரு தூணாய்த் துணை நின்று காக்க, மனோகரி இருந்தாள்! ஆனால், அதே நிலை மனோகரிக்கும் நேர்ந்து விட்டால்?

தோழியை எச்சரிக்க வேண்டும் என்று மாதவி பல முறை எண்ணினாள். ஆனால், ஏதாவது சொல்லி, மனோகரிக்கு ஒரு

நல்ல வாழ்வு அமைவதைக் கெடுத்துவிடக் கூடாதே என்று தயக்கமாகவும் இருந்தது.

அவளாவது, மகிழ்ச்சியோடேயே வாழ வேண்டுமே!

சொல்லவும் இயலாமல், சும்மா இருக்கவும் முடியாமல் பல நாள் திணறிவிட்டு, கடைசியில் ஒரு நாள் சினேகிதியிடம் பேச அவள் எண்ணியபோது, மனோகரியே, ''உன்னிடம் ஒரு சந்தோஷ சமாசாரம் சொல்லப் போகிறேன்!'' என்று விஷயத்தைத் தொடங்கினாள்.

மாதவியின் முகத்தில், ஆர்வத்தோடு கவலையையும் கண்டு முறுவலித்து, ''கவலைப்படாதே! இவரை நான் பல விதமாகச் சோதித்து விட்டேன்! ஆனால், நீயும் பார்த்துச் சொல்லு!'' என்றுரைத்து, ஓர் இளைஞனை அவளுக்கு அறிமுகம் செய்து வைத்தாள்.

அவளை உற்றுப் பார்த்துவிட்டு, ''ஏ..ய், நீ.. நீ.. அந்.. த மாதவியில்லை? மம... மகேந்திரன் அங்கிள் மகள்... அவள்தானே?'' என்று வியப்புடன் கேட்டான் அவன்!

13

மாதவிக்கும் மனோகரி அறிமுகப்படுத்தி வைத்த வாலிபனை எங்கோ பார்த்த நினைவு!

அன்றுகூடச் சீட்டி அடித்ததும் பேசியதும் காதில் விழுந்தது மட்டும்தானே, பார்க்கவே இல்லையே என்று, குழப்பத் துடனேயே, அவனைக் கூர்ந்து பார்த்து யோசித்தாள்.

அவனாக 'மகேந்திரன் அங்கிள் மகள்' என்றது, இன்னும் ஆச்சரியம்!

சுமார் பதினோரு ஆண்டுகளுக்கு முன்பு பார்த்துப் பழகிய யாராக... சட்டென நினைவு வந்துவிட, ''நீங்கள் யமுனா ஆன்ட்டி மகன்... க.. கண்ணன்தானே? கண்ணன் அண்ணன்!'' என்று அவனைக் கண்டுபிடித்து விட்ட மகிழ்ச்சியோடு வினவினாள்.

''ஆமாமாம்! அதே கண்ணண்ணனேதான்! அப்போது நீ இப்படித்தானே, நிறைய 'ண' கரத்தைக் கொட்டி, இழுத்துக் கூப்பிடுவாய்?'' என்று முறுவலித்தான் அவன்.

''ஆமாண்ணா! கூப்பிடும்போதே, எத்தனை 'ண' சொன்னேன் என்று குழம்பிப் போகும்! அப்போது, இந்த மீசை இல்லாமல் மொழுமொழு என்று இருந்தீர்களா? குண்டுவேறு! அடையாளம் தெரியக் கொஞ்சம் தாமதமாகி விட்டது! மனோ, உன் கண்ணன் சிறு வயதில் எனக்குத் தெரிந்தவர்தான். ரொம்பவே பழக்கம்! கண்ணண்ணா, அங்கிள், ஆன்ட்டி எல்லோரும் சுகமாக இருக்கிறார்களா?'' என்று குசலம் விசாரித்தாள் மாதவி.

''ஓ! எல்லோரும் நல்ல சுகம்! உன்னைப் பார்த்தால், மிகவும் சந்தோஷப்படுவார்கள்! முதலில், இதைச் சொல்லி விடுகிறேன்! உன்னைப் பார்த்ததில், எனக்கு ஒரு பெரிய்ய கவலை தீர்ந்தது, தெரியுமா? உன்னைப் பார்க்கும்வரை, உள்ளே நடுங்கிக் கொண்டிருந்தேன்! அப்பாடியோவ்! என்ன நடுக்கம்!''

முகம் மாறியது அவளுக்கு. ''என்னைப் பார்த்ததில் கவலை தீர்வதா? என்னால் புதுக்கவலை வராதிருந்தால் போதாதா?'' என்றாள் கசந்த குரலில்!

மற்ற இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளவும், சமாளித்து, ''ஆனால், நீங்கள் நடுங்கும்படி என்ன நேர்ந்தது?'' என்று விவரம் கேட்டாள் மாதவி.

அதையே பிடித்து, "பின்னே என்னம்மா? இந்தம்மா, தன் சினேகிதி என்னைப் பார்த்து, நல்லவன் என்று ஒத்துக் கொண்டால்தான், மேற்கொண்டு பழகுவதே, என்று அடித்துச் சொல்லிவிட்டாள்! இந்தத் தோழியம்மாளை நமக்குத் தெரியவே தெரியாதே! அவளை எப்படிக் கணக்குப் பண்ணுவது என்று ஏகப்பட்ட கவலைப் பட்டுக் கொண்டே வந்தேனா, இப்போது, அப்பாடா என்று இருக்கிறது! ஆனால், ஒரே ஒரு வருத்தம்! அதனால் பெரும் பயம்!" என்றான் அவன்.

"ஐயோ, திரும்பவும் என்ன பயம்?"

"என்னைக் குண்டு என்று விட்டாயே! அதற்காக, உன் தோழி என்னைக் கட்டிக் கொள்ள மாட்டேன் என்று விட்டால்?"

"ஷ்! கட்டி, கிட்டி என்று, இப்போது என்ன பேச்சு?" என்று கடிந்தாள் மனோகரி!

"அதெப்படிச் சொல்லுவாள்? நீங்கள் அப்போதுதானே, குண்டாக இருந்தீர்கள்? இப்போது, உயரத்துக்குச் சரியான அளவு இருக்கும்போது, குறைப்பட முடியாதே!" என்றாள் மாதவி.

"அதில்லைம்மா! மேடம், நர்சம்மா அல்லவா? இப்போது தான், குண்டாக இருப்பது ஆரோக்கியம் அல்ல என்று கண்டுபிடித்து வைத்திருக்கிறார்களே! நாளைக்குப் பிள்ளை கள் குண்டு குண்டாக இருந்து விடும் என்று, திருமணத் துக்கு மறுத்து விட்டால் என்றுதான்... யப்பா!" என்று வலி யால் துடித்துப் போனவன் போலப் பாவனை செய்தான் கண்ணன்.

ஏனெனில், கையில் இருந்த தினப் பத்திரிகையால், அவன் முதுகில் ஓங்கி ஒன்று போட்டிருந்தாள், மனோகரி!

ஆனால், அவள் வைத்திருந்தது தினப் பத்திரிகையே என்பதால் அவன் நடித்துக் காட்டிய அளவு வலி இராது என்று அறிந்திருந்ததால், இரு பெண்களுமே கிண்கிணி நாதமாகச் சிரிக்கத்தான் செய்தார்கள்!

அவர்கள் சிரிப்பதை ரசனையோடு கேட்டிருந்துவிட்டு, ''மனோ, இனி நீ என்னிடம் ரொம்ப மரியாதையோடு நடந்துகொள்ள வேண்டும்! மாதவி என்னை என்ன சொல்லிக் கூப்பிட்டாள் பார்த்தாயா? 'அண்ணா!' அதாவது, அவள் உனக்கு நாத்தனார் முறை! அவள் முன்னிலையில் இப்படி அடித்தாய் என்றால், மட்டு மரியாதை தெரியாத இந்தப் பெண் வேண்டாம் என்று, அவள் என்னிடம் சொல்லி விடக் கூடும்! ஜாக்கிரதை!'' என்று மிரட்டும் குரலில் கண்ணன் கூற, மலர்ந்த கண்களால் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு, இரு பெண்களும் மீண்டும் கிளுக்கிச் சிரித்தார்கள்!

மூவருமாகச் சிரித்து முடித்த பிறகு, ''வருகிறாயா, மாதவி, அப்படியே, எங்கள் வீட்டுக்குப் போய், அப்பா, அம்மாவைப் பார்த்து வரலாம். 'மஞ்சு, மஞ்சு' என்று, ஆன்ட்டியின் பெயர், அம்மா பேச்சில், அவ்வப்போது வந்து கொண்டே இருக்கும்! இப்போது உன்னைப் பார்த்தால், மிகவும் சந்தோஷப்படுவார் கள்!'' என்று, கண்ணன் அவர்களை வீட்டுக்கு அழைத்தான்.

மாதவியின் முகம் சட்டெனக் கூம்பிப் போயிற்று!

லேசாக முகம் கன்ற, ''என்.. என் கதை, தெரி.. மனோ சொல்லியிருக்கிறாள் அல்லவா?'' என்று, மெல்லிய குரலில் வினவினாள்.

''சொன்னாள்!'' என்றான் கண்ணன் இதமாக. ''அதனா லேயே, என்னை ஏற்க, அவளுக்கு இத்தனை காலம் ஆயிற்று!''

ஒரு பெருமூச்சுடன், ''ஆண்கள் மீதுள்ள நம்பிக்கை அடியோடு போய்விட்டது, கண்ணன் அண்ணா! என்னால், இவளுக்கும்!'' என்றாள், மாதவி வருத்தத்துடன்.

''இருக்கலாம்! கிருபாகரன் செய்த லீலை அப்படிப் பட்டதுதான்! ஆனால், அந்த நம்பிக்கை, என்னைக் கண்டதும், திரும்ப வந்திருக்க வேண்டுமே!'' என்றான் கண்ணன் இலகுவாகவே!

முறுவலித்து, ''நம்பியதால்தானே, மனோ உங்களை இங்கே அழைத்து வந்திருக்கிறாள்!'' என்றாள் மாதவியும்.

''சும்மாவா? ஆறு மாதங்கள், இவள் பின்னாலேயே அலைந்திருக்கிறேனாக்கும்! இன்னொருத்தனானால், இவள் நடத்திய விதத்துக்குத் துண்டைக் காணோம். துணியைக் காணோம் என்று, என்றைக்கோ ஓடிப் போயிருப்பானாக்கும்!''

''ஆனால், மனோவுக்காக நீங்கள் என்ன பாடுபட்டிருந் தாலும், அத்தனையும் தகும்! அவள் அவ்வளவு நல்லவள், தெரியுமா?'' என்றாள் மாதவி குரல் கரகரக்க! ''மனோ மட்டும் இல்லையானால், நான் என்றைக்கோ...

வியப்பும், மகிழ்ச்சியுமாகப் பார்த்தபடி, பெரும்பாலும் அமைதியாக நின்று கொண்டிருந்த மனோகரி, இப்போது குறுக்கிட்டு, ''அதை விடு, மது! இப்போது, அவர் கேட்ட தற்கு என்ன சொல்லுகிறாய்? அவர் வீட்டுக்குப் போய் வருவோமா? நான் அறிந்த வரையில், ஆன்ட்டி நல்லவராகவே தெரிகிறார்கள். நீ முன்னமே பழக்கம் என்பதால், பார்த்தால், சந்தோஷப்படுவார்கள். என்ன சொல்லுகிறாய்?'' என்று கேட்டாள்.

சட்டென முகம் மலர்ந்தாள் மாதவி. ''அடேடே, கண்ணண்ணன் ரொம்ப வேகமாகத்தான் வேலை செய்திருக்கிறீர்கள்! அதற்குள், மனோவை உங்கள் பெற்றோருக்கெல்லாம் அறிமுகம் செய்து, சம்மதம் வாங்கியாயிற்றா? பரவாயில்லையே!'' என்று மனமாரப் பாராட்டினாள்!

கண்ணன் பெரிய இடத்துப் பையன்! ஒரே வாரிசு! ஒரு சாதாரணப் பெண்ணை மணக்கச் சம்மதிப்பார்களா என்று, அவளுக்கு உள்ளூர ஒரு கலக்கம் இருந்தது. அத்தோடு, நர்ஸ் என்றாலும், அந்தப் பணியின் தன்மை தெரியாமல், சற்று அலட்சியமாகத்தானே நினைக்கிறார்கள்? ஆனால், இப்போது அந்தக் கலக்கம் அகல, மாதவி மகிழ்ச்சியோடு பேசினாள்.

வாய் விட்டுச் சிரித்துவிட்டுக் கண்ணன் சொன்னான். ''அம்மா, அப்பா சம்மதம் தவிர, மற்றப்படி நீ நினைப்பது தவறு, மாதவி. மனோவை முதலில் பார்த்துப் பழகி, வாய் ஓயுமட்டும், இவள் புகழைப் பாடியது, என் அம்மாதான்!'' என்று தொடங்கி, விவரம் சொன்னான்!

பல்வேறு சமூக சேவையில் ஈடுபட்டிருந்த யமுனா, தன் சுய சேவையை அடியோடு மறந்து விட்டிருந்தாள்! சிறு வலிகள், உடல் கோளாறுகளை, வயதுக்குரியவை என்று பொருட் படுத்தாமல் விட்டதன் விளைவாக, கருப்பையில் இருந்த கட்டி, தானாக வெடித்துவிட, அபாயகரமான நிலையில், கண்ணனுடைய தாயார் யமுனா, ஆறு மாதங்களுக்கு முன்னர், மனோகரி பணிபுரிந்த அதே மருத்துவ மனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தாள். அப்போது, தன் ஆயிரம் கேள்விகளுக்கும் அலுக்காமல் பதில் சொல்லி, இன் முகத்தோடு பணிபுரிந்த மனோகரியை, யமுனாவுக்கு மிகவும் பிடித்துப் போயிற்று!

அவ்வப்போது, மருத்துவ மனையில் வந்து பார்ப்பதோடு, மகன் மூலம் பழக் கூடைகளும் அனுப்புவதுண்டு!

"உனக்குக் கூடச் சொல்லியிருக்கிறேனே, மது!" என்றாள் மனோகரி.

சொல்லியிருப்பாள்! மனோகரியையும், அவளது பணியையும், எல்லோருக்குமே பிடித்துப் போவதுதான் வழக்கம்! இதுபோலப் பரிசுகளும் வருவனதான். வருவதில் பெரும்பகுதியை, உடன் பணிபுரிவோருக்குக் கொடுத்துவிட்டு, கொஞ்சத்தைக் கொண்டு வருவாள். இதுபோல எத்தனையோ எனும்போது, இது தனியாக மாதவியின் நினைவில் நிற்க வில்லை!

தாயின் இந்த சுகவீனத்தின்போதுதான், கண்ணன் மனோகரியைச் சந்தித்தது!

அப்போதும், பெற்றவளின் உடல்நிலை பற்றிய கவலையும், மனோகரியின் பணிச் சீருடையுமாக, முதலில் ஒன்றும் பெரிதாகத் தோன்றவில்லையாம்! என்னவோ, இந்த நர்ஸ் வந்தால், மனதுக்கு ஆறுதலாக இருக்கிறது என்கிற மட்டும்தான்!

ஆனால், குணமாகி வீட்டுக்குக் கிளம்புகிற அன்று, மனோகரிக்கு லீவு நாளாக இருந்தபோதும், யமுனாவின் வேண்டுகோளுக்கிணங்க, வழியனுப்புவதற்காகச் சுரிதாரில் அவள் வந்தபோது, அம்மா, மகன் இரண்டு பேருமே அயர்ந்து போயினர்!

"அதன் பிறகு, ஒரு நாளைக்கு, ஒரு தரமாவது இவள் தரிசனம் கிடைக்கவில்லை என்றால், தூங்கவே முடிவதில்லை! அதனால்தான் பக்கத்திலேயே வைத்துக் கொள்ளலாம் என்று, இந்தப் பாடு படுகிறேன்! இவளானால், காதிலேயே வாங்காமல்,

இரண்டு, மூன்று வருஷம் என்று திருமணத்தைத் தள்ளிப் போடுகிறாள்!'' என்று குறையோடு கதையை முடித்தான் கண்ணன்!

மாதவிக்குச் சட்டெனப் புரிந்தது!

மனோகரி தயங்குவது, தனக்காக! நெஞ்சுத் திடமற்ற தோழியைத் தனியே விட முடியாது என்றுதான், திருமணத் துக்குப் பின் வாங்குகிறாள்! மாதவியைத் தனியே விடவும் முடியாது, கூடவே கூட்டிக் கொண்டு போகவும் முடியாது! திருமணத்தைத் தள்ளிப் போடுவது, அதற்காகத்தான்!

அவளுக்காக இவ்வளவு உதவி செய்யும் மனோகரியின் மணவாழ்வு, அவளாலேயே தடைப்படுகிறதா? அதுவும், அவளுக்கு எல்லா வகையிலும் ஏற்ற ஒரு நல்ல குடும்பத் தலைவியாகும் வாய்ப்பு!

நெஞ்சுக்குள் சுரீலென வலிக்க, அந்த வலி கீழிறங்கிப் பிள்ளைப் பேறு வலியாகி, அன்றிரவே, மாதவியின் மைந்தன் பிறந்தான்!

பழக்கப்பட்டிராத வெளிச்சத்தில், கண்ணைப் பொடியப் பொடிய விழித்துக்கொண்டு அருகில் கிடந்த குழந்தையைப் பார்க்கப் பார்க்க, மாதவியின் நெஞ்சு கொதித்தது!

14

கிருபாகரனைப் பிரிந்து வந்து வாழ்ந்த இத்தனை காலமும், மாதவி அவனை அடியோடு மறந்து முழுசாக ஒரு நாளைக்கூடக் கழித்தது இல்லை என்றே சொல்லலாம்!

நினையாதிருக்க முடியவில்லை!

அவனை நம்பிய தன் முட்டாள்தனத்தை எண்ணி எண்ணி மருகியிருக்கிறாள். எண்ணில் அடங்காத எத்தனையோ முறை!

இப்படி ஏமாற்றி விட்டானே என்று ஆத்திரம்! இப்படி ஏமாந்து விட்டேனே என்று தவிப்பு!

கோபம், வருத்தம், ஆத்திரம், ஆங்காரம் என்று நெஞ்சை இறுக்கும் இத்தனை கொடிய உணர்ச்சிகளையும், வலிக்க வலிக்க அனுபவித்துப் பரிதவித்தாளே தவிர, இந்தத் துன்பங்களுக்கெல்லாம் பதிலடி கொடுப்பது பற்றி, அவள் யோசித்ததே இல்லை!

தொடர்ந்து உயிரோடு வாழும் தைரியத்தை மனோகரி தந்தாள் என்றால், இப்போது விழி விரித்து உலகைப் பார்க்க முயன்ற பிள்ளை, அவளை வேறு விதமாக நிமிர வைத்தான்!

கள்ளமே இல்லாத குழந்தை!

இதைக் கபடமாக உருவாக்கிப் பயன்படுத்துவதா?

இல்லை, பயன் படுத்துவதற்காகவே, கபடமாக உருவாக்குவதா?

எவ்வளவு கொடிய பாவம்!

இதைச் சும்மா விடுவதா?

என்ன செய்வது? என்ன செய்ய முடியும் என்பதெல்லாம், அப்போது, அவளுக்கு ஒன்றும் தோன்றவில்லை! ஆனால், ஏதாவது செய்தே ஆக வேண்டும் என்பதை மட்டும் மாதவி, அன்று நிச்சயமாக உணர்ந்தாள்!

முடியும். அவளால் முடியும்! வானைத் தொட்டு, அதற்கு மேல், வான வெளியையும் தொட்டுவிட்ட இந்தக் காலத்தில் முடியாதது என்று எதுவும் கிடையாது!

அதைத்தான் கிருபாகரன் நிரூபித்தே இருக்கிறானே!

'ஆக்ஷன் அன்டு ரி ஆக்ஷன் ஆர் ஆல்வேஸ் ஈக்வல்' என்று பள்ளியில் படித்தது நினைவு வந்தது. அவன் செய்த வினைக்குச் சமமான எதிர்வினையை அவனும் அனுபவித்துத்தானே ஆகவேண்டும்? அனுபவிக்க வைக்க வேண்டும்!

எப்படி? எப்படி?

தோழியின் கனன்ற முகத்தைக் கவனித்துவிட்டு, ''இனி இவனை மட்டும் நினை, மது! கடந்த காலத்தை, வேண்டாத குப்பை என்று ஒதுக்கிவிடப் பழகு!'' என்றாள் மனோகரி!

''இல்லை, மனோ!'' என்றாள் மாதவி. ''எனக்கு இன்னு மொரு கடமையும் இருக்கிறது!'' என்றாள் யோசனையோடு.

கண்ணன் தகவல் சொல்ல, அவனுடைய பெற்றோர் இருவரும் குழந்தையையும் மாதவியையும் பார்க்க வந்தார்கள்.

வலியெடுத்து, மாதவியை மருத்துவ மனையில் சேர்த்த போதே, பெற்றோரிடம் சொல்லி, அவர்களை அழைத்து வரக் கண்ணனுக்கு ஆசைதான், மனோகரிதான் அவனைத் தடுத்து வைத்திருந்தாள்.

சும்மாவே, முதல் குழந்தை என்பதால், மாதவிக்குப் பயமும் படபடப்பும் இருக்கும்! கிருபாகரனைப் பற்றிய நினைவும் இல்லாதிராது! அவை சந்தோஷமான நினைவுகளும் அல்ல!

இதற்கும் மேலாக, கண்ணனுடைய பெற்றோரைப் பார்த்தால், இல்லாத சொந்தப் பெற்றோரைப் பற்றி எண்ணி, அது வேறு வருத்தம் மாதவிக்கு இப்போது வேண்டாம் என்பது அவள் கருத்து!

எடுத்துச் சொன்னதும், கண்ணனும் ஒத்துக்கொண்டு, அவனால் இயன்ற வகைகளில் உதவி செய்தபடி, மருத்துவ மனையிலேயே காத்திருந்தான்.

மறுநாள் விவரம் அறிந்ததுமே, அவனுடைய பெற்றோர் இருவருமே மருத்துவமனைக்கு, மாதவியைப் பார்க்க வந்து விட்டார்கள்!

''உனக்குப் பத்தியச் சமையல் செய்யச் சொல்லிவிட்டு வந்தேனம்மா! கொஞ்ச நேரத்தில் வந்துவிடும்!'' என்று, அவள் கையைப் பற்றி, யமுனா பிரியமாகச் சொன்னபோது, தன்னையறியாது மாதவியின் கண்கள் கலங்கின.

சமாளித்துக்கொண்டு அவள் நன்றி உரைக்கையில், சுந்தரம் குறுக்கிட்டுப் பேசினார்: ''என்னம்மா, பெரிய நன்றி! உன் அப்பா, என் சினேகிதன், மஞ்சு என்றால், யமுனாவுக்கு உயிர்! இப்போது, உன்னையும், மனோவையும் போலவே இருப்பார்கள்! உன் பெற்றோரும் நாங்களும் பழகியதற்கு, நாங்கள் இருவரும், உனக்குப் பெரியப்பா, பெரியம்மா மாதிரிதான் இருந்திருக்க வேண்டும்! அவ்வளவு பிரியம்! ஆனால், உன் தாத்தா... அவருக்கு மருமகளுடைய உற்றம் சுற்றம் யாரும் பிடிக்காது! அதற்கும் மேலாக, மஞ்சுவை, மகனுடன் பழக்கிவிட்டு, சைக்கிள் நிறுவனத்தை விழுங்க முயற்சிப்பதாக, ரொம்ப அசிங்கமாகப் பேசினார்! நானே, மகனுக்காகத்தான், 'வெற்றி'யில் முதல் போட்டதே! அதை

யெல்லாம் நினைக்காமல், என்ன பேச்சு பேசினார்! இங்கே மில்லை வேறு பார்க்க வேண்டும்! சரிதான் என்று, அவர் கேட்ட மாதிரி எழுதிக் கொடுத்துவிட்டு, இங்கே வந்துவிட்டோம்! இல்லாவிட்டால், நாம் ஒரு குடும்பமாக எப்படிச் சேர்ந்து வாழ்ந்திருப்போம், தெரியுமா! இந்த ஊருக்கு வந்தபோதே, நீ எங்கள் வீட்டுக்கல்லவா, வந்திருப்பாய்! இப்போது, இந்தப் பத்தியச் சாப்பாட்டுக்குப் போய், நன்றி என்கிறாயே! கேட்கவே கஷ்டமாக இருக்கிறது!''

அவர் பேசியதில் கடைசிப் பகுதி, மாதவியின் கருத்தில் பதியவில்லை! அவள் மனம் வேறெங்கோ சென்றது.

வெற்றி சைக்கிள் நிறுவனத்தோடும் தொடர்பு கொண்ட குடும்பம் இது! அதாவது, தன் அரிய பெரிய செயல்களின் மூலம், இப்போது அதன் சேர்மனாக இருக்கும் கிருபாகரனோடு, தொழில் தொடர்பு உள்ள குடும்பம்!

இதனால், அவளுக்குப் பயன் இருக்குமோ, என்னவோ? ஆனால், அங்குள்ள நிலைமை பற்றி அறியவேனும் இயலும்! அத்தோடு...

யோசனையோடு, ''உங்கள் பங்கைத் தாத்தா விலைக்குக் கேட்கவில்லையா, அங்கின்?'' என்று விசாரித்தாள்.

நனைத்து விட்டுச் சிணுங்கிய குழந்தையை, யமுனா கவனிக்க, மனோகரி உதவிக்குப் போனாள்.

சுந்தரம், மாதவிக்குப் பதில் சொன்னார். ''முதலில் கோயம் புத்தூருக்கு வரும்போது, நானே அவருக்கு விலைக்கே கொடுத்திருப்பேன்! ஆனால், அப்போதுதான் ரகுபதியின் பங்குகளை வாங்கியிருந்ததால்... அதிலும் இந்தத் திருட்டுத் தனம் செய்திருந்தார் என்று, அப்போது எனக்குத் தெரியாது!

ஆனால், அதில் செலவழித்து விட்டதால், என்னுடையதை வாங்கப் போதுமான பணம் உன் தாத்தாவிடம் இல்லை! அதனால், பினாமி மாதிரி ஒரு பத்திரம் மட்டும் எழுதி வாங்கிக் கொண்டார். பிறகு, உன் அப்பாவுக்கு... அவனுக்கு அ... அப்புறம், அவராக விலைக்குக் கேட்டபோது, எனக்குக் கொடுக்க மனம் இல்லை! மகனுக்குத் துரோகம் செய்கிற மாதிரி, ஓர் உணர்வு! ஆனால், பழைய பத்திரமே போதும் என்று, உன் தாத்தாவும் பேசாதிருந்து விட்டார்! இப்போது, அதை விடு! உனக்கு நாங்கள் என்ன செய்யக் கூடும்? உன் கணவரிடம் பேசட்டுமா?'' என்று கேட்டார்.

''என்னவென்று, அங்கிள்?'' என்று வெறுப்புடன் பதிலுக்குக் கேட்டாள் மாதவி. ''என் நண்பன் மகளுக்கு வாழ்வு கொடு என்றா? அப்படி சிபாரிசில் அவரோடு சேர்ந்து வாழ்வதைவிட, நான் செத்து விடுவேன்!'' என்றாள் குரலில் தீவிரத்துடன்.

''என்னம்மா, இப்படிச் சொல்லுகிறாய்?'' என்றார் சுந்தரம் பதட்டத்துடன். ''அவனிடம் பேச வேண்டாம் என்று மட்டும் சொன்னால் போதாதா? மேலே என்ன வார்த்தை இது?''

''நன்றாகக் கேளுங்கள், அங்கிள்! இந்த வயதில், இந்த மாதிரி வார்த்தைகள் வாயில் வரலாமா? மனதில்கூடத் தோன்றாமல் இருந்தால்தானே, ஏதோ ஒரு வகையில் நிமிர்வது பற்றி யோசிக்கவேனும் தோன்றும்?'' என்று வருங்கால மாமனாரிடம், தோழியைப் பற்றிப் புகார் சொன்னாள், மனோகரி.

மாதவியின் முகத்தைப் பார்த்துவிட்டு, மனோகரியை நோக்கி, வருத்தத்துடன் தலையசைத்தார் சுந்தரம். ''உச்சந் தலையிலேயே பெரும் போடு போட்டு விட்டான் அல்லவா?

தாங்குவது கடினமாகத்தான் இருக்கும்! திருமணத்தில் பார்த்துவிட்டு, நன்றாக இருக்கிறாள் என்று எண்ணினேனே! ஆனால், சுத்த கிருத்திருமம் பிடித்த மனிதர்! நேர் வழியே தெரியாது! உயில், பத்திரம், எதிலும் திரிசமன்! அவர் அடித்த கூத்தில், என் நண்பனுடைய மகள் அல்லவா, பெரிய அடி பட்டுப் போனாள்!'' என்று வேதனைப்பட்டார்.

''அதுவும் நல்லதுதான், அங்கிள்!'' என்றாள் மாதவி.

எல்லோரும் திகைத்து நோக்கவும், ''வலிக்க வலிக்கத்தானே, திருப்பிக் கொடுக்கவும் தோன்றுகிறது!'' என்றாள் கண்ணில் பளபளப்புடன், அவள்!

15

மாதவியின் கண்களின் பளபளப்போடு, சூழ்நிலைக்குச் சற்றும் பொருத்தமற்ற வார்த்தைகளையும் கேட்டதும், அறையில் இருந்த மற்ற இரு பெண்களும், கவலையுடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

மனோகரியின் பார்வை புரிந்து, மாதவியின் அருகில் இருந்த யமுனா, சட்டெனச் சின்னவளின் நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள்.

''சூடு ஒன்றும் இல்லைம்மா!'' என்று விவரமும் கூறினாள்.

குழந்தையைத் தொட்டிலில் கிடத்தியபடி, ''உனக்குக் குளிருகிறதா, மது? எதற்கும் தெர்மா மீட்டர் வைத்தே பார்த்து விடுகிறேனே!'' என்று சொல்லவும்தான், மாதவிக்கு விஷயம் புரிந்தது!

"ஏன்? நான் ஜன்னி கண்டு உளறுவதாக நினைக்கிறாயா, மனோ? என் பேச்சு, உனக்கு உளறலாகவா படுகிறது?" என்று குறையோடு கேட்டாள், அவள்.

"இல்லைப்பா! கண்ணைப் பார்த்தால் காய்ச்சல் பளபளப்போ என்று தோன்றியது!"

மிகுந்த திருப்தியோடு நிமிர்ந்து அமர்ந்தாள் மாதவி. "அன்றைக்குக் கிருபாகரனின் கண்களும் பளபளவென்றுதான் இருந்தன. மனோ! என் கண்களிலும் பளபளப்பா? சரியான பாதையில்தான் போகிறேன் போல! அவரைப் போலவே, செய்து முடித்தும் விடுவேன் என்று நினைக்கிறேன்!"

"மாதவி!" என்று மெல்ல அழைத்தாள் யமுனா. "என்னத்தையம்மா செய்து முடிக்க விரும்புகிறாய்? எனக்கு ஒன்றும் புரியவில்லையே! ஆனால், ஒன்று! எதுவானாலும், பிறகு பார்க்கலாம்! பிள்ளை பெற்றவள்! படுத்து ஓய்வெடு! கொஞ்சம் ஓய்வெடுத்தால்தான், எதைச் செய்யவும், உன் உடலில் தெம்பு இருக்கும்!" ஆலோசனை நல்கினாள்.

அது சரியே போல, மாதவியின் உடலில், ஒரு சோர்வு பரவலாயிற்று.

சிறு கவலையுடன் மனோகரியைப் பார்க்க, அவளும் யமுனாவை ஒட்டி "மெய்தான் மது! ஓர் உயிரை உலகுக்குக் கொண்டு வருவது எளிதான காரியம் அல்ல! முன் காலத்தில், அதை மறுபிறவி என்றே சொல்லுவார்கள். இப்போது, ஆபத்து இல்லை என்றாலும், அலுப்பும் களைப்பும் இருக்கத்தானே செய்யும்? வேண்டிய அளவு ஓய்வெடுத்தால், ஏதோ 'சரியான பாதை' என்றாயே, அதில் செல்ல, உனக்கு வலுவும் சீக்கிரமே கிடைக்கும்!" என்று ஒரு நர்சாக, ஆலோசனை கூறினாள்.

மாதவியும், அதற்குப் பணிந்து, பேசாமல் படுத்துக் கண்ணை மூடிக் கொண்டாள்.

உறங்கினாள்., ஓய்வெடுத்தாள். மருத்துவர் சொன்ன மருந்துகளை ஒழுங்காக உட்கொண்டாள். உடல் பயிற்சி செய்தாள். டாக்டர் சொன்ன எதையும் விடவில்லை!

சூப், மருந்துக் குழம்பு அது இது என்று, யமுனாவும், எதையாவது செய்து அனுப்பிக்கொண்டே இருக்க, மாதவியின் உடல் சீக்கிரமே பழைய நிலையை அடைந்தது.

ஆனால், மனதில் மட்டும் யோசனை நடந்து கொண்டே இருந்தது!

அதிலும், குழந்தையைப் பராமரிக்கும்போது, அவள் கண்களில் கனல் வீசும்!

ஒருமுறை அதைக் கவனித்துவிட்டு, "என்ன யோசனை, மது? எதுவானாலும் பிள்ளை மேல், எந்தத் தப்பும் கிடையாது! அதை வெறுத்துவிடாதே!" என்றாள் மனோகரி.

"இவனை வெறுப்பதா?" என்றாள் மாதவி வியப்புடன். "என் குழந்தையை நான் எப்படி வெறுப்பேன், மனோ? இவனுக்காக, என் உயிரையும் விடுவேனே!" என்றும் சொல்லிவிட்டு, "ஏன் அப்படிக் கூறினாய்?" என்று விவரம் கேட்டாள்.

"பாப்பாவை வைத்திருக்கும்போது, சில சமயம், ரொம்பக் கோபமாகத் தெரிகிறாயே!" என்றாள் மனோகரி.

தூங்கி விட்ட மகனைப் பார்க்கும்போது, சற்று முன் நினைத்தது நினைவு வந்தது!

முகம் இறுக, "அது வேறு விஷயம்!" என்று பதலிறுத்தாள்.

கிருபாகரனைப் பற்றியது என்று உணர்ந்து, "அந்த நினைவே வேண்டாம் என்றால், விடமாட்டேன் என்கிறாயே! ஏற்கெனவே, அனுபவித்தது போதாதா? இன்னும் அவரை நினைத்து, மீண்டும் மீண்டும் மனதைத் துன்புறுத்திக் கொள்ளலாமா?" என்றாள் மற்றவள் வருத்தத்துடன்.

"துன்பம்தானே உடம்பில் சுரணையையும் ஏற்படுத்து கிறது?" என்று எழுந்து சென்று, குழந்தையைத் தொட்டிலில் கிடத்தினாள் மாதவி. தொடர்ந்து, "ஒரு தரம் சென்னைக்குப் போய் வர வேண்டும், மனோ! கண்ணண்ணன் துணைக்கு வருவாரா?" என்று வினவினாள்.

திகைத்து நோக்கிவிட்டு, "சென்னைக்கா?!" என்று ஆச்சரி யத்தில் வாயைப் பிளந்தாள் மனோகரி.

"ஆமாம். சென்னைக்கேதான். ஒரே நாள்தான். போகிற அன்றே திரும்பி விடுவோம்!" என்றாள் மற்றவள்.

"நான் வேண்டுமானால், லீவு போட்டு விட்டு, உன் கூட வரட்டுமா?" என்று கேட்டாள் அந்த உத்தம சினேகிதி.

அவளை ஒரு தரம் அணைத்து விட்டு, "ஐயோ, வேண்டாம்ப்பா! நீ எனக்குச் செய்திருப்பதெல்லாம் போதாதா? இன்னுமா? வேண்டாம்! அத்தோடு, இது அண்ணன் மாதிரி ஆண் துணையோடு செய்ய வேண்டிய வேலை!" என்றவள். தோழியின் கண்கள் விரிந்த விதத்தைக் கண்டதும், "ஐயோ, பயந்து விடாதேப்பா! அடிதடி விஷயம் ஒன்றும் இல்லை! அங்கே, லாக்கரில் இருக்கும் நகைகளை எடுத்துவரப் போகிறேன்! தனியாகவோ, இரண்டு பெண்களாகவோ அவ்வளவு நகைகளையும் கொண்டு வருவது, இன்றைய

நிலையில் அவ்வளவு சரியில்லை என்று தோன்றியது! அதற்காகத்தான் அண்ணன் துணை!'' என்று விளக்கினாள்.

அப்போதும், ''இப்போது நகைகள் எதற்கு? இங்கே நகைகளுக்கு அவசியம் இல்லை என்றுதானே, இருக்கிறபடி அங்கேயே இருக்கட்டும் என்று விட்டு வந்தோம்! இப்போது திடீரென்று என்ன அவசியம்?'' என்று மனோகரி விசாரித்தாள்.

''நகை அவசியம் இல்லை! ஆனால்... மனோ, அந்த நகைகளின் விலை மதிப்பு எனக்குச் சரியாகத் தெரியாது! அதைத் தெரிந்து கொண்ட பிறகு, எல்லாம் சொல்லுகிறேனே! என் விஷயம், உன்னிடம் சொல்லாமல், யாரிடம் சொல்லப் போகிறேன்?'' என்று மாதவி கெஞ்சுதல் போலக் கேட்கவும், அதற்கு மேல், மற்றவள் தொணப்பவில்லை.

என்ன மாதிரி நகைகள் என்று கேட்டறிந்த பிறகு, அவ்வப்போது தேவைக்கு அமர்த்தும் 'செக்யூரிட்டி' ஆள் ஒருவரையும் கூட அழைத்துக் கொண்டு, மாதவிக்குத் துணையாகச் சென்றான் கண்ணன்.

மருமகளைப் பிடிக்காவிட்டாலும், ஊர் மெச்சுவதற்காக, வைர நகை செட் ஒன்றை, குமாரசாமி மஞ்சுளாவுக்குக் கொடுத்திருந்தார். திருமணம் போன்ற விசேஷங்களுக்கு, அவள் அவற்றை அணிந்து கொண்டாக வேண்டும்! மகேந்திரனும் மனைவிக்குச் சிலது செய்திருந்தார். நாட்டியத்தில் புகழ் பெற்றிருந்த மஞ்சுளாவே வாங்கியிருந்தது. இன்னும் சில, மாதவியுடைய பாட்டியின் நகைகள்!

மாதவியின் திருமணத்தின்போது, அந்த நகைகளின் பட்டியலும், அவை இருந்த லாக்கரின் சாவியும், லாக்கரைப் பயன்படுத்தும் உரிமையும் அவளிடம் கொடுக்கப்பட்டன!

நகைகள் பற்றி அவள் கிருபாகரனிடம் சொன்னபோது, அவற்றைப் பார்க்க வேண்டும் என்ற அக்கறையே அவன் காட்டவில்லை. கணவனிடம் மயங்கிக் கிடந்த மாதவிக்கும், அவனுக்கு ஆர்வம் இல்லாதபோது, அந்த நகைகளைப் பார்ப்பதிலோ, அவற்றை எடுத்து அணிவதிலோ ஆசை எதுவும் தோன்றவில்லை.

அவனது குறியே வேறு என்பதைச் சிறிதும் ஆராயாமல், நகைகளிடம் ஆர்வம் காட்டாத தன்மைக்காக, அவனுக்கு 'உத்தமன்' பட்டம் கட்டி மகிழ்ந்த தன் முட்டாள்தனத்தை எண்ணி, மீண்டும் உள்ளூரக் குன்றிக் குறுகிவிட்டு, மாதவி அந்த நகைகளைக் கோவைக்கு எடுத்து வந்தாள்.

ஒரு சிறு பெட்டி நிறைய இருந்த நகைகளோடு, மாதவி, சுந்தரத்திடம் சென்றாள்.

மனோகரியையும் கூட்டிக் கொண்டுதான்!

யமுனா குழந்தையைத் தூக்கிக் கொஞ்ச, மாதவி பெட்டியைச் சுந்தரத்திடம் திறந்து காட்டினாள்.

"இந்த நகைகளின் மதிப்பு எனக்குத் தெரியாது, அங்கிள்! பல லட்சங்கள் என்று வக்கீல் அங்கிள் சொன்னார். இதையெல்லாம் விற்க வேண்டும், அங்கிள்! அதற்கு, நீங்கள்தான் ஏற்பாடு செய்ய வேண்டும்!" என்று கேட்டுக் கொண்டாள்.

அவர், ஒவ்வொன்றாக எடுத்துப் பார்க்கையில், "அந்த மாங்காய் மாலை, உன் அம்மாவினது, மாதவி. அதன் நடுப் பதக்கம் போலவே, காதுக்கும் செய்திருந்தாள். செட்டாக அணியும்போது, அவளுக்கு எவ்வளவு அழகாக இருக்கும்,

தெரியுமா? அதையெல்லாம்கூட விற்றாக வேண்டுமா?'' என்று யமுனா வருத்தத்துடன் வினவினாள்.

மாங்காய் மாலையைக் கையில் எடுத்துப் பார்த்த மாதவியின் கண்கள் கரித்தன!

ஆனால், உடனேயே முகம் இறுக, அதை மற்ற நகைகளோடு வைத்து விட்டாள்.

''அம்மாவின் ஞாபகமாக இதை வைத்துக் கொள்வதைவிட, முக்கியமான கடமை ஒன்று எனக்கு இருக்கிறதே, ஆன்ட்டீ!''

''அது என்ன கடமை, மாதவி?'' என்று சுந்தரம் வினவினார்.

நால்வரின் முகங்களுமே கேள்வியாக நோக்க, மாதவியின் பார்வை மகன் மீது படிந்தது. முகம் சிவந்து, செங்கொழுந்தாய்ச் சீறியது!

''இதோ, இவனுக்குச் செய்ய வேண்டிய கடமை!'' என்றாள், கண்களில் கனல் தெறிக்க!

16

மகனுக்குச் செய்ய வேண்டிய கடமையை மாதவி பெரிதாகச் சொன்னது, எல்லோருக்கும் ஒப்புதல்தான். பிள்ளை வளர்ப்பது, தாயின் கடமைதானே!

ஆனால், அவளது முக மாறுதல்தான், சுந்தரம் குடும்பத்தைக் குழப்பியது!

சினேகிதி என்ன சொல்ல வருகிறாள் என்பது மனோகரிக்கும் தெரியாதுதான். ஆனால், குழந்தை பிறந்ததில்

இருந்து, மாதவியின் முக மாறுதல்களைக் கவனித்து வந்திருந்ததால், ''நீ இன்னும் கொஞ்சம் விளக்கமாகச் சொன்னால்தான் எங்களுக்குப் புரியும், மாதவி, சொல்லு.'' என்று விளக்கம் கேட்டாள்.

அதற்கு மேல், மாதவியும் சொல்லத் தயங்கவில்லை.

சொன்னால்தானே, வேலையும் நடக்கும்! எனவே, தன்னைச் சமனப் படுத்திக் கொண்டு, தன் எண்ணத்தை வெளியிட்டாள், அவள்.

''கிருபாகரன், 'வெற்றி' நிறுவனத்தைக் கைப்பற்றுவதாக, அவருடைய தந்தைக்கு வாக்களித்தபோது, 'ஃபுட் ஹோல்ட்' என்பார்களே, அது போல அந்த நிறுவனத்தில் ஒரு கால் வைக்கக் கூட, அவருக்கு ஒன்றுமே இல்லை, அங்கிள். ஆனாலும், அவர் வாக்குக் கொடுத்தார்! அதைக் கபடமாக நிறைவேற்றவும் செய்தார்! அது என்ன மாதிரிக் கீழ்த்தரமான கபடம் என்று, உங்கள் எல்லோருக்குமே தெரியும்! இப்போது, நானும் ஒரு சத்தியம் செய்திருக்கிறேன். அந்தக் கபடத்தை உடைக்க வேண்டும்! மாசு மருவற்ற இந்தக் குழந்தை, ஒரு திருட்டு வேலை ஜெயிப்பதற்கான கருவியாகக் கூடாது! எனவே, அவரிடமிருந்து, அந்த நிறுவனத்தை மறுபடியும் பிடுங்கி விட வேண்டும் என்று, எனக்கு நானே உறுதி கூறியிருக்கிறேன்! ஆனால், அவரை மாதிரித் திருட்டு வேலைகள் எனக்கு வராது! நேரான வழியிலேயே போகிறேன். முதலில், இந்த நகைகளை விற்று, அந்தப் பணத்தில் நிறுவனப் பங்குகளை வாங்கலாம் என்று... என்ன அங்கிள், ஏன் தலையசைக்கிறீர்கள்?'' என்று, மறுப்பாகத் தலையசைத்த சுந்தரத்திடம் கேட்டாள்.

இரக்கத்துடன் நோக்கி, ''மதும்மா, இந்த நகைகளை இப்போது வாங்குவதானால், இருபது லட்சங்களுக்கு மேல் ஆகக் கூடும்! ஆனால், விற்கப் போனால், மிஞ்சி மிஞ்சிப் பாதி கிடைக்கலாம். முக்கால் விலையே கிடைத்தாலும்கூட, அதை வைத்து, என்னம்மா செய்ய முடியும்? கடலில் கரைத்த பெருங்காயம் ஆகிவிடும்!'' என்றார் அவர்.

''இது போதாது என்று எனக்குத் தெரியும். அங்கிள். ஆனால், பட்டம் பெற்ற பெண்களுக்குத் தொழில் நடத்துவதற்காக, அரசாங்கம், பாங்க்குகள் எல்லாம் நிறையக் கடன் உதவி செய்கிறார்களே! இலகுக் கடன் உதவி என்று... பத்து சதவிகித முதல் போட்டாலும் போதும் என்று படித்தேனே! அதற்கு மேலும்...

''அந்தச் செய்திகள் எல்லாம், நடப்புக்கு அவ்வளவாகச் சாத்தியம் ஆவதில்லை, மாதவி! அப்படியே உனக்குக் கடன் உதவி செய்தாலும், அதுவும் போதாதும்மா! இன்னும் பலப்பல கோடிகள் வேண்டும்!'' என்று எடுத்துச் சொன்னார் சுந்தரம்.

''பணம் நான் சம்பாதிப்பேன், அங்கிள்!'' என்றாள் மாதவி பிடிவாதமான குரலில். ''என்னால் முடியும்! மனோவின் உந்துதலில், கம்ப்யூட்டர் கல்வி நிறையப் படித்திருக்கிறேன்! நிதி நிர்வாகம் படித்துக் கொண்டு இருக்கிறேன்! பெரிய வேலை கிடைக்கும், அங்கிள்! பெரிய நிறுவனங்களின் கணக்கு வழக்குகளைப் பார்த்துக் கொடுத்தால், நிறையப் பணம் கிடைக்கும். கட்டாயத் தேவை போக, மிச்சப் பணத்துக்கு, வெற்றி நிறுவனப் பங்குகளை வாங்கிச் சேர்த்துக் கொண்டே இருப்பேன்! இன்றைக்கே நடக்கும் என்று நான் எண்ணவில்லை! பத்து இருபது ஆண்டுகள் ஆனாலும் பரவாயில்லை! நிறுவனத்தின் தலைமைப் பதவியைக்

கைப்பற்றி, அவரைக் கீழிறக்கியே தீருவேன்! அந்த நிலை தவிர, எனக்கு வேறு எதுவுமே வேண்டாம், அங்கிள்!'' என்று மூச்சு வாங்கச் சொன்னாள் மாதவி!

சுந்தரம் இப்போதும் பேசாதிருக்க, ''நிச்சயம் செய்வாய்!'' என்றான் கண்ணன்.

''நாம் எல்லோருமே, மார்க்கெட்டில், அந்தப் பங்குகளைச் சத்தமின்றிச் சேர்ப்போம்! இப்போது, எங்கள் குடும்பப் பங்குகள் வேறு நிறையவே இருக்கின்றன! எல்லாவற்றையும் சேர்த்து, நிறுவனத்தையே கைப்பற்றுவோம்! உன்னை வஞ்சித்துக் கிருபாகரன் அடைந்த அந்தப் பங்குகளைப் பயனற்றதாக்குவோம்! என்னப்பா சொல்லுகிறீர்கள்? இப்படிச் செய்யலாமில்லையா? செய்தால், மாதவியின் திட்டம் நடக்கும்தானே?'' என்று தந்தையிடம் உற்சாகத்துடன் கேட்டான்.

கண்ணன் சொல்லச் சொல்ல, மனோகரியின் முகத்தில் பெருமை கலந்த உற்சாகம்!

இளையவர்கள் மூவரும் ஆவலோடு பார்த்தால், அவர் முகத்தில் அப்போதும் மலர்ச்சியில்லை! ''நீ சொன்னதெல்லாம் நன்றாகத்தான் இருக்கிறது! ஆனால், சாத்தியம் இல்லை யேப்பா!'' என்றார் வருத்தத்துடன்.

''ஏன் அப்பா?'' என்று கண்ணன் ஆத்திரத்துடன் கேட்க, ''மாதவியுடைய தாத்தா பற்றி, அன்றைக்கு அப்பா சொன்னாரே, பத்திரம், பத்திரத்தில் திரிசமன் என்று! மறந்து விட்டதா? அந்தப் பங்குகளின் மூலம் வருகிற லாபம் மட்டும்தான் நமக்கு! மற்றப்படி, அவற்றின் மீது, நமக்கு ஒரு உரிமையும் இல்லை!'' என்று, யமுனாவும் வருத்தமான குரலிலேயே பேசினாள்.

''புரியவில்லையே! பணம் போட்டுப் பங்குகளை வாங்கியது அப்பா! ஆனால், அவற்றின் மீது உரிமை இல்லை என்றால், அது எப்படிம்மா? என்னப்பா இது?'' என்று, தந்தையிடம் விளக்கம் கேட்டான் மகன்.

''அம்மா கூறியது சரிதான், கண்ணா! மாதவியுடைய தாத்தாவைக் கிருத்திருமம் பிடித்தவர் என்று நான் சொன்னதே, அதனால்தான். சைக்கிள் நிறுவனத்தைத் தொடங்கும்போது, அதிக முதல் போட்டது, நான்தான். அந்தச் சமயத்தில், என் தாத்தாவின் பணமும், அம்மாவுக்கு அவளுடைய பெற்றோர் கொடுத்த பணமுமாக, நிறையக் கையில் இருந்தது! எனவே, தேவைப்பட்ட முதலில் பாதி நான் போட்டேன். குறைவாக முதலீடு செய்தது ரகுபதி. நிர்வாகப் பொறுப்பு, மாதவியுடைய தாத்தா குமாரசாமியிடம் இருந்தது! தொழில் நடத்துவதற்கு வேண்டிய சூதுவாது, மகேந்திரனுக்குப் போதாது என்பது, அவர் எண்ணம். எனவே, மகனைக் குமாரசாமி முதலில் உள்ளே விட்டதே கிடையாது! நிறுவனம் லாபகரமாக நடந்து கொண்டு இருந்தபோதுதான், மகேந்திரன் மஞ்சுளாவைத் திருமணம் செய்தது! மஞ்சுளா எங்களுக்குப் பழக்கமானவள் என்று தெரிந்ததில் இருந்து, குமாரசாமிக்கு இதே சந்தேகம்! மஞ்சுவைக் கொண்டு, வெகுளியான மகேந்திரனை மயக்கி, நிறுவனத்தை நான் விழுங்கப் போகிறேன் என்ற நிச்சயம் அவருக்கு! அப்படிப்பட்ட எண்ணமே எனக்குக் கிடையாது என்றால், அவர் ஒத்துக் கொள்வதாகவே இல்லை! நிரூபிக்கச் சொன்னார்!''

''ஓ! அதுதான் அந்தப் பத்திரமா? அப்படி அதில் என்ன எழுதியிருக்கிறது, அங்கிள்?'' என்று விவரம் கேட்டாள் மாதவி.

''எனக்கோ, என் குடும்பத்தினருக்கோ, 'வெற்றி' சைக்கிள் நிறுவனத்தில் எத்தனை பங்குகள் இருந்தாலும், அவை

களுக்காக ஒட்டளிக்கும் உரிமை, அதாவது நிறுவன சம்பந்தமாக, குமாரசாமிக்கும், அவருடைய வாரிசாக நிறுவனத்தின் பொறுப்பை ஏற்கிறவர்களுக்கும் மட்டுமே நிரந்தரமாக உரியது என்று எழுதி, அதைப் பத்திரமாகப் பதிவு செய்து தரச் சொன்னார்... எதிர்காலத்தில்கூட, என் சந்ததிகள் கூட, வெற்றி நிறுவனத்தின் அதிகாரத்தைக் கைப்பற்றி விடாமல் இருக்க ஏற்பாடு செய்து கொண்டார்!''

''ஆனால், இதைப் பற்றி, என் அப்பா எதுவும் சொல்ல வில்லையா, அங்கிள்?'' என்று சிறு கோபத்துடன் வினவினாள் மாதவி. ''அவர் உங்கள் நண்பர்தானே?... வந்து அவருக்கும் எல்லாம் தெரியும்தானே? தெரிந்தும் எப்படிச் சும்மா இருந்தார்?''

''தெ...ரியும்! ஆனால், அப்போதுதான் அவரை எதிர்த்துப் பிடிவாதமாக மஞ்சுவை மணந்திருந்ததால், தந்தையோடு இன்னொரு தகராறுக்குத் தயக்கம் அவனுக்கு. அவன் குணத்துக்கு, அதுவே தீரச் செயல்! எப்படியும் அவன் ஒரே பிள்ளை! ஒரே வாரிசு! அதனால், எப்படியும் ஒரு காலத்தில், நிர்வாகத்தைத் தகப்பனார் தன்னிடம் தந்துதானே தீர வேண்டும்? அப்படி, அவர் ஒப்படைக்கும்போது, இந்தப் பத்திரத்தை ரத்துசெய்து விடுவதாகச் சொன்னான். ஆனால், அதற்கு முன்னர் அவன் ஆயுளே முடிந்து போகும் என்று யாருக்குத் தெரியும்?'' என்றார் சுந்தரம் வருத்தத்துடன்.

''ஆக, கூட்டிக் கழித்தால், நம் குடும்பத்துப் பங்குகளின் உரிமையும், இப்போது அந்தக் கிருபாகர் கையில்தான் இருக்கிறது என்கிறீர்கள்! அதுதானேப்பா?'' என்று சலிப்புடன் அலுத்துக் கொண்டான் கண்ணன்.

தீவிர சிந்தனையில் மூழ்கியிருந்தாள் மாதவி. "அப்படியில்லை, கண்ணன் அண்ணா!" என்றவள், சுந்தரத்திடம் திரும்பினாள். "உங்கள் ஒப்பந்தத்தின் ஷரத்துகளை எனக்கு இன்னொரு தரம் சொல்லுகிறீர்களா, அங்கிள்?" என்று கேட்டாள்.

"அதுதான் சொன்னேனேம்மா! இவன் கூறியது போல, எல்லாம் உன் க.....

அவசரமாகக் குறுக்கிட்டுப் பேசினாள் மாதவி. "ப்ளீஸ் அங்கிள்! தயவு பண்ணி, மீண்டும் ஒரு முறை சொல்லுங்களேன்!" என்றாள் கெஞ்சுதலாக.

என்ன பயன் என்பதுபோல, அவர் தயங்க, மனோகரி, தோழிக்காகப் பரிந்தாள்.

"மனித உறவுகளில், என் தோழி கொஞ்சம் முட்டாள் தான், அங்கிள்! ஆனால், மற்றப்படி அவள் கெட்டிக்காரி! அவளுக்கு ஏதோ யோசனை தோன்றிவிட்டது! அதனால்தான் கேட்கிறாள்! ப்ளீஸ், சொல்லுங்கள் அங்கிள்!" என்று, தன் பங்குக்குக் கேட்டுக் கொண்டாள்.

லேசாகத் தலையை அசைத்துவிட்டு, அவர் சொன்னார். "எனக்கோ, என் குடும்பத்தினருக்கோ, 'வெற்றி' நிறுவனத்தில் எத்தனை பங்குகள் இருந்தாலும், அவற்றின் ஓட்டளிக்கும் உரிமை, குமாரசாமிக்கும் அவருடைய வாரிசுகளுக்கும் மட்டும்தான். அதாவது, அவருடைய வாரிசாக நிறுவனத்தின் பொறுப்பை ஏற்கிறவர்களுக்கு! இன்றைய நிலையில், கிருபாகரனுக்கு!" என்று முடித்தார்.

விழிகள் பளபளக்கத் தலையாட்டினாள் மாதவி! "அவருடைய தந்தைக்குச் செய்த துரோகத்துக்குத் தாத்தா, தன்

உயிலாலேயே பிராயச்சித்தம் செய்துவிட்டதாகக் கிருபாகர் அன்று சொன்னார்! இப்போதும், கிட்டத்தட்ட அப்படித்தான், அங்கிள்! தாத்தா, தன் உயிலால் எனக்குச் செய்த தீமைக்கு, அவர் உங்களிடம் எழுதி வாங்கிக் கொண்ட பத்திரத்தின் மூலமாக, முன்கூட்டியே மாற்றம் செய்து வைத்துவிட்டார், எனலாம்! ஆனால், அங்கிள், அது பயன்பட வேண்டும் என்றால், நீங்கள் என்னை நம்ப வேண்டும்! முழுமையாக!'' என்றாள் பரபரப்போடு!

17

சூழ இருந்தோரில், குழந்தை தவிர, மற்ற நால்வர் முகங்களிலும் குழப்பம் கலந்த ஆர்வம் தெரிந்தது!

ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துவிட்டு, மற்றவருக்கும் அதே நிலையே என்று உணர்ந்து, மீண்டும் மாதவியைப் பார்த்தனர்.

மனதுக்குள் ஏதோ திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருந்தாள் போலும்! உடல் தவிர, அவள் அந்த அறையிலேயே இல்லை!

கண்கள் எங்கோ நிலைக்க, மூச்சு வேகம் எடுக்க, விரைப்புடன் உடம்பு நிமிர, தோழி, ஆளே மாறி விட்டது போன்ற உணர்வு மனோகரிக்கு!

எல்லோருமே வியந்து நோக்க, ''மது?'' என்று, அவள் தோளைத் தொட்டாள் அவள்.

''எ.. என்ன?'' என்று திகைத்தவள் கண் மூடித் திறந்து, 'என்ன அங்கிள், என்னை நம்புவீர்கள் அல்லவா? உங்கள் நம்பிக்கையில்தான் என் எதிர்காலமே இருக்கிறது!'' என்றாள்.

அவள் தவிப்பை அடக்கியபடி, பேசுவது புரிய, ''உன்னை நம்பாமல் என்னம்மா? என் கடந்த கால இனிய நண்பனுடைய மகள்! எங்கள் வருங்கால மருமகளுக்கு உயிர்த்தோழி! இதற்குமேல், உன்னை நம்ப, வேறு காரணம் வேண்டுமா? ஆனால், இந்த நம்பிக்கைப் பிரச்சினை, இப்போது எதற்காக எழுகிறது? அதை முதலில் சொல்லு!'' என்றார் சுந்தரம்.

''கோடிக் கணக்கான பணம் ஆயிற்றே, அங்கிள்! அந்தப் பங்குகளின் மதிப்பைச் சொன்னேன்!''

''மது, நீ முதலில் உன் திட்டத்தைச் சொல்லு! அது செயல்படுத்தப்படக் கூடியதா என்று, அங்கிள் சொல்லட்டும்!'' என்றாள் மனோகரி, பார்வையாலேயே தெம்பூட்டியபடி..

''சொல்லும்மா, மாதவி.''

எல்லோரும் கூர்ந்து கவனிக்க, மாதவி சொன்னாள்.

''வெற்றி' நிறுவனத்தின் நிர்வாகம், செயல்பாடு, கொள்கைகள் தொடர்பான முடிவுகளைப் பங்குதாரர்கள் எடுக்கும் சமயங்களில், உங்களிடம் இருக்கும் பங்குகளின் பேரில் ஓட்டளிக்கும் உரிமையை, நீங்கள் தாத்தாவுக்கு எழுதிக் கொடுத்திருக்கிறீர்கள்.''

பொறுமை யிழந்து, ''அறுக்காதே, மாதவி! மூன்றாவது தடவையாகக் கேட்பதற்கு, இந்த வசனம் அப்படி ஒன்றும் இனிமையாக இல்லை!'' என்று குறுக்கிட்டான் கண்ணன்.

''அவளை முழுசாகச் சொல்லவிடு, கண்ணா!''

கண்களில் சிறு இறைஞ்சுதலுடன் சுந்தரத்தைப் பார்த்துப் பேசலானாள் மாதவி. ''அங்கிள், உங்கள் பங்குகள் ஆயிரம்... லட்சக் கணக்கில் இருக்கும்போது, அவற்றின் உரிமையைத் தன்

வசம் வைத்துக் கொண்டிருக்கும் கிருபாகரனிடம், சேர்மன் என்கிற பதவியும், அதிகாரமும் இருக்கும்!''

''மாதவி, இதுவும் பழைய பாட்டுதான், மாதவியின் முற்பிறவி, கிளி ஜன்மம் என்று, நீ என்னிடம் சொன்னதே இல்லையே, மனு!''

''ஷ்!'' என்று, அவள் உதட்டில் விரல் வைத்துக் காட்ட, மறுபடியும் மாதவியைப் பார்த்தான் கண்ணன். அப்போது அவள் சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்கவும் அவனது கண்கள் அகன்றன.

''ஆனால், உங்களிடம் பத்தே பங்குகள் இருந்தால், அவைகளின் உரிமையால், அவருக்கு என்ன பயன்?''

கண்ணன் ''ஓஹோ!'' என்று வியக்க, அவனுடைய தந்தை புருவம் உயர்த்தி, அவனைப் பார்த்தார்!

''ஐயோ, உங்களுக்குப் புரியவில்லையாப்பா? ரொம்ப சிம்பிள்! உங்கள் பங்குகளை நீங்கள் விற்று விட்டால்? மாதவி சொன்ன பத்தே பங்குகளை வைத்துக் கொண்டு, மீதியை வேறு யாருக்காவது விற்று விட்டால்? நம் மாதவிக்கே விற்று விடலாம். அப்புறம், நீங்கள் குமாரசாமித் தாத்தாவுக்கு எழுதிக் கொடுத்த பத்திரத்துக்கு என்ன மதிப்பு? ஆகா! உன் நம்பிக்கை சமாசாரம், இங்கேதான் வருகிறதா, மாதவி? அந்தப் பங்குகளை உனக்கு விற்காமல், உன் பெயருக்குச் சும்மாவே மாற்றித் தர வேண்டும்? ம்... அதானே?''

அவள் சொல்லத் தயங்கிக் கொண்டு இருந்ததைக் கண்ணன் எளிதாகப் போட்டு உடைக்க, பார்வையாலேயே நன்றி சொன்னாள் மாதவி.

''போதுமானால், என்னிடம் இருக்கும் நகை, பணம் எல்லாவற்றையும் தந்து அந்தப் பங்குகளை வாங்கிவிடுவேன், அண்ணா! ஆனால், கடைசிக் காசு வரை தந்தாலும்கூட, பத்தில் ஒரு பங்கு கூடத் தேறாது போல இருக்கிறதே! அதுதான்...'' என்று மீண்டும் சுந்தரத்தைப் பார்த்தாள்.

எத்தனை பங்குகள், அவற்றின் விலை எவ்வளவு பணம் என்று அவளுக்கு இன்னமும் சரியாகத் தெரியாது! ஆனால், கோடிக் கணக்கில் இருக்கும் என்றதுமே, அவளுக்குத் தொண்டை உலர்ந்தது!

இவ்வளவு பெறுமானத்தை, அவளுக்குச் சும்மா தர வேண்டும் என்று, அவள் எப்படி எதிர் பார்க்கலாம்?

ஆனால், இது தவிர, கிருபாகரனைத் திருப்பியடிக்க, ஒரு வழியும் இல்லை!

ஆவலும் ஏக்கமும், கொஞ்சம் நிராசையுமாக, மாதவி சுந்தரத்தை நோக்க, ''அப்படிப் பார்க்காதேம்மா!'' என்றார் அவர். ''நான் இன்னமும், மனித நேயத்தை விடப் பணத்தைப் பெரிதாகக் கருதி நடக்கத் தொடங்கி விடவில்லை! ஆனால், என் பங்குகளை மட்டும் வைத்து, இன்றைய நிலையில் கிருபாகரை அசைக்க முடியாதும்மா! அதனால், ஓசைப்படாமல் வெளி மார்க்கெட்டில் இருக்கும் பங்குகளை வாங்கிச் சேர்ப்போம்! என்றைக்குத் தேவையான பங்குகள் நம், அதாவது, உன் கைக்கு வந்து சேர்கிறதோ, அப்போது, சட்டெனத் தாக்கி, அவனை அதிகாரத்திலிருந்து வீழ்த்தி விடுவோம்!''

''சரி, அங்கிள்!'' என்று ஆசுவாசப் பெருமூச்சு விட்டாள் மாதவி.

''ஆனால், அதற்குள் நீயும் பெரிய நிறுவனங்களை நிர்வகிப்பது பற்றிப் பயில வேண்டும், மாதவி! அதிகாரத்தைக்

கைப்பற்றுவது மட்டும் போதாது! அதைத் தக்க வைத்துக் கொண்டால்தான், அவனது வீழ்ச்சி முழுமையாகும்!'' என்றார் சுந்தரம்!

கண்கள் பனிக்கத் தலையாட்டினாள் மாதவி.

பங்குகளை வாங்குவதிலும் கவனம் தேவை என்றார், சுந்தரம்.

ஒரே இடத்தில், கம்பெனிப் பங்குகள் நிறைய வாங்கப்பட்டால், கிருபாகர் விழிப்படைந்து விடக் கூடுமாம்! அப்புறம், அவனும் அதே போல வாங்கத் தொடங்கி விட்டால், ஆபத்தாம்! எனவே, வேறு வேறு இடங்களில், சிறுகச் சிறுக வாங்கிச் சேர்க்க ஏற்பாடு செய்தார்!

அதுமட்டுமின்றி, மாதவிக்குத் தேவைப்பட்ட கல்வி பயிலவும் உதவி செய்தார்.

அங்கேயே, ஒரு சைக்கிள் பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையில், பகுதி நேரப் பயிற்சியும் அவளுக்குக் கிடைக்கச் செய்தார்.

குழந்தையைக் கவனிப்பதோடு, இவை யாவும் ஓர் ஒழுங்கு முறைக்குள் அடங்கியதும், மாதவி தன் அடுத்த பெரும் கடமையாக எண்ணியதைச் செயலாற்ற முனைந்தாள்.

மனோகரியிடம் பேசினாள்.

''மனோ, எனக்காக, நீ எவ்வளவோ தியாகங்கள் செய்து விட்டாய்! இதற்கே நான் எத்தனை பிறவிகளில் நன்றிக் கடன் செலுத்த வேண்டுமோ, தெரியவில்லை! தயவு பண்ணி, என்னை இன்னும் பெரிய கடன்காரியாக்காதே!'' என்று கேட்டுக் கொண்டாள்.

''என்ன திடீரென்று வசன மழை பொழிகிறது? என்ன விஷயம்?'' என்று கேலியாகக் கேட்டுவிட்டுக் குழந்தைக்குச் சொடக்குப் போட்டு விளையாடினாள் மனோகரி.

''எனக்காக, உன் திருமணத்தையே தள்ளிப் போடுகிறாயே!''

''அப்படியென்று யார் சொன்னது?''

''இன்னொருவர் சொல்ல வேணுமா? எனக்கே பார்க்கக் கண்ணில்லையா?''

''ஆமாமாம்! பயங்கர எக்ஸ்ரே கண்ணாயிற்றே! இந்த 'எக்ஸ்' கண் கொண்டு, அம்மா என்ன கண்டுபிடித்தீர்களாம்?''

''கண்ணன் திருமணத்துக்கு ஏங்குவதும், நீ தள்ளிப் போடுதும் தெரிய, எக்ஸ்ரே கண் தேவையில்லை! மனோ, ப்ளீஸ், விளையாட்டாகப் பேசி, நழுவப் பார்க்காதே! என் வாழ்வு ஒரு நிலைக்கு வந்துவிட்டது! இவனால் வாழ்க்கைக்கு ஓர் அர்த்தமும், கூடவே, எதிர்காலத்துக்கு ஒரு குறிக்கோளும் கிடைத்தாயிற்று! இனி, என்னைப் பற்றிய கவலையில்லாமல் நீ மகிழ்ச்சியோடு வாழ வேண்டும், மனோ! இல்லாவிட்டால், என் மனம் என்னைக் குடைந்து தள்ளிவிடும்!'' என்று ஆழ உணர்ந்து சொன்னாள் மாதவி.

தோழியின் குரலில் தீவிரத்தை உணர்ந்ததும், மனோகரி, கேலிப் பேச்சைக் கைவிட்டாள்.

''திருமணத்தைத் தள்ளிப் போடுவது நான் மட்டும் அல்ல மாதவி, சுந்தரம் அங்கிளும்தான்!'' என்று அவள் கூறவும் மாதவி திகைத்துப் போனாள்.

ஆனால், அவள் வாய் திறந்து பேசுமுன், ''பொறு. அவசரப்பட்டு அங்கிள் மேல் சந்தேகப்பட்டு விடாதே! அவர்

ஓர் உண்மையான வைரம்! அந்தக் குடும்பம் முழுவதுமே வைரங்கள்தான்! ஆனால், கண்ணனுக்கு இன்னும் கொஞ்சம் பட்டை தீட்ட அங்கிள் விரும்புகிறார்...'' என்று விவரித்தாள் மனோகரி.

கண்ணன் ரொம்பக் கெட்டிக்காரனே! மாதவியுடைய திட்டத்தை, மற்றவர்களுக்கு முன், அவன் கண்டுபிடித்ததே அதற்கு அத்தாட்சி! ஆனால், இன்னும் கொஞ்சம் பொறுமையும், தொழிலில் ஈடுபாடும் தேவை! அத்தோடு, சில நண்பர்களோடு சேர்ந்து, 'டெக்ஸ்டைல் மில்'லுக்குத் தேவையான நுணுக்கமான இயந்திரங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று நிறுவவும், சுந்தரத்துக்கு ஆசை. அவைகளை இறக்குமதி செய்வதால் நாட்டுக்கு அந்நியச் செலாவணி நஷ்டமாகிறதாம்! அதற்காக, ஜெர்மனியில் படிக்கவும், பயிற்சி எடுக்கவுமாக மகனுக்கு இரண்டு ஆண்டுகள் 'கோர்ஸ்' ஒன்று ஏற்பாடு செய்திருக்கிறார். மனதில் சலனமின்றிப் படிப்பை முடித்ததும் திருமணம் செய்யலாம் என்பது மாமன், மருமகளின் ஐடியா!

''கண்ணனைத் திருமணம் செய்து கொண்டு, நீயும் கூடப் போகலாமே, மனோ! இந்த, 'மனம், சலனம்' என்றெல்லாம் காரணம் சொல்லாதே! நீயோ, கண்ணனோ பொர்றுப்பற்றவர்கள் அல்ல! அங்கிளும் செலவுக்குப் பார்க்கிறவர் இல்லை!'' என்றாள் மாதவி.

''முதலில், இரண்டு வருஷப் பிரிவுக்குப் பிறகு, கண்ணன் எப்படி வருகிறார் என்று பார்ப்போம்!'' என்று கேலிக்குரலில் மனோகரி கூற, ''பல விதத்தில் சோதித்து விட்டேன் என்றாயே! இன்னமுமா நம்பிக்கை இல்லை?'' என்று, அவள் தோழி குறையோடு வினவினாள்.

விளையாட்டைக் கைவிட்டுவிட்டு, மனோகரி சொன்னாள். "தினம் தினம் பார்த்துக் கொண்டு உண்மையாக இருப்பது வேறு, மது! கண் மறைந்தால், கருத்து மறக்கிறதா என்று தெரிய வேண்டும்! அதற்காகவுமே, கண்ணன் தனியே சென்று வரட்டும் என்பது என் விருப்பம்!" என்றாள் தெளிவாக.

இந்த இரண்டு ஆண்டுப் பிரிவின் மூலம், கண்ணனின் அன்பின் உறுதியைத் தோழி தெளிவு படுத்திக்கொள்ள விரும்புகிறாள்!

கிருபாகரனிடம் அவள் பட்ட சூட்டின் எதிரொலி எங்கெல்லாம் தாக்குகிறது!

"கண்ணன் திருமணத்தை விரும்புகிறாரே, மனோ!"

"அவர் திரும்பி வருவதற்குள் என்னை யாராவது கொத்திக்கொண்டு போய் விடுவார்களாம்! அர்த்தம் புரிகிறதா? என் அன்பில், அவருக்கு முழு நம்பிக்கை இன்னமும் வரவில்லை! இருக்கட்டும், மது! இரண்டு ஆண்டுகள் கழித்துத் திரும்பி வரட்டும்! இந்தப் பிரிவின் முதிர்ச்சி, இருவருக்குமே தேவைதான். அதன் பிறகு, நடப்பது நல்லதாக இருக்கும் என்று நம்புவோம்!" என்று முடித்தாள் மனோகரி.

கண்ணனுக்கும் நாட்டுப் பற்று, பெற்றவரிடம் மரியாதை எல்லாம் இருந்ததால், நிச்சயதார்த்தமாக மோதிரம் மட்டும் மாற்றிக்கொண்டு, வெளிநாடு சென்றான்.

தன் படிப்பு பயிற்சிகளைச் செவ்வனே முடித்துக்கொண்டு, அவன் திரும்பி வந்தபோது, இங்கேயும் எல்லாமே சிறப்பாகவே நிறைவேறியிருந்தன.

படிப்பு முடிந்து நல்ல வருமானத்தைத் தந்த பெரிய வேலையில் அமர்ந்திருந்த மாதவி நன்றாகவே நிமிர்ந்திருந்தாள்.

எல்லோர் முகங்களிலும் நல்ல புன்னகையை மலரச் செய்ய, வற்றாத ஜீவ நதியாகக் குழந்தை நித்திலன் படு சுட்டியாக வளர்ந்தான்.

எல்லாவற்றையும் விட முக்கியமாக, கிருபாகரனைப் பதவியிறக்கத் தேவையான பங்குகளை நேரடியாகவும், மறைமுகமாகவும் சேகரித்திருந்தனர்!

18

சுந்தரத்தின் பங்குகளின் அதிகாரம் தன் கையில் இருக்கிறது என்ற அகந்தையில், குமாரசாமி செய்திருந்த சில செயல்கள், இப்போது மாதவிக்குச் சாதகம் ஆயின.

தன்னுடையதும், ரகுபதியிடம் அடித்ததுமான பங்குகளை ஓரளவு விற்று, அசையாச் சொத்தாக, நிறைய வளைத்துப் போட்டிருந்தார் அவர். 'ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்' போன்ற கட்டடங்கள், பெரிய வீடுகள், ஊட்டி, கொடைக்கானலில் பங்களாக்கள்... இந்த மாதிரி. இவற்றின் மூலம் வருமானம் நிறைய வந்த போதும், அந்த வருமானத்தை மாதவி தாம் தூம் என்று வீணாக்கி விடக்கூடாது என்று, அதற்கும் ஒரு கொக்கி போட்டு வைத்திருந்தார். மாதவியின் இருபத்தைந்தாவது பிறந்த நாளுக்குப் பிறகு, அவளும், அவளுடைய கணவரு மாகச் சேர்ந்துதான் அந்தப் பணத்தைத் தொட முடியும் என்றது, அவரது உயில்.

வாழ்க்கையே போயிற்று., இந்தச் சொத்தும் வருமானமும் என்ன மண்ணாங்கட்டி என்ற விரக்தி மாதவிக்கு முதலில் இருந்தது. ஆனால், இப்போது அந்த அசையாச் சொத்துக்களை வாங்கியதற்காகத் தன் பாட்டனாருக்கு நன்றி செலுத்தினாள்.

இவைகளை வாங்குவதற்காகத்தானே, அவர் சைக்கிள் நிறுவனப் பங்குகளை விற்றிருந்தார்! மாதவி வெளி மார்க்கெட்டில் அந்தப் பங்குகளை வாங்கவும், சேர்க்கவும், அதனால்தானே முடிந்தது!

நிறுவனத்தின் வருடாந்திரக் கூட்டமே ஒரு மாதத்தில் நடக்க இருந்ததால், அதிலேயே, தங்கள் வேலையைத் தொடங்கலாம் என்று, சுந்தரம் முடிவு செய்தார்.

தேவைப்பட்ட இருபது சதவிகிதப் பங்குதாரர்கள் கேட்பது போல, தலைமையை மாற்றக் கோரி, விண்ணப்பம் அனுப்பி வைத்தார்கள். கொஞ்ச நாட்களில், இன்னும் சிலது, எல்லாமே, வேறு வேறு ஊர்களில் உள்ள வேறு வேறு பெயர்களில்!

கிருபாகரனுக்குச் சந்தேகம் ஏற்படாதிருக்க வேண்டுமே!

சந்தேகம் ஏற்பட்டால், மாதவி குழுவினர் சேகரித்த பங்குகள் போக, பிரச்சினை எழும்போது இவர்கள் பக்கம் நிற்பதாகச் சொன்ன மற்றப் பங்குதாரர்களை அவன் கலைத்துவிடக் கூடும். மூன்றில் இரண்டு பங்கு மெஜாரிட்டி இல்லாவிட்டால், அவனைப் பதவியில் இருந்து விலக்குவது கடினம் என்று, சுந்தரம் எச்சரிக்கை செய்திருந்தார்!

வருடாந்தரக் கூட்டத்துக்கு இன்னும் ஒரு வாரம் இருக்கிறது என்கிற நிலை!

கோவையில், எல்லோருமே சுந்தரத்தின் வீட்டில்தான் பெரும்பகுதி நேரம் இருந்து, அடுத்து நடக்க வேண்டியது பற்றிக் கலந்து பேசினர்.

ஆண்டுக் கூட்டம் முடிந்த பின், மனோகரி, கண்ணன் திருமணத்தை என்ன மாதிரி நடத்துவது என்றும் ஆலோசிக்கப் பட்டது!

ஆனால், எல்லோர் மனதிலும், கம்பெனியின் வருடாந்திரக் கூட்டமே முக்கியமான நிகழ்ச்சியாக இருப்பதை உணர்ந்து, இந்தக் கூட்டம் முடிந்த பிறகு திருமணத்தைப் பற்றிப் பேசிக் கொள்ளலாம் என்று, கண்ணனே சொல்லி விட்டான்!

சென்னைப் பயணத்திற்குத் தேவையானவற்றை எடுத்து வைப் பதும், 'பிராக்ஸி' பேப்பர்களை எண்ணுவதும், எல்லாவற்றை யும் சரி பார்ப்பதும் என்று எல்லோரும் பரபரப்பாக இருந்த போது, சுந்தரத்தின் வீட்டு டெலிஃபோன் மணி அடித்தது.

ஃபோன் அருகில் இருந்தவள் மாதவி!

சுமார் இரண்டரை ஆண்டுகளாக வீட்டுப் பெண்ணாகப் பழகி விட்ட விதத்தில், சுந்தரத்தைப் பார்த்தபடி, ரிசீவரை எடுத்து, ''ஹல்லோ!'' என்றாள் அவள்.

அரைக் கண அமைதியின் பின், ''யார்? யார் பேசுவது?'' என்று பரபரத்தது, ஓர் ஆண் குரல்! கிருபாகரனின் குரல்!

ஒரு கணம் மாதவிக்குத் தூக்கி வாரிப் போட்டுவிட்டது எனலாம்!

மூன்று ஆண்டுகளுக்கும் மேலாகக் கேட்டிராத குரல் என்பதோடு, கணவன் தன்னை இனம் கண்டுகொண்டானோ என்ற கலக்கமும் சேர்ந்துகொள்ளத் திணறிப் போனாள்!

பேசாமல் சுந்தரத்திடம் கொடுத்து விடலாமா என்றுகூடத் தோன்றியது!

ஆனால், இதைக் கூடச் சமாளிக்க முடியாவிட்டால், திட்டமிட்ட பழி வாங்கலை, அவளால் எப்படி நடத்த முடியும்?

குரலில் ஓர் அழுத்தத்தை வரவழைத்துக் கொண்டு, ''ஹல்லோ சார், ஃபோன் செய்தது நீங்கள்? நீங்கள் யார்னு

சொல்லாமல், வீட்டிலே இருக்கிற பெண்களை யார் யார் என்று விசாரிக்கிறீர்களே! ரொம்ப மோசம்! ஃபோனிலே பேசிப் பழக்க வழக்கம் இல்லாதவரா? நீங்கள் எல்லாம் ஃபோன் கருவியை ஏன் சார் தொடுகிறீர்கள்?'' என்று சிடுசிடுத்தாள்.

அவளது குரலின் கடுமையில், ஹாலில் இருந்த எல்லோருமே திகைத்துத் திரும்பிப் பார்த்தனர்.

ரிசீவரின் வாயைப் பொத்திக் கொண்டு, ''அவர்! கிருபாகரன்!'' என்றாள் மாதவி மெல்லிய குரலில்!

அதற்குள், ''மிஸ்டர் சுந்தரத்திடம் பேச வேண்டும். அவரிடம் ஃபோனைக் கொடு!'' என்றான் கிருபாகரன் அதட்டலாக.

அதிகாரமா என்று புகைந்தாலும், வேண்டுமென்றே, ''கண்டவர்களோடு எல்லாம் பெரியவர் பேச மாட்டார்! நீங்கள் யார் என்று சொன்னால், பேசுகிறாரா என்று, போய்க் கேட்டு வந்து சொல்லுகிறேன்!'' என்றாள் அவள்.

அவனது பற்கள் நறநறத்த சத்தம், சங்கீதமாக அவள் காதில் விழுந்தது!

வேறு வழியின்றி, அவன் விவரம் சொல்ல, திருப்தியோடு கேட்டுவிட்டு, மெல்ல ரிசீவரைச் சுந்தரத்திடம் நீட்டினாள் மாதவி.

தொலைபேசிக் கருவியின் வாயைப் பொத்தும்படி சைகை செய்துவிட்டு, அவர் மகனிடம் திரும்பினார். ''அவன் இந்தக் கூட்டம் பற்றி நேராக ஏதாவது கேட்டால், என்னால் பதில் சொல்ல முடியாதும்மா! நீயே பார்!'' என்றார்.

ரிசீவரை வாங்கி, ''சாரி! அப்பா வெளியே சென்றது தெரியாமல், இந்த அட்டெண்டர் பெண் ஏதோ உளறி விட்டாள்,

நான் சுந்தரத்துடைய மகன்தான்! நான் உங்களுக்கு என்ன செய்யக் கூடும், சொல்லுங்கள்!'' என்று பதவிசாகப் பேசினான் கண்ணன்.

''நன்றி!'' என்றான் கிருபாகரன் நறுக்காக. '''வெற்றி' நிறுவனத்தின் வருடாந்தரக் கூட்டம் பற்றித் தெரியுமா?''

''கேள்விப்பட்டோம்! சுற்றறிக்கை வந்திருக்கிறதே!''

'''வெற்றி'யில், உங்கள் அப்பாவின் பங்குகள் பற்றித் தெரியுமா?''

''மில் தவிர, அப்பாவின் மற்றச் சொத்துகள் பற்றி, அப்பா என்னிடம் அதிகம் சொன்னதில்லையே!'' என்று, தந்தையைப் பார்த்து உதட்டைப் பிதுக்கினான் கண்ணன்.

''அந்தப் பங்குகள் கைவசம் இருக்கிறதா, விற்றிருக்கக் கூடுமா என்று மட்டும் எனக்குச் சொல்ல முடியுமா?''

''அதெல்லாம் தெரியாது என்றேனே!... என்னது? செல் நம்பரா? ஓய்வுக்கே வழியில்லாமல், ரொம்பத் தொல்லையாக இருக்கிறது என்று, அப்பா செல்லே வைத்துக் கொள்வது இல்லை!''

''சுந்தரம் சார் வந்ததும் பேசச் சொல்லுங்கள்.'' என்று கிருபாகர் கேட்டுக் கொண்டதற்கும், அவன் நேர்பதில் சொல்லவில்லை! ''அப்பா வெளியூர் செல்வதாகச் சொன்னார். சென்னைக்கு வருவதாகத்தான் ஏற்பாடு! அங்கேயே பேசிக் கொள்ளுங்களேன்...!'' என்றுரைத்துப் பேச்சை முடித்தான் கண்ணன்.

''தேறி விட்டாய்!'' என்றார் அவன் தந்தை, பெருமையுடன்!

எந்தத் தகவலும் தராமல், தரும்படியாகவும் வைத்துக் கொள்ளாமல் சமாளித்து விட்டானாம்!

'எப்படி?' என்பது போலக் கண்ணன் புருவம் உயர்த்திக் கேட்க, 'சூப்பர்!' என்பதாக மனோகரி சைகையால் பதில் தெரிவிக்க, அது ஒரு தனி நாடகம் நடக்க, அதைக் கண்டு கொள்ளாதது போல, மற்றவர்கள் காட்டிக் கொண்டனர்!

''கெட்டிக்காரன்! டக்கென்று சூட்சுமத்தைப் பிடித்து விட்டானே!'' என்று, கிருபாகரனையும், சுந்தரம் பாராட்டினார்.

''கெட்டிக்காரராக இருக்காவிட்டால், மாதவியை இந்தப் பாடு படுத்த முடியுமா?'' என்றாள் மனோகரி.

பொது சேவை வேலை ஒன்றை வைத்துக் கொண்டிருந்த யமுனா தவிர, மற்ற எல்லோருமாகக் கூட்டம் நடப்பதற்கு இரண்டு நாட்கள் முன்னதாகவே சென்னைக்குச் சென்றனர்.

சுந்தரத்துடைய நண்பர் ஒருவரின் விருந்தினர் விடுதியில் தான் தங்கியிருந்தனர்.

வசதியான பெரிய அப்பார்ட்மென்ட்! ஆயினும், ஏதேதோ எண்ணங்களால் அலைப்புண்ட மாதவிக்கு மூச்சு முட்டியது!

கோவிலுக்குப் போய் வருவதாகச் சொல்லி, நித்திலனை மனோகரியிடம் விட்டுவிட்டுக் கிளம்பினாள்.

ஷிர்டி சாய்பாபா கோவில், எப்போதுமே அவளுக்குப் பிடித்தமானது! அரிசி, பருப்பு கொண்டு போய்க் கொடுத்து விட்டு, சற்று நேரம் அமர்ந்து, அமைதியாகத் தியானம் செய்து விட்டு வருவாள்! பழைய பழக்கம்!

அன்றும் அதே போல, அரிசியும் பருப்பும் வாங்கி, அவைகளுக்கான பெரிய டப்பாக்களில் போட்டுவிட்டு,

தரிசனத்தின் பின், உட்புற மண்டபத்தில் தியானத்தையும் முடித்த பின்பு மனம் ஓரளவு இறுக்கம் தளர்ந்து இலகுவாகி விட்டது போல உணர்ந்தாள்.

பிரசாதமாக வெண் பொங்கலை வாங்கித் தின்று, கை கழுவியபோது, பழைய மாதவியாகவே உணர முடிந்தது!

பின்புறம் உள்ள பாதத்தைத் தொட்டு நெற்றியில் ஒற்றிக்கொண்டு கிளம்பியபோது, அவளது இதழ்களில், லேசாகப் புன்முறுவலின் சாயல்கூடத் தோன்றியிருந்தது!

அந்தப் புன்னகையுடனேயே கிளம்பினால், அடுத்த அடி எடுத்து வைக்க முடியாமல், மாதவி அப்படியே நின்று விட்டாள்.

ஏனெனில், ஒரு புறமாய் நின்று, பாபாவின் திருவுருவத்தை வெறித்துப் பார்த்தவாறு, சிலையென நின்றவன், கிருபாகரன்!

19

உள்ளே சென்று, பாபாவின் திருவுருவைத் தொட்டு வணங்கிச் செல்லும் கூட்டம் வலப்புறமாக நகர்ந்து சென்று கொண்டே இருந்தது!

ஆனால், கிருபாகரன் அந்த வரிசையில் செல்லவில்லை! இடப்புறமாக நின்றிருந்தான்! நல்லவேளை! உள்ளே செல்லும் அந்த வரிசையில் வந்திருந்தால், அவளைப் பார்த்திருப்பான்!

அவனுக்குப் பாதிப்பு இருக்குமோ, என்னவோ? ஆனால், கண்டு பேசினாலும், அன்றிக் கண்டும் காணாதது போலச் சென்றிருந்தாலும்கூட, அவளால் தாங்கியிருக்க முடியாது!

ஆனால், கிருபாகரன் இங்கே எங்கே வந்தான்? பாபாவின் முகத்தில் பதித்த பார்வை அசையவில்லையே! மானசீகமாக அவரிடம் என்ன சொல்லிக் கொண்டு இருக்கிறான்?

இது பக்தியா, வேஷமா?

'உனக்காக வருகிறேன்!' என்று முன்பும் இங்கே வந்தவன்தான்! காதல் கணவனாக அவளோடு கூடவே வந்தானே! நடித்தானே!

ஐயோ! அவன் கண்ணில் என்ன பளபளப்பு? கண்களை இறுக மூடுகிறான்! ஆனால், மூடிய இமைகளின் வழியே, கடவுளே, இரு பெரிய நீர்மணிகள்!

ஏன்? என்ன ஆயிற்று?

ஒரு வேளை, அவளுக்குச் செய்த அநியாயத்தினால், அடுத்து வந்த ஆசை மனைவி... இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாகக் காதலித்து மணந்த அந்த மனைவிக்குக் குழந்தை பிறக்கவில்லையா? பிறக்காது என்று ஆகி விட்டதோ? தப்புக்குத் தண்டனையோ என்ற கலக்கமோ? அல்லது, செய்த தப்பை எண்ணி மனம் உருகி மன்னிப்பை வேண்டும் கண்ணீரோ?

பரபரத்த மனதை ஆத்திரத்துடன் அடக்கினாள் மாதவி!

உயிர் நிலையிலேயே எட்டி உதைத்தவன்! அவளை ஒரு தூசுக்கும் கேவலமாய்த் தூக்கி எறிந்தவன்! வஞ்சகமாக அவளது சொத்தை அபகரித்தவன்! அவன் கண்ணில் ஒரு சொட்டு நீரைப் பார்க்குமுன் இப்படி இளகலாமா?

என்ன பைத்தியக்காரத்தனம்!

ஏன்? இதுவும் கூட, யாரையேனும் ஏய்ப்பதற்காக நடிக்கும் நாடகமாகவே இருக்கலாமே! அவன்தான் நன்றாக நடிப்பானே! படுக்கையில்கூட... சே!

அவன் கண்ணைத் திறந்து, எதிர்ப்புறமாகச் சற்றுத் திரும்பிப் பார்த்தால், அவளைக் கண்டு கொள்வான்!

எதற்கு வீண் தொல்லை?

அவன் கண் திறந்து பார்க்கும் முன்னரே சென்று விடுவது நல்லது! நல்ல வேளையாகக் கூட்டம் ஒன்றும் வருகிறது!

கூட்டத்தோடு வேகமாக நடந்தபோது, வழி தெரியாமல் பார்வை மங்கியபோதுதான், தன் கண்களிலும் நீர் அரும்பியிருந்ததை, மாதவி அறிந்தாள்.

தன் மீதே கோபம் கொண்டவளாக, விழி நீரைச் சுண்டி விட்டுக் கொண்டு, வேகமாக நடந்தாள் அவள்!

காரில் ஏறி உட்கார்ந்தவளுக்கு, யார் முகத்தையும் பார்க்கப் பிடிக்கவில்லை!

அவளிடம் அன்பு கொண்டவர்கள்! அவளுக்காகவே சொந்த வேலையைப் போட்டுவிட்டு வந்து, மண்டையை உடைத்துத் திட்டம் தீட்டிக் கொண்டிருப்பவர்கள்! அவர்கள் முகத்தைப் பார்த்துப் பேசக்கூட, அப்பேரது அவளால் முடியும்போலத் தோன்றவில்லை!

புயலடிக்கும் கடல் போல, உள்ளே ஒரே கொந்தளிப்பு!

யாரும் இல்லாத தனிமையான இடம் ஒன்று கிடைத்தால், அங்கே போய் ஒளிந்து கொள்ளலாம்!

கார் 'நாகேசுவரராவ் பூங்கா'வை ஒட்டிச் சென்று கொண் டிருந்தது!

பூங்கா வாயிலில் காரை நிறுத்தச் சொல்லி, ஓர் அரை மணி நேரத்தில் வருவதாக டிரைவரிடம் கூறிவிட்டு, மாதவி பூங்காவினுள் சென்றாள். பெரிய மரம் ஒன்றின் பின் சற்று மறைவாக அமர்ந்தாள்.

பெரிய மூச்சுகளை எடுத்து, தன்னைச் சமனப்படுத்திக் கொள்ள முனைந்தாள். நெஞ்சப் புயல் கொஞ்சம் அடங்கவும், பூங்காவின் பசிய மரம் செடிகளுடே சற்று நேரம் நடந்து விட்டுத் திரும்பிச் சென்றபோது, மாதவியின் முகம் பெருமளவு இயல்பாக இருந்தது!

அன்றிரவில், துயிலின் இடையே விழித்துக் கொண்ட மனோகரி, அடுத்த கட்டிலில் மகனைத் தொட்டபடி மாதவி உட்கார்ந்திருக்கக் கண்டாள்.

''நித்தி விழித்துக் கொண்டானா?'' என்று தணிந்த குரலில் அவள் கேட்டதற்கு, முதலில் மாதவி ஒன்றும் சொல்லவில்லை!

சிறு அமைதியின் பின், ''இன்று கிருபாகரனைப் பார்த்தேன், மனோ!'' என்றாள் மெல்லிய குரலில்,

''என்னது?'' என்று எழுந்து அமர்ந்தாள் மற்றவள். ''எங்கே பார்த்தாய்? அவளோடா? பேசினாயா? என்ன சொன்னார்?''

''சாய்பாபா கோவிலில், தனியாகக் கண் மூடி நின்று கொண்டிருந்தார். அவர் என்னைப் பார்க்கும் முன் வந்து விட்டேன்! ஆனால், கோழையைப் போல ஓடி வந்து விட்டேனோ என்று இருக்கிறது. மனோ... நான்... என்னால் முடியுமா?'' என்றாள் மாதவி கலக்கத்துடன்.

சற்று யோசித்துவிட்டு, ''ஒரு வகையில், நீ அவரைச் சந்தித்தது நல்லதுதான், மது!'' என்றாள் மற்றவள்.

மாதவி கேள்வியாய் நோக்கவும், ''மெய்யாகத்தான் சொன்னேன். அவரைப் பார்க்கும் முதல் அதிர்ச்சி, உனக்கு முடிந்து விட்டது! பதைப்போ, கலக்கமோ, எதுவானாலும், உன்னை அடுத்ததற்குத் தயார்ப்படுத்திக் கொள்ள முடியும்! ஆனால், கிருபாகரனுக்கு அப்படியில்லை! சற்றும் எதிர் பாராமல், திடுமென நீ அவர்முன், அவருக்கு மேலாக வந்து நிற்கும் போது, அப்படியே திகைத்துத் திணறப் போகிறார்! முன்பு உன்னை அற்பக் கொசுவாக நடத்தியதை எண்ணி, மனிதர் குன்றிக் குறுகப் போகிறார், பார்!'' என்றாள் மனோகரி, ஆத்திரத்துடன்!

கொசுவாகவா? கொசு கூடக் கடிக்குமே, ரத்தத்தை உறிஞ்சுமே என்ற எண்ணம் ஏற்படும். ஆனால், அந்த அளவுக்குக் கூட, அவளைக் கிருபாகரன் ஒரு பொருட்டாக மதிக்கவில்லையே! அவளை மட்டுமல்ல, அவன் பிள்ளையையும்! அவ்வளவு அலட்சியம்!

அந்தப் பாவத்துக்கு, அவன் பட்டுத்தானே தீர வேண்டும்?

அடுத்த நாள் வருடாந்தரக் கூட்டத்தின்போது, ஏசி அறையின் குளிருக்காகப் போர்த்தது போல, சால்வை கொண்டு, பாதி முகம் வரை மூடியபடிதான், கண்ணன் அருகே, மாதவி உட்கார்ந்திருந்தாள்! கண்ணன் அமர்ந்திருந்ததும், ஓரளவு அவளை மறைத்தாற்போலத்தான்!

அவனது ஏற்பாடுதான். கிருபாகரனின் அதிர்ச்சி, பரி பூரணமாக இருக்க வேண்டுமாம்!

வரவு செலவுக் கணக்கு, நிறுவனத்தின் விரிவாக்கங்கள், செயல்பாடுகள் வாசிக்கப்பட்டன.

தலைமைப் பீடத்தில் இருந்து, கிருபாகரன் நன்றாகச் செய்திருப்பதாகவே, மாதவிக்குத் தோன்றியது! அதிலும், பணப் புழக்கம் மிகக் குறைந்திருக்கும், இந்தச் சமயத்தில்!

இவனைக் கீழிறக்க உதவுவதாகக் கூறிய மற்றப் பங்குதாரர்கள், இந்தக் கணக்குகளைக் கேட்ட பிறகும், அப்படிச் செய்வார்களா என்று கலக்கம் வந்தது.

நிகழ்ச்சி நிரலின் கடைசி அயிட்டம், சேர்மனை மாற்றுவது!

அது பற்றிய விவாதம் எழுமுன்பே, தான் ராஜினாமா செய்வதாகவும், அடுத்த தலைவரை உடனேயே தேர்ந் தெடுக்கலாம் என்றும் கிருபாகரன் சொன்னான்.

வேறு யாரும் சரி வராது, நீயே இரு என்று கேட்பார்கள் என்று நினைத்திருப்பான் என்று, மாதவியின் காதில், கண்ணன் சொன்னான்.

சுந்தரம் எழுந்து, கிருபாகரன் தானாகவே பதவி விலகி யதைப் பாராட்டினார்!

''நிறுவனத்தின் அடுத்த தலைவராக, நம் மதிப்புக்குரிய ஸ்தாபகர் உயர்திரு குமாரசாமியுடைய பேத்தியும், வாரிசுமான செல்வி மாதவியின் பெயரை நான் முன் மொழிகிறேன்!'' என்றார் அவர்.

அவர் செய்திருந்த ஏற்பாட்டின்படி, யாரோ வழி மொழிந் தார்கள்!

அவளை எதிர்த்து யாரும் போட்டியிடாததால், அடுத்த தலைவராக மாதவி அறிவிக்கப்பட்டாள்!

திட்டமிட்டிருந்தபடி, சால்வையை இருக்கையில் வைத்துவிட்டு, ஒரு மகாராணியின் கம்பீரத்தோடு, மாதவி நிதானமாக மேடைக்கு நடந்து வருவதை, நம்ப இயலாத பிரமிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான் கிருபாகரன்!

நேரடியாக அவன் முகத்தைப் பாராதபோதும், அவளது பார்வை வட்டத்தினுள் கிருபாகரனின் விரைத்து நிமிர்ந்த தோற்றம் விழ, வெகு திருப்தியாக உணர்ந்தாள் மாதவி!

20

அன்றைய தினம் நிகழ்ந்த அத்தனையிலும், ஒன்றே ஒன்று மட்டும் மாதவிக்குப் பிடிக்கவில்லை!

தலைவராக இல்லாவிட்டாலும், கிருபாகரனின் சேவை, நிறுவனத்துக்கு மிகவும் தேவை என்று, அவனை நிர்வாக டைரக்டராகப் பணி புரியுமாறு எல்லோரும் கேட்டுக்கொள்ள, அவனும் அதை ஒத்துக் கொண்டு விட்டான்! அதுதான் அவளுக்குப் பிடிக்காமல் போன விஷயம்!

இதில், அவளுக்கு எரிச்சலூட்டியது என்னவெனில், சுந்தரமே அதை முன்னின்று நடத்தி வைத்ததுதான்!

முறைப்படி அவர் முன் மொழிய, ஆட்டு மந்தையாய், மற்றப் பங்குதாரர்கள் அத்தனை பேரும் தலையை உருட்டி விட்டார்கள்!

கிட்டத்தட்ட, அவளைத் தேர்ந்தெடுத்த மாதிரிதானே என்று, இயல்பான நேர்மை கொஞ்சம் இடித்தது! என்னதான் அவள் படித்தாள், பயிற்சி பெற்றாள் என்றாலும், அதெல்லாம் எத்தனை பேருக்குத் தெரியும்?

சுந்தரம் சொன்னார் என்றதும், அவளைச் சேர்மனாக ஏற்றுக் கொண்டு விட்டார்கள்!

அதேபோல, அப்போதுதான் பதவியிறங்கியவனையும், நிர்வாக டைரக்டர் ஆக்கிவிட்டார்கள்!

கட்டுச் சாத மூட்டைக்குள் பெருச்சாளியை வைத்துக் கட்டியது போல, அவனை இன்னமும் உள்ளே வைத்துக் கொண்டு இருக்கலாமா? அவனைத் தினமும் பார்த்துக் கொண்டு... அவளுக்கும்தான் எவ்வளவு சங்கடமாக இருக்கும்? அங்கிள் அதை யோசிக்கவில்லையே!

ஆனால், மனதை மற்றவர் முன் அதைக் காட்ட முடியாமல் அடக்கிக் கொண்டவள், முறைப்படியான நடவடிக்கைகள் எல்லாம் முடிந்து, விருந்தினர் இல்லத்துக்குத் திரும்பி வந்ததும், சுந்தரத்திடம் பாய்ந்தாள்.

அவர் எப்படி, கிருபாகரனை நிர்வாக டைரக்டராக முன் மொழியலாம்?

''எனக்கும் அது அவ்வளவாகப் பிடிக்கவில்லை, அப்பா!'' என்றான் கண்ணன்!

''பல காரணங்கள்!'' என்றார் சுந்தரம். ''ஒன்று, என்னதான் பயிற்சி எடுத்திருந்தாலும், மாதவி இந்த நிறுவனத்தின் நிர்வாகத்துக்குப் புதியவள். தலை முதல் கால் வரை நாடி பிடித்து வைத்திருக்கும் கிருபாகரனை அவசரப்பட்டு விரட்டுவது, நிறுவனத்துக்கு நல்லதில்லை! பெரிய அளவில் உள்ளே இருக்கும் நம் பணம் நஷ்டப்படக் கூடாது என்பதோடு, நமக்கு உதவி செய்த மற்றப் பங்குதாரர்களுக்கு நன்மை செய்யவும், நாம் கடமைப்பட்டிருக்கிறோம் அல்லவா? இன்றைய நிலையில், கிருபாகரன், இதே போல இன்னோர் இடத்தில் போய்ச் சேர்ந்தால், நம் நிறுவனம் பயங்கர அடி வாங்கிவிடும்!''

மாதவியால் மறுக்க முடியவில்லை.

அவள் பேசாதிருக்க, அவர் தொடர்ந்தார். ''அத்தோடு, பதவியை விட்டு இறக்கியபோதும், உன் தாத்தாவின் பைத்தியக்காரத்தனமான உயிலால், கிருபாகரன் பெற்ற பங்குகள் அவரிடமேதானே இருக்கின்றன! அதாவது, நமக்கு அடுத்த பெரிய பங்குதாரர் அவர். ஒரேயடியாக வெளி யேற்றுவது கடினம்!''

''காரணங்கள் பல என்றீர்களே, வேறென்ன?'' என்று இறங்கிவிட்ட குரலில், மாதவி வினவினாள்.

''கிருபாகரனை நீ பார்த்துப் பழக வேண்டும்! அவனைப் பார்ப்பது, உனக்கு எந்தவிதப் பாதிப்பையும் ஏற்படுத்த முடியாத அளவுக்கு, அவன் தோற்றம் உனக்குச் சர்வ சாதாரணம் ஆக வேண்டும்! அப்படி ஆனால்தான், உன்னால் இன்னொரு வாழ்வுக்குத் தயாராக முடியும்!''

''என்னது?''

''இன்னொரு வாழ்வு!'' என்றார் அவர், குரலில் அழுத்தத் துடன்! ''ஒரு கிருபாகரன் தகுதிற்றவனாகப் போனதினால், உன் வாழ்க்கை முடிந்து போகக் கூடாதும்மா!''

''வாழ்க்கை முடிந்து போவதா?'' தலையைச் சிலுப்பி, அவரைப் பார்த்தாள் மாதவி. ''என்ன அங்கிள், ஓர் ஆணோடு இருப்பதுதான் வாழ்க்கை, மற்றப்படி ஒரு பெண்ணுக்குத் தனியாக ஒன்றுமே இல்லை என்கிற பழங்காலம் மாதிரி, நீங்களும் பேசுகிறீர்கள்? இப்போது, நான் என்ன வாழாமலா இருக்கிறேன்? உண்கிறேன், உடுக்கிறேன்... நித்திலன் வேறு! நான் சந்தோஷமாகத்தானே இருக்கிறேன்?'' என்றாள் நிமிர்வுடன்.

''என்னைச் சொல்லிவிட்டு, நீயல்லவோ பழங்காலம் மாதிரிப் பேசுகிறாய்!''

"நானா?"

"நீயேதான். நீ சொன்ன உண்பதும், உடுப்பதும் எந்த வயதிலும் எல்லோரும் செய்வதுதானே? அந்தந்த வயதிற்கு உரியபடி வாழ்வதுதான் வாழ்க்கை என்பது! வாலிப வயதில், துணையோடு வாழ்வது, இயற்கையின் விதி! கிருபாகரனை விவாகரத்து பண்ணிவிட்டு, இன்னொரு துணையை ஏற்கிற வழியைப் பார் என்றால், எனக்கு என் மகன் போதும் என்று, பழம் பாடாவதியாய்ப் பிதற்றுகிறாயே!" என்று சுந்தரம் ஒரு போடு போடவும், மாதவிக்கு வாயடைத்துப் போயிற்று.

இன்னொரு துணை!

கிருபாகர் மாதிரி இன்னொருவனோடா? சீச்சீ!

ஆனால், சீச்சீ என்று சொல்லக் கூடாது! எத்தனையோ பேர் மறுமணம் செய்து வாழவில்லையா? அவர்களை மோசம் என்று நினைப்பதுகூடத் தவறாயிற்றே!

என்னவோ, அவளால் முடியாது! அவ்வளவுதான்!

ஆனால், இதை வாய் திறந்து சொன்னால், பழங்காலம் என்று ஒத்துக் கொள்வது போல ஆகும்!

யோசித்துவிட்டு, "இப்போதைக்கு, நம் நிறுவனத்தை நல்லபடியாக நடத்துவது தவிர, வேறு எதையும் நினைக்கக்கூட, எனக்கு நேரம் இல்லை, அங்கிள்! எனவே, இந்தப் பேச்சு இப்போது வேண்டாம்!" என்றவள், பேச்சு முடிந்தது என்று சொல்லாமல் சொல்பவள் போல, "என் நித்திக் கண்ணு என்ன செய்து கொண்டிருக்கிறது?" என்று, மனோகரியின் அருகே அமர்ந்து ஏதோ படத்துக்கு வண்ணம் தீட்டிக்கொண்டிருந்த மகனிடம் சென்றாள்.

நேரடியாகப் பதில் சொல்ல முடியாமல்தான், மாதவி பேச்சை மாற்றியது! ஆனால், அங்கிருந்த யாரும் அதைப் புரிந்து கொள்ள முடியாத முட்டாள்கள் அல்லவே! ஆயினும், அவளிடம் அன்பு கொண்டவர்கள் என்பதால், மேலும் அதையே பன்னிப் பன்னிப் பேசி அவளை வாட்ட மனமின்றி, அவள் போக்கில் விட்டனர்!

அவளைக் கண்டுகொண்டதின் அடையாளமாக, மற்ற மூவரின் முகங்களிலும் லேசாக விரிந்த புன்னகையில், மாதவியின் முகம் கன்றியது!

நித்திலனைப் பார்த்தபடி விடுதியில் தங்கியிருந்த மனோகரியிடம், கண்ணன் நடந்ததை விவரித்தான். ''பெரும்பாலும், நான் மிஸ்டர் கிருபாகரைப் பார்த்துக் கொண்டேதான் இருந்தேன், மனு. முதலில், தானே ராஜினாமா செய்வதாக அவர் சொன்னது, ஒரு நாடகம்தான்! தன்னை விட்டால் யார் என்கிற மிதப்பு நிச்சயமாக இருந்தது! மீண்டும் பொறுப்பேற்கும்படி தன் காலில்தான் விழுவார்கள் என்ற உறுதி அவருக்கு இருந்தது நன்றாகத் தெரிந்தது! இந்த நிலையில், மாதவியின் பெயரை அப்பா சொன்னதும், அப்படியே பிரமித்துப் போனார்! ஆனால், ஆத்திரம், ஆங்காரம், கோபம் எதுவும் இல்லை! அதிசயம்தான்! அது தப்பான திகைப்பு அல்ல! ஆரோக்கியமான ஆச்சரியம்! ஒரு வினாடி, மகிழ்ச்சி மாதிரிகூடத் தோன்றியது! நம்ப முடியாமல் உற்றுப் பார்த்தால், அதற்குள் உணர்ச்சி துடைத்த முகமாகிவிட்டது!''

''எல்லாம் நடிப்பு!'' என்றாள் மாதவி. ''இந்த விஷயத்தில், என் பெயர் எப்படியோ அரசல் புரசலாக, அவருக்குத் தெரிந்து விட்டிருக்கிறது! யாராவது கவனித்துப் பார்த்துக் கொண்டிருப்

பார்கள் என்ற ஊகத்தில், இப்படி நடித்திருக்கிறார்!'' என்றாள் தீர்மானமாக. ''அதிலெல்லாம் அந்த மாதிரி ஊகிப்பதில், அதற்கேற்ப நடப்பதில், உரியவாறு நடந்து மற்றவர் கண்ணில் மண்ணைத் தூவுவது வரையிலும், அவர் எவ்வளவு கெட்டிக்காரர் தெரியுமா?'' என்றாள் கசந்த குரலில்.

''எனக்கென்னவோ அவர் நடித்தது போலத் தோன்ற வில்லை...'' என்று, நிச்சயமற்று இழுத்தான் கண்ணன்.

''அவர் எந்த அளவுக்கு நடிப்பார் என்று உங்களுக்குத் தெரியாது. அண்ணா, ஒரு ரோபோ போல... என்ற மாதவி சட்டென எழுந்தாள். ''அவரைப் பற்றி, மனோவுக்கு நன்றாகத் தெரியும். அவளிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்! நான்... நான் மொட்டை மாடிக்குப் போய்க் கொஞ்ச நேரம் நடந்து விட்டு வருகிறேன்'' என்றவள், வேகமாக அறையை விட்டு வெளியேறிச் சென்றாள்.

இரக்கத்துடன் பார்த்துவிட்டு, ''கிருபாகர் பேச்சே மூச்சு முட்டுகிறது, மதுவுக்கு! தினமும், அவரைப் பார்த்து... பேசி, எப்படிச் சமாளிக்கப் போகிறாளோ?'' என்று மனோகரி கவலைப்பட்டாள்.

ஆனால், மாதவியின் மன நிலையை, உயிர்த் தோழியான அவள்கூட, முழுதாக அறிந்திருக்கவில்லை!

21

கிருபாகரனைப் பதவியை விட்டு இறக்கியாயிற்று! நிறுவனத்தைக் கைக்குள் கொண்டு வந்தாயிற்று! நினைத்ததைச் சாதித்தாயிற்று!

ஆனால், அந்த சந்தோஷத்தைக் கொண்டாட முடியாமல், நடைமுறைப் பிரச்சினைகளை மாதவி சமாளிக்க நேர்ந்தது!

முதல் பிரச்சினை, குடியிருக்க இடம்!

ரொம்பப் பெருந்தன்மை போல, விருப்பப்பட்டால் சொந்த வீட்டிலேயே தங்கிக் கொள்ளட்டும் என்றான் கிருபாகரன். அவன் வேண்டுமானால், வெளியே போய் விடுகிறானாம்!

அவள் வீட்டில் அவள் வசிப்பதற்கு, இவன் அனுமதி கொடுக்கிறானா என்று புகைந்த போதும், அந்த வீட்டில் காலடி எடுத்து வைக்க, மாதவிக்கு மனமில்லை! வேண்டாத நினைவுகள் வந்து வந்து கொல்லும்! எதற்கு வீண் வதை?

அடுத்து, மகனை அவன் கண்ணில் காட்டவும் கூடாதென எண்ணினாள்.

நித்திலனைப் பார்த்தால், அப்புறம் அவனை விட யாருக்கும் மனம் வராது! இவன் பார்த்துவிட்டால்?

எனவே, இதுவரை கிருபாகரனின் நிர்வாகத்தின் கீழ் இருந்து, அவனுக்குப் பழக்கப்பட்ட எந்த இடத்தில் தங்கவும், அவளுக்கு மனமில்லை! அங்கிருக்கும் பராமரிப்புப் பணியாளர்கள்கூட, 'உங்கள் பிள்ளை' என்று, அவனிடம் சொல்லலாமே!

நல்ல வேளையாக, இந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக, அவள் தொடாமல் சேர்ந்திருந்த அவளது கைச்செலவுப் பணமும், சேர்மனுக்குரிய அலவன்சும் இருக்கவே, வாடகைக்கு வீடு எடுத்து, அவளது விருப்பம் போல வசிக்க முடிந்தது!

ஒரு நல்ல 'கிரச்' தேடி, நித்திலனை அதில் விட்டுவிட்டு அழைத்து வர ஆள் ஏற்பாடு செய்தாள். கோவையிலேயே

பழகியிருந்ததால், இந்த நடைமுறை, இங்கே பிரச்சினையற்றுப் போயிற்று! பிள்ளையின் பால் முகமும் புத்திசாலித்தனமும், மற்றக் கவலைகளை மறக்கடித்தது!

முதலில் சில தினங்கள் மனோகரி கூட இருந்தாள்.

நிறுவனப் பிரச்சினை திட்டமிட்டபடி நிறைவேறிவிட, அடுத்து, மகனது திருமணத்தை விரைவாக நடத்துவதில், சுந்தரம் ஈடுபட்டார். மகனின் பொறுமையை அளவு மீறிச் சோதித்துவிடக் கூடாதில்லையா?

மருத மலை முருகன் சன்னிதானத்தில் எளிமையாகத் திருமணத்தை முடித்துவிட்டு, பெரிய அளவில் வரவேற்பு நடத்துவதாக ஏற்பாடு செய்தார்!

தேனிலவை முடித்துக் கொண்டு, புதுமணத் தம்பதியர் சென்னையிலேயே சில காலம் தங்குவதாகத் திட்டமிடப் பட்டது! கண்ணன் பயின்று வந்த தொழிற்சாலை சம்பந்தமான அரசு தொடர்பான வேலைகளைக் கவனிப்பதற்காக என்று காரணம் சொன்னாலும், மாதவியும், மனோகரியும் அதில் கண்டு கொண்டது வேறு!

சில விரட்ட முடியாத நெருங்கிய பணக்கார உறவினரின் சொல்லம்புகளில் இருந்து மனோகரியைக் காப்பதே, அடிப்படைக் காரணம் என்று ஊகித்து, "நீ சொன்னது போல, அங்கிள், ஆன்ட்டி இருவருமே வைரங்கள்தான், மனோ!" என்றாள் மாதவி.

"கண்ணனை விட்டு விட்டாயே! அப்பா, அம்மாவுக்குத் தப்பாமல் பிறந்தவராக்கும், என் கண்ணன்!" என்றாள் மனோகரி! "அசல் புளு ஜாகர்!"

''அதுதான் கோத்துக் கழுத்திலேயே மாட்டிக் கொண்டா யாக்கும்!'' என்று கண்ணனின் படம் பதித்து, மனோகரி கழுத்தில் அணிந்திருந்த சங்கிலியைத் தொட்டுக் காட்டிச் சிரித்தாள் மாதவி!

கூடச் சேர்ந்து சிரித்த மனோகரியின் முகம் உடனேயே மாறிப் போயிற்று!

என்ன என்பது போலப் பார்த்த மாதவியிடம், ''கிருபாகரும் இப்படி நல்லவராக இருந்திருந்தால், எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்!'' என்றாள் வருத்தத்துடன்.

புன்னகை மறையாமல் பிடிவாதமாய்க் காத்து, '''தண்ணீரில் விழுந்தவர்கள் புன்னகை மலர நீந்துங்கள். தரை மீது விழுந்தவர்கள் நில்லுங்கள்' என்று, கண்ணதாசன் பாட்டு கேட்டிருக்கிறாயா, மனோ? நான் தண்ணீரில் விழுந்தவள். நீந்தவும் கற்றுக்கொண்டு விட்டேன்! இல்லை என்று முடிந்து, நானே மறந்து விட்டதை நினைத்து, நீ ஏன் மனதைக் கெடுத்துக் கொள்கிறாய்? அதுவும், இந்த சந்தோஷமான நேரத்தில்! ஏதோ, அவரால், இந்த முத்து எனக்குக் கிடைத்திருக்கிறதே! அதுவே பெரிது! அதற்கு மேல் அவரை நினைக்க வேண்டாம், விட்டுவிடு!'' என்று, உறங்கும் மகனைப் பார்த்தாள் மாதவி.

''நெஞ்சைத் தொட்டுச் சொல்! நிஜமாக மறந்து விட்டாயா? தினமும் பார்க்கிறாயே! வேறு நினைவு வரவே இல்லையா?'' என்று தோழியிடம் கேட்க, மனோகரிக்கு ஆசைதான். ஆனால், நீறு பூத்த நெருப்பா, வெறும் சாம்பல்தானா என்று தெரியாமல், கிளறி நோகடித்து விடக்கூடாதே என்று, அமைதி காத்தாள் அவள்!

ஏனெனில், மாதவி, அவளாகக் கிருபாகரனைப் பற்றி, இப்போது எதுவும் சொல்வதே இல்லை! சொல்ல ஒன்றும் இல்லையா? அல்லது, சொல்ல மனமில்லையா?

மனோகரி இரண்டாவதாக நினைத்ததுதான் சரி! மாதவிக்குத் தோழியிடம் தன் துன்பங்கள் எதையும் இப்போது சொல்லப் பிடிக்கவில்லை!

விரைவிலே மணமாகப் போகிறவள்! காதல் மணம்! அதுவும் காத்திருந்து கனிகிற நேரம்! எத்தனையோ இனிய கனவுகளில், இன்பமாகத் திளைக்க வேண்டியவள் மனோகரி! அந்த இன்பத்தில் ஒரு சிறு குறை நேர விடவும், மாதவிக்கு மனமில்லை! அதனாலேயே, நடப்பது எதையும் தோழிக்குச் சொல்லாமல் மறைத்தாள்!

முதலாவதாகப் பிள்ளையைப் பற்றிக் கிருபாகரன் விசாரித்தது!

அவனுக்கு ஆர்வம் இருக்கும் என்று, மாதவி கொஞ்சமும் எண்ணவில்லை! ஆனால், அசிரத்தையாகக் கூட, மகனைப் பற்றி அவன் பேசுவதை, அவள் சற்றும் விரும்பவில்லை!

ஏனெனில், பிள்ளையையே ஒரு கருவியாகப் பயன் படுத்தியவனுக்கு, அந்தப் பிள்ளையைப் பற்றி நினைக்கக்கூட உரிமை இல்லை என்பது, அவள் கருத்து! அவன் நினைப் பானா இல்லையா என்பது வேறு விஷயம்! ஆனால், மனிதப் பிறவி எடுத்த ஒருவனுக்குத் தன் குழந்தையைப் பற்றி நினைப்புக் கூடவா இல்லாமல் போகும். ஒரு வேளை கேட்டு விட்டால்?

எனவே, தனிப்பட்ட பேச்சுகளுக்கே இடம் தராத வண்ணம், கிருபாகரனோடு பேசும்போது, கூட யாரேனும் இருக்கும்படி பார்த்துக் கொண்டாள் அவள்!

பெரும்பாலும் மாட்டிக் கொண்டவர், பொது நிர்வாகிதான்!

"என்ன முடிவெடுத்தாலும், செயல்படுத்துவதில் ஜிளம்மின் பொறுப்புதானே அதிகம். அவருக்கு ஒரு தடவை சொல்வதை விட, அவரும் கூடவே இருக்கட்டும்," என்று மாதவி முதலிலேயே சொல்லி விட்டாள். அதுவும், அலுவலர்கள் அத்தனை பேரும் இருந்த பொதுக் கூட்டத்தில்!

தனிப்படக் கிருபாகரனைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை! ஆனால், யார் எது பற்றிப் பேச வேண்டுமானாலும், மறு அறிவிப்பு தரும்வரை, ஜிளம் மூலமாக, அல்லது அவரை அழைத்துக்கொண்டு வருமாறு கூறிவிட்டாள்!

திகைத்து நோக்கிய அவரிடமும், "நான் எல்லோரையும் நேரில் சந்தித்துக்கொண்டு இருக்க முடியாதில்லையா? முதல் வடிகட்டுதலை நீங்கள் செய்துவிட்டால், எனக்கு வேலை எளிதாக இருக்கும்! அத்தோடு, இந்த அலுவலகத்துக்கு நான் புதியவள்! தாத்தா காலத்தில் இருந்து பொறுப்பான பணி புரிகிறவர் என்பதால், உங்களை நான் நம்ப முடியும்!" என்று ஒரு விதமான விளக்கமும் கொடுக்க, அவரும் புரிந்து கொண்டு தலையாட்டி வைத்தார்!

முக்கியமான இருவரின் உறவு முறை அறிந்தவர்! பின்னர் பிரிவும், கிருபாகரன் பொறுப்பேற்றதும்கூட, ஊர் அறிந்த ரகசியமே! இவர்கள் மோதலில், தன் தலை உருண்டு விடக் கூடாது என்பதில் மட்டும், அவர் மிகக் கவனமாக இருந்தார்!

.முதுகில் ஊசி துளைப்பது போல இருந்தாலும், மற்றவரின் பார்வை தொடர்வதையோ, பேச்சுத் தொனி கிசுகிசுப்பதையோ அறியாதது போலவே அந்த இருவரும் அவரவர் வேலையைப் பார்க்க, எல்லோருக்குமே சப்பென்றாகி, அவர்களும் அவரவர் வேலையைப் பார்க்கலாயினர்.

இந்நிலையில், ஒரு நாள் பொது நிர்வாகி விடுமுறை எடுத்தார்! உடம்பு சரியில்லையாம்.

சைக்கிளில் புது மாதிரி இருக்கை அமைப்பது, அதை விளம்பரப்படுத்துவது பற்றி மாதவியோடு பேசி முடித்து, குறிப்புகளை டைப் பண்ணி எடுத்து வருமாறு ஸ்டெனோவை அனுப்பிவிட்டு, மாதவியின் அறையிலேயே கிருபாகரன் காத்திருந்தான்!

ரொம்ப முக்கியம்போல, மற்ற ஃபைல்களை எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் மாதவி.

திடுமென, "என்ன குழந்தை?" என்று கேட்டான் கிருபாகரன்.

காதே கேளாதவள் போன்று, தன் போக்கில் ஃபைல்களை நகர்த்திக் கொண்டிருந்தாள் மாதவி.

"உன்னைத்தான் கேட்கிறேன், மாதவி. குழந்தை ஆணா, பெண்ணா? எப்படி இருக்கிறது? 'ஃப்ரீ ஸ்கூல்' எதிலாவது சேர்த்திருக்கிறாயா?"

எத்தனையோ முறை, மனதில் ஒத்திகை பார்த்ததுதானே?

நிமிர்ந்து நோக்கி, "ஏன் கேட்கிறீர்கள்?" என்று நிதானமாக வினவினாள் அவள்!

"மாதவி, குழந்தையைப் பற்றி, நான்... என்று ஏதோ சொல்லத் தொடங்கியவனை இடையிட்டு, "அதைத்தான் ஏன் கேட்கிறீர்கள் என்று கேட்டேன்?" என்றாள் அவள்.

தொடர்ந்து, "எதற்காகக் கேட்க வேண்டும்? எதற்காக அது உருவானதோ... இல்லையில்லை, எதற்காக அது உருவாக்கப் பட்டதோ, அது கிடைத்த பிறகும், ஏன்?... புரியவில்லை?

தொழிற்சாலையில், அந்தப் பங்குகள்! அவை உங்களிடம் தானே இருக்கின்றன? வேண்டிய விளைவு கிடைத்துவிட்ட பின், அதற்கான கருவியைப் பற்றி விசாரிப்பார்களா? ஓர் உயிரை எடுக்க, துப்பாக்கிக் குண்டு தேவையாக இருக்கலாம்! அதற்காகக் குண்டைக் கவனமாகச் செய்வது, நியாயமே! ஆனால், குறி தவறாமல் சுட்டு வீழ்த்திய பிறகு, குண்டைப் பற்றிக் கவலைப்படுவார்களா? அசட்டுத் தனமாகத் தெரி கிறதே! அசட்டுத் தனத்தையெல்லாம், பெண்களுக்கு... அதிலும் முக்கியமாக எனக்குத்தானே, மொத்தக் குத்தகை விட்டிருந் தீர்கள்! இருந்திருந்து, அதிலுமா பங்குக்கு வருவது? கேவலமாக இல்லை?'' என்று அவன் குறுக்கிட இடமே கொடாமல், ஏளனம், எகத்தாளம் எல்லாம் விரவிப் பேசி முடித்தாள் மாதவி.

கிருபாகரனின் முகம் இறுகிக் கருகுவதைக் கண்டு ரசித்தபடி! வாய்ப்புக் கிடைத்தால் விடலாமா?

22

மாதவி பேசிய பேச்சுக்கு, சாதாரண மனிதன் என்றால், அதற்கு மேல், அவள் முகத்தை நிமிர்ந்து பார்க்க முடியாமல், எங்காவது ஓடிப் போயிருப்பான்!

ஆனால், முகம் கன்றிக் கறுத்தபோதும், கிருபாகரன் இருந்த இடத்தை விட்டுச் சற்றும் அசைந்தானில்லை!

உள்ளே பொங்கிய சினத்தைக் கட்டுப் படுத்திக் கொண்டிருந்தானோ, என்னவோ, இறுகிப் போய் அமர்ந் திருந்தான் அவன்! ஆனால், அமர்ந்திருந்தான்!

பின்னே விடுவானோ? அரும்பாடு பட்டு அடைந்த இடம் ஆயிற்றே! விட்டுவிட்டு ஓட முடியுமா?

குத்திக் குதறுவதற்கு அவள் காத்திருக்க, அவன் அவளுக்கு இன்னொரு வாய்ப்பைக் கொடுத்தான்!

சற்று இறுக்கம் தளர்ந்ததும், ''உன் கோபம் எனக்குப் புரிகிறது, மாதவி!'' என்று மீண்டும் தொடங்கினான்.

அவள் பாய்ந்தாள்.

''ஓஹோ! கோபம் இருக்கும் என்று தெரிந்துதான் பேசுகிறீர்களா. தெரிந்து... அதைத் தணிப்பதற்கான முயற்சியா? சேர்மன் ஆகி விட்டதால், எனக்கு உவப்பாக இருக்கும் என்று எண்ணி, என் குழந்தையைப் பற்றி விசாரிக்கிறீர்களோ? அடடா! எனக்கு உவப்பாகவே இல்லையே! அதிலும், நீங்கள் விசாரிப்பது, ரொம்பவும் எதிர்மறைப் பயனாகி விடக்கூடும்! அதனால், கொஞ்சம் கவனத்துடனேயே நடந்து கொள்ளுங்கள்!'' என்று மீண்டும் எடுத்தெறிந்தே பேசினாள்.

அவளை வெறித்து நோக்கிவிட்டு, ''கவனத்துடன் நடந்து கொள்வதால்தான், இப்படி அடுத்தவர் அறியாமல் உன்னிடம் கேட்டுக் கொண்டிருக்கிறேன், மாதவி! மற்றப்படி, உன் வீட்டுக்கே வந்து, குழந்தையைப் பார்க்க எனக்கு எவ்வளவு நேரமாகும்?'' என்று, வறண்ட குரலில் கேட்டான் கிருபாகரன்.

''ஓ! அப்படி ஓர் எண்ணம் வேறு, உங்களுக்கு இருக்கிறதா? உங்கள் இஷ்டம்! செய்து பாருங்கள்! ஆனால், வீட்டு வாட்ச்மேனால் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளப்படும் அவமானத்தையும் அனுபவித்தே ஆக வேண்டும் என்ற ஆசையிருந்தால், தாராளமாக முயற்சி செய்யுங்கள்! என்ன? புரியவில்லையா? நான் அடையாளம் காட்டி வைத்திருக்கும்

ஒரு சிலர் தவிர யார் வந்தாலும், தயவு தாட்சணியம் பாராமல், கழுத்தைப் பிடித்து வெளியே தள்ள வேண்டும் என்பது, என் வீட்டுக் காவலாளிக்கு நான் இட்டிருக்கும் கட்டளை! சந்தேகமாக இருந்தால், நேரடியாக வந்து பரிசோதனை செய்து பார்த்துக் கொள்ளுங்கள்!'' என்றாள் அவள் மீண்டும் எகத்தாளமாகவே!

விழியிடுங்க, அவளைக் கூர்ந்து பார்த்தான் கிருபாகரன்!

''அப்படியானால், நம் குழந்தையைப் பார்க்க ஆசைப்பட்டு, நான் அங்கே வருவேன் என்று, நீ எதிர்பார்த்திருக்கிறாய்! அப்படித்தானே?''

ஒரு கணம் தூக்கிவாரிப் போட்ட போதும், உடனே சமாளித்து, ''பின்னே இருக்காதா?'' என்றாள் அவள். ''இந்த நிறுவனத்தின் பங்குகளுக்காக, ஒரு குழந்தையை உருவாக்கியவர், கைவிட்டுப் போன சேர்மன் பதவிக்காக, அதே பிள்ளையைக் கடத்தி பிளாக்மெயில் பண்ண மாட்டீர்கள் என்று, என்ன நிச்சயம்?'' என்று குத்தலாகவே கேட்டுச் சமாளித்தாள். ''நீங்கள்தான், ஒன்று வேண்டும் என்றால், எந்த அளவுக்கும் இறங்கி, என்ன வேண்டுமானாலும் செய்வீர்களே!''

என்ன பதில் சொல்வான்?

இல்லையென்று மறுக்க முடியாதே!

பதில் சொல்ல முடியாமல் திகைத்த அவனுக்கு நல்ல வேளையோ, அன்றி, அடுத்து என்ன கேட்டு விடுவானோ என்று உள்ளூரக் கலங்கிக் கொண்டிருந்த மாதவியின் நல்ல நேரமோ, டைப் அடித்த காகிதங்களை எடுத்துக் கொண்டு, ஸ்டெனோ உள்ளே வந்தாள்.

மேற்கொண்டு, வேலை மட்டும் நடந்தது.

இந்தச் சம்பவத்தை, மாதவி தன் தோழியிடம் மூச்சுக் கூட விடவில்லை!

இது மட்டுமல்ல! மறுநாள், தன் பங்குப் பத்திரங்களை எடுத்து வந்து, ''இந்தா வைத்துக்கொள். கூடவே, இவை அத்தனையையும் உன் பேரில் மாற்றிவிடச் சம்மதித்துக் கடிதமும் எழுதி வைத்திருக்கிறேன். பயன் படுத்திக்கொள்!'' என்று கிருபாகரன், அவள் முன் வைத்ததையும்!

ஒரு மாதிரி உலுக்கி விட்டபோதும், புதிய மாதவி உடனே யோசித்தாள்.

இவைகளின் விலையாகக் கிருபாகரன் கேட்கப் போவது, மகனையா? ஆனால், ஏன்? புரியாத விசித்திரமாகத் தோன்றியது!

எது எப்படியாயினும், இவன் நிழல்கூட, மகன் மீது படக்கூடாது என்பதில் மாதவி உறுதியாக இருந்தாள்.

எனவே, அந்தப் பத்திரங்களை அவன் புறமே தள்ளி விட்டாள். ''இதற்கு என்ன அர்த்தம்? இதே போல, என் பங்குகளை நானும் உங்களுக்கு எழுதித் தர வேண்டும் என்பதா? மன்னிக்க வேண்டும்! குறிப்புக் காட்டுமுன், உங்கள் விருப்பத்தை நிறைவேற்றி வைக்க, நான் முன்னைப் போல முட்டாள் அல்ல! அதனால், உங்களுடையதை எடுத்துப் போங்கள்! பெரும் தியாகங்கள் செய்து பெற்றவை ஆயிற்றே! எனக்கு வேண்டாம்! தேவையுமில்லை!''

கண் மூடித் திறந்து, ''உன்னிடம் எப்படி எடுத்துச் சொல்லிப் புரிய வைப்பது என்றே புரியவில்லை!'' என்றான் கிருபாகரன்.

விடுவாளா? வெகுவாக அதிசயப்பட்டாள். ''என்னது? நீங்களா இப்படிச் சொன்னீர்கள்? ஒருவேளை, உலகம் மாற்றிச் சுற்றத் தொடங்கி விட்டதா?''

அவன் பேசாதிருந்த போதும், அவளுக்கு விட மனம் வரவில்லை!

''என்ன? நான் சொன்னதும் உங்களுக்குப் புரிய வில்லையா?' மலை விழுங்கி மகாதேவனுக்குக் கதவும் ஓர் அப்பளமாம்!' என்று ஒரு பழமொழி உண்டாமே! அதைப்போல, இதைவிடப் பெரிய, மகாப் பெரிய விஷயங் களை எல்லாம், குரலில் ஒரு பிசிர் தட்டாமல், ஒரு சொல் பிசகாமல், தெள்ளத் தெளிவாக உச்சந் தலையில் ஆணி அறைந்தாற்போலச் சரியான வார்த்தைப் பிரயோகம் செய்து விளக்குகிறவர் ஆயிற்றே! இப்போதென்ன திடீர் சிரமம்? தமிழ் மறந்து விட்டதா? அல்லது, தொண்டைதான் அடைத்துப் போயிற்றா?''

''அன்றைய தவறை நினைத்து, நான் வருந்தாத நாள் இல்லை, மாதவி!''

மா... தவியா? 'மது'கூட, ஏற்ற பாத்திரத்தின் ஒரு பகுதிதானே!

''திருத்திக் கொள்ளுங்கள், தயவு செய்து!'' என்றாள் மாதவி ஆத்திரம் கொப்பளிக்க! தெரியாமல் செய்து விட்ட பிழைக்குத்தான் தவறு என்று பெயர்! நீங்கள் செய்தது, தெரிந்தே செய்த தப்பு! நீங்கள் செய்தது தப் பென்று உங்களுக்குத் தெரியாது? நம்பிய பெண்ணின் வாழ்வை அழிப்பது, எவ்வளவு சாதாரணமாக இருந்தது, அப்போது!''

''அப்பாவுக்குக் கொடுத்த வாக்கு மட்டும்தான், அப்போது பெரிதாகத் தோன்றியது! அப்பாவின் கடைசி ஆசை...''

''இப்போது மட்டும், அது மாறுவானேன்?'' என்று கேட்டவள், நிமிர்ந்து அவனை ஒரு கூர்வாள் பார்வை பார்த்தாள். ''ஒரு வேளை, அவர் உங்கள் தந்தையே அல்லவா? உங்கள் அம்மா உங்களை, வேறு...

மேலே சொல்லக் கூசி, அவளாகவே நிறுத்திய போது, ''ஏய்... என்ற கூச்சலுடன் அவன் கையை ஓங்கி யிருந்தான்.

ஆனால், அவள் அச்சமற்று நோக்கவும், கிருபாகரின் கை தானாகக் கீழே இறங்கியது! ஏதோ நினைவில், அவன் முகத்தில் வருத்தம் படர்ந்தது! ''தவறான நடத்தை உள்ளவளைச் சொன்னால்கூட, ஒரு பெண்ணின் மேல், அபவாதம் சொல்லக் கூடாது என்பாயே! எப்படி மாறிவிட்டாய்!'' என்றான் வேதனைக் குரலில்.

மாற்றம் ஏன் நிகழ்ந்தது?

இப்படிச் சொன்னோமே என்ற கழிவிரக்கம் மாறி, ''பாடம் படித்தது யாரிடம்?'' என்றாள் மாதவி எகத்தாளமாக. ''பிரமாதமான நிர்வாகத் திறமை உண்டு என்று சொல்லுகிறார்களே, அதே சாட்சாத் உங்களிடம் அல்லவா?''

''மாதவி, அன்று என் லட்சியம்...

''லட்சியமா? ஒரு பெண்ணின் உளமார்ந்த அன்பு, அவளது எதிர்காலம், குடும்பம், குழந்தை... எல்லாமே, அலட்சியமாக இருந்ததே! நீயும் உன் குழந்தையும் எனக்கு வெறும் கருவிகள்

மாத்திரமே... இன்னொருத்தி மீதுதான் காதல் என்று கூசாமல் சொல்ல முடிந்ததே! ஒப்பிட்டுப் பார்த்தால், நான் அப்படியென்ன பிரமாதமாகச் சொல்லி விட்டேன்? என் பேச்சால், யாருக்கேனும் கெடுதல் உண்டா? அந்த வகையில், உங்களிடம் நான் இன்னமும் பாடம் கற்றாக வேண்டும் போல அல்லவா தெரிகிறது?''

கிருபாகரன் பேச்சிழந்து நிற்கையில், 'பழி பழி' என்று மாதவியின் மனம் கொக்கரித்துக் கூத்தாடியது.

நேரடிப் பேச்சை விரும்பாமல், துணையை வைத்துக் கொண்டே பேசியவளுக்குப் பொது நிர்வாகி இன்றும் வராதது, வசதியாகவே தோன்றியது! எல்லாவற்றையும் பேசித் தீர்த்து விடலாம் அல்லவா?

பதிலுக்குப் பதில்! சந்திர குப்த மௌரியரின் சட்டத்தைப் போலக் 'கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்!'

கைகள் தன் போக்கில் மேஜை மீதிருந்த ஃபைல்களைச் சீராக அடுக்கி வைத்தன.

கண்களை வேலையில் பதித்தபடி கேட்டாள். ''எல்லாம்தான் உங்கள் லட்சியத்துக்கு ஏற்றபடி நடந்ததே! அப்புறம், இந்தக் கருவிகளைப் பற்றி என்ன வந்தது? ஒரு வேளை, உங்கள் அந்த... அவளுக்குக் குழந்தை இல்லையா? பிறக்கவே பிறக்காதோ? அல்லது, உங்களுக்குத்தான் அடுத்த பிள்ளை பெற முடியாமல், ஏதேனும் ஆகிவிட்டதா?'' என்று, குரூரத்துடன் கேட்டாள்.

''நான் அவளை மணக்கவில்லை!'' என்றான் அவன் சுருக்கமாக,

ஒரு கணம், உலகம் அசைவற்று நின்றுவிட்ட உணர்ச்சி மாதவிக்கு! அவ்வளவு அதிர்ச்சி!

எத்தனை முறை.. எத்..த்தனை முறை, கிருபாகரனை முகமறியாத இன்னொருத்தியோடு சேர்த்துக் கற்பனை செய்து நொந்திருக்கிறாள்! நொந்து துடித்திருக்கிறாள்! எவ்.. வளவு, அளப்பரிய நோவு!

ஆத்திரத்துடன் நிமிர்ந்து, ''ஏன்? இன்னொருத்தியை மணந்தால், கிடைத்த பங்குகள் பறி போய்விடும் என்று, தாத்தா இன்னோர் ஏற்பாடும் செய்து வைத்திருந்தாரா? செய்திருப்பார்! செய்திருப்பார்! உங்களை மாதிரி எத்தனை பேரை அவர் பார்த்திருப்பார்! என்ன பதிலையே காணோம்?'' என்றாள் குரல் நடுங்க.

''அப்படி எதுவும் எழுதி வைக்கவில்லை! ஆனால்...

''ஆனால்? ஆனால் என்ன?''

''உன் இடத்தில் இன்னொருத்தியை வைக்க முடியாமல் மணக்கவில்லை என்றால், நம்புவாயா?

''மாட்டேன்!'' என்றாள் அவள் கீச்சிட்ட குரலில். ''நம்பவே மாட்டேன். அதைவிட, அவளை மணப்பதால், புதிய பங்குகள் ஏதும் வர வாய்ப்பில்லை என்பதால், அவளை மணக்க வில்லை என்றால் ஒத்துக் கொள்ளும்படி இருக்கும்! அல்லது, அவள், அந்த சுபிக்குத்தான், 'இரண்டாம் கை'யாகி விட்ட கணவன் ருசிக்கவில்லையோ? என்ன, உண்மை அதுதானா?''

அவளை வெறித்துப் பார்த்துவிட்டு, கிருபாகரன் வெளி யேறினான்!

அவளது மன அமைதியை மிகவும் பாதித்த, இந்தச் சம்பவத்தையும் மாதவி, தோழியிடம் சொல்லவே இல்லை!

23

மனோகரி - கண்ணனின் திருமண நாள் நெருங்கிக் கொண்டு இருந்தது!

யமுனாவுக்குக் கோயம்புத்தூர் நகைகள்தான் பிடிக்கும்! மற்ற எல்லா இடங்களையும் விட, அங்கேதான் வேலைப்பாடு மிகவும் நன்றாக இருக்கும் என்பாள். நகைகள், பட்டுகள் வாங்கவும், சட்டைகள் தைக்கவும் என்று, மனோகரியை முன்னதாகவே வருமாறு கூப்பிட்டாள்.

தோழியின் தயக்கத்தைப் புரிந்து, மாதவியே அவளை வற்புறுத்தி அனுப்பி வைத்தாள்! ''நான் இன்னமும் அனுபவமற்ற சின்னப் பெண்ணில்லை, மனோ! ஒரு பெரிய நிறுவனத்தை நிர்வகிக்கிறேன். அந்தத் திடம் இருக்கிறது! எதற்கும், பழைய மாதிரி, ஒடிந்துவிட மாட்டேன்! தனியாக இருக்க, எனக்கு, எந்தப் பயமும் இல்லை! நீ கிளம்பு!'' என்று அவள் பலமுறை சொன்ன பிறகே, மனோகரி கிளம்பினாள்.

அந்தச் சமயத்தில், அலுவலகத்தில் ஒன்று நடந்தது!

கச்சாப் பொருட்கள் வாங்கும் பிரிவில் பணி புரிந்த ஒருவன், அந்த மாதம் வாங்கிய பொருட்களின் பட்டியலைக் கொணர்ந்து கொடுத்துவிட்டு, வெளியே போகாமல், தயங்கி நின்றான்.

கேள்வியாய் நோக்கியவளிடம், ஒரு மூட்டைக் குறைகளை அவிழ்த்து விட்டான்.

பொவாக, அந்தக் குறைகள் அத்தனையும் கையைக் காட்டியது கிருபாகரனைத்தான்.

பணியாட்களிடையே பார பட்சம் காட்டுகிறான்! பெண்கள் என்றால், தனி இளக்கம்! அவர்கள் கேட்டது கிடைக்கும்! உள் கமிஷன் வாங்கிக் கொண்டு, நல்ல பொருட்களைக் கூடத் திருப்பி அனுப்பிவிட்டுத் தனக்கு வேண்டியவர் களிடம் வாங்குகிறான்! தன்னைப் போன்ற உண்மை ஊழியர்களிடம் கடுமையாக நடக்கிறான்! போகவர, ஆட்டோ செலவுகூடக் கொடுப்பது இல்லை!... இப்படிப் பலது!

"அவரைப் பற்றிய உண்மையைச் சொல்லி விடுவேனோ என்ற பயம், மேடம்! எல்லாவற்றையும் கணக்கெழுதி, அவரே எடுத்துக் கொள்கிறார் என்று கேள்வி! வந்து..." என்றவன், தயக்கத்தைக் காட்டும் விதமாகத் தொண்டையைச் செறுமி, ஓர் எட்டு அருகில் வந்து, "கிருபாகரன் சாரைப் பற்றி, உங்களுக்கு நான் சொல்ல வேண்டியது இல்லை, மேடம். அவரைப் பற்றித்தான், உங்களுக்கே நன்றாகத் தெரியும்!" என்றான் ஓர் அசட்டு இளிப்புடன்!

உள்ளே பொங்கிய ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு, இமையிடுங்க அவனைக் கணித்தாள் மாதவி!

இளைஞன்தான்! ஆனால், வயதுக்கு மீறிய முதிர்ச்சி முகத்தில் தெரிந்தது! கண்களில் கவனமும், கணக்கும்!

அவளைப் பற்றிய கணக்கு! ஆண் புத்தி! இங்கே, குட்டை இன்னும் கலங்கியிருப்பதாக எண்ணி, மீன் பிடிக்க

முயற்சிக்கிறான்! வற்றி வறண்டு போனது, தெரியாது! பாவம்!

சமீபத்தில், இவன் ஏதோ தப்பு செய்து, கிருபாகரிடம் மாட்டியிருக்க வேண்டும் என்று தோன்றியது!

புகார் என்று வந்தால், விசாரித்துத்தானே ஆக வேண்டும்?

''உங்கள் குற்றச்சாட்டுக்களை எழுதிக் கொடுங்கள். விசாரிக்கிறேன்!'' என்றாள் அமைதியாக.

அவள் எதிர்பார்த்தது போலவே, அவன் முகம் வெளுத்தது! ''மேடம், என் பெயர் தெரிந்தால், தொலைத்துக் கட்டிவிடுவாரே!'' என்று அஞ்சினான். ''அவரைப் பற்றி, உங்களுக்குத் தெரியாதா?'' என்று, இன்னுமொரு பின் குறிப்பு!

''பரவாயில்லை. உங்கள் பெயர் வெளியே வராமல் பார்த்துக் கொள்ளுகிறேன்! ம்.. உங்கள் புகாரில் கிருபாகர் தாட்சணியம் காட்டிய பெண்களின் பெயர்களும் வேண்டும்!''

இப்போதும், மாதவி எதிர்பார்த்தது போலவே, அவன் முகத்தில் இளிப்பு பரவியது!

இந்தப் பெண்களின் பெயர்களை வைத்துக் கொண்டு, மாஜிக் கணவனை மாதவி வாட்டப் போகிறாள் என்கிற எதிர்பார்ப்பு!

அவசர அவசரமாக, எழுதிக் கொண்டு வந்து கொடுத்து விட்டுப் போனான்.

அவ்வப்போது, தொழிற்சாலைக்குள் சென்று பார்ப்பது, மாதவிக்குப் பழக்கம்தான். அதுபோல, அன்று சென்றபோது,

கூட வந்த சூப்பர்வைசரை நிறுத்தி விட்டுத் தனியாகவே சுற்றிப் பார்த்தாள்! ஒரு சிலரிடம் பேச்சும் கொடுத்தாள். 'ஷிஃப்ட்' மாற்றத்தின்போதும், வந்து கவனித்தாள்.

அச்சமயங்களில், புகார் கொடுத்த மாணிக்கம் அங்கே இருந்தால், அவனிடமும் இரண்டு வார்த்தை பேசிவிட்டுப் போனாள்.

அதில் அவனுக்கு மிகுந்த பெருமை!

சில தினங்கள் கழித்து, சைக்கிள் இருக்கை அமைப்புக்காக வாங்கி வரப்பட்ட கம்பிகள், தரம் குறைந்தவை என்ற புகார், மாதிரிக்கான கம்பிகளோடு, மாதவியிடம் வந்தது! கம்பிகளை வாங்கி வந்தவன் மாணிக்கம் என்பதால், அவனும் விளக்கம் கூற வந்திருந்தான்.

ஏற்கெனவே, கிருபாகரனை வரவழைத்துச் சில விவரங் களை மாதவி கேட்டறிந்து கொண்டிருந்தாள்.

தொழிற்சாலையில் வேலை செய்த கோசலைக்கு, இரண்டு மாத விடுமுறை முடிந்து வந்த மறுநாளே, மீண்டும் ஒரு மாத லீவு ஏன் கொடுக்கப்பட்டது? செல்விக்கு இடமாற்றம் ஏன் கொடுக்கப்பட்டது? இன்னோரன்ன கேள்விகள்!

மாணிக்கத்தையும், அவனை அழைத்து வந்தவனையும், தலையசைவால் நிற்கச் சொல்லிவிட்டு, கிருபாகரன் சொன்ன பதிலில் கவனமாயிருந்தாள் மாதவி.

கிருபாகரனும், ஒரு பார்வைக்கு மேல், வந்தவர்களைச் சட்டை செய்யவில்லை!

"நம் நிறுவனத்தில், பிரசவத்துக்கென்று இரண்டு மாதம் லீவு கொடுப்பதுண்டு! பொதுவாக, ஒன்பதாம் மாத இறுதி வரை

வேலை செய்துவிட்டு லீவு எடுத்தால், பிள்ளை பிறந்து நாற்பத்தைந்து நட்களில் வேலைக்கு மீண்டும் வருவார்கள்! கோசலையுடைய மாமியார் விழுந்து அடிபட்டதால், அந்த விடுமுறையைக் கோசலை, முன்னதாகவே எடுத்து விட்டாள். குழந்தை பிறந்து பதினைந்தாம் நாளே வேலைக்கு வந்தவளுக்கு, உடம்பு ஒத்துழைக்கவில்லை! சம்பளப் பணமும், அவசியம். எனவே, அவளுக்குரிய மற்ற விடுமுறை நாட்களை எல்லாம் சேர்த்துப் போட்டுக் கூடுதலாக ஒரு மாதம் லீவு கொடுத்தேன்! இப்போது, அவள் வாரத்துக்கு ஏழு 'ஷிஃப்ட்' வேலை செய்கிறாள், சனிக்கிழமை, ஓரிருவர் லீவு எடுப்பதுண்டு. அதனால், அன்றைக்கு இரண்டு 'ஷிஃப்ட்' செய்கிறாள். செல்வி பக்கத்தில் நின்று செய்கிறவள், அவளுக்கு நாத்தனார் முறை! தன் வேலையையும், இவள் தலையில் கட்ட முயன்றாள். இடத்தை மாற்றிவிட்டால் அது முடியாதல்லவா? வேறு ஏதேனும் தெரிய வேண்டியிருக் கிறதா?''

''ஆமாம்!'' என்று, மாணிக்கத்தைப் பார்த்தாள் மாதவி.

ஏற்கெனவே, அவன் முகம் செத்துச் சுண்ணாம்பாயிருந்தது! அவன் கொடுத்த புகாரின் அடிப்படையிலான கேள்வி களின் விளக்கம்தான் கிருபாகரன் முதலில் சொன்னது முழுமையுமே!

மேஜை மீதிருந்த ஃபைலைக் கிருபாகரன் பக்கம் நகர்த்தி, ''மாணிக்கத்தின் மேல், பல புகார்கள் இதற்கு முன்னரும் வந்திருப்பதாகத் தெரிகிறது! அவரை ஏன் வேலை நீக்கம் செய்யவில்லை? இப்போது, நேரடிப் புகார்! இதற்கு என்ன செய்வது?'' என்று வினவினாள், மாதவி.

வேலை நீக்கமா?

மாணிக்கம் மிரண்டு விழிக்க, கிருபாகரன் பதில் சொன்னான், ''இவன் தந்தை, இந்த நிறுவனம் தொடங்கிய போது வேலையில் சேர்ந்து, ஓய்வு பெறும் வரை, உண்மையாக உழைத்தவர்! அவருக்காகப் பார்த்து, வெறும் எச்சரிக்கையோடு விட்டிருந்தோம்! ஆனால், இப்போது...

''சாமீ, இந்த ஒரு தபா விட்டிடுங்க! இனிமே, ஒழுங்கா இருக்கிறேனுங்கம்மா! சொ...சொல்லுங்க, சார்!'' என்று கெஞ்சினான் மாணிக்கம்! விட்டால், காலிலேயே விழுந் திருப்பான்!

மாதவியை ஒரு தரம் பார்த்துவிட்டு, ''சரி... போ. ஆனால், இதுதான் கடைசி எச்சரிக்கை! அப்புறம், இன்னொன்று. பைக்குக்குப் பெட்ரோல் அலவன்சும் வாங்கிக் கொண்டு, ஆட்டோ செலவும் எழுதாதே! தரமாட்டார்கள்! இதுவும், உனக்கு முன்பே எச்சரித்ததுதான்! மறக்காதே! போ!'' என்று அனுப்பினான்.

மாணிக்கத்தின் பின்னே கதவு சாத்தியதும், ''இவன் பல புகார்கள் என்னைப் பற்றிக் கொடுத்ததாகக் கேள்விப் பட்டேன். அவன் காது கேட்க, அதை விசாரிப்பது போலவும் காட்டி முடித்து விட்டாய். ஆனால், அவனையே குற்ற வாளியாக்கத் தோன்றியது எப்படி? நீ அவனைக் கண் காணிக்கச் சொன்னதும் எனக்குத் தெரியும்!'' என்று கிருபாகரன் கேட்டான்.

''தன் குற்றத்தை மறைக்கத்தான் ஒருவன் இன்னொருவன் மேல் குற்றம் சுமத்துவான் என்று, சுந்தரம் அங்கிள்

சொல்லுவார். அதனால்தான், அவனைக் கண்காணித்ததும், கண்டு பிடித்ததும்.''

கிருபாகரன் முறுவலித்தான். ''பாவம்! தான் புகார் கொடுத்ததின் பின் விளைவே, இந்த அடி என்று எண்ணிப் பார்க்கவே, அவனுக்குத் தோன்றாது! ரொம்பக் கெட்டிக்காரத்தனமாகச் செயல்பட்டிருக்கிறாய்!'' என்று பாராட்டினான்.

வாய் பாராட்டியபோதும், கண்களில் ஆராய்ச்சியை உணர்ந்து, அவள் பதில் கொடுத்தாள். ''புத்தி இருப்பது ஆச்சரியமாக இருக்கிறதா? மூன்று ஆண்டுகளாக, முயன்று வளர்த்தது! இந்தப் புத்தி அன்றே இருந்திருந்தால், உங்களை வீட்டுக்குள் நுழைய விட்டிருக்கவே மாட்டேன்!'' என்றாள் கடுமையான குரலில்.

சிறு அமைதியின் பின், ''அடுத்த ஃபைலை இப்போது பார்ப்போமா, அல்லது பிறகு வைத்துக் கொள்வோமா?'' என்றான் அவன்.

'எனக்கு ஒன்றும் பாதிப்பு இல்லை! நீ வேண்டுமானால், அமைதிப்படுத்திக் கொள்ள அவகாசம் எடுத்துக் கொள்!' என்கிறானாக்கும்?

உதடுகளை அழுந்த மூடிக்கொண்டு, அடுத்த ஃபைலுக்காகக் கையை நீட்டினாள் மாதவி.

தனியாக அமர்ந்து எண்ணிப் பார்க்கும்போது, தோற்று விட்ட உணர்வுதான் மாதவிக்கு உண்டாயிற்று.

கிருபாகரனைப் பற்றி, யார் என்ன சொன்னால் அவனுக்கு என்ன வந்தது?

தலைமைப் பீடத்தில் அமர்ந்திருக்கும் அவள், இருவரையும் வைத்துப் பாரபட்சமின்றி விசாரித்து முடிவு சொல்ல வேண்டியதுதானே? வெறுமனே, விவரம் தெரிந்துகொள்ள விரும்புகிற மாதிரி, என்ன பாவலா?

அதற்கும் மேலாக, அந்த மாணிக்கத்தை வேறு வகையில் பிடித்து, கிருபாகரன் காலிலேயே விழ வைத்து... சே! என்ன முட்டாள்தனம்!

அவன் திருமணம் செய்து கொள்ளவில்லை என்பதாலேயே நல்லவனாகி விட முடியுமா? அவனது வஞ்சகம்தான் பொய்யென்று ஆகிவிடுமா?

ஜிஎம்மூக்கு உடம்பு சரியில்லாமல் போனதில் தொடங்கி, அவனோடு கொஞ்சம் சாதாரணமாகப் பேசத் தொடங்கியது, பெரிய தப்பாக, இப்போது மாதவிக்குத் தோன்றியது!

இனிக் கவனத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தவள், அந்தத் தீர்மானத்தினால், பெற்ற மகனையே தொலைத்துவிட இருந்தாள்!

24

நல்ல வேளையாக, மாணிக்கம் சம்பவத்துக்கு அடுத்த இரண்டு நாட்களும் விடுமுறை நாட்களாக அமைந்தன. ஒரு தேசிய விடுமுறையும், ஞாயிற்றுக் கிழமையும் அடுத்தடுத்து வந்தன.

சனிக்கிழமை முழுவதையும் மகனோடு நேரத்தைக் கழித்தது, மாதவிக்கு மிகவும் ஆனந்தமாக இருந்தது!

மறுநாள் நித்திலனை வீட்டுக்கு அடுத்த தெருவில் இருந்த பூங்காவுக்கு அழைத்துச் சென்றாள்.

காலையும் மாலையும், உடல் பயிற்சிக்காக நடப்பவர்கள் அங்கே அதிகம்! அதனால், பூங்காவும் நன்கு பராமரிக்கப்பட்டு வந்தது! எனவே, அவ்வப்போது, அங்கே மகனைக் கூட்டிப் போவது, அவளுக்கு வழக்கம்தான்!

காலையில் நடப்பவர்களை இடையூறு செய்யாத வகையில், எட்டு மணிக்கு மேலாக மகனோடு சென்றவள், சுமார் ஒரு மணி நேரம், ஓடிப்பிடித்தும், பந்து போட்டும், அவனோடு நன்கு விளையாடினாள்.

அவளுக்கு வியர்த்து விறுவிறுத்துவிட்ட போதிலும், நித்திலனுக்கு உட்காரப் பிடிக்கவில்லை! எனவே, பட்டர்ஃப்ளை விரட்டச் சொல்லிவிட்டு, அவன் அந்த வண்ணத்துப் பூச்சிகளின் பின்னே ஓடுவதை, மரத்தடியில் அமர்ந்து பார்த்து ரசித்தாள்.

''ஊகூம். அங்கெல்லாம் போகாதே, நித்தி! அம்மா கிட்டயே விளையாடு!'' என்று சொல்லிக்கொண்டே, இரண்டு வரிசை தள்ளியிருந்த புதரின் பின்புறம் மறைந்த நித்திலனை அழைத்து வர எழுந்தவள், அப்படியே நின்று விட்டாள்.

பூங்காவின் மறுபுறத்திலிருந்து, அகன்ற நடைபாதை வழியே, கிருபாகரன் வந்து கொண்டிருந்தான்!

இவன் நித்திலனை அவளோடு பார்த்து விட்டால்? மகன் என்று அறிந்து கொள்வானே!

சும்மாவே பிள்ளையைக் கேட்டவன், நித்தியை அறிந்தால் விடுவானா?

இப்போது, மகன் அருகே செல்வது ஆபத்து என்று முடிவெடுத்து, மாதவி அங்கேயே நிற்க, அதற்குள் அவளைப் பார்த்துவிட்டு, கிருபாகரன் அவள் அருகே வந்தான்.

''வியர்த்திருக்கிறதே! வெகு நேர நடையா?'' என்று அவளையே பார்த்தபடி வினவினான்.

மாதவிக்கு ஒரே பதைப்பு! வண்ணத்துப் பூச்சியை விரட்டிக் கொண்டு, நித்தி வாயிற்புறம் சென்று விடக்கூடாதே என்று ஒரு பயம்! கூடவே, இவன் இங்கே நிற்கும்போது, தன்னைத் தேடிப் பிள்ளை வந்துவிடக் கூடாதே என்று, அதுவும் ஒரு கலக்கம்!

ஒரு மண்ணும் தெரியாமல், சாவகாசமாக விசாரித்துக் கொண்டு நிற்கிறானே!

அவனை விரட்டுவது ஒன்றே முக்கியமாகத் தோன்ற, ''என்ன? லீவு நாளிலாவது, உங்களைப் பாராமல் நிம்மதியாக இருக்கலாம் என்று நினைத்தால், ஒரு பூங்காவுக்குக் கூட, உங்கள் தொல்லையின்றி வர முடியாதா?'' என்றாள் கடுமையான குரலில்!

அவன் யோசனையோடு புருவம் சுருக்கிப் பார்க்கவும், ''நீங்கள் இங்கேயே இருப்பதானால், நான் போகிறேன்!'' என்று படபடத்துவிட்டு, 'உம்'மென்ற முகத்துடன் ஓர் எட்டு எடுத்து வைத்தாள் மாதவி.

''இல்லையில்லை! இந்த உன் நிம்மதியைக்கூட, நான் கெடுப்பானேன்? நானே போகிறேன்!'' என்று சிறு வாட்டத் துடன் கூறிவிட்டுத் திரும்பி நடந்தான் கிருபாகரன்.

அவனது நெடிய உருவம் கேட் தாண்டி வெளியேறும்வரை, அசுவாரசியம் போல நின்று கொண்டிருந்தவள், அவனது தலை மறைந்ததும், மகன் போன பக்கம் விரைந்தோடிச் சென்று பார்த்தாள்.

அங்கே அவனைக் காணவில்லை என்றதும், நெஞ்சுக்கூடு காலியாகி விட்ட உணர்வு அவளுக்கு!

இல்லை, பயப்படக்கூடாது என்று மனதுக்குள் உருப் போட்டபோதும், அவை வெறும் வார்த்தைகளாக இருந் தனவே தவிர, அவற்றின் அர்த்தம் மூளையை எட்டுவதாக இல்லை!

வயிறு கலங்க, இங்குமங்கும் ஓடி ஓடித் தேடியும், எங்கும் அவளுடைய அருமை மகனைக் காணவே இல்லை!

பூங்காவினுள் நித்திலன் இல்லை! இனி வெளியேதான் தேடியாக வேண்டும்! முன்புறமா? பின் பக்கமா? எந்த வாயில் வழியே, அவளுடைய துரு துரு செல்லம் பூங்காவை விட்டு வெளியே சென்றிருக்கக் கூடும்?

கடவுளே, இரண்டு பக்கமும் சாலைகள் ஆயிற்றே! எத்தனை கார்கள்...

எந்தப் பக்கம் செல்வது என்று முடிவு செய்ய முடியாமல் கலங்கித் திகைத்தபடி, இருபுறமும் பார்த்த மாதவியின் கண்கள், அச்சத்தில் மேலும் அகன்றன!

வெளி வாயிலில் இருந்து, தோளில், நித்திலனைத் தூக்கி வைத்துக்கொண்டு, உள்ளே வந்தவன், கிருபாகரன்!

கடவுளே! அவனுக்குத் தெரிந்து போயிற்றா?

அசையய மாட்டாத சிலையாகத் தூர நின்று மாதவி பார்க்கும்போதே, வெளி வாயிலை அடுத்திருந்த பக்க வாட்டுப் பாதையில் நின்று கொண்டிருந்த பூங்காக் காவலனிடம் சென்று, "யார் பிள்ளையோ? கேட்டைக் கடந்து, சாலையில் செல்ல முயன்றது! இதன் அம்மா உள்ளேதான் இருப்ப தாகச் சொன்னதால், இங்கே தூக்கி வந்தேன். குழந்தையை யாராவது தேடி வந்தால், உரியவர்கள்தானா என்று சரிபார்த்துக் கொண்டு, கொடுத்து விடுப்பா!" என்று பிள்ளையைக் காவலனிடம் ஒப்புவித்துவிட்டுப் போனான், அவன்! கிருபாகரன்!

அப்பாடி என்று தொய்ந்த கால்களைச் சிரமத்துடன் எடுத்து வைத்து, மகனிடம் சென்றாள் மாதவி!

அடுத்த வாரக் கடைசியில், மனோகரி கண்ணனின் திருமணம்.

ஜினம்மோடு சேர்ந்து, நிறுவனத்தைப் பார்த்துக் கொள் ளும்படி ஒரு குறிப்புக் காட்டிச் சொல்லிவிட்டு, நாலு நாட்கள் முன்னதாகவே, மாதவி கோவைக்குச் சென்று விட்டாள்.

திருமணத்துக்கு என்று, லீவு எடுத்துக் கொண்டு, நிறுவனத் திலிருந்து யாரும் வரத் தேவையில்லை என்ற குறிப்பு! அப்படி வந்துதான் தீர வேண்டும் என்ற அளவு நெருக்கமும் கிடையாதுதானே!

எனவே, கிருபாகரன் வரமாட்டான் என்ற நிச்சயத்தில், நித்திலனைப் பற்றிய கவலைகூட இல்லாமல், நிம்மதியாக யமுனாவோடு சுற்றினாள். மனோகரியோடு கலகலத்தாள்! கண்ணனைக் கிண்டல் செய்தாள்!

எல்லாம் செவ்வனே நடக்கிறது என்பதற்கு மேல், சென்னையைப் பற்றி யாரையும் பேச விடவே இல்லை!

இவ்வளவு தூரத்துக்கு எந்தப் பிரச்சினையும் வர முடியாது என்ற ஒரு கற்பனைப் போர்வையைப் போர்த்துக்கொண்டு, கலகலப்பாக இருந்தாள்.

இப்படியே, நான்கு நாட்களும் கழிந்து, திருமணமும் இனிது நிறைவேறி, வரவேற்புக்கும் எல்லாரும் ஆயத்த மாயினர்!

நித்திலனுக்கு, வெயிஸ்ட் கோட்டுடன், நேரு மாதிரி உடை! அவனுக்கு உடையணிவித்து, ஒரு பணியாளின் பொறுப்பில் அனுப்பிவிட்டு, மனோகரியின் அலங்காரத்தைச் சரி பார்த்துவிட்டு, மாதவி தன்னையும் அலங்கரித்துக் கொண்டாள்!

இரவு கடைசி ரயிலில் கிளம்ப வேண்டும் என்பதால், சாமான்களையும் ஓரளவு ஒதுக்கி வைத்துவிட்டு, வரவேற்பில், மனோகரியின் அருகில் யமுனாவோடு சேர்ந்து நின்று கொண்டாள்.

மனோகரி வேலை செய்த மருத்துவமனை அலுவலர்கள் அத்தனை பேரும் வந்திருந்தனர். மாதவிக்கும், செக்கப், பிரசவம், பிள்ளைக்குத் தடுப்பூசிகள் எல்லாம் பார்த்தவர்கள் அவர்கள்தானே? அவர்களை அழைத்துப் போய், உணவருந்த

உட்கார வைத்துவிட்டு, அவர்களைக் கவனித்தவாறே, நித்திலனுக்கும் உணவு கொடுத்துவிடலாம் என்று மகனைத் தேடியவள், மயக்கம் போட்டு விழாத குறைதான்!

ஏனெனில், தோளில் பிள்ளையோடு, மணமக்களுக்குப் பரிசைக் கொடுத்துக் கொண்டிருந்தான் கிருபாகரன்!

இப்போதும், நித்தி எங்காவது போய்விட்டானா? யார் என்று தெரியாமலேதான் கிருபாகரன் அவனைத் தூக்கிக் கொண்டிருக்கிறானோ என்று, சற்று நேரம் பொறுத்திருந்து பார்த்தாள் மாதவி!

முழுசாக, ஒரு நிமிஷம் ஆகுமுன்பே தாங்க முடியாமல் போய்விட, ஒரு பணியாளைக் கூப்பிட்டு, ''பையனுக்குச் சாப்பாடு கொடுக்க வேண்டும். அழைத்து வா!'' என்று அனுப்பி வைத்தாள்.

கிருபாகரன் கண்ணனிடம் பேசிக்கொண்டு இருக்கும் போதே, வேலையாள் சென்று பிள்ளையைக் கேட்க, ''சாப்பாட்டை இங்கேயே எடுத்துவா! நானே அவனுக்கு ஊட்டுகிறேன்! அல்லது நித்திலன் என்கூடச் சாப்பிடட்டும்!'' என்று அழுத்தமாக உரைத்தவாறே, மேடையை விட்டு இறங்கிப் பக்கவாட்டில் ஒதுங்கினான் அவன்.

காது கேட்கும் தூரத்திலேயே முகம் திருப்பி நின்றவளுக்கு அதற்கு மேல் பொறுக்க மாட்டாமல் போய்விட, வேகமாக அருகில் சென்று, ''இவனுக்கு என்ன கொடுக்கலாம், என்ன கொடுக்கக் கூடாது என்று, உங்களுக்கு என்ன தெரியும்?'' என்று ஆத்திரத்துடன் வினவினாள்!

''என் பிள்ளைக்கு எது நல்லது என்று, உன்னைவிட, எனக்கு நன்றாகவே தெரியும்! முறைக்காதே! எப்படி என்று தெரிய

வேண்டுமா? இவனிடம் நான் யார் என்று கேட்டுப் பார்... கேளேன்! ஏன்? என்ன பயம்?'' என்று, அமர்ந்த குரலில், அழுத்தமாகப் பேசினான் கிருபாகரன்.

பிள்ளையை அவனிடம் இருந்து பிடுங்கி விடலாமா என்று பார்த்தால், அந்த முயற்சியை எதிர்பார்த்தவன் போல, மகனை இதமாக அணைத்தாற்போல, இறுகப் பற்றியிருந்தான் அவன்.

சீற்றத்துடன் நோக்கிவிட்டு, ''யாரடா, இது?'' என்று, மாதவி கோபமாகக் கேட்டாள்.

நித்திலனுக்குத் தாயின் கோபம் புரியவில்லை! இதமாகத் தூக்கியிருந்தவனின் தோளில் சலுகையாய்ச் சாய்ந்து, ''அன்னி...க்குக் கார் டொம்முன்னு முட்டாமல் தூக்கிக்கிட்ட அங்கிள்!'' என்று விளக்கினான்!

''அங்கிள் இல்லைம்மா! அப்பா!'' என்று கிருபாகரன் திருத்தும்போதே, ''கா...கார் இடிக்காமலா? இது என்ன கதை?'' என்று அதிர்ந்துபோய்க் கேட்டாள் மாதவி.

''அப்பாவா?'' என்ற மகனிடம், ''ஆமாம்,'' என்று பாக்கெட்டிலிருந்த பேனாவை எடுத்து விளையாடக் கொடுத்தவாறே, ''கதையல்ல! அன்று பூங்காவில், இவனை நான் அறிந்துகொள்ளக்கூடாது என்று இவனைத் தனியே செல்ல விட்டுவிட்டு நின்றாயே! நித்தி, கேட் தாண்டி, சாலைக்கே சென்று விட்டான்! பையன் ஒருவன் ஓட்டி வந்த கார்... என்றவன் மகனை இறுக அணைத்தான். ''நல்ல வேளையாக நான் அங்கே இருந்தேன், அடி படாமல் தூக்கிக்கொள்ள முடிந்தது! மற்றப்படி... யோசி, வறட்டு வீம்புக்காக இந்த அளவுக்கு விட்டு விடுகிற உன்னைவிட, இவனது நலன் பற்றி,

எனக்கு அதிகமாகத் தெரியாதா?'' என்று அவளை நேராக நோக்கி வினவினான்.

'மற்றப்படி' என்ற ஒரு வார்த்தையில், மாதவி விதிர் விதிர்த்துப் போயிருந்தாள்.

''நித்தீ, நித்திம்மா! கண்ணு... என்று குரல் தழுதழுக்க, மகனை வருடியவளின் கைகள் நடுங்கின.

ஒரு கணம் தயங்கிவிட்டு, வலது கையால், அவள் தலையை வருடிக் கொடுத்தான் கிருபாகரன். ''பயப்படாதே! அவனுக்கு அடி படவே இல்லை!''

புரியாத சிறுமியாகக் கணவனை நோக்கியவளின் கண்கள் சட்டென அகன்றன.

தலையைச் சிலுப்பி அவனிடமிருந்து விலகியவள், வேகமாக அங்கிருந்து சென்று மறைந்தாள்.

நடந்ததைப் பெருமளவு கவனித்த கண்ணன், ''பிள்ளைக்காக வாவது, மாதவி கணவனை ஏற்பது நல்லது!'' என்றான் மனைவியிடம்.

''முன்பு மாதவி பட்ட துன்பம், உங்களுக்குத் தெரியாது! அதை நேரில் பார்த்தவள் நான். தயவு பண்ணி, இப்படி யோசியாமல் பேசாதீர்கள்!'' என்று எரிச்சலை ஓரளவு காட்டியவாறே, மனோகரி கூறினாள்.

''மனு, ப்ளீஸ்! நம் முதல் சச்சரவு இன்று தொடங்க வேண்டாம்! ஆண்டுக் கணக்கில் காத்திருந்தது! இன்றைய இரவை எதுவும் கெடுக்கக் கூடாது!'' என்றவன், மனைவியின் கன்னம் சிவப்பதை ரசித்து முறுவலித்தான்!

25

அன்றைய தினம் தொடங்கி, கிருபாகரன் மகனை விட்டு, முன்போல ஒதுங்கி இருப்பதாக இல்லை என்று, ஏதாவது ஒரு விதத்தில் காட்டிக்கொண்டே இருந்தான்.

கட்டாயமாக, ஒருமுறை அவனைப் பற்றி விசாரிப்பான்.

மாதவி பதில் சொல்லாமல் இருந்து பார்த்தாள். பொது நிர்வாகி, அல்லது அவரைப் போல யாரையாவது கூட வைத்துக் கொண்டே அவனிடம் பேசினாள்.

ஆனால், கிருபாகரன் எதையும் லட்சியம் செய்வதாக இல்லை.

''எனக்கு நித்திலனைப் பார்க்க வேண்டும். பூங்கா வுக்கு அழைத்து வருகிறாயா? அல்லது, நான் உன் வீட் டுக்கே வரட்டுமா?'' என்று ஜினம் முன்னிலையிலேயே கேட்டான்.

ஓரளவு குடும்ப விவரம் தெரிந்த அவர், தானாகவே ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி விலகிக் கொண்டார்!

இவனிடம் நேரடியாகப் பேசியாக வேண்டிய நேரம் வந்துவிட்டதாக, மாதவிக்குத் தோன்றியது.

எனவே, அன்றைய அலுவல் தொடர்பான பேச்சுகள் முடிந்ததும், அவளாகவே ஒவ்வொரு வேலை கொடுத்து மற்றவர்களை அனுப்பிவிட்டு அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

அவளிடமிருந்தே வரட்டும் என்று எண்ணியவன் போல, கிருபாகரனும் அவளையே பார்த்தபடி, பேசாமல் அமர்ந்திருந்தான்.

தப்பு செய்தவன் - அதிலும் மன்னிக்கவே முடியாத மாபெரும் குற்றம் புரிந்தவன், எவ்வளவு அமர்த்தலாக உட்கார்ந்திருக்கிறான்? ஒரு தவறும் செய்த அவள் பதறுவானேன்?

பதற்றம்தான்! இன்னோர் இழப்பு நேர்ந்து விடுமோ, என்ற பதற்றம்!

ஆனால், அப்படியோர் இழப்பு நேர விடுவதற்கு, அவள் ஒன்றும், அன்றைய பேதை அல்லவே! நிமிர்ந்து போராட வேண்டாமா?

''நித்திலனை நீங்கள் பார்ப்பதோ, பேசுவதோ எனக்குப் பிடிக்கவில்லை!'' என்று மாதவி நேரடியாக விஷயத்துக்கு வந்தாள்.

''சாரி, மாதவி. இது விஷயத்தில், உன் விருப்பு வெறுப்புகளைப் பொருட்படுத்தும் நிலையில் நான் இல்லை! எனக்கு என் பிள்ளையோடு பழக வேண்டும்!'' என்றான் அவன் அமைதியாகவே!

''ஏன்?'' என்றாள் அவள் ஆத்திரத்தோடு. ''மூ.. ன்று! மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக, இப்படி ஒரு பிள்ளை இருக்கிறானா, இல்லையா என்று அறிகிற அக்கறைகூட இருக்கவில்லை! இப்போது மட்டும் என்ன, பாசம் பொங்கி வழிகிறது?''

அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டு, ''நீதான் தேடவே கூடாது என்று என்னென்னமோ எழுதியிருந்தாயே! அப்புறம்

எந்தத் தைரியத்தில் தேடுவது?'' என்று கேட்டான் கிருபாகரன், மெதுவாகத்தான்.

ஆனால், அவளுக்குக் கொதித்துக்கொண்டு வந்தது!

''ஆகா! என் வார்த்தைக்கு எவ்வளவு மதிப்பு! நான் கட்டளையிட்டு விட்டதால், அதை மீற மனமின்றி, நிம்ம.. மதியாகச் சும்மா இருந்து விட்டீர்கள், போல!'' என்றாள் குத்தலாக.

''அப்படி இல்லை! மனோகரியும் அன்று கிளம்பியிருந்தது தெரிய வந்தது! அவளுக்கு உலக அறிவும் தைரியமும் உண்டு. துணையாக அவள் உன்னோடு இருக்கும்போது, உன்னைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை என்று கருதினேன்!''

''அது மட்டுமா? வேண்டியது கிடைத்த பிறகு, அதை, அனுபவிக்காமல், மற்ற பயனற்ற சில்லரை விஷயங்களைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பார்களா, என்ன?''

''ஒரு வகையில் நீ சொல்வதும் சரிதான். ஆனால், 'அனுபவிக்க' என்ற வார்த்தையைவிடச் 'சீரமைக்க' என்று சொல்வது பொருந்தும்! 'உடையவன் பார்க்காவிட்டால், ஒரு முழம் கட்டை!' என்பார்கள். பயிர்த் தொழில் பழ மொழி! ஆனால், எல்லாவற்றுக்கும் பொருந்தும்! நம் ஜிளம் எவ்வளவோ முயன்றபோதும், மற்றவர்களை உள்ளே விடப் பிரியமின்றி, எல்லாப் பொறுப்புகளையும் அவரே கவனித்ததாலோ, என்னவோ, மிஸ்டர் குமார சாமி இறந்த பிறகு, நிறுவனத்தில் ஓர் அக்கறையின்மையும், சிறு ஊழல்களும் நடைபெறத் தொடங்கி விட்டிருந்தன. அவருக்கு அடுத்த நிலை என்ற பெயரில் 'டம்மி'யாக

இருந்தவருக்கு, எந்தவித அக்கறையும் இருக்கவில்லை! நிர்வாகத்தைச் சீர்ப்படுத்துவது, தொழிலை லாபகரமாக நடத்துவது என்று, முழு மூச்சுடன் அதில் ஈடுபட வேண்டியதாக இருந்தது!''

''மூ...ன்றரை ஆண்டுகளாகவா?'' என்றது, அவளது நம்பாத குரல்.

''இல்லை! ஆனால், எந்த உரிமையில் உன்னைத் தேடுவது? செய்த பிழை பெரியது! உன்னை எப்படியாவது கண்டு பிடித்தால்கூட, நீ என்னோடு வருவது நடக்கிற காரியம் அல்ல! கூடவே, நீ ஒரு மாதிரிப் பிடிவாதக்காரி! ஒரு வேளை, உன்னைத் தேடுவதை அறிந்து, கடிதத்தில் எழுதியது போல, நீ ஏதாவது செய்து கொண்டு விட்டால் என்கிற பயம் கொஞ்சம்! அத்தோடு, மனோகரி உன்னைச் சும்மா இருக்க விட மாட்டாள். ஏதாவது ஒரு வழியில், உனக்கு ஒரு புது வாழ்வு அமையச் செய்வாள் என்ற நம்பிக் கையும் இருந்ததால், அப்படியே இருக்கட்டுமே என்று எண்ணினேன்...

மறைப்பதற்கு ஏதும் இல்லாததுபோலத் தங்கு தடை யின்றி அவன் சொன்னதில், பல உண்மைகளும் இருந்தன. முக்கியமாக, மனோகரி தந்த ஊக்கம்தானே, மாதவியை மீண்டும் நிமிர வைத்தது? அத்தோடு, கிருபாகரனை அவள் மன்னித்து ஏற்பதும், நடந்திருக்க முடியாததுதான். அப்போது மட்டுமல்ல. இப்போதும்! ஏன், இனியுமே!

அவனைப் போலவே, உணர்ச்சி துடைத்த குரலில் அவளும் பேசினாள். ''கிட்டத்தட்ட சரியாகத்தான் கணக் கிட்டிருக்கிறீர்கள். அதேபோல, எல்லோருக்கும் நிம்மதி

யாக, இப்போதும், அப்படியே இருக்க வேண்டியது தானே?''

''முடியவில்லை! இப்போது, நம் இருவரையும் பற்றி, நான் பேசுவதில் பயன் இராது! எனவே, அதை விட்டு விடுவோம். ஆனால், உன்னைப் பார்த்த பிறகு, குழந்தை பற்றிய எண்ணம் உள்ளே குறுகுறுத்துக்கொண்டே இருந்தது! அவனையோ, நீ என் கண்ணில் கூடக் காட்டுவதாக இல்லை! நீ வர வேண்டாம் என்று சொல்லாமல் சொன்ன பிறகும், அவனைப் பார்ப்பதற்காகவே, கண்ணனின் திருமண வரவேற்புக்கு வந்தேன்! நித்தியைப் பார்த்த பிறகு, அன்று யாரோ என்று தூக்கியபோதே, ஒரு பரவசம் இருந்தது! பலமுறை தூங்குமுன் அவன் நினைவு வரும்! இந்த வயதுதான் என் குழந்தைக்கும் என்று நினைத்தபடியே உறங்கி யிருக்கிறேன்! அவனேதான் என் மகன் என்று தெரிந்த பிறகு... நியாயமான உரிமை இருக்கிறதோ, இல்லையோ, என்னால், அவனை விட முடியாது, மாதவி! தயவு செய்து புரிந்துகொள்!''

''உரிமை பற்றி, உங்களாலேயே உறுதியாகச் சொல்ல முடியவில்லையே! ஆனால், எப்படிச் சொல்ல முடியும்? அவனுக்கு விலையாகக் கம்பெனிப் பங்குகளை எடுத்துக் கொண்ட பிறகு...

முதல் முறையாக முகத்தில் உணர்ச்சியைக் காட்டி, ''போதும்!'' என்று கை உயர்த்திச் சொன்னான் கிருபாகரன். ''எத்தனை தடவை, இதையே பேசுவாய்? எண்ணி எண்ணி, ஆயிரம் ஆயிரம் முறை நானாகவே நோவது போதாதா? இன்னும் என்ன செய்ய வேண்டும்? சொல்லு. செய்கிறேன்!''

நிஜமாகவே தவிக்கிறானா? அல்லது, உண்மை போல நடிக்கிறானா? நடிப்புதான் இவனுக்குக் கை வந்த கலை ஆயிற்றே! என்...னமாய்.. நடித்தவன்!

மனம் கற்பாறையாக இறுக, ''ஒன்றும் இல்லை!'' என்று லேசாகத் தோளைக் குலுக்கினாள் மாதவி.

''இல்லை! இருக்கிறது! அந்தப் பங்குகளைத் தந்து விட்டால், என் மகனைப் பார்க்க விடுகிறாயா?''

உதட்டைப் பிதுக்கினாள் மாதவி, ''சொத்துக்காகப் பிள்ளையை ஏலம் விடுகிற பழக்கம் எனக்குக் கிடையாது!''

அம்பு தவறாமல் இலக்கில் பாய்ந்துவிட, ஒரு வினாடி, அவன் வலியில் தடுமாறி விட்டான்! உடனேயே, ஓரளவு சமாளித்து, ''செத்த பாம்பை எத்தனை முறை அடிப்பாய், மாதவி? கையில் கிடைத்த சொர்க்கத்தைக் கைநழுவ... அப்படிக்கூடச் சொல்ல முடியாது! என் சொர்க்கம் கைக்குக் கிடைத்தபோது, அதன் பெருமை தெரியாமல் தூக்கி எறிந்து விட்டேனே என்று எப்படித் தவிக்கிறேன், தெரியுமா? ப்ளீஸ்! கொஞ்சம் புரிந்து கொள், மாதவி!'' என்று கெஞ்சுதலாக முடித்தான்.

இப்போதும், அவளால் நம்ப முடியவில்லை! நம்பப் பிடிக்கவுமில்லை! அதை நேரடியாகவே சொன்னாள்!

''உங்கள் வார்த்தையை எப்படி நம்புவது? உங்களது இந்த உருக்கம் முழுவதுமே, குழந்தையைப் பிடித்தால், மீண்டும் நிறுவனம் கைக்கு வரக்கூடும் என்பதற்காக இருக்கக்கூடுமே! நடிப்பில் நீங்கள் எப்படிப்பட்ட மாமன்னன்

என்று அனுபவத்தில் அறிந்தவள் நான் என்பது மறந்து விட்டதா? ஊகூம்! உங்களை நான் நம்ப மாட்டேன். நித்தியோடு பழக அனுமதிக்கவும் மாட்டேன்! எனவே அவனை மறந்துவிடுங்கள்!'' என்றாள் அவள் தீர்மானமாக!

மறுப்பாகத் தலைசயைத்தான் கிருபாகரன். ''அவனை மறப்பது சாத்தியமில்லை, மாதவி. நித்தி எனக்குக் கட்டாயம் வேண்டும்! அவனுக்காக, நான் கோர்ட்டுக்குக் கூடப் போகத் தயாராக இருக்கிறேன்!'' என்றான் அவனும் உறுதியாகவே!

மிரட்டலா? நீயாக விவாகரத்து தராவிட்டால், கோவிலில் தாலி கட்டி அவளோடு வாழ்வேன் என்றானே! அது போல அடுத்ததா?

அன்று கலங்கித் தவித்து விலகிப் போன நினைவில், உள்ளம் கூசியது!

''இன்னொருத்தியோடு வாழ்கிறவரிடம் பிள்ளையைக் கொடு என்று, எந்தக் கோர்ட்டும் சொல்லாது!'' என்றாள் அவள் சுள்ளென்று!

''என்னிடமே நித்தியைக் கொடுத்துவிட வேண்டும் என்று, நான் ஒரு போதும் கேட்கவில்லையே! அத்தோடு, யாருடனும் நான் வாழவுமில்லை!''

''இதை நம்ப, நான் இன்னமும் முட்டாள் அல்ல! அப்போது, இரண்டாண்டுக் காதலைக் காரியவாதியாக, அடியோடு ஒதுக்கி வைத்தவர்தானே! அதுபோல, இப்போதும் அவளை ஒளித்து வைத்திருப்பீர்கள். காரியம் முடிந்ததும், புற்றிலிருந்து

பாம்பு கிளம்புவதுபோல, ஏதாவது கிளம்பும்! எனவே. உங்களை நம்புவது. இனி முடியாத காரியம்!'' என்று முடித்தாள் மாதவி!

26

கிருபாகரன் மாதவியை அதிகமாக மறுத்துப் பேசவில்லை! பேசிப் பயன் இராது என்று புரிந்திருந்தான் போலும்!

''எனது இன்றைய வாழ்வில் அப்படி எதுவும் இல்லை, மாதவி. ஆனால், என் வார்த்தையை அப்படியே ஏற்பது உனக்குக் கடினம் என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். எனவே, அந்தப் பேச்சும் பேச வேண்டாம்! ஆனால், என்னால், நித்திலனைப் பாராமல் இருக்க முடியாது... ப்ளீஸ், நான் சொல்வதைக் குறுக்கிடாமல் கேட்டு முடித்துவிட்டு, அப்புறம் பேசு. நித்திலனின் வாழ்விலும், நான் அதிகப் பங்கு கேட்கவில்லை! வாரத்தில் ஒரு நாள்! ஒரு சில மணி நேரம்! அவ்வளவே! அவனோடு இருந்துவிட்டுப் போய்விடுகிறேன்! இதற்கு நீயும் ஒத்துக் கொண்டால், எல்லாம் சுமுகமாகப் போய்விடும்! மறுத்தால், கோர்ட் வரை சென்றேனும் இந்த அனுமதியை நான் பெற்று விடுவேன்! இது நிச்சயம்! இந்த அனுமதியை எந்த நீதிமன்றமும் மறுக்காது. எனவே, நான் எந்த வழியில் செல்வது என்று யோசித்து, நாளைக்கு முடிவு சொல்லு!'' என்று கூறிவிட்டு எழுந்து சென்றான் அவன்.

மறுநாள் வந்து, ''என்ன முடிவு செய்தாய்?'' என்று கேட்கவும் செய்தான்.

அவளுக்கு மறுக்க முடியாத நிலை! அவன் சொன்னது போலக் கோர்ட்டுக்குப் போனால், அவளிடம் அவன் கேட்ட சில மணி நேரத்துக்குப் பதிலாக, வாரத்தில் ஒரு முழு நாளையேகூட, நீதிமன்றம் அவனுக்குக் கொடுத்து விடக் கூடும்! அதற்கு, இது மேல்! நஷ்டத்தில் லாபக் கணக்கு!

அவனுக்குப் பதிலாக, அலுப்புடன் உச்சுக் கொட்டினாள் அவள். "நீதி மன்றத் தீர்ப்பு என்னவாக இருக்கும் என்று, யாராலும் சொல்ல முடியாது! ஆனால், கோர்ட், அது இதென்று போக நேர்வது, இந்த வயதில் என் மகனைப் பாதிக்கக் கூடும்! அதைப் பற்றி, நீங்கள் லட்சியம் செய்யாதபோதும், பெற்றவள் எனக்கு அந்தக் கவலை இருக்கிறது! அதனால்தான்!" என்று வெறுப்பை மறையாத குரலில் கூறினாள்.

முகம் மலர, "எனக்கும் அந்தக் கவலை இருந்தது, மாதவி! ஆனால், நீ அந்த அளவுக்குப் போக விட மாட்டாய் என்ற நம்பிக்கையும் இருந்தது! எப்படியோ! மிகவும் நன்றிம்மா!. நான் எப்போது நித்திலனைப் பார்க்க வரட்டும்?" என்று ஆவலோடு வினவினான் கிருபாகரன்.

"சனிக்கிழமை மாலையில் நான் ஷாப்பிங் போவது வழக்கம்! அந்த நேரத்தில் வைத்துக் கொள்ளுங்கள்!" என்றாள் அவள். "ஐந்தரையிலிருந்து ஏழு. ஏழரை மணி வரை!"

நான் வீட்டில் இல்லாத நேரத்தில் வந்து பிள்ளையைப் பார்த்துவிட்டுப் போய்விடு. ஏனென்றால், உன்னைப் பார்க்க எனக்குப் பிடிக்கவில்லை என்று அவள் சொல்லாமல் சொன்னதை, அவனும் புரிந்து கொண்டான்.

உணர்ச்சி துடைத்த முகத்துடன், "உன் விருப்பம்!" என்றான் அமைதியாக!

"என் விருப்... என்று கோபத்துடன் தொடங்கிய மாதவி, உடனேயே தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். "நான் நினைத்ததே நியாயம், அதுவே நடக்க வேண்டும் என்றில்லாதபடி, நித்திலனை நான் கொஞ்சம் கண்டிப்பாக வளர்க்கிறேன். அதனால், பாசம் காட்டுவதாக எண்ணிக்கொண்டு, அவன் கேட்பதையெல்லாம் வாங்கிக் கொடுத்து, அவனைக் கெடுத்து விட வேண்டாம்! சாக்லேட், ஐஸ்க்ரீம், பாட்டிலில் அடைத்த குளிர்பானங்கள் எதுவும் பழக்கம் காட்ட வேண்டாம்! அவனுக்கு நல்லதில்லை. மற்றப்படி...

என்று தோளைக் குலுக்கி, மீண்டும் உச்சுக் கொட்டினாள் மாதவி!

"கவனித்துக் கொள்கிறேன்!" என்றான் அவனும். "நீ உன் காவலாளியிடம் சொல்லி வைத்துவிடு! அவன் என்னை உள்ளே விட வேண்டும் அல்லவா?

அவள் பதிலே சொல்லவில்லை.

ஃபைலைத் தீவிரமாகப் பார்ப்பதாகக் காட்டிக் கொள்வதைக் கவனித்தவனின் முகம் சட்டென இளகியது. ஒரு கணம் அவளது குனிந்திருந்த தலையைப் பார்த்துக் கொண்டு நின்றவன், ஓர் ஓசையற்ற பெருமூச்சுடன் அங்கிருந்து வெளியேறினான்!

சனிக்கிழமையன்று, வழக்கத்துக்கு விரோதமாகக் கடை கண்ணிகளில் எதை வாங்கவும் மாதவிக்குத் தோன்ற வில்லை! 'பார்க்கிங்'கில் காரை நிறுத்திவிட்டு, அதிலேயே

உட்கார்ந்திருந்தாள். மனம் வீட்டிலேயே நின்று, சண்டித்தனம் செய்தது!

இந்நேரம், கிருபாகரன் வீட்டுக்கு வந்திருப்பான், நித்திலனோடு கொஞ்சி விளையாடிக் கொண்டிருப்பான்! மனோகரியின் திருமணத்தின்போது போலத் தோளில் அணைத்தாற்போலத் தூக்கி வைத்திருப்பான்... ஆனால், நித்தி எப்படி அவனிடம் ஒட்டிக் கொள்ளலாம்? ஆபத்தில் காப்பாற்றிய நன்றியுணர்வா? அல்லது, தந்தை என்ற இயற்கைப் பாசமா?

என்றேனும், தாயிடம் உள்ள பாசத்தைவிட, அது அதிக மாகி, அப்பாவிடம் போகிறேன் என்று அவன் சொல்லி விட்டால்?

அப்புறம் எப்படி உயிரோடு இருப்பது?

ஒருவேளை, கிருபாகரனின் திட்டமும் அதுதானோ?

அவளை நோகடித்துச் சாகடித்து, நிறுவனத் தலைமையை மீண்டும் கைப்பற்றுவது?

கட்டுப்பாடிழந்து, மனம் கிறுக்குத் தனமாக யோசிப் பதை அவளே உணர்ந்து, தலையை உலுக்கி விட்டுக் கொண்டாள்.

சும்மா இருந்தால், இன்னும் பைத்தியக்காரத்தனமாக யோசனை ஓடும் என்று உணர்ந்து, வாங்க வேண்டிய பொருட்களின் பட்டியலை எடுத்துக்கொண்டு, அந்தப் பெரிய பல்பொருள் அங்காடிக்குள் மாதவி சென்றாள்.

அதிகப்படி என்று சொல்லும் விதமாகக் கிருபாகரன் எதையும் செய்திருக்கவில்லை!

பீட்சா வாங்கி வந்து, பிள்ளையோடு சேர்ந்து சாப் பிட்டிருக்கிறான், மகனோடு, தோட்டத்தில் கிரிக்கெட் விளையாடியிருக்கிறான். நித்திலனை, முதுகில் உப்பு மூட்டை தூக்கிக் கொண்டு, வீட்டைச் சுற்றியிருக்கிறான். மடியில் வைத்துக் கதை சொல்லியிருக்கிறான்! பாட்டரியில், கரணம் போட்டுத் துள்ளிக் குதிக்கும் நாய்க்குட்டிப் பொம்மை ஒன்று! அவ்வளவே!

இதில், எதைக் குற்றம் சொல்வது?

எதையும் தாயிடம் பகிர்ந்து கொள்ளும் பழக்கத்தில், நித்திலன் தந்தையைப் பற்றிச் சொல்லச் சொல்ல, அவனை அதட்டி வாயை மூடச் செய்யாமல் அமைதி காப்பது மாதவிக்குப் பெரும் பாடாக இருந்தது!

"அப்பாவும் நானும் சேர்ந்து, உனக்கும் பீட்சா வச்சிருக் கோம்மா! ஆ காட்டு!" என்று தன் சின்னக் கையால் பீட்சாவை எடுத்து ஊட்டியபோது, தொண்டையில் அடைத்தபோதும், சிரித்த முகமாக அதை விழுங்கியாக வேண்டிய கட்டாயம் வேறு!

அப்பா! அப்பா! அப்பா!

இரவு தூங்குமுன் கதை வாசிக்கும்போதுகூட, "அப்பாவும் நல்லாக் கதை சொன்னாங்கம்மா! நல்ல அப்பா!" என்றான் குழந்தை!

உறங்கும்போதும், கிருபாகரன் வாங்கிக் கொடுத்த நாய்ப் பொம்மையைத் தொட்டுக் கொண்டிருந்தான்!

தூங்கிவிட்ட மகனின் கள்ளமற்ற முகத்தில் படர்ந்திருந்த இளம் புன்னகையைப் பார்க்கையில், மாதவிக்குக் கண்ணைக் கரித்துக்கொண்டு வந்தது!

"இதே மாதிரிதான், நானும் ஒரு காலத்தில், உன் தந்தையைத் தவிர, வேறு நினைவே இல்லாமல் இருந்தேனடா! ஆனால், என்னமாய் அடி பட்டுப் போனேன், தெரியுமா?" என்று முணுமுணுத்தவள், பழைய நினைவுகளில், வெகுவாகத் துடித்துப் போனாள்!

தூக்கமின்மையும் கண்ணீருமாகச் சிவந்து வீங்கியிருந்த கண்களுக்கு முடிந்தவரை வைத்தியம் செய்து கொண்டுதான், மாதவி அலுவலகத்துக்குச் சென்றது.

ஆயினும், அன்றாட ஆலோசனைக் கூட்டம் முடிந்து, பொது நிர்வாகியை முன்னே போகவிட்டுப் பின் தங்கிய கிருபாகரன், "சாரி, மாதவி!" என்றான் தணிந்த குரலில்!

அவன் வருத்தம் தெரிவித்ததே ஆத்திரமூட்ட, "பெண்கள் சைக்கிளுக்குச் சேலை, துப்பட்டா மாட்டிக் கொள்ளாமல் வைக்கும் தடுப்புக்கு ஒரு புது டிசைன் சொல்லி இருந்தேனே! அது என்ன ஆயிற்று? டிசைன் பிரிவில் வேலை நடக்கிறதா இல்லையா என்று நீங்கள் பார்க்கவே இல்லையா? போங்கள்! போய், முதலில் அதைப் பாருங்கள்!"

என்று காய்ந்தாள்.

ஆனால், மாதவி என்ன காய்ந்தாலும், எரிந்து விழுந்தாலும், கிருபாகரனிடம் அதற்கு எந்தவிதப் பிரதிபலிப்பும் இருக்கவில்லை! அவன் வருத்தம் தெரிவித்ததும் வாய் வார்த்தைதானே தவிர, வாரம் ஒரு முறை மகனைப் பார்க்க வருவதை, அவன் நிறுத்தவும் இல்லை!

இந்நிலையில், மனோகரியும் கண்ணனும், தேனிலவை முடித்துக்கொண்டு, கோவை சென்றுவிட்டு, சென்னைக்கு வந்து, குடித்தனம் செய்யத் தொடங்கினார்கள்!

நித்திலன் தன் இளங்குரலில் 'அப்பா'வைப் பற்றிப் பெருமையடிக்கவும் மனோகரி திகைத்தாள்.

கணவனும் மனைவியும், மாதவியை வியப்பும் கேள்வியுமாக நோக்க, அவள் விவரம் தெரிவித்தாள்!

''இவ்வளவு நடந்திருக்கிறது! என்னிடம் ஒரு வார்த்தை சொல்லவில்லையே!'' என்றாள் மனோகரி குறையோடு!

''சீ! என்னப்பா, தேனிலவில் கூடவா தொல்லை செய்வது? கண்ணண்ணன் டெலிஃபோனைத் தூக்கித் தூர எறிந்திருப்பார்!'' என்று சிரித்தாள் மாதவி.

''ஐயோ, அவ்வளவு தைரியம் எனக்கு ஏதும்மா!'' என்று கண்ணன் பயந்தவன் போல நடிக்க, ''அதெல்லாம் மாட்டார்! நீ என்றால், எங்கள் இருவருக்குமே தனிதான்!'' என்றாள் அவன் மனைவி.

''அத்தோடு, நானும் பெரிய ஆளாக வளர்ந்து விட்டேன் அல்லவா? நிறுவன நிர்வாகம் எல்லாம் பார்க்கிறேன்! இதைச் சமாளிக்கத் தெரிய வேண்டாமா?''

''என்னத்தைச் சமாளித்தாய்? கிருபாகரை வீட்டுக்குள் வர விட்டு விட்டாயே! அவருக்குக் கொஞ்சம் இடம் கொடுத்தால், என்ன ஆகும் என்று தெரியாதா? தினமும், அலுவலகத்தில் பார்த்துப் பேசுவது போதாதா என்று, மன்னன் வீட்டிலும் காட்சி தரத் தொடங்கி விட்டாராக்கும்?''

"அப்படி ஏதும் கிடையாது, மனோ! வீட்டில் நான் அவரைச் சந்தித்ததே இல்லை! சனிக்கிழமை, நான் ஷாப்பிங் போகிற நேரத்தில்தான், அவர் வீட்டுக்கு வருவது! அவரது கார் திரும்பிச் சென்ற பிறகுதான் நான் வீட்டுப் பக்கம் திரும்பி வருவதே!"

மனோகரி விசித்திரமாகத் தோழியைப் பார்த்தாள். "கிருபாகரன் உன் வீட்டுக்குள் புகுந்தது மட்டும் அல்ல! அந்த நேரத்தில், உன்னை வீட்டை விட்டு வெளியே வேறு துரத்தி விட்டாரே! மெய்யாகவே, மனிதர் கெட்டிக்காரர்தான்!" என்று மனோகரி கூற, மாதவி திகைத்தாள்.

அப்படித்தானா?

27

இனிமையே உருவானவளான தன் தோழி, மீண்டும் கிருபாகரனிடம் ஏமாந்து போய்விடக் கூடாதே என்று மனோகரி மிகவும் கவலைப்பட்டாள்! ஒரு முறை மாதவி பட்ட துன்பம், இந்தப் பிறவிக்கு மட்டுமின்றி, இன்னும் பல பிறவிகளுக்கும் போதுமானது என்பது, அவளது கருத்து!

சைக்கிள் நிறுவனத்தில், கிருபாகரனுக்குப் பதவி கொடுத்தது பற்றிய மாமனாரின் கருத்து, அவளுக்கும் ஏற்புடையதாகவே இருந்தது!

அலுவல் அறையில் கிடக்கும் மேஜை, நாற்காலி போல, கிருபாகரனையும், மாதவி சர்வ சாதாரணமாக எண்ணப் பழக வேண்டும் என்றுதான் அவளும் நினைத்தாள்!

ஆனால், அவன் அவளது வீட்டுக்கே வரத் தொடங்கி விட்டானே!

ஒன்று, அவனை வரக்கூடாது என்று, மாதவி தடுத்திருக்க வேண்டும்!

கோர்ட், அது இது என்று அலைந்து, நித்தி மனம் கலங்கிவிடக் கூடாதே என்று மாதவி சம்மதித்தாள் என்றால், அவளது பலவீனம் புரிந்து, கிருபாகரன் செயல்படுகிறான் என்றுதானே அர்த்தம்?

'பிள்ளை, பிள்ளை' என்கிறாயே, அந்தப் பிள்ளை மனம், இந்தக் களேபரத்தில் கலங்குமே என்று உனக்குக் கவலை யில்லையா என்று, அவனைக் கேட்டிருக்க வேண்டாமா?

அதைத்தான் விட்டு விட்டாள் என்றாலும், கிருபாகரன் வரும்போது, தைரியமாக அவனை எதிர்கொண்டு, பேச்சிலேயே நாலு குத்துக் குத்தி, அங்கே வரத் தயங்கும் நிலைக்கு அவனை விரட்டாமல், அவள் அல்லவா, வீட்டை விட்டு வெளியே ஓடுகிறாள்!

இதுதான் மனோகரியைப் பெரிதும் உறுத்தியது!

இது எங்கே போய் முடியக்கூடும்?

மாதவி முன்னர் பட்ட வேதனையின் நினைவில், அந்த உண்மைத் தோழியின் நெஞ்சு கலங்கியது!

கோவைக்குச் சென்றதால்தான் கண்ணனைச் சந்தித் தாள் என்றாலும், அதற்காகக் கூடத் தன் தோழியின் துன்பத்தைப் போகிறது என்று ஒதுக்க அவளால் முடிய வில்லை! பேசாமல், வேறு எங்கேனும் போயிருந்தால்,

மாதவிக்கு, இந்தத் துன்பம் நேர்ந்திராதே என்றே, அவள் கலங்கினாள்!

உண்ணாமல், உறங்க முடியாமல், எவ்வளவு வேதனை! அந்த வதை மீண்டும் மாதவி அனுபவிப்பதா? எப்படித் தடுப்பது?

யோசித்தபடியே நடந்து கொண்டிருந்த மனோகரி, அந்த யோசனைக்குக் காரணமானவனே எதிரே வரவும், சற்றுத் திகைத்து நின்றாள்.

புதிய வீட்டுக்காகச் சில பொருட்கள் வாங்க வந்திருந்தாள் மனோகரி.

மறுநாள் சந்திக்க இருக்கும் மகனுக்காக ஏதாவது வாங்க வந்திருந்தான், கிருபாகரன்.

மனோகரியைப் பார்த்ததும், நின்று முறுவலித்தான்! "என்ன, தேனிலவுச் சொர்க்கத்தை விட்டுத் திரும்பி வர முடிந்ததா?" என்று சிறு கேலியாகக் கேட்டான்!

என்ன இயல்பாகப் பேசுகிறான்! இவனுள்ளே ஒரு கொடூரம் இருந்ததைச் சொன்னால்கூட, யாரும் நம்ப மாட்டார்களே!

பதிலுக்குச் சின்னதாகப் புன்னகை செய்து, "'மனம் கொண்டது மாளிகை! சொர்க்கத்தை வீட்டிலேயே அனுபவித்துக் கொள்ளலாம் என்று திரும்பி வந்து விட்டோம்!" என்றாள் மனோகரி! கூடவே தலை சரித்து நோக்கி, "ஆனால், சில பேருக்குத்தான், கோடி தனத்தைக் கையில் கொடுத்தாலும், கண்டுகொள்ளக் கூடத் தெரிவதே இல்லை!" என்றாள் ஜாடையாக!

அவன் முகத்தில் மாறுதல் இல்லை! ஆனால், "அதற்கும் கொடுத்து வைத்திருக்க வேண்டும் அல்லவா?" என்று கிருபாகரன் கேட்டபோது, அவளுக்குத்தான் கொஞ்சம் மனம் கனத்த மாதிரி இருந்தது!

இல்லை! இவன் பொல்லாத நடிகன்! நிஜம் மாதிரியே காட்டி விடுவான்!

"உண்மை!" என்றாள், மனோகரி - குரலில் சற்று அதிகப்படி அழுத்தம் கொடுத்து. ஓரக் கண்ணால் அவனைப் பார்த்து, "ஒரு கதை கூட உண்டே! பரம ஏழை ஒருவன், ரொம்பவும் கஷ்டப்பட, மகாலக்ஷ்மிக்கு அதைப் பொறுக்க முடிய வில்லையாம்! அவன் செய்த பாவத்தின் தண்டனை என்று திருமால் சொன்னதையும் கேளாமல், அந்த ஏழைக்கு உதவி செய்யும் எண்ணத்தோடு, அவன் செல்லும் வழியில் தங்கக் கட்டிகளைப் போட்டு வைத்தாளாம்! ஆனால், அப்போது பார்த்து, நடந்து நடந்து அலுத்துப்போன அந்த ஏழை, கொஞ்ச தூரம் கண்ணை மூடிக்கொண்டு நடக்கத் தீர்மானித்து, அப்படியே நடந்தானாம்! தங்கக் கட்டிகள் காலில் தட்டியபோதுகூட, நான் ஒரு முடிவு செய்துவிட்ட பிறகு, கல்லும் கட்டியும் காலில் தட்டினால் கண்ணைத் திறந்து விடுவேனா? கண்ணைத் திறவாமலே, கவனமாக நடப்பேன் என்று, காலால் தேய்த்துத் துழாவி, தங்கக் கட்டிகளைக் காலாலேயே ஒதுக்கி விட்டுப் போனானாம், அந்தப் புத்திசாலி! கொடுத்து வைப்பது பற்றி, எவ்வளவு அருமையான கதை, பாருங்கள்!" என்றாள், கிண்டலாக.

சன்னமாய் முறுவலித்தான் கிருபாகரன். "இந்தக் கதைக்கு, இன்னும் ஓர் அழுத்தமான முடிவுகூட, உண்டே! அந்த ஏழை,

இன்னும் ரொம்பத் தூரம் நடந்து நடந்து அலுத்துப்போய், மகாலட்சுமிக்கு மிகவும் கல் மனது என்று திட்டினாளாம்! மகாலட்சுமி தோன்றி, சற்று முன் நடந்ததைச் சொல்லி மறைந்தாளாம்! அப்போது, அவனுக்கு எப்படி இருந்திருக்கும்?'' என்று கேட்டவன், தானே பதிலையும் சொன்னான்!

''அச்சு அசல் என்னைப் போலவேதானே இருந்திருக்கும்?'' என்று அவன் கேட்கவும், பதில் சொல்ல முடியாமல், மனோகரிக்கு வாயடைத்துப் போயிற்று!

அவள் பேசாமல் பார்த்துக்கொண்டு நிற்கவும், ''உப்பைத் தின்றால், தண்ணீர் குடித்துத்தானே ஆக வேண்டும்? இதையெல்லாம் யோசித்து, வீணே உங்கள் மகிழ்ச்சியைக் கெடுத்துக் கொள்ள வேண்டாம், சகோதரி!'' என்று விட்டுப் போனான், அவன்!

'உப்பைத் தின்றதை' ஒத்துக் கொள்கிறானே! அதை விடவும், தண்டனையை நியாயம் என்று கிருபாகரன் ஏற்பதுதான், அவளை மிகவும் பாதித்தது!

வெகுவாக யோசித்துவிட்டு, மாதவியிடம் இந்த நிகழ்ச்சியைச் சொன்னாள் மனோகரி. ''அவரே நொந்திருப்பது போலத் தோன்றுகிறது, மது!'' என்று, தன் அபிப்பிராயத்தையும் தெரிவித்தாள்.

அலட்சியமாக உச்சுக் கொட்டி, ''அப்படி நடித்திருப்பார், மனோ!'' என்று முடித்தாள் மாதவி.

சும்மா இருக்க முடியாமல், கணவனிடமும் மனோகரி இது பற்றிக் கூறினாள்.

மனைவியின் கருத்தை ஒத்துக் கொண்டதோடு, "நிறுவனக் கூட்டத்தின்போது, கிருபாகரின் முகம் மாறியது பற்றித் தான், நான் அப்போதே சொன்னேனே!" என்று சான்றும் உரைத்தான்.

"ஆனால், முன்பு நடந்ததை எண்ணி, எனக்கே அவரை நம்பப் பயமாக இருக்கிறதே!" என்றாள் மனோகரி, கவலையுடன்.

"ஆராய்வோம்!" என்று அவளைத் தட்டிக் கொடுத்தான் கண்ணன். "நல்ல துப்பறியும் நிறுவனத்திடம் பொறுப்பைக் கொடுத்து, வினாடி விடாமல், கிருபாகரனைக் கண்காணிப் போம்! ஆள் எப்படி என்று, அப்போது புரிந்துவிடும்!" என்றான் உற்சாகமாக!

ஆனால், மனோகரியின் முகம் தெளியவில்லை!

"என்னடா?" என்று கண்ணன் கேட்கவும், "கிருபாகரன் விஷயத்தில், இது அவ்வளவாகச் சரிப்படாது, கண்ணன். மதுவின் பழைய கதை சொல்லியிருக்கிறேன் அல்லவா? மதுவை வளைக்கத் திட்டம் போட்டதிலிருந்து, அந்தப் பெண் சுபி... அப்போது அவருடைய இரண்டாண்டு காலக் காதலியாம் அவருடன் டெலிஃபோனில் கூடத் தொடர்பு கொள்ளாமல் இருந்திருக்கிறார்! அந்தத் தொடர்பை அறிந்தவர்களிடம் இருந்தும் விலகி விட்டார்! இப்போதும் அதே போல ஏதாவது செய்து கொண்டிருந் தால், எப்படிக் கண்டுபிடிப்பது? இன்னொரு தரம், அந்தத் துன்பம் மாதவி தாங்க மாட்டாள், கண்ணன்! செத்து விடுவாள்!" என்றாள் மிகுந்த கவலையும் கலக்கமுமாக, அவள்.

''அனாவசியமாக, மனதைப் போட்டு வருத்திக் கொள்ளாதே, மனு! கிருபாகரன் அப்படிப்பட்டவர் என்றால், அதற்குத் தகுந்த ஏற்பாடு செய்வோம். மாதவியைப் பிரிந்ததில் இருந்தே, அவரது நடவடிக்கைகளைப் பற்றி விசாரிக்கச் செய்வோம்! இன்றைய நிலைமைக்காக, அன்றிலிருந்தே, அவர் தன்னைத் தயார்ப் படுத்திக்கொண்டிருக்க முடியாதல்லவா? இலகுவாகக் கண்டுபிடித்துவிடலாம்!'' என்று கண்ணன் கூறவும், மனோகரி ஓரளவு ஆறுதலுற்றாள்.

''இப்போதுதான் கொஞ்சம் நிம்மதியாக இருக்கிறதுப்பா!'' என்று கணவன் தோளில் சாய்ந்தாள் அவள்.

ஒன்றிற்கு இரண்டு துப்பறியும் நிறுவனங்களின் மூலமாக விசாரித்தும், கிருபாகரனைப் பற்றிய தவறான தகவல்கள் எதுவும் கண்ணனுக்கு வரவில்லை.

மாதவியைப் பிரிந்த சமயத்தை ஒட்டி, ஒரு பெண்ணை நாலைந்து தரம் அவன் சந்தித்ததற்கு ஆதாரம் இருந்தது! அதை அவன் மறைத்துச் செய்ததாகவும் இருக்கவில்லை! பெரிய நட்சத்திர ஹோட்டலுக்குத்தான் அழைத்துச் சென்றிருக்கிறான்!

பிறகு, அது நின்றுவிட்டது! பிறகு, வீட்டிலும், வெளியேயும் சில தடவை அவளோடு காணப்பட்டிருக்கிறான்!

ஆனால், இது எல்லாமே, மாதவி சென்னையை விட்டுக் கிளம்பிய சமயத்தை ஒட்டித்தான்! அதற்கு, ஓரிரு வாரங்கள் முன்னும் பின்னும் இருக்கலாம்!

அதற்குப் பிறகு, கிருபாகரனின் வாழ்வில் எந்தப் பெண்ணும் இடம் பெறவில்லை! சந்தேகத்துக்குரிய எதுவும் நடந்ததாகத் தெரியவும் இல்லை!

இதற்கிடையே, கிருபாகரனை மனோகரி அடுத்து சந்தித்தது, ராமகிருஷ்ணா மிஷன் நடத்திய இலவச மருத்துவ முகாம் ஒன்றில்!

விரும்பி ஏற்றிருந்த நர்ஸ் பணியை, வருமானத்துக் காகச் செய்யாதபோதும், வசதியற்றவர்களுக்கு உதவி செய்வதற்காக நடத்தப்படும் மருத்துவ மனைகளிலும், அவை ஏற்பாடு செய்யும் இலவச மருத்துவ முகாம் களிலும், மனோகரி இலவசப் பணி செய்யத் தொடங்கி யிருந்தாள்.

அங்கே, கிருபாகரனைக் கண்டது, அவளுக்கு முதலில் ஆச்சரியமும், பிறகு அதிர்ச்சியுமே! அவனுக்கு எந்த விதத்திலும் சம்பந்தம் அற்ற இடத்தில் கண்டு வியந்த வளுக்கு, உடனேயே, அவன் மாதவியை முதியோர் இல்லத்துக்கு அழைத்துச் சென்றது நினைவு வந்துவிட்டது!

மனோகரியின் பேச்சுக்கு, மாதவி மதிப்புக் கொடுப்பாள் என்பதால், பழைய தந்திரத்தையே இப்போதும் கையாளு கிறானா? ஆனால், ஒரே மாதிரியாக இரண்டு தடவை ஏமாறுவார்களா என்று எண்ணிப் பார்க்க மாட்டானா?

அங்கே எல்லோருக்கும் அவன் பழக்கமானவனாக இருந்ததுகூட, அவளுக்குத் திருப்தியைத் தரவில்லை! முன்பும் அப்படித்தானே நடந்தது?

இரண்டொரு முறை கவனித்துவிட்டு, கணவனிடம் அவள் இது பற்றிக் கூறவும், அவன் துப்பறியும் நிறுவனங்கள் மூலம் மேலும் விசாரிக்க, மூன்று ஆண்டுகளாகவே, இந்த மாதிரிப் பணிகளிலும் கிருபாகரன் தொடர்ந்து ஈடுபட்டிருப்பது தெரிய வந்தது!

அத்தோடு, இப்போது அவன் நடந்துகொள்ளும் முறையும், கணவன் மனைவி இருவருக்குமே திருப்தியைத் தரவே, மனோகரி, மாதவியிடம் கிருபாகரனைப் பற்றிய பேச்சை மீண்டும் எடுத்தாள்.

''அலுவலகத்தில்தான் அவரைப் பார்த்தாக வேண்டிய தலைவிதி! வீட்டிலும், நித்தியின் பேத்தல் வேறு! கொஞ்ச மேனும் நிம்மதியாக இருக்கலாம் என்றால், உனக்குப் பேச வேறு விஷயம் கிடைக்கவில்லையா, மனோ? அவரால் நான் பட்ட துன்பம் போதும், விடு!'' என்று மாதவி எரிச்சல் பட்டதையும் மீறிக் கொண்டு, மனோகரி, கிருபாகரனுக்காக வக்காலத்து வாங்கிப் பேசினாள்.

ஆனால், அவள் என்ன பேசியும், மாதவி, அதைக் கொஞ்சமும் ஏற்க மறுத்தாள்!

28

'அவரும் நொந்திருப்பது போலத் தோன்றுகிறது!' என்று, கிருபாகரனைப் பற்றி மனோகரி முதல் முறை சொன்னதே, மாதவிக்கு வருத்தம்தான்.

அவனால், அவள் அனுபவித்த துன்பம் முழுவதையும் கூட இருந்து பார்த்தவள், மனோகரி! அதன் பிறகும், அவனைப் பற்றி நல்லதாக ஒரு வார்த்தை சொல்லலாமா?

ஏதோ, அவன் நடிப்பில் ஏமாந்து சொல்லி விட்டாள் என்று, அவன் நடிப்பைப் பற்றிப் பேச, அப்போது விஷயம் அத்தோடு முடிந்தது!

முழுமையாக முடிந்தது என்று மாதவி நினைத்துக் கொண்டிருக்க, மனோகரி மீண்டும் அவனைப் பற்றிப் பேசவும், அவளுக்கு எரிச்சலாகி விட்டது!

மனோகரி அவனை முற்றும் உணர்ந்தவள். எனவே அவளிடம் மாதவி எதையும் மறைத்து நடிக்கத் தேவை இருந்ததில்லை!

ஆனால், எரிச்சலை மறைக்காமல் காட்டிய பிறகும், உயிர்த் தோழி, அவனைப் பற்றியே பேசவும், வியப்பும் வருத்தமுமாக அவளைக் கூர்ந்து நோக்கினாள். "என்ன ஆயிற்று, மனோ?" என்று வினவினாள்.

சட்டெனச் சிரித்து, "என்னப்பா, எனக்குப் பைத்தியமோ என்று தோன்றுகிறதா? அதெல்லாம் இல்லை! உன் வாழ்க்கையைச் செப்பனிட ஒரு வழி இருக்கும்போது, அதற்குரிய முயற்சியைச் செய்யாமல், நான் எப்படிச் சும்மா இருப்பது? சொல்லு!" என்று கேட்டாள் அவள்.

"அதாவது, சீர் குலைந்து, கண்டபடி உடைந்து சிதறிக் கிடக்கும் என் வாழ்வைத் தாஜ்மகாலாகக் கட்டி நிலை நிறுத்த, இப்போது வழி கிடைத்து விட்டது! அப்படியா?" என்று, கிண்டலாகக் கேட்டாள் மாதவி.

"ஆமாம்!" என்றாள் மற்றவள் அழுத்தம் திருத்தமாக. "மது, மன்னிக்கத் தகாத தப்பு என்று ஒன்றுமே கிடையாதுப்பா! தான் செய்த தப்பை உணர்ந்து வருந்தும்போது, நாம் மன்னிக்கவும் வேண்டும் அல்லவா? கிருபாகர் இப்போது எப்படி வருந்துகிறார், தெரியுமா? உனக்காக வெகுவாக ஏங்குவதும் தெரிகிறது! மிகவும் நல்லவராகவும் வாழ்கிறார்..." என்று, தானும் கணவனுமாகச் செய்ததை எல்லாம், மனோகரி எடுத்துச்

சொன்னாள். "புடம் போட்ட மாதிரி ஆகிவிட்டார், மாதவி! நீ அவரை மன்னித்து ஏற்றுக் கொண்டால் என்ன?"

"எதற்காக? எனக்கு அவர் தேவை இல்லை!" என்றாள் மாதவி சுருக்கமாக.

"என்ன தேவை இல்லை? நாளைக்கே நித்தி வளர்ந்து, அப்பா வேண்டும் என்றால் என்ன செய்வாய்?"

"உண்மையைச் சொல்வேன்!" என்றாள் மாதவி, தலையைத் திருப்பிக் கொண்டு.

"என்னத்தையெல்லாம் சொல்லுவாய்? சொன்னாலும், அவனுக்குப் புரியுமா? வாய் வார்த்தைக்கு, என்ன வேண்டுமானாலும் பேசாதே!" என்றாள் மனோகரி, சற்றுக் கண்டிப்பான குரலில்.

"சும்மா சொல்லவில்லை, மனோ! நிச்சயமாக, இனி ஒருபோதும், என் வாழ்வில் அவருக்கு இடம் கிடையாது!" என்றாள் மாதவி அழுத்தம் திருத்தமாக.

"யோசித்தே பாராமல், பட்டென்று இப்படிச் சொன்னால், எப்படி மது? நான் உன் கெடுதலுக்குச் சொல்வேனா? உன் கண்ணில் ஒரு சொட்டுக் கண்ணீர் வடிந்தால், எனக்குப் பொறுக்குமா? நானே இவ்வளவு சொல்கிறேன் என்றால், ஆராய்ந்து பாராமலா சொல்லுவேன்? கண்ணனுக்கும்கூட என் கருத்தேதான்! நாங்கள் இருவருமே உன் நலம் விரும்பிகள் என்று உனக்குத் தெரியாதா? அதற்காகவாவது, சற்று யோசிக்கக் கூடாதா?"

சிறு மௌனத்தின் பின், மாதவி மெல்ல நிமிர்ந்து, தோழியைப் பார்த்தாள்.

''மனோ, அவர் எவ்வளவு பெரிய நடிகர் என்று உனக்குத் தெரியுமே! ஒரு தரம் ஏமாறலாம்! மரண அடி பட்ட பிறகும், ஒரு பூனைக்குள்ள சுரணை கூடவா இல்லாமல் இருப்பது?''

''இல்லை, மது! அவர் கண்ணில் வேதனை இருக்கிறது! அது பொய்யில்லை!''

உதட்டளவாய் முறுவலித்தாள் மாதவி. ''படிப்பதில் இருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். மனோ! சிறு வயதில், 'தர்ட்டி நைன் ஸ்டெப்ஸ்' என்று ஒரு துப்பறியும் கதையை விழுந்து விழுந்து படித்தோம், நினைவிருக்கிறதா? ஓர் உளவாளியின் கதை! அதில், கை தேர்ந்த வில்லன், எந்த வேஷம் ஏற்று நடிக்கிறானோ, அந்தப் பாத்திரமாகவே மாறிவிடுவான் என்று எழுதியிருந்தது! அந்த ஐடியாவை வைத்துதான், அதில் வில்லனைக் கண்டு பிடிப்பார்கள்! நினைவிருக்கிறதா? கிருபாகரனுக்கு அது எவ்வளவு கை வந்த கலை என்பது, எனக்குத் தெரியும்! இப்போதும், அது போலத்தான்! திருந்தி வருந்தும் கணவனாக மாறியிருக்கிறார்! அவ்வளவே! அப்புறம் என்ன சொன்னாய்? மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக நல்லவராக இருப்பதாகவா? நீயும் யோசி, மனோ! கிருபாகரும் எத்தனை சினிமா பார்த்திருப்பார்! அப்போதைக்கு விலகிப் போனாலும், கொஞ்ச காலத்தில் மாதவியோ, அல்லது, இன்னும் கொஞ்ச அதிகம் காலம் கழிந்த பின், அவள் பிள்ளையோ திரும்பி வந்து அடிக்கக் கூடும் என்று எதிர்பாராமலா இருந்திருப்பார்? அந்த நிலைக்காக, அவர் அன்றிலிருந்தே தயாராகிக் கொண்டு இருந்திருக்கலாமே! முன்பு, மாதக்கணக்கில் இருந்த கவனம்,

இப்போது ஆண்டுக் கணக்கில் இருக்கவில்லை என்று என்ன நிச்சயம்? ம்...?"

திக்கல், திணறல் இன்றி, மாதவி ஒரு சீராய்ப் பேசி முடித்தபோது, பேச்சிழந்து போனது, மனோகரிதான்!

மெல்லத் தலையசைத்து, "இல்லை, மாதவி! இப்படி யோசிக்காதே! ஒருவர் செயலை, இப்படி இருந்திருக்கும், அப்படி நினைத்திருப்பார் என்று நாம் வண்ணம் தீட்டத் தொடங்கினால், அதற்கு முடிவே கிடையாது! கொஞ்சம் நல்ல விதமாகவும் நினைத்துப் பார்க்க வேண்டும்மா!" என்றாள் மனோகரி!

உறுதியாக மறுத்தாள் மாதவி. "கிருபாகரனை நல்லவிதமாக நினைக்கவே முடியாது, மனோ! அவருக்கு என் வாழ்வில் இடமும் கிடையாது!" என்றாள் முடிவாக.

சற்று யோசித்துவிட்டு, "இந்த முடிவினால் பாதிக்கப்படப் போவது, நீ மட்டுமல்ல, மாதவி!" என்று வறண்ட குரலில், மனோகரி உரைத்தாள், வருத்தத்துடன்.

"நித்திதானே? இப்படி ஒரு தகப்பனுக்குப் பிறந்ததற்கு, அவனும் பட்டுத்தானே ஆகவேண்டும்?" என்றாள் மாதவி.

"பாதிப்பு நித்திக்கு மட்டுமல்ல! எங்களுக்கும்!" என்றாள் மனோகரி, மீண்டும் வருத்தமாகவே.

"எ... என்ன சொல்கிறாய், மனோ? உங்களுக்கும் என்றால்? அப்படியென்றால் என்ன அர்த்தம்?" என்று, கலக்கத்துடன் கேட்டாள் மாதவி.

"நாங்கள் என்றால், கண்ணனும் நானும் என்று அர்த்...

"ச்சு! நான் அதைக் கேட்கவில்லை! இந்த விஷயத்தில், உங்கள் இருவருக்கும் என்ன பாதிப்பு? அதைக் கேட்கிறேன்!" என்று படபடத்தாள் மாதவி.

"என்ன பாதிப்பா? ஒன்றுமே புரியாத மாதிரிக் கேட்கிறாயே! நீ இப்படித் தனி வாழ்வு வாழும்போது... உண்மையைச் சொல்லி விடுகிறேனே! எங்களால், இயல்பாக வாழ முடியவில்லை, மாதவி! இப்படி இருப்பதற்கு, நான் பேசாமல், பழையபடி விடுதியில் தங்கி, நர்ஸ் பணியைத் தொடர்வது மேல் என்று தோன்றுகிறது!"

"என்ன உளறுகிறாய்?!"

"உளறல் அல்ல, உண்மை!" என்றாள் மனோகரி பிடிவாதக் குரலில்.

நோயாளிகளுக்குக் கட்டாயப்படுத்தி மருந்து கொடுத்துப் பழகியவள்தானே? தோழியின் வாழ்வை நல்லபடி திசை திருப்பவும், அதுதான் வழி என்று எண்ணினாள்.

முகம் இறுக, "அதாவது, நான் கிருபாகரனை ஏற்கவில்லை என்றால், நீ கண்ணனைப் பிரிந்து விடுவாய்! அப்படியா?" என்று கேட்டாள் மாதவி.

"இன்றைக்கே இல்லை என்றாலும், கொஞ்ச காலத்தில், அப்படித்தான் ஆகும். நிச்சயமாக அப்படி ஆகிவிடுமோ என்பது, என் பயம்!" என்றாள் மனோகரியும்.

தோழியை ஆழப் பார்த்தாள் மாதவி.

பிறகு, "அதற்கு முன் நானே செத்துவிட்டால்..." என்று ஓர் அலட்சிய பாவனையுடன் அவள் கூற, "ஏஏ.. ஏய்! என்னடி?! என்ன உளறல் இது?" என்று மனோகரி பதறிப் போனாள்.

"உளறல் என்ன? நான் உயிரோடு இருந்தால்தானே, நீ இப்படி என்னை மிரட்ட முடியும்? நானே செத்துப் போனால், இந்தப் பிரச்சினை தானாகத் தீர்ந்துவிடும்தானே?"

"உனக்கு ஒரு பிள்ளை இருக்கிறதே! அதன் கதி என்ன ஆகுமாம்?" என்று கோபமாகக் கேட்டாள் மனோகரி.

"ஒன்றும் ஆகாது! என்னையே பார்த்துக் கொண்டவள் நீ! எனக்காக வேலையைக் கூட விட்டுவிட்டு வந்தவள்! என் பிள்ளையை வளர்க்க மாட்டாயா, என்ன?"

"அந்தத் தைரியத்தில்தான் பதிலுக்கு மிரட்டுகிறாயா?" என்று, மீண்டும் கோபமாகவே மனோகரி வினவினாள்.

"இது வெறும் மிரட்டல் அல்ல! உண்மை!" என்றபோது, மாதவியின் முகத்தில் கனல் வீசியது. "படுக்கையில் கூட, நடித்தேன் என்றாரே! அந்த மனிதரோடு மீண்டும் இணைந்து வாழ்வதைவிடச் சாவு நிச்சயமாகவே மேலானதுதான்! நீ இன்னொரு தரம் இப்படிப் பேசினால் நடக்கப் போவதும்கூட!" என்றபோது, மாதவியின் குரலிலுமே தீப்பொறி பறந்தது!

29

கிருபாகரனைப் பற்றி, இனி ஒரு வார்த்தை கூடப் பேசுவதில்லை என்று மனோகரி சத்தியம் செய்யாத குறையாகக் கூறிய பிறகும், மாதவியின் ஆத்திரம் அடங்கவில்லை! மாறாகப் பெருகியது என்றே சொல்லலாம்!

ஆனால், பொங்கிப் பெருகிய சீற்றத்தின் இலக்கு மாறிவிட்டது!

அன்றைய மனோகரியின் பேச்சின் முழுக் காரணமும், தோழியின் நன்மையை உத்தேசித்தே என்று உணர முடிந்ததால், அவளிடம் மாதவிக்கு அதிகக் கோபம் வரவில்லை! எல்லாம் தெரிந்திருந்தும், இவளே இப்படிச் சொல்லுகிறாளே என்கிற வருத்தம் மட்டும்தான்.

ஆனால், இந்தப் பேச்சின் காரணகர்த்தா யார்? கிருபாகரன்தானே!

சில ஆண்டுகளுக்கு முன், மாதவியிடம் நல்லவனாகக் காட்டிக்கொண்டு, அவளைக் குற்றுயிராக்கினான்.

இப்போது, அதே கதையை, அவளிடமே நடித்தால், 'பப்பு வேகாது' என்று உணர்ந்து, மனோகரியிடம் உத்தமன் வேஷம் போடுகிறான்!

கூடவே, பெண்டாட்டி, பிள்ளைக்காக ஏங்குவது போலக் காட்டிக் கொண்டிருப்பான்! தனக்காகப் பேசுமாறு கேட்டும் இருப்பான்!

மற்றப்படி, மனோகரி இதில் தலையிட்டிருக்கவே மாட்டாள். அதுவும், பழைய கதை முழுவதும் தெரிந்திருக்கும் போது!

இருக்கட்டும்! இதுபோல இன்னொரு முயற்சி செய்யும் நினைவே வராத அளவுக்கு, அவனை வறுத்து எடுத்து விடவேண்டும்!

மறுநாள் மாலையில், அன்றைக்குச் செய்யப்பட்டிருந்த அலுவல்கள், மறுநாள் செய்ய வேண்டிய வேலைகள் போன்றவற்றைப் பேசி முடித்துவிட்டு, அந்தத் துறைத் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்கள் சென்ற பிறகு, "உங்கள்

ரிப்போர்ட்டைக் கடைசியில் பார்க்கிறேன், மிஸ்டர் கிருபா கரன்!'' என்றுரைத்து, அவனைக் காத்திருக்க வைத்து விட்டு, பொது நிர்வாகியுடன் பேச்சை முடித்து அவரை அனுப்பினாள்.

பிறகு, கிருபாகரனின் அறிக்கையையும் பார்த்துக் கையெழுத்திட்டு விட்டு, கையில் இருந்த பேனாவை மூடி, ஸ்டாண்டில் செருகிவிட்டு, கிருபாகரனைப் பார்த்தாள்.

''என்ன விஷயம், மாதவி?'' என்று கேட்டான் அவன். ''என்னிடம் என்ன சொல்ல வேண்டும் என்று இருக்கச் சொன்னாய்?''

செய்வதையும் செய்துவிட்டு, இவ்வளவு அழுத்தமா என்று சினம் பெருக, ''ஓய்வு நேரத்தில், 'க்ரைம்' நாவல் தான் படிப்பதா?'' என்று சாதாரணமான குரலில் வின வினாள்.

ஆனால் அவனோ, ''சில ஆண்டுகளாகவே, அயர்ந்து தூங்கும்போது தவிர, ஓய்வு நேரம் இல்லாதிருக்கும்படிதான் பார்த்துக் கொள்வது!'' என்று அமைதியாகப் பதிலுரைத்து, அவளது ஆத்திரத்தை அதிகப்படுத்தினான்.

ஓய்வாக உட்கார்ந்திருந்தால், மனைவி, பிள்ளை நினைவு வந்து மனம் தவித்துப் போகும் என்று, ஓய்வைத் தவிர்க்கிறான் என்று சொல்லாமல் சொல்கிறானாம்!

அவனது உட்குறிப்பை உணராதவன் போன்று, ''ஓய் வில்லாமல் மனதாலும், உடலாலும் நீங்கள் உழைத் ததின் அறிகுறிதான் நிறுவனத்தின் வளர்ச்சியில் நன்றாகத் தெரிகிறதே! ஆனால், இப்போது நிர்வாகத்தை நானும்

பார்த்துக் கொள்வதால், உங்களுக்குப் பழைய மாதிரி, ஓய்வின்றி உழைக்கத் தேவையிராது! அதனால், சற்று ஓய்வும் எடுத்துக் கொள்ளுங்கள்! அந்த ஓய்வு நேரத்தில், விவேகானந்தர், ராமகிருஷ்ணர் புத்தகங்களைப் படியுங்கள்! ஏனென்றால், உங்களுக்காகவே, அவர்கள் நிறைய எழுதி வைத்திருக்கிறார்கள்!'' என்று, இடையே அவன் இடமே கொடாமல் பேசி முடித்தாள்.

அவனும் எதையும் பேச எண்ணியவனாகத் தோன்ற வில்லை. அவளையே பார்த்தபடி, சும்மா உட்கார்ந்திருந் தான்.

'திண்ணக்கம்!' என்று மனதினுள் கடுப்புற்று, ''அவர்கள் என்ன எழுதி வைத்திருக்கிறார்கள் என்று நீங்கள் கேட்க வில்லையே!'' என்றாள் மாதவி.

''அதையும் நீயாகவே சொல்லுவாய் என்று எண்ணினேன்!'' என்றான் அவன், சாதாரணமாகவே.

எரிச்சலைக் காட்டிக் கொள்ளாமல், ''முழுவதுமே நல்ல நல்ல பொன்மொழிகள். அப்படியே பின்பற்ற வேண்டியவை. அதிலும் அடுத்தவர்களிடம் ஆலோசனை கேள், ஆனால், முடிவை நீயே எடு!' என்று விவேகானந்தரின் அறிவுரை எனக்கு மிகவும் பிடிக்கும்! அதன்படிதான், நான் எப்போதும் நடப்பது!'' என்றாள் அவள்.

''அப்படியா? நல்ல பழக்கம்!'' என்றான் அவன்.

''நிச்சயமாய்! அதை உங்களிடம் ஏன் சொல்லுகிறேன் தெரிகிறதா?''

''இல்லை!'' என்று தலையசைத்தான் அவன்.

"என் சம்பந்தப்பட்ட எந்த முடிவையும் நான்தான் எடுப்பது. மனோகரி என் உயிர்த் தோழியே என்றாலும், வாழும் முறை பற்றி, அவளிடம் யோசனை கேட்பது கிடையாது! அதனால், அவளைச் சிபாரிசு பிடிப்பது போன்ற வீண் வேலைகளைச் செய்வது மடத்தனம்!"

லேசாகப் புருவம் சுருக்கிப் பார்த்தானே தவிர, கிருபாகரன் பதிலேதும் சொல்லவில்லை!

"நான் சொல்வது புரிகிறது என்று நினைக்கிறேன்!"

"இல்லை!" என்றான் கிருபாகரன் மீண்டும்.

"இந்தக் கதை என்னிடம் வேண்டாம்!" என்றாள் மாதவி ஆத்திரத்துடன். "ஒரு குறு மிளகின் அளவு மூளை இருப்பவருக்குக் கூட, என் பேச்சுப் புரிந்திருக்கும்! நீங்கள் ...யப்பா! உங்களுக்கு உடம்பெல்லாம் மூளை! அதிலும் கிரிமினல் மூளையாயிற்றே! உங்களுக்கா புரியாது? நம்பும்படியாகப் பேசுங்கள்!" என்றாள் அவள் ஏளனமும் எகத்தாளமுமாக.

அப்போதும், முகமோ, குரலோ மாறாமல், "எதற்காகவோ, எனக்காக உன்னிடம் பேசும்படி, நான் மனோகரியிடம் கேட்டதாக நீ குற்றம் சாட்டுவது புரிகிறது!" என்ற கிருபாகரின் பேச்சில், மாதவி குறுக்கிட்டாள்.

"எதற்காகவோவா? எதற்காக என்று உங்களுக்குத் தெரியாது? என்ன நடிப்பு! இன்னமும் இந்த நடிப்பில் ஏமாறுவதற்கு, நான் என்ன பழைய மாதவி என்று எண்ணினீர்களா? செய்யக் கூடாத அயோக்கியத்தினம் எல்லாம் செய்துவிட்டு, இப்போது சிபாரிசுக்கு மனோவைப் பிடித்தீர்களா? வெட்கமாயில்லை? ஆனால், வெட்கம், மானம்,

சூடு, சுரணை... ஏதேனும் கொஞ்சம் இருந்திருந்தாலும், இத்தனை நாள் இங்கேயே உட்கார்ந்து கொண்டிருக்க உங்களால் முடிந்திருக்குமா, என்ன? சே!''

நாகரீகத்தின் வரம்பை மீறிப் பேசுகிறோம் என்பதை உணர்ந்தபோதும், மாதவியால் பேச்சை நிறுத்த முடியவில்லை! கடைசியாக அவள் சொன்ன 'சே!' அவளது சொந்தப் பேச்சுக்கும் சேர்த்துதான்!

அவள் பொரிந்து கொட்டியது, ஒருவாறு அவனைத் தாக்கி விட்டது போலும்!

இருக்கையிலிருந்து எழுந்து, ''எதையோ தவறாக ஊகித் திருக்கிறாய் என்று புரிகிறது! மனதை அமைதிப்படுத்திக் கொண்டு யோசித்தால், உனக்கே புரியும்! இப்போது வேறு விஷயம் ஒன்றும் இல்லை என்றால், நான் கிளம்புகிறேன்!'' என்றுவிட்டு, அங்கிருந்து சென்றுவிட்டான் அவன்!

தவறான ஊகமாமே! தவறான ஊகமா, இவனை இப்படி ஓட வைத்திருக்கிறது?

ஆனால் இப்போதும், கிளம்புகிறேன் என்றானே தவிர, இங்கிருந்து ஒரேயடியாகப் போய்விடுகிறேன் என்றா சொன்னான்? இல்லையே! சொல்ல மாட்டானே! சின்னச் சின்ன வார்த்தைகளில் கூட உள்ளர்த்தம்! அத்தோடு, இவன் இதை விட்டுப் போவானா என்ன? வாழ்வின் லட்சியம் ஆயிற்றே!

இலவசமாக உழைப்பை நல்கும் பல்வேறு தர்ம காரியங் களில் இருவருமே ஈடுபட்டிருந்ததால், மனோகரியைக் கிருபாகரன் விரைவிலேயே சந்திக்க முடிந்தது.

வேலையின் இடையே சற்று ஓய்வு கிடைத்தபோது, அவளிடம் சென்று, கிருபாகரன் விவரம் கேட்டான்.

எதையும் மறைக்காமல் அவளும் நடந்ததைத் தெரிவித்தாள்.

''என்னது? 'செத்துவிட்டால்... என்றாளா? வேண்டாம் சிஸ்டர்! மதுவிடம் எனக்காகப் பேசாதீர்கள்! வேண்டாம்!'' என்றான் வேதனையோடு.

''உங்களுக்காக இல்லை. மதுவுக்காகவும்தான்! முக்கியமாக, நித்திக்காகவும்தான். மூவரும் சேர்ந்து வாழ்வதுதானே, அவர்களுக்கும் நல்லது?''

''இப்படியே இருந்தாலும், அவர்கள் இருவரும் நன்றாகத்தான் இருப்பார்கள், சகோதரி! அழகான தூக்கணாங்குருவிக் கூடாக என் வீடு இருந்திருக்கும்! குரங்காய் அதைக் கலைத்து எறிந்தது, நான்தானே? பட வேண்டியதுதான். எல்லோரும் தினை விதைப்பார்கள். அதையே அறுவடையும் செய்து பயனடைவார்கள்! கொழுப்பெடுத்துத் தீவினையை விதைத்தால், அறுவடையும் அதைத்தானே செய்தாக வேண்டும்?''

சிறு மௌனத்தின் பின், ''ஒன்று கேட்கலாமா?'' என்று மனோகரி வினவினாள்.

''என்ன?''

''அந்த 'சுபி' என்ன ஆனாள்?''

30

அந்த 'சுபி'யைப் பற்றிய ஒரு குறுகுறுப்பு மனோகரிக்கு எப்போதுமே உண்டு.

முதலில், மாதவியைவிட அவள் எந்த விதத்தில் சிறந்தவள் என்று, ஆத்திரத்துடன் கூடிய குறுகுறுப்பு!

அவ்வளவு திட்டமிட்டவன், அவளை மணக்காதது ஏன் என்று அடுத்த குறுகுறுப்பு!

கடைசியாக, அவள் என்ன ஆனாள் என்று, அது ஒரு குறுகுறுப்பு!

அவள் எவ்வளவுதான் கிருபாகரனை நம்பினாலும், ஒரு வேளை, மாதவி சொன்னது போலக் கிருபாகரன் அவளை எங்கேனும் மறைத்து வைத்திருக்கக் கூடுமோ என்று, அடி மனதில் குறுகுறுத்துக் கொண்டேதான் இருந்தது.

மனதின் உறுத்தல், அவன் மெய் சொல்வானா, மாட்டானா என்பதே இல்லாமல், சட்டென வெளி வந்துவிட்டது!

ஆனால், அவன் சற்றும் தயங்காமல், "தெரியாது! தெரிந்து கொள்ளும் ஆர்வமும் இல்லை!" என்று தெளிவாகப் பதில் கூறவும், அவள் மனம் குழம்பியது.

"ஆனால், நீங்கள்... நீங்கள் முன்பு வேறு சொன்னதாகக் கேள்வி!"

"நீங்கள் கேள்விப்பட்டது... அதாவது அப்போது மாதவி உங்களிடம் சொன்னது சரிதான்! ஆனால், எனக்கு மதுதான் என்று, உடனேயே தெரிந்து விட்டது! அவள் எழுதிய கடிதம் பற்றியும் உங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்! அதனாலேயே, அவளைத் தேடப் பயமாக இருந்தது! அவள் அறியாமலே தேடிக் கண்டுபிடித்தாலும், எந்த முகத்தோடு அவளை அழைப்பது? அதுதான், ஏற்கெனவே எல்லாவற்றையும் கொட்டிக் கவிழ்த்து, நாசமாக்கி முடித்து விட்டேனே!"

எந்த வித உணர்ச்சியையும் காட்டி விடக் கூடாது என்ற பிடிவாதத்துடன், தணிந்த குரலில் அவன் கூறிய விதமே,

அவன் தன்னைத் தானே நிஜமாகவே நொந்து கொள்வதை நன்கு உணர்த்திவிட, மனோகரியின் இளகிய மனம் கனிந்து உருகியது.

தப்பை உணர்ந்து திருந்தியவன், பத்து நல்லவனுக்குச் சமம் என்பார்கள்! இது புரியாமல், மாதவி என்னென்ன பேசி விட்டாள்!

''இனி இதைப் பற்றிப் பேசினால், செத்துவிடுவேன் என்றபோது, மது முகத்தைப் பார்க்க வேண்டும்! அப்படியே தணல் மாதிரி ஜொலித்தது! தீயே எரிகிற மாதிரி! அவளுக்காகப் பேசுகிறேன் என்றே புரியவில்லையே!''

''வேண்டாம் சிஸ்டர்!'' என்றான் அவன் அவசரமாக. ''தயவு பண்ணி, எனக்காக அவளிடம் பேச வேண்டாம்! என்னைக் குத்திக் குதறவேனும், என் மது நல்லபடியாக இருக்க வேண்டும்! அது போதும், எனக்கு!''

ஒன்றும் செய்ய மாட்டாத வருத்தத்துடன் மனோகரி திரும்பிச் சென்றாள்.

குத்திக் குதற என்று கிருபாகரன் சொன்னதுபோல, மாதவி முடிந்தவரை அவனிடம் கடுமையாகவே நடந்து கொண்டாள். மற்றவர் முன்னிலையில், அவனது பதவிக்கு உரிய மரியாதையை அளித்த போதும், தனிமையில் உதாசீனமாகப் பேசத் தவறுவது இல்லை.

ஆனால், இரு கைகள் தட்டினால்தான் ஓசை!

மாதவி என்ன பேசினாலும், கிருபாகரன் அதைக் கண்டு கொள்வதாகவும் இல்லை. திருப்பிக் கொடுப்பதாகவும் இல்லை என்பதால், ஒரு வழிப் பாதையாகத் தான் ஒருத்தியே

பேசுவதில், அவளுக்கே ரசனையற்றுப் போய்க் கொண்டிருந்தது.

அதைக் கிருபாகரன் கண்டு பிடித்து விடக் கூடாது என்பதற்காக, அவள் மேலும் கடுமையான சொற்களைப் பயன்படுத்தலானாள்.

எப்படியாவது, இந்தச் சொற்கள் பொறுக்காமல், அவன் இங்கிருந்து அகன்று போய்விட மாட்டானா என்றிருந்தது அவளுக்கு. அவனைப் பார்க்க நேராவிட்டால், இந்தக் கோபம், கொதிப்பு, ஆங்காரம், எதுவும் தோன்றாதல்லவா? இவற்றுள் எதுவுமே மனதுக்கு இதம் தரும் உணர்ச்சிகள் இல்லையே! வலியெழுப்புகிறவைதானே?

அவனால் அவள் பட்டது போதாதா? இன்னும் ஏன் அனுபவிக்க வேண்டும்?

ரொம்பவும் யோசித்து, அவனை மடக்கி விரட்ட அவள் இன்னொரு வழியைக் கையாள முடிவு செய்தாள்.

முன்பே அவள் கூறிய குற்றச்சாட்டுதான்! அதைக் கொஞ்சம் மாற்றிச் சொன்னாள்.

கிருபாகரனின் பிள்ளைப் பாசமே வெறும் வேஷம் என்றவள், இப்போது, கொஞ்சம் சேர்த்துச் சொன்னாள்.

அந்தப் பாசமே, அவள் மனதை இளகச் செய்வதற்காகப் போடும் வேஷமாம்!

பதவியை விட்டு இறக்கி, முதலாளி என்ற மதிப்பையும் பறித்த பிறகும், அவன் தினமும் அதே நிறுவனத்துக்கு வந்து போவதை விடாதிருப்பதே, அவனது திட்டத்தைப் பிட்டுப் பிட்டு வைக்கிறதாம்!

"என்ன திட்டம்?" என்று, வறண்ட குரலில் கேட்டான் அவன்.

"உங்கள் திட்டம் உங்களுக்குத் தெரியாமல் இராது! ஆனால், என் வாயாலும் ஒரு தரம் கேட்க ஆசை என்றால், தாராளமாகச் சொல்லுகிறேன்!' என்று தொடங்கிச் சொன்னாள்.

நித்திலனைக் கொஞ்சிக் குலவிப் பாசமிகு தந்தையாக அவன் பழகுவதைப் பார்த்து, மாதவி மனம் இளகிவிடுவாள், அதை மெய்யென்று நம்பி நிறுவனத்தை மீண்டும் அவன் கையில் கொடுத்து விடுவாள் என்பது அவனது எண்ணம் என்றாள்.

ஆனால், தன்னை மெய்ப்படுத்தும் ஒரு வழியைக் கிருபாகரன் இதில் கண்டுபிடித்தான்.

"சொல்லு மாதவி, 'வெற்றி' சைக்கிள் நிறுவனத்தை அடைவது ஒன்றேதான் என் வாழ்க்கையின் ஒரே குறிக்கோள். அதை நிறைவேற்ற எந்த வழியையும் கடைப்பிடிப்பேன் என்பது உன் கருத்தா?" என்று வினவினான்.

"என் கருத்து மட்டுமல்ல! அது நிரூபிக்கப்பட்ட உண்மை யும்கூட!" என்றாள் அவள் நிச்சயமான குரலில்.

மறுக்க மாட்டாத நிஜம்!

கிருபாகரன் தயங்கியது ஒரு கணமே. உடனேயே, "முன்பு என்ன நடந்திருந்தாலும், இப்போது அப்படியில்லை என்று நான் நிரூபித்து விட்டால்?" என்று அவன் மேலே தொடருமுன் குறுக்கிட்டு, "நடக்கிற காரியங்கள் பேசுங்கள்!" என்றாள் மாதவி மிகவும் அலட்சியமாக.

"நடக்கிற காரியம்தான் பேசுகிறேன்! அப்படி நான் நிரூபித்து விட்டால்?" என்று சவால் விடும் தோரணையில் கேட்டான் கிருபாகரன்.

சட்டெனக் கொதித்து, "நிரூபித்து விட்டால், உடனே கொஞ்சிக் குலவிப் பழைய மாதிரி, உங்களோடு வாழுவாள் என்று நினைப்பா?" என்று ஆத்திரத்தோடு கேட்டாள் மாதவி.

மீண்டும் சற்றுத் தயங்கிவிட்டு, "அந்த வாழ்வுக்கு இனி வாய்ப்பில்லை என்று எனக்குத் தெரியும்! நான் கேட்பது வேறு. உன் குற்றச்சாட்டு தவறென்று நிலை நாட்டிவிட்டால், நித் திலனை வாரத்தில் இன்னுமொரு நாள் பார்த்துப் பழக அனு மதிப்பாயா? எனக்கு அது போதும்!" என்று கேட்டான் அவன்.

ஒரு வினாடி, மாதவி திகைத்தாள்.

இவனுக்கு மகனிடம் இவ்வளவு ஆசையா?

நம்ப முடியவில்லை என்று எண்ணும்போதே, இவனை நம்பக் கூடாதே என்பதும் நினைவு வந்தது!

உள்ளூரத் தன்னைத் தானே ஓங்கிக் குட்டிக்கொண்டு, "கத்தரிக்காயில் நெய் வடிகிறது என்று கதை கட்டினால், அதை நம்புகிறவர்களுக்குப் புத்தியில்லையா என்றுதான் கேட்பார்கள்! நல்லவேளையாக, இப்போது எனக்குப் புத்தி இருக்கிறது. அதனால், உங்களால் ஒரு போதும் நிரூபிக்க முடியாது என்று, எனக்குத் தெரியும்!" என்று அறிவித்தாள் மாதவி.

"முடியும்!" என்றான் அவன். "இந்த நிறுவன எல்லைக்குள், நான் இனிக் கால் எடுத்து வைக்காவிட்டால்? என் வசம் இருக்கும் பங்குகளை உன் பெயருக்கு மாற்றிவிட்டு, இந்தப் பதவியை விட்டும் விலகி, வெளியேறி விட்டால், அப்புறம் இந்த நிறுவனத்துக்கும் எனக்கும் ஒரு தொடர்பும் இருக்க வழியிராதே! என்ன சொல்லுகிறாய்?"

உண்மைதான்! இந்த இரண்டையும் செய்து விட்டால், அப்புறம், அவனாக விரும்பினால்கூட, நிறுவனத்துக்குள் வர முடியாதுதான்!

ஆனால், செய்வானா?

செய்துவிட்டால்... என்று எண்ணும்போதே, மாதவிக்கு உள்ளூர ஒரு படபடப்பு உண்டாயிற்று. ஆனால், கிருபாகரன் 'வெற்றி'யை விடமாட்டான் என்பதையும் அறிவு பூர்வமாக உணர்ந்திருந்ததால், ''ஒரு தரம் ஜிஎம் சார் சொன்னார், நிறுவனப் பொறுப்பை ஏற்றதில் இருந்து, நீங்கள் ஒரு நாள் கூட, அலுவலகத்துக்கு வராமல் இருந்தது இல்லையாம்! அந்த அளவுக்கு, 'வெற்றி'யின் வெற்றிக்காக நீங்கள் உழைத் திருப்பதாக அவர் நினைப்பு! ஆனால், இந்த நிறுவனத்தின் மீது உங்களுக்கு உள்ள வெறியின் அளவு அது என்று எனக்கல்லவா தெரியும்! பதவியையும் பங்குகளையும் விட்டுக் கொடுப்பது இருக்கட்டும்! முதலில், நாளையிலிருந்து இந்தக் காம்பவுண்டுக்குள் வராமல் இருந்து காட்டுங்கள்! அதன் பிறகு, மற்றதைப் பார்ப்போம்!'' என்றாள், அவள் நம்பாத குரலில்.

ஒரு சிறு கையசைவுடன், ''அவ்வளவுதானே! நிச்சயமாக இருந்து காட்டுவேன்! என் பொறுப்புகளை ஒப்படைக்கும் வரை மட்டும்... என்றவனை இடையிட்டு, ''அதற்காக நீங்கள் காத்திருக்க வேண்டாம்! சம்பந்தப்பட்ட ஃபைல்களை உங்கள் இருப்பிடத்துக்கு அனுப்பி, கையெழுத்து வாங்கிக் கொள்கிறேன்!'' என்றாள் மாதவி அவசரமாக.

உணர்ச்சியற்ற பார்வையால் அவளை நோக்கினான் அவன். ''புரிகிறது! என்னை, நாளையிலிருந்தே உள்ளே வராதே என்கிறாய்! என்னை விரட்டுவதில், எவ்வளவு வேகம்! சரி. உன் விருப்பம் போலவே இருக்கட்டும்! நாளையிலிருந்து, என்னை நீ இங்கே பார்க்க மாட்டாய்!'' என்று, உறுதியான குரலில் அறிவித்தான் கிருபாகரன்.

இவனை விரட்டுவது இவ்வளவு எளிதா என்று ஆச்சரியமாக இருந்தது மாதவிக்கு! எப்போதோ செய்திருக்க வேண்டியது என்று எண்ணும்போதே, இது நடக்குமா என்று சந்தேகமாகவும் இருந்தது.

'வெற்றி'யை விட, அவனால் இயலுமா? ஆனால் உறுதியாகச் சொன்னானே!

உள்ளூர ஓர் அலைபாய்தலும் பரபரப்புமாக மறுநாள் சைக்கிள் நிறுவனத்துக்குள் சென்றவளுக்கு, அவளுக்கும் முன்னதாகவே வந்து நிறுத்தப்பட்டிருந்த கிருபாகரனின் காரைப் பார்த்ததும், ஏமாற்றத்தில் சொத்தென்று மனம் சோர்ந்து போயிற்று.

வந்திருக்கிறான்! பெரிதாகச் சொன்னானே! எல்லாம் பொய்! வழக்கமான பித்தலாட்டம்!

ஆனால், அனுபவ பூர்வமாகவே அவனை அறிந்த அவளும் இதைத்தானே எதிர்பார்த்திருக்க வேண்டும்? மாறாகக் கிருபாகரன் பெரிதாக எதையோ நிரூபித்து விடக்கூடும் என்று ஆசைப்பட்டதும், ஆசைப்பட்டு அதை எதிர்பார்த்ததும், எவ்வளவு பெரிய முட்டாள்தனம்!

31

நம்ப வைத்துக் கழுத்தறுப்பது, கிருபாகரனுக்கு ஒன்றும் புதிதல்ல! கை வந்த கலையே! ஏற்கெனவே, அவளுக்கே அதைச் செய்தவன்தான் அவன்!

முழு அளவில் அந்த வேதனையை அனுபவித்த பிறகும், அவன் மெய் சொல்லக் கூடும் என்று மாதவி எப்படி எதிர் பார்க்கலாம்?

அப்படி எதிர்பார்ப்பதே மடத்தனம்தானே!

அதற்கு மேல் நிரூபித்து விட வேண்டும் என்று, உள்ளூர ஆசை வேறு!

இந்த ஆசையின் அடிப்படை புரியாத முட்டாளா, அவள்?

எனவே, முதுகில் குத்தினாற்போல, கணவன் பொய்த்துப் போனதைக் காட்டிலும், அவன் நல்லவன் என்று நிரூபிக்கப்படுவதை ஆவலாக எதிர்பார்த்த, தன் சொந்த மடத்தனம்தான் மாதவியை மிகவும் பாதித்தது.

உள்ளே கசப்பும் வெறுப்பும் மண்டிக் கிடக்க, அதை மறைத்து, எதிர்ப்பட்டுக் காலை வணக்கம் சொன்னவர்களுக்கு, உதட்டை இழுத்துப் பிடித்துப் புன்னகையோடு பதில் தந்தவாறு உள்ளே சென்றபோது, ஏதோ ஒரு மாறுதல் அவள் கண்ணை உறுத்தியது.

'வெற்றி' சைக்கிள் நிறுவனம் வளர வளர, மேற்பார்வைக்கும், காவலுக்கும், தனிப்பட ஆட்கள் நியமிக்கப் பட்டிருந்தார்கள். அவர்கள் அங்கங்கே சுற்றி வந்து கண்காணித்துக் கொண்டிருப்பார்கள்.

ஆனால் இதுவரை எந்தத் தீமையும் நேராததால் எல்லோரும் ஓர் இலகுத் தன்மையோடு நடந்து கொள்வது போலத் தோன்றும். வேலையில் கவனம் இருந்தாலும், எல்லோருமே பழகியவர்கள் என்பதால், அவர்களிடையே சிறு சிரிப்பும் பேச்சும் இருக்கும்.

ஆனால், இன்று சூழ்நிலை மாறிவிட்டிருந்தது!

என்னவோ, குடியரசுத் தலைவரே அங்கே வரப் போவது போல, எல்லோரும் எச்சரிக்கையோடு வளைய வந்தனர்!

யோசித்துப் பார்க்கையில், வெளி கேட் காவலர்கள்கூட, இதே விரைப்புடன் நின்றது, மாதவிக்கு நினைவு வந்தது.

விஷயம் என்னவாக இருக்கும்?

அதே யோசனையாகச் சென்றவளிடம், நிர்வாகி விரைவிலேயே விவரத்தைத் தெரிவித்தார்.

ஓர் ஆண்டுக்கு முன்னதாக, அந்தப் பகுதி ரௌடி ஒருவன், தனக்கு இரண்டு லட்சம் ரூபாய் தர வேண்டும் என்று கேட்டு மிரட்டியிருக்கிறான். அப்போது, கிருபாகரன் அவனைச் சாமர்த்தியமாகப் போலீசில் மாட்டி வைத்து விட்டானாம்!

சாமர்த்தியத்துக்கு அவனுக்கு என்ன குறைச்சல் என்று எரிச்சலோடு மாதவி எண்ணமிடும்போதே, அவர் தொடர்ந்தார்.

அந்த ரௌடி நட்டுவுக்குச் சிறைத் தண்டனையே கிடைத்ததாம். நேற்று நட்டு விடுதலையாகி வந்து விட்டானாம்! இன்று காலையில் கிருபாகரனை செல்லில் கூப்பிட்டானாம். முன்பு கொஞ்சம் அசால்ட்டாக இருந்ததால் மாட்டிக் கொண்டேன், இனி அப்படி நடக்காது., பழைய இரண்டு லட்சம், அதைத் தராததற்கு அபராதம் மூன்று லட்சம், சிறைக்கு அனுப்பியதற்குத் தண்டனையாக ஐந்து லட்சம், ஆகப் பத்து லட்சம் ரூபாய் கொடு, இல்லையென்றால், தொழிற்சாலை விபரீத விளைவுகளைச் சந்திக்க நேரும் என்று பயமுறுத் தினானாம்! அதனால், கிருபாகரன் கிளம்பி வந்து, இங்குள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்தி இருக்கிறார் என்று முடித்தார் பொது நிர்வாகி.

மெய்யாகவே கிருபாகரன் சாமர்த்தியக்காரன்தான்., இதை ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும்! மீண்டும் உள்ளே

வருவதற்கு, என்னமாய் ஒரு வழியை உண்டாக்கிக் கொண்டான்!

அந்த ரௌடி அவனுக்கே நேராக ஃபோன் செய்து மிரட்டினானாமா? ஃபோனில் பேசியதைப் பொய்யென்று, யாரால் நிரூபிக்க முடியும்?

யோசித்து, "போலீசில் புகார் கொடுத்தாயிற்றா?" என்று வினவினாள்.

"அது, கிருபா சாரைத்தான் கேட்க வேண்டும்!" என்றார் அவர். "முன்பும் அவரேதானே சமாளித்தார்."

"எனக்குச் சொல்லவில்லையே!"

"அவசியப் பட்டபோது, தானே சொல்வதாகக் கிருபா சார் சொன்னார்!"

என்னதான் மாதவி சேர்மன் என்றபோதும், இன்னமும் கிருபாகரனின் கீழ்த்தான் தொழிற்சாலை இயங்குகிறது என்ற சந்தேகம், அவளுக்கு எப்போதும் இருந்தது. இப்போது, பொது நிர்வாகியின் பேச்சு அதை உறுதி செய்தது.

ஆத்திரத்தைக் காட்டிக் கொள்ளாமல், "அவரை என்னை வந்து பார்க்கச் சொல்லுங்கள்!" என்று விட்டுத் தன் அறையை நோக்கி நடந்தாள் அவள்.

அவன் வந்ததுமே, "நல்ல நாடகம்!" என்றாள் ஏளனமாக. "நிறுவனத்தைவிட முடியவில்லை என்றால், அதை ஒத்துக் கொள்வதுதானே? அதை விட்டு, ஊரையெல்லாம் ஏமாற்று வானேன்?"

தலையசைத்து, "மது, இது நிஜம்!" என்றான் அவன் சுருக்கமாக.

அவள் அலட்சியமாக உச்சுக் கொட்டவும், "மெய் மாதவி! உண்மையாகவே, அதற்கும், இதற்கும் சம்பந்தமில்லை! இது போன்ற நிறுவனங்களை மிரட்டிப் பணம் பறிக்கும் ஒருவன், அதிலும் நம்மால் அடிபட்ட விஷப் பாம்பு, இப்போது வெளியே வந்திருக்கிறான்! அபாயகரமானவன்! அதனால்..." என்று சிறு தயக்கத்துடன் அவளைப் பார்த்தான் கிருபாகரன்.

சொன்னால் கேட்பாளா என்ற தயக்கம்!

அதற்கேற்ப, "அதனால் என்ன? நான் பயந்து நடுங்கி, வீட்டுக்குள் பூட்டிக் கொண்டு உட்கார்ந்து கொள்ள வேண்டுமா?" என்றாள் மாதவி கிண்டலாக. "முதலில், இந்த மாயாஜாலக் கதையை நம்புவதற்கே, வேறு ஆளைப் பாருங்கள்!'

"இது வேடிக்கை விஷயம் அல்ல, மாதவி! தயவு பண்ணி, நான் சொல்வதை ஏற்றுக் கொஞ்ச நாள் பொறுப்பிலிருந்து விலகியிரு! ஓய்வெடுத்துக் கொள்! இந்தப் பிரச்சினை தீர்ந்ததும் வரலாம்! ப்ளீஸ்!" என்றான் அவன்.

குரலில் மன்றாடலோடு கூடிய அதிகாரம்! சொல்வது, செய்வது எல்லாமே அவளுக்காக என்பது போலப் பாவனை!

இன்னமுமா ஏமாறுவாள் என்று யோசிக்கவில்லையே! ஏமாற்றி விடலாம் என்று, அவ்வளவு நிச்சயமா?

உதட்டோரம் ஏளனமாய் வளைய, "என் உயிர் மட்டும் என்ன வெல்லக்கட்டி, கிருபாகர்? எல்லோருக்கும் நடப்பது, எனக்கும் நடக்கட்டும்! அதாவது, நிஜமாகவே ஏதாவது நடப்பதாக இருந்தால்!" என்றுரைத்து, லேசாகத் தோளைக் குலுக்கியவள், அத்தோடு பேச்சு முடிந்தது என்பதுபோல, டெலிஃபோன் ரிசீவரைக் கையில் எடுத்தாள்.

சற்று நேரம் நின்று பார்த்துவிட்டுத் திரும்பிச் சென்றான் கிருபாகரன்.

சென்றவன் சும்மா இருக்கவில்லை. பொது நிர்வாகியை உசுப்பிவிட்டு, மாதவியிடம் பேச வைத்தான்.

அவரும், அவனை நம்பி, அவன் சொன்னதையெல்லாம் கிளிப்பிள்ளையாய் ஒப்பித்தார்.

''கிருபாகரன் சொல்வது மெய்தானம்மா! அந்த நட்டு ரொம்பவும் பொல்லாத கிரிமினல்தான்! பெரிய சூப்பர் மார்க்கெட்டு, தொழிற்சாலை உரிமையாளர்களை மிரட்டிப் பணம் பறிப்பது, ஆட்களைக் கடத்துவது, வெடி வைப்பது எல்லாவற்றிலும் ஈடுபடுகிறவன்...

''அவன் இஷ்டம்போல் எல்...லாம் செய்யட்டும் என்று, போலீஸ் பார்த்துக் கொண்டு சும்மாவே உட்கார்ந்திருக் கிறார்களாக்கும்?'' என்று கண்களை அகல விரித்துக் கேட்டாள் மாதவி.

''போம்மா! உனக்கு எல்லாம் வேடிக்கையாக இருக்கிறது போல! எல்லாவற்றிலுமே, செய்வதைச் செய்துவிட்டு, விலாங்கு மீன் போல நழுவி விடுகிறவன் அந்த நட்டு! கிருபா சாருடைய கெட்டிக்காரத்தனத்தில், ஒரு தரம் மாட்டினான்! இப்போது, இன்னமும் கவனமாக வேலை செய்வான்... எதற்கும் நீ கொஞ்ச நாளைக்கு...

''ஆபத்தில் முதல் ஆளாய் ஓடி ஒளிந்து கொண்டேன் என்றால், அப்புறம், நம் தொழிலாளர்களுக்கு என் மீது என்ன மரியாதை இருக்கும், அங்கிள்? முதலில், இந்த மிரட்டல் விவகாரத்தை நான் பெரிதாக எண்ணவே இல்லை. அப்படியே

ஏதாவது நடந்தாலும், எல்லோருக்கும் நடப்பது எனக்கும் நடக்கட்டும்! இனி இது பற்றிப் பேச வேண்டாம்!'' என்று, சேர்மனாகப் பேச்சை முடித்தாள் அவள்.

யார் என்ன சொன்னாலும் மாதவி கேட்பதாக இல்லை என்று ஆனதும், கிருபாகரன் அவளுக்குத் தனியாகப் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்தான்.

வாகனங்கள், ஆட்கள் எல்லோரிடமும், நுழை வாயிலில், மும்முரமாகப் பரிசோதனை நடந்தது. எவ்வளவு வேண்டியவர்கள் ஆனாலும், பணிபுரிபவர் தவிர, வேறு யாரும் உள்ளே அனுமதிக்கப்படவில்லை!

செய்வன திருந்தச் செய்கிறானாக்கும் என்று எள்ளினாள் அவள்.

இந்த எள்ளலின் விளைவாக, அவளுக்கு நேரடியாக வந்த சில டெலிஃபோன் மிரட்டல்களையும், மாதவி அலட்சியம் செய்தாள்.

ஒரு தரம், பொது நிர்வாகியோடு பேசிக் கொண்டிருந்த போது, இது போன்ற ஃபோன் தொடர்பு ஒன்று வர, ''ஏய், நான்தான் முன்னரே சொன்னேனே, உன்னால் ஆனதைப் பார்த்துக் கொள்! இங்கிருந்து ஒரு நயா பைசா கூட, உனக்குக் கிடைக்காது!'' என்று அதட்டியவள், டெலிஃபோனோடு இணைக்கப்பட்டிருந்த 'காலர் ஐடி'யைப் பார்த்துவிட்டு, உதட்டைப் பிதுக்கினாள்.

நிர்வாகி பதறிப்போய், ''என்னம்மா, இது அந்த நட்டுதானே?'' என்று கலக்கத்துடன் வினவினார்.

"அப்படித்தான் பேர் சொல்லிக் கொண்டான். ஒவ்வொரு நேரம், ஒவ்வோர் இடத்தில் இருந்து பேசுகிறான். ஒரு நம்பரில் பிடிக்க முடியவில்லை!" என்றாள் மாதவி.

"நீ சொல்லுவதைப் பார்த்தால், அவன் பல தடவை உன்னிடம் பேசியிருப்பான் போலிருக்கிறதே! அதை விளையாட்டாக எடுக்கக் கூடாதும்மா! முதலில் போலீசில்..." என்று பரபரத்தவரை இடை மறித்து, "அங்கிள், இந்த நிறுவனத்திற்குச் சேர்மனாகச் சொல்கிறேன், போலீசுக்குப் போக வேண்டாம்!" என்று அதிகாரக் குரலில், பிடிவாதமாக மறுத்தாள், அவள்.

அவர் போய் என்ன சொன்னாரோ, உடனேயே, கிருபாகரன் வந்து நின்றான். "அவன் என்னென்ன சொன்னான்?" என்று கேட்டுக் கொண்டு.

அவன் பதறிய விதம் சற்று அதிகப்படியாகத் தோன்றவும், தோளைக் குலுக்கி, "தெரியாதது போல, இதென்ன கேள்வி? நீங்கள் சொல்லிக் கொடுத்ததைத்தானே, அவன் சொல்லி யிருப்பான்?" என்று ஏளனமாகப் பதிலிறுத்தாள் மாதவி.

"நிலைமை புரியாமல் இன்னுமா அதையே... என்றவன், திடுமென நெருங்கிச் சென்று, அவளை எழுப்பி நிறுத்தினான். அருகே இழுத்து, "பார் மது! நன்றாகப் பார்! என் கண்ணில் நிஜம் தெரியவில்லை? என் உண்மை புரியவில்லை? சொல்லு! சொல்லு!" என்று, அவளை லேசாக உலுக்கிக் கேட்டான்.

அவனது கவலை, அக்கறை, சோகம்...

மாதவியின் கால்கள் வலுவிழப்பதை உணர்ந்து, அப்படியே அவளை இறுக அணைத்துக் கொண்டான், கிருபாகரன்.

32

எந்த ஆபத்தும் உன்னை அணுக விடமாட்டேன் என்று சொல்லாமல் சொன்ன அந்த அணைப்பில், மிகவும் பாதுகாப்பாக உணர்ந்தாள் மாதவி.

ஆனால், அது ஒரு சில கணங்களே!

கதகதப்பான அந்தக் கை வளையத்தினுள் தலை சாய்த்து நிற்கையில், 'தட் தட்' என்று அவனது நெஞ்சத் துடிப்பு, அவளது செவியில் துல்லியமாகக் கேட்டது.

இந்த நெஞ்சம், உள்ளிருக்கும் மனம் எல்லாம் தன் உடைமை என்று, உரிமையோடு அவன் மார்பில் சாய்ந்திருந்த காலம் நினைவு வந்தது.

சிறு சந்தேகம் கூடத் தோன்றவே இல்லையே!

இப்போதும், உடலில் சிலிர்ப்பு வரை, என்னமாய்க் கொண்டு வருகிறான்! சே!

சட்டெனத் திமிறி, அவனை விட்டு விலகினாள் மாதவி.

ஆத்திரத்துடன் நோக்கி, ''இனியொரு தரம் என்னைத் தொட்டால், ப்யூனைக் கூப்பிட்டு அடித்து விரட்டச் சொல்வேன். ஜாக்கிரதை!'' என்று சீறினாள்.

கண் மூடித் திறந்து, ''என்ன வேண்டுமானாலும் செய்துகொள்! முதலில், அந்த நட்டு என்ன சொன்னான் என்று சொல்லு!'' என்றான் அவன் இறுகிய குரலில்.

எரிச்சலுடன் அவனைப் பார்த்தாள் அவள். "எதற்கு? என்ன நடக்கிறது என்று எனக்குத் தெரியும் என்று தெளிவாகச் சொல்லி விட்டேன். இனியும் நாடகத்தைத் தொடர்வானேன்? போய் உருப்படியாக ஏதாவது வேலையைப் பாருங்கள். போங்கள்!' என்று வெறுத்த குரலில் உரைத்தவாறு தன் இருக்கையில் அமர்ந்தாள் அவள்.

அசையாமல் நின்று, "நீ நினைக்கிறபடியே வைத்துக் கொண்டாலும், சொல்ல வேண்டியதை, அவன் சரியாகச் சொன்னானா என்று, நான் தெரிந்து கொள்ள வேண்டாமா? அவன் என்ன சொன்னான் என்று திருப்பிச் சொல்வதில், நீ அப்படியென்ன களைத்து, ஓய்ந்து விடப் போகிறாய்? கேட்டால், ஒரு தரம் சொல்வதுதானே?" என்றான் கிருபாகரன்.

அந்தக் குரல் சீண்டிய போதும், "வேலை நேரத்தில், அனாவசிய நேர விரயம்! உங்களுக்கு எப்படியோ, எனக்கு வேலை இருக்கிறது!" என்று சொன்னதோடன்றி, மேஜையில் இருந்த ஒரு ஃபைலையும் எடுத்துப் பிரித்து, முன்னே வைத்துக் கொண்டாள் அவள்.

"மது, ப்ளீஸ்!"

சற்று முன் நேர்ந்த அணைப்போடு இந்த 'மது'வும் சேர்ந்துகொள்ள, அவளுக்கு உள்ளே அழுத்தியது.

உதட்டைக் கடித்துக்கொண்டு, ஒரு கணம் பேசாதிருந்தவள், "சொல்லுகிறேன்! ஆனால், இனியொரு தரம் 'மது' என்று நீங்கள் என்னைக் கூப்பிடக் கூடாது!" என்று கடுகடுத்துவிட்டுச் சொன்னாள். "மரியாதையாக அவன் கேட்ட பணத்தைக் கொடுக்கா விட்டால், இந்த இடம் வெடித்துச் சிதறிச் சுடுகாடாகி விடுமாம்! என்ன? முகம் ஒரு மாதிரி ஆகிவிட்டது? நீங்கள்

சொல்லிக் கொடுத்தது. இந்த வசனம் இல்லையா? அதிகப்படியாகக் கைச்சரக்கும் சேர்த்து விட்டானா?'' என்று கிண்டலாக வினவினாள்.

சலித்த சிறு கையசைவுடன், ''உனக்கு எத்தனை முறை சொல்வது, மாதவி? இது மெய்யாகவே... என்று தொடங்கியவன், அவள் முகத்தைப் பார்த்துவிட்டுச் சட்டெனத் திரும்பி வெளியே சென்றான்.

அவன் சென்ற வேகத்திலேயே, பொது நிர்வாகி உள்ளே வந்தார்.

வந்த விதம் புரிந்த போதும், வயதுக்குரிய மரியாதை கொடுத்துக் குறுக்கிடாமல் அவர் பேச்சைக் கேட்டாள்.

சென்னையில் இப்போது, வன்முறை பரவி விட்டதாம்! வெடி வைப்பது, ஆட்களைக் கடத்திப்போய்ப் பணம் பறிப்பது இது போல! அதனால், எப்போதுமே அவள் எச்சரிக்கையோடு இருக்க வேண்டுமாம்! நித்திலனுக்கும் கூடுதல் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமாம்!

நித்திலன் பெயரைச் சொன்னதும், ஒரு கணம் மாதவி குலுங்கி விட்டாள்.

ஆனால், உடனேயே சுதாரித்துக் கொண்டாள்.

எங்கே சுண்டினால், எங்கே வலிக்கும் என்று தெரிந்தவன் ஆயிற்றே! பிள்ளை பேரைச் சொன்னால், சுருண்டு விடுவாள் என்று எண்ணியிருக்கிறான்! அதுவும், நேராகச் சொன்னால் நம்ப மாட்டாள் என்று, ஜி.எம்மை விட்டுச் சொல்கிறான்!

ஆனால், 'ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்' என்பது போலக் கிருபாகரன் என்ன சொன்னாலும் அவள்

நம்புவதாக இல்லை. அவன் மூலம் வந்தது என்பதற்காகவே, இரு மடங்கு நம்பக் கூடாது என்று முடிவு செய்தாள்.

கிருபாகரனும் விடுவதாக இல்லை.

மனோகரி, கண்ணன் மூலம் முயன்று பார்த்தான்.

ஆனால், யார் என்ன சொன்னாலும், இந்த விஷயத்தை மாதவி காதில் போட்டுக் கொள்வதாகவே இல்லை.

இதற்கு மேல், அவளிடம் சொல்லிப் பயன் இல்லை என்று, அவளது அனுமதியின்றியே, தன் போக்கில் வெளி நிறுவனங்கள் மூலம் சில பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்தான் கிருபாகரன்.

அவனை நம்பியதால், மனேகரியும், முடிந்தவரை நித்திலனைத் தன் கண் பார்வையில் வைத்துப் பாதுகாத்தாள்.

''அனாவசிய வேலை!'' என்று, தோளைக் குலுக்கினாள் மாதவி. ''நிறைய நேரம் சும்மா இருக்கிறாய் போல! அதனால், வீண் வேலை செய்து பொழுதை நகர்த்த முயற்சிக்கிறாய் என்று தோன்றுகிறது!'' என்று கிண்டலடித்தாள்.

''அவசியம் என்று, கிருபாகரன் சொல்லுகிறாரே! ஒரு வேளை, அது சரியாக இருந்தால்?''

''போலீசில் புகார் பண்ண வேண்டும் என்று கூடத்தான் கிருபா சொல்லுகிறார்! செய்து விடலாமா?'' என்று ஏளனம் கலந்த குரலில் மாதவி வினவினாள்.

''செய்வதுதானே? பாதுகாப்பு வேலையைப் போலீசே ஏற்றுக் கொண்டுவிடும்! நீதானே வேண்டாம் என்கிறாயாம்? ஏனப்படி?''

தோழியை ஆழம் பார்த்துவிட்டு, "செய்யலாம்! ஆனால்... கிருபாகரைச் சிறைக் கம்பிக்குப் பின்னே பார்க்க நேருமே! பரவாயில்லையா?" என்று வறண்ட குரலில் நக்கலாகக் கேட்டாள் மாதவி.

"மாதவி?!"

"இன்னமும் உனக்குப் புரியவில்லையே! எல்லாம் கிருபாகர் நடத்தும் நாடகம்! நிறுவனத்தை விட்டு வெளியேறுவதாக, அவசரப்பட்டு வீராப்புப் பேசிவிட்டார்! அதை மாற்றி, நானாக அவரை இருக்கச் சொல்லுவதற்காக இந்த நாடகம்! அந்த நட்டு வெளியே வந்து விட்டான் என்று தெரிந்ததும், மளமளவென்று கதை கட்டிவிட்டார்! என்னமோ, நிறுவனத்துக்காகவே பதவியில் நீடிப்ப தாகக் காட்டுகிறாரே தவிர, உள் நோக்கம் வேறு! இப்போது சொல்லு, போலீஸ் விசாரித்து, இந்த உண்மையைத் தெரிந்து கொண்டார்கள் என்றால், அதன் பிறகு, மிஸ்டர் கிருபாகரன் எங்கே இருப்பார்? சிறைக் கம்பிகளுக்குப் பின்னேதானே?"

வியப்புடன் தோழியைப் பார்த்தாள் மனோகரி.

"என்ன, பேச்சையே காணோம்? ஒரு வழியாக, உள் விஷயம் என்னவென்று இப்போதாவது புரிந்ததா? சரியான ட்யூப் லைட்டுப்பா, நீ!"

புன்னகை புரிந்து, "நீ சொன்னால், ஒத்துக்கொள்ள வேண்டியதுதான்!" என்றாள் அன்புத் தோழி. "ஆனால், உண்மை இவ்வளவு விசித்திரமானதாக இருக்கும் என்று, நாம் இதுவரை எதிர்பார்க்கவே இல்லை, மது! ஆக, கிருபாகரன் ஜெயிலுக்குப் போகும்படி நேர்ந்துவிடக் கூடாது என்பதற்

காகத்தான், போலீசுக்குப் போக விடாமல் தடுக்கிறாய்! அப்படித்தானே?'' என்று மனோகரி கேட்க, மாதவி திகைத்தாள்.

இவளிடம் எதையுமே சொல்லியிருக்கக் கூடாதோ?

உதட்டைக் கடித்துக் கொண்டு மாதவி பேசாதிருக்க, வாய்த்த தருணத்தை விடக்கூடாது என்று மனோகரி தொடர்ந்தாள். ''இவ்வளவு அன்பை வைத்துக் கொண்டு, ஏன் இந்த வேஷம், மது? ஒருவர் திருந்தி வருந்தும்போது, வெறும் வறட்டுக் கௌரவம் பார்த்துக் கொண்டு விரட்டலாமா? அதுவும், உன்னுள்ளும் அன்பிருக்கும்போது?'' என்று, இதமாகக் கேட்டாள்.

அதற்குள் சுதாரித்து விட்ட மாதவி, ''என்னுள்ளே அன்பு இருக்கிறதா? இது என்ன புதுக்கதை?'' என்று கேலி போலக் கேட்டாள்.

''சும்மா அளக்காதே! அன்பு இல்லாவிட்டால், யாரோ ஒரு கிருபாகரன் சிறைக்குப் போவது பற்றி, உனக்கு என்ன வந்ததாம்?'' என்று மனோ சரியான இடத்தில் பிடிக்க, மாதவியின் பதிலும் தயாராக இருந்தது.

''எனக்கு எதுவுமே இல்லை. தாயே! ஆனால், அந்த ஆளை அப்பா, அப்பா என்று பழகி விட்டிருக்கிறானே, என் பிள்ளை! அவன் மனம் நொந்து விடக்கூடாதே என்றுதான் தயக்கம். நித்திக்காக நான் பார்த்தால், நீ என்னென்னவோ கற்பனை செய்யத் தொடங்கி விட்டாயே! பாவம், கண்ணன்! அவரிடமும் இப்படித்தான் ஒன்று கிடக்க ஒன்றைப் பேத்துவாயோ?'' என்று, கேலியில் பேச்சை மாற்றினாள் மாதவி.

ஆனால், அவள் எவ்வளவுதான் மாற்றிப் பேசினாலும், மனோகரியின் ஐயம் அப்படியே இருந்தது. இன்னும் கொஞ்ச

காலத்தில், மாதவி கிருபாகரனை நன்கு புரிந்து ஏற்றுக் கொள்வாள் என்று அவள் நிச்சயமாக நம்பினாள்.

அந்த நட்டுவின் மிரட்டல் பிரச்சினை நல்லபடியாகத் தீர்ந்து, அந்த அவகாசம் அவர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று, கடவுளை வேண்டிக் கொண்டாள்.

நட்டுவின் மிரட்டலைச் சமாளிப்பது பற்றித்தான், கிருபா கரனும் இரவு பகல் யோசித்துச் செயல்பட்டுக் கொண்டிருந்தான்.

அன்றுகூட, அவனுக்குப் பழக்கப்பட்ட ஒரு போலீஸ் அதிகாரியைத் தனிப்பட்ட முறையில் சந்தித்து, அது சம்பந்தமாகப் பேசிவிட்டு, அங்கே சற்றுத் தாமதமாகி விடவே, காரை வேகமாக ஓட்டி அலுவலகத்துக்கு விரைந்து சென்று கொண்டிருந்தான்.

ஒரு பஸ் நிறுத்தத்தின் அருகே, ஒரு சிறு போக்குவரத்து நெரிசல்.

வழி கேட்டு ஒலியெழுப்பியவன், பஸ் நிறுத்தத்து சிமெண்ட் இருக்கையில் அமர்ந்து இருந்த ஒருவன் துள்ளி எழுந்து, சாலைக்கு முதுகு காட்டி நிற்பது கண்ணில் பட, வியப்படைந்தான்.

பஸ்சுக்கு நிற்பவன், அதற்கு முதுகு காட்டி நின்றா காத்திருப்பான்?

நின்றவனின் பின்புறத் தோற்றம் மனதை உறுத்திற்று.

காரை நிறுத்தி, இறங்கிச் சென்று பார்க்க முடியாமல், பின் வந்த வாகனங்கள் உந்தின. ஓரக் கண்ணால் கவனித்தவாறே, சாலையோடு சென்றவன், அடுத்திருந்த சந்தில் திரும்பி, உடனேயே அரை வட்டமடித்து, காரைத் திருப்பிக் கொணர்ந்தான்.

பெருஞ்சாலையில் ஏறாமல், சந்து முனையில் இருந்த மரத்தடியிலேயே காரை மறைவாக நிறுத்திக் கவனித்த போது, தன்னை மீறி இளித்தபடி, மாணிக்கம் பஸ்சில் ஏறுவது தெரிந்தது!

கிருபாகரன் கண்ணில் பட்டு விடாமல் தப்பித்து விட்டதற்காகவா, இந்த இளிப்பு?

அவசியம் இல்லையே! வேலை நாட்களில் லீவு எடுப்பது, அவரவர் உரிமை. அன்றித் தொழிலாளி தாமதமாகப் போனாலும், தொழிற்சாலைக்குள் செல்லும் நேரம், வாயி லிலேயே குறிக்கப்பட்டுவிடும். அதற்கு ஏற்பதான் ஊதியம்.

இதில், கிருபாகரன் பார்ப்பதாலோ, பாராததாலோ எந்தவித மாறுபாடும் நேரப் போவது இல்லையே! பிறகென்ன?

என்ன என்பது அதிவிரைவிலேயே அவனுக்குத் தெரிய வந்தது.

33

அன்று தொழிலாளர்களுக்குச் சம்பளப் பட்டுவாடா செய்கிற நாள்!

அது சம்பந்தமான கணக்குகளைச் சரி பார்க்கையில், கிருபாகரனுக்கு மீண்டும் மாணிக்கத்தின் நினைவு வந்தது.

என்றைக்குமே பற்றாக்குறை பட்ஜெட்காரன் அவன். வரவுக்கு மேல் செலவு செய்துவிட்டு, 'புதிதாக அலவன்ஸ் போட்டுக்கொடு., பழைய கடனைப் பிடிக்காதே!' என்று தகராறு பண்ணிக்கொண்டு நிற்பான். ஊதியம் வாங்க முதல் ஆளாக வந்து விடுவான். ஆனால், இன்றைக்கு வரவில்லையே!

அவனைக் கிருபாகரன் பார்த்த நேரத்துக்கு, மாணிக்கம் நேர் பஸ்சில் வந்திருந்தாலும், தாமதத்துக்காகக் கொடுக்கப்படும் 'கிரேஸ்' நேரத்துக்குள்ளாகக் கூட வேலைக்கு வந்து சேர்ந் திருக்க முடியாது. அதற்குப் பிறகு வந்தால், அன்றைக்குச் சம்பளம் வாங்க முடியாது. மாணிக்கம் ஏறியதோ, வேறு எங்கோ செல்லும் பஸ்!

ஊதியப் பணத்தை வாங்குவதைவிட முக்கியமான வேலை போலும் என்று எண்ணமிட்டபடி, சரி பார்த்த கணக்கையும், பணத்தையும் பொருளாளரிடம் கிருபாகரன் ஒப்படைத்துக் கொண்டிருந்தபோது, அவனது செல் ஒலித்தது.

அதைக் காதில் வைத்துக் கேட்டவன் சட்டென முகம் வெளுத்தான்.

''எஎன்ன சார்?'' என்று கலக்கத்துடன் கேட்டார் எதிரே அமர்ந்திருந்த பொருளாளர்.

'பொறுங்கள்' என்பதுபோலச் சைகை செய்துவிட்டு எழுந்து நகர்ந்து சென்று பேசினான் கிருபாகரன்.

பேசியது, அந்த நட்டுதான். உடனே, பத்து லட்சம் ரூபாயும் கைக்கு வந்தாக வேண்டும் என்றான் அவன்.

''இதோ பார், திடீர் என்று, அவ்வளவு பணத்துக்கு எங்கே போவது?'' என்று சமாளிக்க முயன்றால், அவன் கொக்கரித்துச் சிரித்தான்.

''என்னாப்பா, என் கிட்டயே டபாய்க்கிறியே! இன்னைக்குச் சம்பள நாளு! நான் கேட்கிறதை விட, ரெண்டு பங்கு அதிகமாவே பணம் இருக்குமின்னு, எனுக்குத் தெரியாதுன்னு நினைச்சியாங்காட்டியும்? அத்தினியும் கேட்டிருப்பேன்.

ஆனா, நான் நியாயஸ்தன்! நான் கேட்ட தொகை வந்தாப் போதும்! ஆனா, ஏதாச்சும் சால்ஜாப்பு சொன்னேன்னு வை. அப்பறம், மொத்தப் பணமும் அம்பேல்! சாக்கிரதை!'' என்று எச்சரித்தான் அவன்.

நல்ல நியாயஸ்தன்!

உள்ளூர எரிச்சலுற்றபோதும், அதைக் காட்டிக்கொள்ளாமல், ''எப்படியும் அது கம்பெனிப் பணம்! எனக்கு மேலே முதலாளி அம்மா இருக்கிறார்கள்!'' என்று தொடங்கியவன் பேச்சில் குறுக்கிட்டு, ''என்னா பெரிய முதலாளி? அந்தப் பொம்பிளை உன் பொண்டாட்டிதானேய்யா? நீ சொன்னாச் செய்ய மாட்டாளாங்காட்டியும்?'' என்றான் நட்டு.

''மாட்டார்கள். நாங்கள் பிரிந்து ஆண்டுக் கணக்கில் ஆகிறது! இப்போது, இங்கே அவர்கள்தான் முதலாளி. அவர்கள்தான் முடிவெடுக்க வேண்டும்!'' என்றான் கிருபாகரன்.

உள்ளூர அவன் மனம் குமுறியது. இவ்வளவு நேரம் பேசியிருக்கிறான்! அவன் சொன்னதைக் கேட்டுக் காவல் துறையை அணுகியிருந்தால், இந்த நட்டு இருக்குமிடத்தையே அவர்கள் கண்டு பிடித்திருப்பார்கள். சேர்மன் பதவியில் உட்கார்ந்து, மாதவி மறுக்கையில் மீற முடியாது போயிற்று.

கிருபாகர் சொன்னதை, நட்டு ஒத்துக் கொள்ளவில்லை. ''அதெல்லாம் ஒரு மண்ணும் இல்லை! அங்கே, உன்னை ஒரு வார்த்தை சொன்னா, பிச்சுப் பீஸ் பீசாக்கி விடுகிறா! நீ சொன்னாக் கேட்க மாட்டான்னாக்கா, எப்படி நம்புகிறது?''

மாணிக்கம்! வேறு யாரும் கிருபாகரனைப் பற்றிக் குறை கூறியது இல்லை. சொல்லப் போனால், குமாரசாமியின் கண்டிப்பு, அவருக்குப் பின்னான விட்டேற்றியான போக்கு,

இரண்டு நிலைகளுக்கும் பிறகு, கிருபாகரனின் நீக்குப் போக்கான அணுகு முறையால் எல்லோருக்குமே அவனிடம் நல்ல அபிப்பிராயம்தான்!

ஆனால், மாணிக்கத்தை மாதவி கண்டித்தது, இவனுக்கு எப்படித் தெரியும்?

மாணிக்கம் வேறு பஸ்சில் ஏறியது, அப்போதும் மனதில் தோன்றி உறுத்தியது.

"அவங்க தாத்தா மாதிரி, எல்லோரிடமும் அவர்கள் கண்டிப்பு தான்! அவர்கள் அனுமதி இல்லாமல், நான் எதுவும் செய்ய முடியாது! நீ அவர்களிடமே பேசிப்பார்!" என்றான் கிருபாகரன்.

நட்டு மாதவியோடு பேசும்போது, போலீஸ் நண்பரிடம் சொல்லி, அதிகாரப் பூர்வமாக இல்லாமலே, இவனைக் கண்டு பிடிக்க ஏற்பாடு செய்ய வேண்டியதுதான்.

ஆனால், நட்டு மாதவியிடம் பேச மறுத்தான். "அவ என்னய்யா, பொம்பளை? என்ன சொன்னாலும் காதிலே வாங்காமக் கத்து கத்துன்னு கத்தறா? என்னமோ, அவளுக்கு என்னையப் பத்தி, அல்லாம் தெரியுமாம்! நான் ஒண்ணும் பண்ண மாட்டேனாம்! மவளே, உனக்கு வச்சிருக்கிறேண்டி, ஆப்பு! தப்பிப் பிழைச்சியானா, அப்போ தெரியும், இந்த நட்டு யாருன்னு!" என்று கறுவினான், அவன்.

திக்கென்றது கிருபாகரனுக்கு! பதட்டத்தை மறைக்க முயன்றபடி, "என்ன செய்யப் போகிறாய்?" என்று கேட்டான்.

நட்டு மீண்டும் சிரித்தான். "என்ன... செய்யப் போறேனா? செய்தாச்சுது! குண்டு... வெடிகுண்டு வச்சாச்சுது! இப்ப என்ன மூணு மணியா? ரெண்டு மணி நேரம் ஒனக்குத் தரேன்!

அதுக்குள்ளார, என் பணம் எனக்கு வந்தாவணும்! அல்லாட்டி, சரியா அஞ்சு மணிக்கு, குண்டு வெடிச்சிரும்! அப்பறம், உங்க ஆட்டம் குளோஸ்! இந்தக் கட்டடம் மூச்சூடும் தூள் தூளா எகிறிப் போவும்! அவ்வளோதான் விசயம்! என்னா? இப்ப பணத்தைக் குடுக்கிறியா? குடுத்துத்தான் ஆவணும்! எப்படி, எங்கேன்னு கொஞ்ச நேரம் களிச்சுச் சொல்லுறேன். அதுக்குள்ளார, உன் வீட்டுக்காரி கிட்டே, நம்மளைப் பத்திச் சொல்லிப் பணத்தை ரெடி பண்ணி வை!'' என்று பேச்சை முடித்து விட்டான் அவன்.

எப்படி? எப்படி முடியும்? வெளி ஆள் உள்ளே வந்து, வெடி குண்டு வைப்பதா?

நடக்கிற காரியம் அல்லவே!

அடையாள அட்டை காட்டாமல் யாரும் உள்ளே வர முடியாதே!

நட்டு சொல்வது பொய்யோ, மெய்யோ, இனி மாதவியின் அனுமதிக்காகக் காத்திருக்க முடியாது.

முதலில் போலீஸ் நண்பர் பிரகாசத்திடம் சுருக்கமாக விவரம் தெரிவித்துவிட்டு, நேராக மாதவியிடம் சென்றான்.

நட்டுவின் பயமுறுத்தல் பற்றிச் சொல்லத் தொடங்கியதுமே, அவள் முகத்தில் ஏளனம் பரவவும், ஒரு வேக மூச்சுடன், ''ஒரு தரம், ஒரே ஒரு தரம் நான் சொல்வது மெய்யாக இருக்கக் கூடுமோ என்று எண்ணிப் பாரேன்! இப்போது, அவன் இங்கே குண்டு... தொழிற்சாலையில் வெடி குண்டு வைத்திருப்பதாகக் கூறுகிறான்! அது உண்மையாக இருந்தால், என்ன ஆகும் என்று யோசி! பல கோடிப் பெறுமானம் உள்ள தொழிற்சாலை நாசமாகிப் போகும்! அதை விடவும், எத்தனை மனித உயிர்கள்

அழியக் கூடுமோ, தெரியாது! அதற்கு, நீ காரணமாகப் போகிறாயா? நம் தொழிற்சாலை! நம்மை நம்பி வாழும் நம் தொழிலாளர்கள்! கெடுதல் நேர விடலாமா?'' என்று, கிருபாகரன் கேட்டான்.

'நம்' தொழிற்சாலை! 'நம்' தொழிலாளர்கள்! இந்த உரிமைதானே, அவனுக்கு முக்கியம்?

''ஒரு கெடுதலும் நேராது!'' என்றாள் அவள் இறுகிய குரலில்.

''இந்த மூட நம்பிக்கை. இதற்கு வேறு என்ன பெயர் கொடுப்பது என்று எனக்குத் தெரியவில்லை! ஆனால், இது போல் அசட்டுத் தைரியம் எனக்கு இல்லாததால், போலீசுக்குத் தகவல் தெரிவித்து விட்டேன். வருவார்கள். உன் சேர்மன் அதிகாரத்தைப் பயன்படுத்தி, அவர்களைத் தயவு பண்ணித் திருப்பி அனுப்பிவிட வேண்டாம்!'' என்றவன் சட்டெனத் திரும்பிச் சென்றான்.

சற்று நேரம் அசையாது அமர்ந்திருந்தவள், ஒரு பெருமூச்சுடன் அடுத்த ஃபைலை எடுத்தாள்.

தன் கையில், தானே விலங்கு மாட்டிக் கொள்கிறவனை என்ன செய்ய?

ஆனாலும், ஒரு பொய்யை மெய்யாக்க என்னவெல்லாம் சாகசம் செய்கிறான்!

ஆனால், அவன் செய்கிறவன்தானே? எந்த அளவுக்குப் போனான்! தன்னையே மறந்ததாகக் கூடச் சொன்னானே! வாயால் சொன்னது மட்டுமா?

தலையை உலுக்கிக் கொண்டு, மாதவி பிடிவாதமாக வேலையைத் தொடர்ந்தாள்.

போலீஸ் வந்தது தெரிந்த போதும், அவள் எட்டிக் கூடப் பார்க்கவில்லை. போகட்டும், தன் தலையில், தானே மண்ணைப் போட்டுக் கொள்கிறவன், போட்டுக் கொள்ளட்டும்!

மூட நம்பிக்கையாமே! அசட்டுத் தைரியம் யாருக்கு என்று, எல்லாம் விரைவிலே தெரியத்தானே போகிறது?

காம்பவுண்டிற்குள் போலீஸ் ஜீப் புகுந்த ஒரு சில வினாடிகளுக்குள், கிருபாகரின் செல் இசைக்கத் தொடங்கி விட்டது.

நட்டுதான்! கொதி நிலையில் இருந்தான்.

"போலீசையா கூப்பிடச் சொன்னாள் உன் பெண்டாட்டி? என்னா திமிரு? இருக்கட்டும்! இந்தக் காக்கிச் சட்டைக் காரங்களாலே என்ன பண்ண முடியும்? குண்டு வெடிக்கிறப்ப, பட்டாசுன்னு பார்த்துக்கிட்டு நிற்பானுங்க. இவனுங்க கண்ணு முன்னாடியே பணத்தைக் கொண்டு போறேன் பாரு! நீ முதலிலே பணத்தைத் தயார் பண்ணு! போய்யா, போ! இல்லே, எல்லாம் பணால்! அவுட்டுதான்!" என்றான் ஆத்திரத்தோடு.

போலீஸ் அதிகாரி பிரகாசத்துக்கும், நட்டுவின் மிரட்டலில் ஐயம் இருந்தது. சும்மா வெறும் மிரட்டலிலேயே அறுவடை செய்ய முயலுகிறானோ என்று எண்ணினார். மற்றப்படி, தொழிற்சாலைக்குள் நட்டு வருவது எப்படி? அதிலும், இவ்வளவு பெரிய கட்டடங்களை அழித்துவிடும் அளவுக்கு வெடியைத் தயார் செய்து, அதையும் உள்ளே கொண்டு வருவது எப்படி? இன்னொருவன் உதவி இருந்தாலும்கூட?

அதுவும் இன்றைக்கே வெடிக்கும் என்கிறானே!

அது உண்மை என்றால், வெடி மருந்து கொஞ்சம் கொஞ்சமாகக் கொண்டு வரப்பட்டு, தயார் நிலையில் ஏற்கெனவே வைக்கப்பட்டிருக்க வேண்டும்! அது, ஓரளவு சாத்தியமே!

"முதலில் இன்று யார் யார் வரவில்லை என்று பாருங்கள், கிருபா. இங்கிருந்து உதவி செய்தவன் யாராக இருந்தாலும், வெடிப்பது இன்றைக்குத்தான் என்றால், உள்ளே இருக்கத் துணிவிராது."

மாணிக்கம்! அவன் வரவில்லையே!

அவசரமாகப் பதிவேட்டுக் குறிப்பைப் பார்த்த கிருபாகரன் திகைத்தான்.

மாணிக்கம் வந்திருப்பதாகப் பதிவேடு கூறியது! அதாவது, அவனது அடையாள அட்டையைக் காட்டி, வேறு யாரோ வந்திருக்கிறார்கள்!

"நட்டுதான் கிருபாகர்! அவன் நேரடியாகச் செயல் படுகிறவன்! அதில் அடுத்தவர்களை நம்பமாட்டான்!" என்றார் பிரகாசம்.

மின்சாரம் பாய்ந்தாற்போல ஓர் அதிர்ச்சியுடன், இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

இன்னும், ஷிஃப்ட் முடிந்து யாரும் வெளியே போகவில்லை.

அதாவது, வில்லன் உள்ளேதான் இருக்கிறான்!

34

அந்த நட்டு, இப்போது நிறுவனத்தின் உள்ளேயேதான் இருக்கிறான் என்றால், அவனது வெடிகுண்டு மிரட்டலும் உண்மையேதானா?

"உண்மையாகத்தான் இருக்கும்!" என்றார் பிரகாசம். "இப்படி அடுத்தவரைப் போல வேஷமிட்டு, களத்தில் நேராக

இறங்கிச் செயல்பட்டு, ஏதாவது களேபரத்தை உண்டாக்கித் தப்பியும் சென்றுவிடுவான் அவன்! இப்போதுகூடக் குண்டு வெடிப்பதை நிறுத்துவான் என்று எனக்குத் தோன்றவில்லை. பணத்தை இங்கே வை, அங்கே வை என்று அலைக்கழித்துவிட்டு, குண்டு வெடிக்கிறபோது பணத்தோடு தப்பிச் சென்று விடுவதுதான் அவனது நோக்கமாக இருக்கும். எனவே, குண்டைக் கண்டுபிடித்துச் செயல் இழக்கச் செய்வதுதான் நமக்கு நல்லது! அத்தோடு, அவனையும் பிடிக்க வேண்டும்!'' என்றார் அவர்.

அதிகப்படி போலீசாரையும் 'பாம் ஸ்குவா'டையும் உடனடியாக அனுப்ப ஏற்பாடு செய்துவிட்டுக் கிருபாகரனிடம், ''இந்தத் தொழிற்சாலை முழுவதையும் இண்டு இடுக்கு விடாமல் தேடி, நட்டு வைத்துள்ள குண்டைத் தேடி எடுத்துச் செயல் இழக்கச் செய்வதற்கு, நேரம் அதிகம் ஆகும். கிருபா! அவன் சொன்ன ஐந்து மணிக்குள்ளாக, அதைச் செய்வது கடினம்! இப்போதே, நாலாகிறதே! அதைவிட, அவனைத் தேடிப் பிடித்து நாலு அறை விட்டால், விஷயத்தைக் கக்கி விடுவான். இங்கே எத்தனை பேர் வேலை பார்க்கிறார்கள்?'' என்று விசாரித்தார் அவர்.

''எண்ணூற்று நாற்பது பேர்! ஆனால், ஒவ்வொரு பிரிவிலும் வேலை செய்கிறவர்களைப் பகுதி வாரியாகப் பிரித்து நிற்கச் சொல்லி, அந்தப் பிரிவின் கண்காணிப்பாளர்களைக் கொண்டு சரிபார்த்தால், வேற்று ஆளான நட்டுவை இலகுவாகக் கண்டுபிடித்து விடலாம்!'' என்று கிருபாகரன் சொன்ன யோசனை, பிரகாசத்துக்கும் உசிதமானதாகத் தோன்றியது.

அதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

''முதலில் எல்லோரையும் தொழிற்சாலையை விட்டு வெளியே வரச் சொல்லி விடலாம். ஒரு வேளை, சமயத்தில்

கண்டு பிடிக்க முடியாமல், குண்டு வெடித்தே விட்டாலும், உயிர்ச் சேதம் இராது!'' என்றான் கிருபாகரன்.

''ஆனால், குண்டு விஷயம் முதலில் சொல்லி விடாதீர்கள், கிருபா. எல்லோரும் பயத்தில் தறி கெட்டு ஓடத் தொடங்கி விடுவார்கள். அந்தக் குழப்பத்தில், நம் ஆள் தப்பி விடுவான்! தப்பிச் செல்லுவதில் அவன் கில்லாடி!'' என்ற பிரகாசம், எப்படி, என்ன சொல்ல வேண்டும் என்று தெளிவாக, வேகமாகச் சொன்னார்.

அதன்படி, தீவிரவாதி ஒருவன், போலியான தொழிலாளர் அடையாள அட்டையைக் காட்டி, நிறுவனத்துக்குள் வந்து விட்டதாகவும், அவனைக் கண்டு பிடிப்பதற்கான அடையாள அணிவகுப்புக்காக, எல்லோரும் உடனடியாக மைதானத்தில், அவரவர் பிரிவிலிருந்து விரைவாக வெளிவந்து, அதே வரிசைப்படி தனித் தனிக் குழுவாக நிற்கும்படி இன்டர்காமில் கிருபாகரன் தெரிவித்தான்.

அதே போல, சற்றுத் தள்ளித் தனியாக இருந்த நிர்வாக அலுவலகத்தில் இருந்தவர்களையும் வரச் சொன்னான். அங்கிருந்தும் எல்லோரும் வெளியே வந்தனர்.

அதற்குள், அதிகப்படி போலீசாரும், வெடிகுண்டுப் பிரிவினரும் வந்துவிட, போலீஸ் அதிகாரி, தன் ஒலி பெருக்கியில், உண்மை விவரத்தைத் தெரிவித்தார். தெரிவித்து, ''நீங்கள் அமைதியாக இங்கேயே இருந்தால், உங்களுக்கு எந்தவிதச் சேதமும் இல்லாமல் தப்பித்து விடலாம். இங்கே பணிபுரிகிறவர்கள் தவிர, வேறு யாரும் குழுவில் இருந்தால் சொல்லுங்கள். அவன்தான் குற்றவாளி! ஒவ்வொரு சூப்பர்வைசரும் அவரவர் குழுவினரைச் சரி பாருங்கள்!'' என்று விட்டுப் போலீசாரிடம் திரும்பி, ''நீங்கள் இரண்டிரண்டு

பேராகப் பிரிந்து சென்று, உள்ளே விரைவாகத் தேடிவிட்டுப் பத்து நிமிஷங்களுக்குள் திரும்பி விடுங்கள். அதற்கு மேல், அதிக அவகாசம் இல்லை!'' என்று அனுப்பினார்.

வெடிகுண்டுப் பிரிவினரும் வேகமாக வேலையில் ஈடுபட்டனர். அவர்களுக்கும் அதே அவகாசமே தரப்பட்டது.

கிருபாகரனின் கட்டளைக் கிணங்கி இறங்கி வரா விட்டாலும், திரை மறைவில் நின்று, கீழே நடப்பதை, மாதவி பார்த்துக்கொண்டுதான் இருந்தாள்.

ஓர் இம்மியளவு கூடக் குறைவு படாமல், முழுமையாகச் செயல்பட்டு, அவளை ஏமாற்றக் கிருபாகரனால் எப்படி முடிந்தது என்று, இன்னமும் மாதவி அவ்வப்போது தவிப்புடன் எண்ணிப் பார்ப்பது உண்டு!

எந்த அளவுக்குச் செயல்படுவான் என்பதற்கு, இன்னுமோர் எடுத்துக் காட்டு!

போலீஸ்! பாம் ஸ்குவாட்! எங்காவது அதிகச் சேதம் தராத வெடி கூட வைத்திருக்கலாம்!

எல்லாம், தன் முக்கியத்துவத்தை நிலை நாட்ட! போகிறேன் என்றவனை, வேண்டாம் போகாதே, இந்த் நிறுவனத்தையும் என்னையும் பாதுகாக்க நீ இங்கேயே இரு!' என்று, அவள் வாயால் சொல்ல வைப்பதற்காக!

அவனது லட்சியத்துக்காக, யார் என்ன கஷ்டப்பட்டாலும், அவனுக்குக் கவலையில்லை! அன்றைக்கும் இருக்கவில்லை! என்றைக்கும் இருக்கப் போவதும் இல்லை!

எல்லோரையும் ஏமாற்றி விடலாம்!

ஆனால், அவனை முழுதும் அறிந்த அவளை, இனி ஒருபோதும் ஏமாற்ற முடியாது என்று, அவளும் அவனுக்குப் புரிய வைக்க வேண்டாமா? அவனது இந்தக் கதையை ஒரு கணம் கூட அவள் நம்பவில்லை என்று தெரிய வைக்க வேண்டாமா?

திரும்பிச் சென்று இருக்கையில் அமர்ந்தாள் அவள்.

அதே சமயம் ஒரு கழிப்பறையில் பதுங்கியிருந்த நட்டுவை, இரண்டு போலீசார் பிடித்துக் கொண்டு வந்தனர்.

பெரும்பாலும், மாணிக்கத்தைப் போன்ற ஒப்பனை! கேட் காவலர் ஏமாந்ததில் வியப்பில்லை! அதுவும், நூற்றுக் கணக்கில் தொழிலாளர்கள் வந்து கொண்டி.ருக்கும் சமயத்தில், இவனைத் தனியே கவனித்திருக்க வாய்ப்பில்லை.

''முதலில், அவனுக்கு விலங்கை மாட்டி, ஜீப் இருக்கையோடு பிணைத்து வையுங்கள்!'' என்றார் பிரகாசம்.

''என்னய்யா பிரயோசனம்? பேசாமப் பணத்தைத் தந்து என்னை அனுப்பிவிட்டா, வேற நட்டப்படாமக் காப்பாத் திக்கலாம்! இன்னும் அஞ்சாறு நிமிஷம்கூட இல்லை! இனிமே என்னை அடிச்சு, அடி பொறுக்காம நான் சொல்லுமுன்னே, குண்டு வெடிச்சிருமே! இப்பவே, பணத்தையும் ஒரு ஆளையும் அனுப்பினா, குண்டு இருக்கிற இடத்தைச் சொல்லிட்டுக் கிளம்பிடுறேன். எனக்குப் பாதுகாப்பான இடத்துக்குப் போன தும், அந்த ஆளையும் விட்டுடுறேன். என்ன சொல்கிறே?'' என்று துணிச்சலாகப் பேரம் பேசினான் நட்டு.

''சா..ர்! இவன் காலையில் வந்து, ஆஃபீஸ் லிஃப்டை ரிப்பேர் செய்தவன்!'' என்று அலுவலகக் கட்டடத்தை அச்சத்துடன் பார்த்தான், அங்கு பணிபுரிந்த ஒருவன்.

எல்லோருக்குமே, உடன் புரிந்து போயிற்று!

நட்டு வெடி வைத்திருப்பது அலுவலக லிஃப்டில்! அல்லது, அந்தப் பக்கம் எங்காவது! எல்லோரும் எண்ணியது போலத் தொழிற்சாலைப் பகுதியில் அல்ல!

பணம் பிடுங்குவதோடு, பழி வாங்கவும் திட்ட மிட்டிருக்கிறான்!

முன்பு பிடித்துக் கொடுத்ததற்காகக் கிருபாகரனை! தன்னை மதிக்கவில்லை என்று, மாதவியை! ஆனாலும், இப்படியா?

அந்தப் பணியாளை வெட்டுவது போல நட்டு கொடூரமாகப் பார்த்த பார்வையே அவனைக் காட்டிக் கொடுத்தது.

''இனி ஒன்றும் செய்வதற்கில்லை! வெடிகுண்டுப் பிரிவினரையும் வெளி வரச் சொல்ல வேண்டி...'' என்று பிரகாசம் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, அலுவலகத் தினரை அவசரமாக அலசிய கிருபாகரன் அச்சத்துடன், ''மாதவி!'' என்று பதறினான்.

''உங்களோடு, மேடம் வரவில்லை?'' என்று கேட்டவன் முகத் தில், அவர்களது பதிலைக் கேட்கு முன்னரே நிராசை பரவியது.

இன்னமும், அவள் அவனை நம்பவில்லை!

வேகமாகத் திரும்பி, அலுலகக் கட்டடத்தை நோக்கி ஓடிய வாறு, தன் செல்லை எடுத்துப் பட்டன்களை அழுத்திப் பேசினான்.

இரண்டு மூன்று படிகளுக்கு ஒரு காலாகத் தாவி ஏறி, மாதவியின் அறைக்குள் பாய்ந்தான்.

மாதவியை இழுத்துக் கொண்டு வந்து படியிறங்கவோ, இறுக மூடியிருந்த ஏசி அறை ஜன்னல் கதவின் கொக்கிகளைக்

கழற்றி, அழுத்தித் திறக்கவோ நேரமில்லை என்று உணர்ந்து, அருகில் கிடந்த ஓர் இருக்கையை எடுத்து ஓங்கி அடித்து, ஜன்னல் கண்ணாடியை உடைத்தான்.

திகைத்து நோக்கியவளை அழுந்தப் பற்றியவாறு, உடைந்த ஜன்னலின் வழியே வெளியே தாவிக் குதித்தான்.

அதே சமயம், பெருத்த சத்தத்துடன் குண்டு வெடிக்க, தீயும் புகையும் மேல் நோக்கிப் பரவ, நாலா திசையிலும் தூக்கி எறியப்பட்ட உடைந்த கட்டடப் பொருட்கள் ஜன்னல் வழியே குதிக்கையில் கீழே விழுந்த இருவர் மீதும், சரமாரியாய்ப் பொழிந்து, அவர்களை முக்கி மூடின!

செய்கையற்றுப் பார்த்துக் கொண்டிருந்த அத்தனை பேரிடமிருந்தும் பல்வேறு விதமான பரிதாப ஒலிகள் எழும்பின.

35

பயிற்சியோ, அன்றி இது போன்ற விபத்துகளைப் பார்த்துப் பழக்கமோ, அங்கிருந்த அத்தனை பேரிலும் நிலை குலையாமல் இருந்தவர் பிரகாசம்!

இது போன்ற சூழ்நிலையை எதிர்பார்த்திருந்ததால் நட்டு தப்பிவிடாமல், ஏற்கெனவே அவனை போலீஸ் ஜீப்புடன் பிணைக்கச் செய்திருந்தார்!

எனவே, அவனைப் பற்றி நினைக்கத் தேவையில்லாது போய்விட, கட்டட உடைசல்கள் பொழிவது ஓரளவு நின்றதும், அதன் அடியில் சிக்கியிருந்தவர்களைக் காப்பாற்ற ஓடினார்.

அவரது ஆணைக்கிணங்க காவலர்களும், வெடி மருந்து வல்லுனர்களும் ஓடிச் சென்று, மாதவி கிருபாகரன் இருவர் மீதும் விழுந்திருந்தவற்றை வேகமாகவும் கவனத்துடனும் அகற்றலாயினர்.

ரத்தம் பெருக, அசைவற்றுக் கிடந்த இருவரையும் காண்கையில், முதலில் யாருக்குமே நம்பிக்கை இல்லை.

ஆனால், மூக்கில் கை வைத்துப் பார்த்துவிட்டு, "மூச்சு இருக்கிறது!" என்றார் ஒரு வெடி மருந்து நிபுணர்.

கிருபாகரன், மாதவி இருவரில், கிருபாகரனுக்குத்தான் அதிகக் காயங்கள்!

அதிர்ச்சி, மயக்கம் இரண்டிற்காகவும், நாற்பத்தெட்டு மணி நேரம் மருத்துமவனைக் கண்காணிப்பில் வைக்கப்பட்டிருந்த மாதவி, வெளிக் காயங்கள் மட்டும்தான் என்று, அதற்கான மருந்துகளுடன் வீட்டிற்கு அனுப்பப்பட்டாள்.

ஆனால், ஜன்னலில் இருந்து குதிக்கும்போதே குண்டு வெடித்த சத்தம் கேட்டுவிட, கட்டட உடைசல்கள் அவளைத் தாக்காமல் அவள் மீது கவிந்து, கிட்டத்தட்ட முழுப் பாதிப்பையும் அவனே ஏற்றுக் கொள்ளவே, கிருபாகரனுக்கு நிறைய அடி பட்டிருந்தது. இருவர் கன்த்தையும் ஏற்றுக் குதித்ததில், எலும்பு முறிவு வேறு!

ஆனால், அவன் உயிர் பிழைத்ததே பெரிதாகத் தோன்றியதால், எல்லோருக்கும் மகிழ்ச்சியாகவே இருந்தது.

இறுகிப் போய் நடமாடிக் கொண்டிருந்தவள் மாதவி மட்டும்தான். அவளை நெருங்கிப் பேச, மனோகரியால்கூட முடியவில்லை.

வீட்டில் ஒரே ஒரு நாள் ஓய்வெடுத்தபின், வழக்கம் போல, அலுவலகம் செல்லத் தொடங்கி விட்டாள் அவள். சற்றுச் சீக்கிரமாகக் கிளம்பி மருத்துவமனைக்குச் சென்று, கிருபாகரனின் நலம் பற்றி விசாரித்துவிட்டு அலுவலகம் சென்றாள். மாலையிலும் போய்ப் பார்த்துவிட்டு வீடு திரும்பினாள்.

போய்ப் பார்த்தாளே தவிர, உட்கார்ந்து அவனோடு பேசினாள் என்று இல்லை.

நித்திலனைக் கொஞ்சக்கூட மனம் இல்லாதவளைப் போன்று, அவனை மனோகரியிடமே விட்டு விட்டாள்.

கட்டடச் சேதம் பற்றிக் கவலைப்படத் தேவையின்றி, 'இன்ஷ்யூர்' பண்ணப் பட்டிருந்தது. தொழிலாளர்களின் சம்பளப் பணத்தைக் காசாளர், வெடிக்குப் பயந்து வெளியே ஓடி வரும்போது பெட்டியோடு தூக்கி வந்து, உயிரே போலப் பாதுகாத்திருந்தார்! மறுநாளே, சம்பளப் பட்டுவாடாவும் செய்யப்பட்டு விட்டது.

நட்டு இனி வெளியே வரப் பலப்பல ஆண்டுகள் ஆகும் என்றார்கள். வெடி குண்டு வைத்ததால், தீவிரவாதிப் பட்டியலில் அவன் பெயர் சேர்க்கப்பட்டு விட்டது.

எல்லாமே நல்லபடியாகவே முடிந்த பிறகும், அவளது இறுக்கம், மனோகரிக்குக் கொஞ்சமும் புரியவில்லை.

ஒருநாள் பிடிவாதமாக மாதவியை நிறுத்திப் பேசினாள்.

"உனக்குத் தெரிந்திருக்க வழியில்லை. அன்று, உன்னைக் காப்பாற்ற ஓடி வரும்போதே, கிருபாகர் செல்லில் என்னிடம் பேசிக் கொண்டேதான் ஓடி வந்தார். அவர் என்ன சொன்னார் தெரியுமா?"

அரைப் புன்னகை புரிந்து, "நீ சொன்னால்தானே தெரியும்!" என்றாள் தோழி.

"இதற்கு, நீ சிரிக்காமலே பேசலாம்!" என்று வெடுவெடுத்து விட்டு, மனோகரி சொன்னாள். "மதுவைக் காப்பாற்ற முயற்சிக் கிறேன். அவளுக்கும் எனக்கும் ஏதாவது ஆகிவிட்டால், நித்தி உங்கள் பொறுப்பு!" என்றார். சும்மா சும்மா சொல்லுவாயே, அதுபோல, நிறுவனப் பங்குகள்தான் அவருக்கு முக்கியம் என்றால், தன் உயிரை அலட்சியம் செய்து, உன்னைக் காப்பாற்ற முன்வருவாரா? உன் மறைவே, அவருக்குத் தேவை யான அனைத்தையும் தானாகத் தந்திருக்குமே! அத்தோடு, அந்த நேரத்திலும் பிள்ளையைப் பாதுகாக்கச் சொல்லுவாரா? யோசி, மது! இது நடிப்பல்ல! ஒரு காலத்தில் அவர் தப்பு, பெரிய குற்றமே செய்தார்தான். ஆனால் இன்று கிருபாகர் புடம் போட்ட பொன். இது உண்மை! உண்மையைத் தவிர வேறில்லை!" என்று நீதிமன்றத்தில் சொல்வதுபோல அவள் கூற வும், மாதவி மீண்டும் உதட்டால் முறுவலித்துவிட்டுப் போனாள்.

அன்று கிருபாகரன் ஒரு நர்சின் சிறு உதவியோடு, ஓரளவு நன்றாகவே நடமாடிக் கொண்டு இருந்தான்.

அவனைப் படுக்கையில் உட்கார வைத்துவிட்டுப் பயிற்சி கொடுத்த நர்ஸ் போய்விட, அருகில் ஒரு நாற்காலியில் மாதவி அமர்ந்தாள்.

சிறு அமைதியின் பின், "பிரகாசம் வந்திருந்தார். நட்டு இனி வெளியே வரவே முடியாது என்றார். அவனுக்கு எதிராக, நேரடிச் சாட்சியங்கள் நிறைய, வலுவாக இருக்கிறதாம். மாணிக் கத்தையும் கூட்டாளி என்று பிடித்து விட்டார்களாம்! அவன்தான், வெடி மருந்து வகையறாவைக் கொஞ்சம்

கொஞ்சமாக, மதிய உணவு அடுக்கில் கொண்டு வந்து சேர்த்ததாம். அவனுக்கும் பல ஆண்டுகள் தீட்டி விடுவார்கள் என்றார்," என்றான்.

"உடம்பு இப்போது பரவாயில்லையா?" என்று வினவினாள் அவள்.

"ம். ஒன்றிரண்டு தினங்களில், வீட்டுக்குப் போகலாம் என்று டாக்டர் சொன்னார். இனி நட்டுவால் எந்தப் பயமும் இல்லை. எனவே நான் 'வெற்றி'யை மட்டுமல்ல. ஊரையே விட்டு வெளியேறி விடலாம் என்று நினைக்கிறேன்!...

சரியென்றோ, மறுத்தோ ஒன்றும் கூறாமல், "மருத்துவ மனைக் கணக்கு முடித்து, உங்களை அழைத்துப் போக, அலுவலகத்திலிருந்து வருவார்கள்!" என்று விட்டுப் போனாள் மாதவி.

ஆனால், கணக்கு முடித்து அவனை அழைத்துப் போக, அவளே வந்திருந்தாள்.

கார் சென்று நின்ற இடம், இப்போதைய அவன் வீடு! ஒரு காலத்தில், இருவருமாக வாழ்ந்த இடம்!

அவன் காரை விட்டிறங்கி, விடை கொடுக்கும் பாவனையில் பார்த்தபோது, அவளும் இறங்கி, அவன் அருகே சென்றாள்.

"என்ன?" என்று கேட்டான் அவன்.

"உள்ளே போய்ப் பேசலாம்!" என்று, அவனை அழைத்துச் சென்றாள்.

அவனுக்காகக் கீழேயே ஓர் அறை தயார் செய்யப் பட்டிருந்தது.

அங்கே உட்காரச் சொல்லிவிட்டு, மிதக் குளிரில் பழச்சாறு கொண்டு வந்து கொடுத்தாள்.

அதை வாங்கி, அருகில் இருந்த மேஜை மேல் வைத்துவிட்டு, மீண்டும், ''என்ன?'' என்று கேட்டான் கிருபாகரன்.

விழி உயர்த்தி அவனைப் பார்த்துவிட்டு, ''சூடுபட்ட பூனை! வாய் வெந்து போகிற அளவு பலமான சூடு! சட்டென மீண்டும் நம்ப முடியவில்லை! அதற்காக? விட்டுவிட்டுப் போய் விடுவீர்களா?'' என்று முடிக்கும்போது, மாதவியின் குரல் தழுதழுத்திருந்தது.

பாதி திரும்பியிருந்தவளைச் சுற்றிச் சென்று பார்த்தபோது, பெரிய விழிகளில் நீர் ததும்பி வழிவது தெரிந்தது.

தன்னை மீறி எழுந்த அவனது கரங்கள், தயங்கித் தயங்கி அவளைப் பற்றித் தோள் மீது சாய்த்துக் கொண்டன. ஆதரவாய்க் கூந்தலை வருடியவாறு, ''உன்னையும், குழந்தையையும் விட்டுப் போவது, எனக்கும் உயிரையே விட்டுப் பிரிந்து போவது போலத்தானே? எனக்கு மட்டும் அது சந்தோஷமா? ஆனால், உனக்காக.. உனக்காகத்தான்!'' என்றான் கிருபாகரன்.

சற்று நேரம் அப்படியே நின்றாள் அவள்.

மெலிந்திருந்த உடலின் எலும்புகள் உறுத்தின. மெல்ல விலகி, அவன் மார்பை வருடி, ''இங்கே இரண்டு எலும்புகள் முறிந்திருந்தனவே!'' என்றாள் கண்கள் கலங்க.

''நன்றாகச் சேர்ந்து விட்டதாக டாக்டர் சொன்னார்!'' என்றான் அவன், அவசரமாக.

மீண்டும் பழச்சாறை எடுத்துக் கணவன் கையில் கொடுத்தாள் மாதவி.

"களைத்திருப்பீர்கள்! உட்கார்ந்து குடியுங்கள்!" என்றாள்.

மறுக்காமல் அருந்திவிட்டு, கை நீட்டி டம்ளரை வைத்தான் கிருபாகரன்.

அவள் ஒதுங்கி அமரவும், சிறு வாட்டத்துடன் அவளைப் பார்த்துவிட்டு, "உன்னால் முடியுமானால், இங்கே, இப்படிப் பக்கத்தில் உட்கார முடியுமா?" என்று அவள் புறம் இருந்த கையை விரித்தான்.

அவனை ஏறிட்டுப் பார்த்தாள் அவள்.

36

கிருபாகரனின் முகத்தில் இருந்த வாட்டமும் அவனது கேள்வியும், முதலில் மாதவிக்குப் புரியவில்லை.

"முடியுமானாலா... என்று கேள்வியாய் நோக்கியவள், சட்டெனப் புரிந்து, எழுந்து அவனை ஒட்டி அமர்ந்து, அவனது கை வளையத்துள் ஒண்டிக் கொண்டாள்.

"உங்களுக்கு வலிக்குமோ என்றுதான் தள்ளி உட்கார்ந்தேன்!"

"நீ தள்ளிப் போனால்தான் வலிக்கும்!" என்று முறுவலித்தான் அவன். விரல்களால் அவளது தோளை வருடியவாறு, "எவ்வளவு ஏங்கியிருந்தேன், தெரியுமா? ஒரு வகையில் அந்த நட்டுவை நான் நன்றியோடுதான் நினைக்க

வேண்டும்! என் அன்பை நிரூபிக்க ஒரு வாய்ப்பைக் கொடுத்து, அதன் மூலம், உன் மனதிலும், மீண்டும் நேசம் தோன்ற வைத்தது அவன்தானே?''

விழிகள் விரியக் கணவனை வியப்புடன் பார்த்தாள் மாதவி.

''என்ன? என்னம்மா? ஏதோ தப்பாகச் சொல்லி விட்டேன் போலத் தெரிகிறதே!''

''தப்புதான்!'' என்றாள் அவள். ''அன்பு இல்லாதது, இருப்பது எதையும் சரியாகப் புரிந்து கொள்ளத் தெரியாத பிறவி நான் மட்டும்தான் என்று நினைத்தேன். எல்லோருமே, முக்கியமாக என் அதி புத்திசாலிக் கணவரும் அப்படித்தான் என்று, இப்போதுதான் தெரிகிறது!'' என்றவள், அவன், ''புரிய வில்லையே!'' என்று கேட்கவும் விளக்கம் கொடுத்தாள்.

''பாருங்கள், நீங்கள் சொன்னதற்காகவே, கடைசி வரை நான் நட்டு விஷயத்தை நம்பவில்லை! ஆனால், போலீசுக்குப் போகக் கூடாது என்று ஏன் தடுத்தேன்? போலீஸ் விசாரணையில், இது பொய்க்கதை என்று தெரியும்போது, அந்தப் பொய்க்கதையைக் கட்டிய நீங்கள் அல்லவா மாட்டிக் கொள்வீர்கள்? அப்படி நீங்கள் மாட்டிக் கொள்ளக் கூடாது என்றுதானே...

அவனது அணைப்பு லேசாக இறுகியது. ''நீ எப்போதுமே, எனக்காகப் பார்க்கிறவள்தான்! என் வசதிகள், என் சந்தோஷம், என் நன்மை.. சகிக்க முடியாத கொடுமைக்காரனாக நான் இருந்த அப்போதும், மெடிகல் ரிப்போர்ட்டை வைத்து விட்டுத்தானே போனாய்!''

திட்டமிட்டு அவளை வீழ்த்தியது மாதவிக்கு நினைவு வந்தது. வெறுத்து விட்டதாகத்தான் அப்போது நினைத்

தாள்! ஆனால், அவனுக்கு ஒரு துன்பம் நேர விட முடியவில்லையே!

"ஆனால், அந்த அன்பு உங்களுக்குத் தெரிந்து விடக்கூடாது என்பதிலும், உறுதியாக இருந்தேன்! அதைப் பயன்படுத்தி, நீங்கள் மறுபடியும்... சாரி, அதுதான் சொன்னேனே, சூடு பட்ட பூனை என்று..."

உயிரையே கொடுத்தேனும் அவளைக் காக்கத் துணிந்தவன்! வெறும் வாய்ப்பந்தலாக அல்ல. மெய்யாகவே, மெய்ப்பிக்கப் பட்ட விஷயம்! கிட்டத்தட்டச் செத்துப் பிழைத்தவனே!

ஆயினும் அவளுக்குப் பழசென்று விட முடியாமல் ஒன்று உறுத்தியது. அது தெளியாமல், முழுமையான சந்தோஷம் சாத்தியம் அல்ல!

அவளிடம் வேறுபாடு உணர்ந்து, "என்ன மது?" என்று கேட்டான் அவன்.

"எனக்கு... ஒரு... ஒன்று தெரிய வேண்டும்...

அனுபவத்தினாலும், பயிற்சியாலும் எவ்வளவோ தைரிய சாலியாகி விட்டதாக எண்ணியதோடு உணரவும் செய்த இப் போதும், அவளுக்குத் தொண்டை அடைத்து வார்த்தைகள் சிக்கின.

அடைத்த இடத்தை மென்மையாக வருடி, "எதுவானாலும் கேள், மது! என்னிடம் எதைக் கேட்கவும், உனக்கு.. உனக்கு மட்டும்தான் உரிமை உண்டு! நீ என்ன கேட்டாலும், தயங்காமல் பதில் தருவேன்!" என்றான் அவன் உள்ளார்ந்த குரலில்.

ஒரே ஒரு தரம் கேட்டுத்தான் ஆக வேண்டும் என்று எண்ணினாள் மாதவி. "அந்த.. அந்த சுபியை ஏன் மணக்கவில்லை? இரண்டு ஆ... ஆண்டுகளாக.. என்று என்னென்னவோ சொன்னீர்களே!"

''அதாவது, அவள் எப்படி விலகிப் போனாள் என்று கேட்கிறாய். அன்று... நான் சொர்க்கத்தைத் தொலைத்த அந்தப் பொல்லாத நாள் நினைவிருக்கிறதா? எப்படி மறக்கும்? நிச்சயம் நினைவு இருக்கும்! அன்று, சுபி சோழாவுக்கு அழைத்தாள் என்று போனேன் அல்லவா... அன்றே, பிரிந்து போகவே பிடிக்கவில்லை என்று, அவள் ஒரு மாதிரி மையலாகப் பேசினாள். எனக்குப் பங்கு மாற்றம் பற்றி அதே நினைவு! அவள் பேச்சு மனதில் பதியவில்லை. ஒரு நாள் கழித்து நீ சென்று விட்டாய். அதற்குள், வக்கீல் ஊரில் இல்லாததால், டாக்டர் மூலம் ஆடிட்டருக்கு விவரம் தெரிவித்து, உன் தாத்தாவின் உயில்படி, பங்கு மாற்ற வேலை தொடங்கி விட்டது!

''நான் ஆடிட்டரோடு இருந்தபோது, சுபி வீட்டுக்கு வந்திருக்கிறாள். உன்னை விரட்ட என்று நினைக்கிறேன். நீயாகவே போய்விட்டாய் என்று தெரிந்ததும், அவளுக்கு வேறு திட்டம் தோன்றிவிட்டது. இங்கேயே இருந்து விட்டாள்.

''சேர்ந்து வாழுவோம்.. கல்யாணம் பிறகு செய்வோம்!' என்று.. ஒருவேளை, தொட்டு விட்டால் முழுமையாக மடக்கி விடலாம் என்று நினைத்தாளோ? ஆனால், நம் அறையில், அந்தக் கட்டிலில் சுப்புலட்சுமியைப் பார்த்ததும்... சே! அந்த வினாடிதான் எனக்குக் கண் திறப்பு, கண்மணி! அவளுக்கும் எனக்கும் இடையே எந்த உறவும் இருக்க வாய்ப்பில்லை என்று உணர்த்தி அனுப்பி வைத்தேன். கொஞ்சம் யோசித்திருந்தால், எனக்கு என்றைக்கோ புரிந்திருக்க வேண்டிய விஷயம்! அன்றைக்குப் பழச்சாறு கடையில்... நினைவிருக்கிறதா? இந்த உடையில், உன்னைப் பார்த்துப் பத்துப் பேராவது ஜொள்ளு விடவில்லையா என்றேனே... யோசித்துவிட்டுக் கவனிக்க

வில்லை என்று நீ பதில் சொன்னபேதே, மனதிற்குள், சுபி தினமும் மற்றவர்கள் தன்னைத் தப்பு எண்ணத்தோடு வெறிப்பது பற்றி, இரண்டு கதையாவது சொல்வாளே, அதே எண்ணத்தில் இருப்பாளோ என்று தோன்றிவிட்டது. அது மெய்யோ, பொய்யோ என்றுகூட! அன்று வரை, நான் சுபியைப் பற்றிக் குறைவாக எண்ணியதே கிடையாது! அப்படி நினைக்கக்கூடிய சந்தர்ப்பங்களில்கூட, ஒரு பரிதாபம்தான் தோன்றி, அவளை நியாயப்படுத்திவிடும். முதல் முறையாக அன்று, அதைப் பற்றி, ஆழ்ந்து யோசித்து ஆராய்ந்து, அன்றே கண்டுபிடித்திருக்க வேண்டியது. ஆனால், மனம் வேறு குறிக்கோளில் இருக்கவே, அதைத் திரும்ப நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. பிறகு நினைத்து நினைத்து நோவதற்கு ஒரு விஷயமாக, அதுவும் ஆயிற்று!'' என்று ஒரு பெருமூச்சு விட்டான். பிறகு, மீண்டும் சுபி விலகிய... அவளை விலக்கிய விவரத்தைத் தொடர்ந்தான். ''அதன் பிறகும், இரண்டு மூன்று முறை சுபி முயன்று பார்த்தாள். என்ன முயன்றும் பலன் இராது என்று நிச்சயமாகப் புரிந்ததும் விட்டு விட்டாள் என்று நினைக்கிறேன். அவள் விஷயம் எனக்குத் தெரிந்தது இவ்வளவுதான்! ஆனால்...

குதூகலம் ஊற்றாய்ப் பெருகியது மாதவிக்கு. அவளுடைய கணவனுக்கு, அப்போதே அவள்தான்! திட்டம் போட்டு, அவளது வாழ்வில் அவன் நுழைந்திருக்கலாம். ஆனால், அவனுக்கே தெரியாமல், அவன் மனதுக்குள் மாதவியும் புகுந்துவிட்டாள். தேனிலவின்போது, இருவரின் கூட்டுறவில், அவன் தன்னை மறந்ததாகச் சொன்னதுகூட, அப்போதைக்கு அவனே அறிந்திராத மெய்தான்! ரோபோ போல என்று எண்ணி, எப்படி வேதனைப் பட்டாள்! மெய்யாகவே, தன்னை மறந்துதான் போயிருக்கிறான்!

மகிழ்ச்சி பெருக அவனைக் கேலியாக நோக்கி, "என்ன ஆனால்? விட்டுவிட்டோமே என்று இருக்கிறதா?" என்று கிளுக்கிச் சிரித்தாள் மாதவி.

"உதை! இன்னொரு தரம் இப்படிப் பேசினால், நிச்சயம் உதை விழும்!"

"பின்னே என்னவாம்? இனிக்க இனிக்க என்னென்னவோ பேசிவிட்டு, ஆனால் என்று இழுத்தால் என்ன அர்த்தமாம்?"

"ஆனால், முதலிலேயே நான் யோசித்திருக்க வேண்டும் என்று அர்த்தம்! யோசித்து, உண்மையைக் கண்டு பிடித்திருக்க வேண்டும் என்று அர்த்தம்! சுபியை விலக்கி, என் மனதில் நீ புகுந்தது புரியாமல் போயிருக்கலாம். ஆனால், மற்ற வகையிலேனும் யோசித்திருக்கலாமே! நீ எனக்கு இறைவன் கொடுத்த வரம் என்று, அந்தக் கடவுள் காய்களை நகர்த்திய விதத்திலிருந்தே, எனக்குப் புரிந்திருக்க வேண்டாமா? சுபியை மணப்பது பற்றி, நான் நினைக்கத் தொடங்கியதுமே, அப்பாவின் உடல் நிலை மோசமாகி, அவருக்கு அந்த மாதிரி வாக்குக் கொடுக்கச் செய்தாரே! அதுவே, அவளோடு இணைந்து விடாமல் தடுப்பதற்காகத்தானே?

"அடுத்து, உன் விஷயமும் எண்ணிப்பார். உன் அம்மாவை ஆடல் பாடல் கலைகளைப் பயிலச் செய்து, மேடை யேற்றியதில் இருந்தே தொடங்கி விட்டார்! உன் தாத்தாவை இப்படி ஓர் உயிலை எழுத வைத்ததே, நம்மை இணைப்பதற் காகத்தான் என்று தோன்றவில்லையா?"

"ஓகோ! அடுத்து, என் தாத்தா மனதைக் கெடுத்து உங்கள் அப்பாவின் பங்குகளைச் சுருட்ட வைத்ததே கடவுள்தான் என்றுகூடச் சொல்லுவீர்கள் போல இருக்கிறதே!" என்று கிண்டலாகக் கேட்டாள் மாதவி.

''சந்தேகமே இல்லாமல் அப்படித்தான். அத்தனை ஆண்டுகள் கழித்து, அப்பா என்னிடம் வாக்கு வாங்கிக் கொண்டு மறைய, கொடுத்த வாக்கை நிறைவேற்ற வழி தேடி அலையும்போது, உயில் விவரத்தை எனக்குத் தெரிய வைத்ததை, வேறு என்னவென்று சொல்லுவது? சொல்லு!''

''ம்ம்ம்.. ஒரு வகையில் பார்த்தால், நீங்கள் சொல்லுவது சரியென்றுதான் தோன்றுகிறது!'' என்று புன்னகையோடு சொல்லிக் கொண்டிருக்கும்போதே, அவள் முகம் வாடியது. ''ஆனால், பிரிந்தோமே, கிருபா?'' என்றாள் வருத்தத்துடன்.

கிருபாகரனின் முகமும் மாறியது. ''அப்போது என்னிடம் மமதை இருந்தது, மது! நினைத்ததைச் சாதித்துவிட்ட மமதை! அது அழிய வேண்டாமா? அவசரப்பட்டு உன்னிடம் வாயை விட வைத்து, நீ பிரிந்து சென்றதும், உன் அருமை உணர்ந்து நோக வைத்து, எண்ணி எண்ணி ஏங்க வைத்து.. உன் கடிதம் படித்த பிறகு, உன்னைத் தேடக்கூடத் தைரியம் இல்லாமல், எப்படித் தவித்தேன், தெரியுமா? மனோகரி உன்னோடு இருப்பாள் என்பது மட்டும்தான் ஆறுதல்!''

வேதனையில் சுருங்கியிருந்த அவனது புருவத்தை, மாதவி மெல்ல நீவி விட்டாள். ''நாம் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்வோமா, கிருபா? இனிமேல், பழைய விஷயங்களைப் பேசவே கூடாது! என்ன?''

ஒரு தரம் அவளைக் கூர்ந்து நோக்கிய அவனது முகமும் தெளிவடைந்தது. ''அப்படியே அம்மணி! இனித் தேவியார் உத்தரவுப்படியே நடந்து கொள்கிறேன். ஓர் அடி எடுத்து வைப்பதும்கூட, உன் கட்டளைப்படிதான்! முதலில், இப்போது நான் என்ன செய்ய வேண்டும் என்று சொல்கிறாயா, கண்மணி?'' என்று, ரொம்பப் பணிவு காட்டிக் கேட்டான் கிருபாகரன்.

''நான் ஒன்றும் சொல்ல மாட்டேன்!'' என்று பிகுவாகப் பதிலுரைத்த மாதவி, தலை உயர்த்தி, அவன் கன்னத்தில் முத்தமிட்டுவிட்டு, அவன் காதில், ''இதெல்லாமா சொல்லிச் செய்வார்கள்?'' என்று கிசுகிசுத்துக் கிளுக்கிச் சிரித்தாள்.

சிரிப்பொலியில், உரிய பொருத்தமான இன்னொரு குரலாய் இணைந்தபடி, லாகவமாக அவளைத் தன் புறமாகத் திருப்பினான், அவள் கணவன்!



இறைவன் கொடுத்த வரம்

ரமணிசந்திரன்